# பல்சுவை நாவல்

விலை ரூ.50/-

## பாலகுமாரன்




புத்தம் புதிய மெகா நாவல்

# கங்கை கொண்ட சோழன்





# 1

அந்த மிகப் பெரிய ஹோமக்குண்டத்தில் ஆள் உயரத்திற்கு அக்னி ஜெகஜ்ஜோதியாய் எரிந்து கொண்டிருந்தது. காற்றினுடைய அசைவைக் கொண்டு குறுகலாகவும், நெடியதாகவும் சில சமயம் சாய்ந்தும் அது மாறிக் கொண்டிருந்தது. நெருப்பு இருட்டை விலக்க முயற்சித்து முடியாமல் தவித்தது.

அந்த இடத்தில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் அந்த ஹோமத்தின் காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள். ஹோமகுண்டத்தின் நான்கு பக்கமும் நின்றவர்கள் உள்ளங்கை நிறைய அரிசி சோறு எடுத்து அதில் நெய் ஊற்றி உயரத் தூக்கிப் பிடித்தார்கள், மந்திரங்கள் ஜெபித்தார்கள், நெய் மிகுந்த அந்த அன்னத்தை அக்னிக்கு சமர்ப்பித்தார்கள்.

'ஏ அக்னியே நீ நான்கு கொம்புகளை உடையவன். நான்கு தலைகள் உடையவன். நான்கு நாக்குகள் உடையவன். உன்னை நான் நமஸ்கரிக்கிறேன். உன்னுடைய சக்தியை உணர்ந்து என்னுடைய தூதுவனாக இருக்கும்படி உன்னை கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நீயே எல்லா யோக்யதையும் உடையவன்.

நான் கர்த்தா, நீ ஹோதா, இந்த ஹவிசை தயவு செய்து தேவர்களிடம் சமர்ப்பித்து விடு. பல்வேறு சங்கல்பங்கள் செய்து கொண்டு அக்னியே உன்னை வளர்த்து உன் மூலமாக இந்த பிரபஞ்சங்களை ஆளும் தேவர்களுக்கு எங்களுடைய நமஸ்காரங்களை தெரிவித்துக் கொள்கிறோம். அக்னியே எங்களிடம் நல்ல மாணாக்கர்களை அனுப்பு. அவர்களும், நாங்களும் ஒன்றாக இருந்து செயலாற்றும்படி செய், பரம்பரம் கவலைகளை துரத்தி பிரதிக்ஞைகளை நிறைவேற்று. மகா காளியை வரச் சொல். எங்கள் குறைகளைச் சொல்லி அவளை இங்கே அழைத்து வருவாயாக. உன்னால் அது முடியும். உனக்கு அந்த யோக்கியதை இருக்கிறது.

'நான் கர்த்தா, நீ ஹோதா' மிகுந்த பணிவோடும், கூர்மையோடும் அவர்கள் அக்கினியை போற்றி பல்வேறு விதமான வேண்டுகோள்களை வைத்தார்கள். தெய்வங்களை வரவேற்க வேண்டுமென்று மனம் கனிந்து வேண்டினார்கள்.

எட்டு பேர் மிக நெருக்கமாக அந்த ஹோம குண்டத்திற்கு அருகே இருந்து ஹவிசை சமர்ப்பித்துக் கொண்டிருக்கும் போது மற்றவர்கள் அதற்கு துணையாக வேலைகளை செய்து கொண்டிருந்தார்கள். நீண்ட அரசங் கொம்புகளை ஒடித்து சிறு துண்டுகளாக்கி, அந்த துண்டுகளை கூடையில் போட்டு ஒருவன் அக்கினிக்கு அருகே அனுப்பிக் கொண்டிருந்தான். அவர் மட்டுமே அந்த ஹோமத்தோடு சம்பந்தப்படாதவன் போல விலகி இருந்தான். அவனுக்கு போதும் என்று அவர்கள் சமிக்ஞை செய்தார்கள். 'சமித்துகள் நறுக்கினது போதும், வேறு வேலைக்கு போ' என்பது போல் சைகையில் உத்தரவிட்டார்கள்.

பெரிய பானைகள் எடுத்துக் கொண்டு அந்த இருட்டில் கிடைத்த வெளிச்சத்தினூடே பாதை தேடி கண்டுபிடித்து ஆற்றோரம் நோக்கி அவன் போனான். நீர் மொண்டு வந்து ஹோமத்துக்கு அருகே வைத்துக் கொண்டான். அங்குள்ளவர்கள் சப்தம் எழாமல் உட்கார்ந்து கொண்டு ஜபம் செய்ய துவங்கினார்கள், நான்கு பேர் அதே ஜபத்தை முணுமுணுப்பாய்ச் சொல்லி நான்கு விதமான திரவியங்களை அக்கினியில் சமர்ப்பித்தார்கள்.

"இந்த முறை பூஜை இன்னும் வெறியோடு நடக்கிறது" பூஜைகளில் நேரடியாக பங்கு பெறாமல் உதவிகள் செய்த இருவர் அருகருகே உட்கார்ந்து கொண்டு மெல்லிய குரலில் பேசத் துவங்கினார்கள்.

"ஆமாம் இதற்கு பிறகு இந்த இடத்தில் இருப்பதில் அர்த்தமில்லை. இந்த தேசத்தில் வாழ்வதற்கு எந்தவித விருப்பமும் இல்லை. இந்த ஹோமத்தோடு ஊரைவிட்டு கிளம்பிவிட வேண்டியதுதான். சோழ தேசத்தை கடந்து நடுநாட்டிற்கு, பிறகு தொண்டை மண்டலத்திற்கு, தொண்டை மண்டலத்தில் திருவொற்றியூர் வழியாக கீழைச் சாளுக்கியம் போய் அங்கேயிருந்து வடக்கே போய் விட வேண்டும். வடக்கே போய் இதே வித்தையை இன்னும் நன்றாகக் கற்று மறுபடியும் இந்தப் பக்கம் பரவ வேண்டும். வயது முதிர்ந்து, மரணம் அடையும் நேரத்தில் இதே இடத்தில் இதே விதமாக ஹோமம் செய்து இந்த இடத்திலேயே பிராணஹத்தி செய்து கொள்ள வேண்டும்"

"ஆமாம் வேறு என்ன வழி இருக்கிறது. நமக்கு இந்த ஹோமத்தை விட்டால் வேறு என்ன கதி. நம்மால் இதைத் தவிர



வேறு என்ன செய்ய முடியும்" என்று அடுத்தவர் பேச அந்த குரலில் மெல்லியதாய் அலுப்பும், கொஞ்சம் கோபமும் தெரிந்தன.

இரண்டு பேரும் மௌனமாய் தகதகத்து எரியும் அக்கினியை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருளும், ஒளியும் மாறி மாறி அவர்கள் முகத்தில் மோதின.

"ஆனால்" என்று இரண்டாமவர் முதலவரை நோக்கி மெல்லத் திரும்பினார்.

"என்ன சொல்ல வருகிறீர்கள் என்று தெரிகிறது. இந்த ஹோமத்தை நம்பியா நாம் இறங்கியிருக்கிறோம். இதுவா நம்மை ஒப்பேற்றும், நம்முடைய காரியங்களை முடித்துக் கொடுக்கும் என்று சந்தேகம் வருகிறது இல்லையா?"

"ஆமாம் எவ்வளவு கூர்மையாக, உண்மையாக ஈடுபட்டாலும் அடி மனதில் ஒரு அரிப்பாக அந்த சந்தேகம் இருக்கத் தான் செய்கிறது"

"நமக்கு வேறு வழியே இல்லையா. எத்தனை நாள் இந்த ஹோமம், எங்கெல்லாம் இந்த ஹோமம். இதைத் தாண்டி யார் நமக்கு தலைமை ஏற்பார்கள். எவரால் நமக்கு விடிமோட்சம் கிடைக்கப் போகிறது என்ற துக்கமும், ஏக்கமும் நெஞ்சைப் பிசைகின்றன"

"அது சரி வேறு தேசத்தை நுண்மையோடு அறிய வேண்டும் என்ற பிரதிக்ஞை எளிமையானதா சோழமும் நாமும் கொஞ்சி குலாவி நட்பு என்ற பெயரில் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டிருந்தோம். அவர்கள் நம்மை கலைத்து விட்டு உறுதியாக வளர்ந்து விட்டார்கள். இடையே சேரனை நம்பி மோசம் போனோம். சிங்களவனை நம்பி உதை வாங்கினோம். கடைசி முயற்சி கடைசி முயற்சி என்று பலமுறை முயன்று விட்டு மொத்த மனுஷரும் இன்று கடுமையாக இருக்கிறது. பாண்டிய தேசத்து சரித்திரத்தில் இருண்ட ஒரு மோசமான காலம் இருந்ததில்லை என்று தோன்றுகிறது"

சங்கம் வளர்த்த மதுரை, சொக்கர் திருவிளையாடல் செய்த மதுரை, இன்று குப்பை மேடாக காட்சியளிக்கிறது. அடிபடாத வீடு இல்லை. அடியார் மாளிகை இல்லை! கோவில்களைத் தவிர மடங்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் சோழன் இடித்து தரை சாய்த்து விட்டான். ஜனங்கள் வசித்தபடியும் இந்த இடத்திலும் தூங்குகிறார்கள். எல்லா முகத்திலும் மரணக்களை தான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உள்ள நமக்கு ஆயுதம் ஏந்தியா போராட முடியும். என்று ஒன்று திரள்வது. எங்கே ஒன்று திரள்வது எதுவும் முடியாது என்று தான் இந்த இடத்திற்கு வந்து விட்டோம். இது கடைசி முயற்சி

அல்ல. இது நான் முதல் முறையாக, வேறு வகையானப் போர். 'இந்த இடத்தில் வேறு வகையான வாழ்க்கை வாழ வேண்டும் என்று நாம் தீர்மானித்து இருக்கிறோம்'

"அதுதான் நடைபெறுமா?"

"ஏன் நடைபெறாது. நிச்சயம் நடைபெறும். சோழ தேசத்தின் வெற்றிக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? அவர்களுடைய கலை சித்தாந்தம், வியாபாரம், காளாமுகரும் அவர்களுக்கு கொடுத்த வீரம், மரணம் பற்றி சிறிதளவும் பயப்படாது வெறியோடு தாக்குகின்ற வீரர்கள்" முதலாமவர் தொடர்ந்து பேசினார்.

"இறந்து போவது கவலை ஒரு விஷயம், வீர சொர்க்கம் நிச்சயம் உண்டு என்று வீரர்களுக்கு கள்ளோடு சொல்லிச் சொல்லி போதை ஏற்றி விட்டார்கள். வாழ்க்கையை விட சாவு மிக முக்கியமானது என்ற அர்த்தத்தில் அவர்களை வளர்த்து விட்டார்கள்" எனவே ஒவ்வொரு சோழ வீரனும் தாக்குகின்ற பொழுது அது மிருகத் தாக்குதலாக முடிகிறது. அப்பன் போனபடியே அவனும் அதே காரியத்தை செய்திருக்கிறான். முப்பத்தி இரண்டு வருடங்களுக்கு முன்பு இராஜராஜ சோழன் காந்தளூர் சாலையை கலைத்திருக்கிறான் போல இராஜேந்திர சோழனும் உள்ளூருக்குள் நுழைந்து தாக்கியிருக்கிறான். காந்தளூர் செல்ல வேறு வழியே இல்லையா? நேராக மதுரையை மூட்டி, சூறையாடி, திக்கிலையாக்கி விட்டு அங்கிருந்து மலை ஏறி சேரநாட்டுக்குள் நுழைந்திருக்கிறான்.

"பட்டப்பகத்து கணவாய்கள் வழியாக ஒரு பெரும்படை வந்திருக்கிறது. நாஞ்சில் நாட்டு வழியாக இன்னொரு படை நகர்ந்திருக்கிறது. ஆக மூன்று படைகளும் இரண்டாம் முறையாக காந்தளூர் சாலையை குறிவைத்து இறுதி அடித்து, தோற்பித்து இப்பொழுது ஒரு நாளில் கூட அந்த இடத்தில் திறக்கப்பட்டது, சாய்ந்து விட்டார்கள். இனி வலிய சாலை என்கிற அந்த கல்லூரி இல்லை, போர் பயிற்சி தருகின்ற பாடசாலை இல்லை. சிதற அடித்து விட்டார்கள். வலிமையில்லா சேரனே காணாது போனான். நம்முடைய ஆட்கள் எப்படி தாங்குவார்கள், நிலைத்துப் போய் நிற்கிறார்கள்"

"நம்மோடு இனித்தும் கொண்டிருந்த சிங்களவன் எனக்கு ஒன்றும் தெரியாது என்று ஒதுங்கிக் கொள்கிறான். நிச்சயமாக நிற்கிறோம். நமக்கு தெய்வத்தை விட வேறு யார் துணையாக இருக்க முடியும்"

"நாம் நிச்சயமாக நிற்கிறோம் என்று புரிகிறது. இந்த நேரமா சோழனைச் சாய்க்கும் இதுவா சிதற அடிக்கும்"



"உடனே செய்யாது, மெல்ல மெல்ல செய்யும், இப்பொழுது விதை ஊன்றினால் பிறகு மெல்ல மரம் முளைக்கும், இதோ இந்த ஆலமரம் நூற்றுக்கணக்கான விழுதுகளை விட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான விழுதுகள் பூமியில் பதிந்திருக்கின்றன. எது அடிமரம் என்று தெரியவில்லை இல்லை. ஒரு வேளை அடிமரம் இற்றுப் போய் விட்டதோ, என்னவோ. ஆனால் விழுதுகள் உறுதியாக நிற்கின்றன.

எப்பொழுது நட்டது யார் நட்டது யார் யாரையெல்லாம் இது பார்த்திருக்கும் தெரியாது. இதன் வயதென்ன தெரியாது. ஆனால் என்றோ ஒருவன் நட்ட அந்த வித்துதான் இன்று இத்தனை பெரிய விழுதுகள் உள்ள ஆலமரமாக மாறியிருக்கிறது. அதே போல இன்று விதை நட்டப்பட்டிருக்கிறது. சோழ சாம்ராஜ்யம் நிர்மூலமாக வேண்டும். ஆலமரத்துக்கு ஒரு வயது சொல்லலாம். இப்பொழுது விதை நடப்பட்டிருக்கின்ற இந்த விஷயம் என்றைக்கு முழுமையாகும். இரண்டாமவர் முதலாமவரை கேட்க முதலாமவர் அமைதியாக இருந்தார்.

"உங்களைத் தான் கேட்கிறேன். என்றைக்கு முழுமையாகும்"

"நான் பதில் சொன்னால் உன்னால் ஏற்க முடியுமா என்று தெரியவில்லை. ஆனால் உன் கேள்விக்குள் உள்ள ஆதங்கத்தைப் பொறுத்து இந்த பதிலைச் சொல்லுகிறேன். நானூறு வருடங்கள், இன்றிலிருந்து நானூறு வருடங்கள், பாண்டிய தேசத்தின் கொடி சோழ சாம்ராஜ்யத்தில் ஊன்றி நடப்படும்"

"என்ன? நானூறு வருடங்கள் ஆகுமா" கவலையாக கேட்டார்.

"ஆமாம் நிச்சயம் ஆகும்"

"நானூறு வருடங்கள் கழித்து வெற்றி பெறுவதற்கு இப்போதே பூஜையா"

"ஆமாம் தள்ளிப் போனால் வெற்றியும் தள்ளிப் போகும்"

"எதை வைத்துக் கொண்டு இவ்வளவு துல்லியமாக பேசுகிறீர்கள்?"

"சோழர்கள் எங்கிருந்து வந்தார்கள், கல்லணை கட்டிய சோழன் எத்தனை வருடம் முன்பு இருந்தான் நடுவே அந்த குலம் என்ன ஆயிற்று. பிறகு மறுபடியும் எப்படி எழுந்தது. பல்லவர்களும், பாண்டியர்களும் ஆட்சி செய்தார்கள். அப்பொழுது சோழ சாம்ராஜ்ஜியம் மங்கியது. பிறகு விஜயாலயன் காலத்தில் மறுபடியும் துவங்கியது. அவருடைய மகன்களும், பேரன்களும் மெல்ல மெல்ல சாம்ராஜ்யத்தை விரிவடைத்து விட்டார்கள்"

"கடைசியாக வந்த இராஜராஜ சோழன் குமரி முனையிலிருந்து வடக்கே திருவேங்கடம் வரை ஆழமாக அகலமாக சோழ சாம்ராஜ்ஜியத்தை நிறுவி விட்டு போய் விட்டான். இப்பொழுது இராஜேந்திர சோழன் அப்பனுக்கு மிஞ்சிய சூரன், ஓய்வு ஒழிச்சலே இல்லாது போரிடுகிறான். வடக்கே படை எடுத்து வந்தவன் சட்டென்று மேற்கே திரும்புகின்றான். கீழை சாளுக்கியத்திலிருந்து மேலை சாளுக்கியத்திலிருந்து சேர தேசத்துக்கு வருகிறான். மறுபடியும் மேலைச் சாளுக்கியம் போகிறான். போர் போர் போர் என்று நாலாபுறமும் பறந்து கொண்டே இருக்கிறான்"

"அவனுடைய மைந்தர்கள் அவனைவிட சூரர்களாய் இருப்பார்கள் போலும், நீங்கள் சொல்லுவது சரி சரியாய் பாண்டிய தேசத்து வெற்றி களங்களுக்கு தென்படவே இல்லை"

"கவலைப்படாதே உயர்ந்தது தாழும் தாழ்ந்தது உயரும் இது உலக நியதி"

"பல்லவர்களை ஜெயித்த விஜயாலயச் சோழன் முதலில் செய்தது என்ன தெரியுமா? தஞ்சையை தலை நகராக மாற்றினான், தஞ்சையின் எட்டு திக்குகளிலும் எட்டுவிதமான தேவதைகளை நிறுவி எல்லைக் காவலாக நியமித்தான். சாக்த உபாஸகம், சக்தி வழிபாடு. கிழக்கேயிருந்து தான் தஞ்சைக்கு ஆபத்து வரும் என்று தெளிவாகக் கருதி நிசும்பசூதனியை கிழக்கே வைத்திருக்கிறான்"

"நிசும்பசூதனி கோரவடிவம், தூமாவதி என்ற தேவதையின் இன்னொரு முகம், மண்டை ஓடு, கோரைப் பற்கள், வற்றிய முலை, எலும்புக் கூடான மார்பு, குச்சிக் குச்சியான கைகளும், கால்களும், ஆனால் எட்டடி உயரம், சூலத்தால் காலிலுள்ள மனிதனைக் குத்தி கொன்று படுத்திருப்பாள், கிழவி, அகோரி ஆனாலும் மிகுந்த வலிமையுடையவள்"

"தெற்கே மதுரை பக்கம் வீரகேசரியை ஸ்தாபித்திருக்கிறார். தேசத்தை அழிப்பது வேலை அல்ல. முடமாக்கி போடுவது. முடமாக்கி போட்டு விட்டான். விஜயாலயன் அன்று வைத்த இந்த தேவதைகள் தான் இன்று அவர்களுக்குத் துணையாக இருக்கின்றன"

"அதே சாக்த உபாஸகம் இப்பொழுது இங்கே நடைபெறுகிறது. நாம் பல்வேறு தேவதைகளை இங்கு வரவேற்க அக்கினியை வளர்த்து நமஸ்கரித்து, அக்கினியைக் கொண்டாடி அக்கினியின் மூலம் எல்லா விதமான தேவதைகளையும், தஞ்சையை நோக்கி போகும்படி வேண்டிக் கொள்ளப் போகிறோம்"

"சைவத்திலுடைய வலிவு குறைந்து, வைஷ்ணவத்திலுடைய



பொலிவு குறைந்து முழுக்க சாக்தம் பரவ வேண்டும் சாக்தம் வளர வளர சோழ தேசம் அழியும்"

"இது என்னப் பேச்சு என்ன கணக்கு, எனக்கு புரியவில்லை, சைவத்திற்கும், சோழத்திற்கும், சாக்தத்திற்கும் தோல்விக்கும் என்ன சம்பந்தம்.

"உங்களிடமெல்லாம் பெரிய குறை இருக்கிறது. தின்று ஏப்பமிடுவது போல உண்ட பிறகு வயிறு உடனே சப்தம் எழுவது போல முன்னும் பின்னும் காற்று பிரிவது போல உங்களுக்கு உடனே பலன் கிடைத்தாக வேண்டும். உடனடியாக பலன்கள் எல்லாம் காற்று பிரிவது போலத் தான் இருக்கும். ஒரு தேசத்தின் அழிவு வேண்டி நாம் செய்கிற பொழுது அது உடனடியாக கொடுக்காது. மெல்ல மெல்ல தன் வேலையைக் காட்டும்"

"சாக்தம் எப்படி சோழத்தை அழிக்கும் அந்த கேள்விக்கு பதில் சொல்லுங்கள்"

"இடைவிடாது யுத்தத்தில் ஈடுபடுகிற ஒரு தேசம் வலிமைமிக்க ஆண்களை இழக்கும் வலிமைமிக்க ஆண்களை இழப்பதால் அந்த தேசத்திலுள்ள குடும்பத்தில் குடும்பத்தின் தலைவிதான் முன்னோடியாக நிற்பாள். அவளை பின் தொடர்ந்து தான் அந்த குடும்பம் வளரும். ஆண் இல்லாது விதவையான ஒரு பெண் வளர்க்கின்ற குடும்பம், ஆண் வளர்த்த குடும்பத்தை போல முரட்டுத்தனமாக, மூர்க்கமாக இருக்காது.

காபாலத்தின், காளாமுகத்தின், கொள்கை நலிந்து போவதற்கு காரணம் சோழ தேசத்தில் பெண்களுக்கு அதிகம் உரிமை தரப்பட்டு விட்டது. அதனால் மென்மையான சைவ சித்தாந்தம் நுழைந்து தலை எடுத்து விட்டது. அதே போல வைஷ்ணவத்தின் விஷயங்கள் அங்கங்கே தலை கட்ட ஆரம்பிக்கின்றன. சரணாகதி கடவுளே கதி என்கிற விஷயங்களெல்லாம் முக்கியமாகக் கொண்டாடப்படுகின்றன. சைவத்தின் வலிவு குறையக் குறைய போர் செய்கின்ற மும்முரம், வேகம் குறையும். குடும்பத்தில் ஈடுபாடு அதிகமாகும். குடும்பத்தில் ஈடுபாடு அதிகமாக இருந்தால் போருக்குப் போக எவருக்கும் பிடிக்காது. போருக்கு ஆட்கள் வரவு குறைந்தால் ஒரு தேசத்தின் தோல்வி நிச்சயம். படைபலத்தின் செருக்கு குறைந்தால் அது வெகு சீக்கிரத்தில் கலகலத்துப் போகும்.

சைவத்தின் பொலிவு குறைந்து, வைஷ்ணவம் கொண்டாடப்படாமல் போய், சாக்தம் பரவும், எல்லா இடங்களிலும் பெண் தெய்வ வழிபாடு நடக்கும், பெண் தெய்வ வழிபாடு பெண்களால் செய்யப்படும். அப்படிப்பட்ட பெண்களால் வளர்க்கப்பட்ட ஆண்கள் பெண்

தன்மையோடு இருப்பார்கள். அடங்கி நடப்பார்கள், நமக்கென்ன என்று கை கூப்பி விடுவார்கள்.

சக்தி வழிபாடு வர வேண்டும், தேவதைகளுடைய ஆட்சி சோழ தேசம் முழுவதும் பரவ வேண்டும் என்று தான் இந்த பயணமே நாட்டு காட்டில் சோழ தேசத்து எல்லையில் இந்த ஹோமம் நடத்தப்படுகிறது"

"யார் நடத்துகிறார்கள்?"

"யார் நடத்தினால் என்ன? தோற்று நாடிழந்து போனவர்கள் நடத்துகிறார்கள். அடிபட்டு தோற்றவர்கள் நடத்துகிறார்கள். வேறு என்ன செய்வது என்று தெரியாமல் வாளை கீழே போட்டு விட்டு தர்ப்பைப் புல்லை கையில் எடுத்துக் கொண்டார்கள். பல்லை கடிக்கிற ஆக்ரோஷத்தை விட்டுவிட்டு சோகத்தை முழுங்கி, உள்ளுக்குள் தேக்கி வைத்து கண்களின் வழியே வெளியே விடுகிறார்கள்.

எழுந்திரு. ஹோமம் முடியப் போகிறது. பூர்ண ஆகுதி நடைபெறப் போகிறது" பட்டுத் துணியில் பல்வேறு விஷயங்கள் மூட்டையாகக் கட்டப்பட்டு உயிரோடு கட்டப்பட்டு அக்னியிலே இதைச்சல தேவதைகளுக்கு விருமாக முழுங்கி அதை மிக நிதானமாக அக்னியில் போடப்பட்டது.

சட்டென்று நெருப்பு அதை விழுங்கியது. உயரே எழும்பியது. படபடத்தது. கொட்டாரைகள் வெடித்து நெருப்பு நாலாபுறமும் தெறித்தது. பச்சை நிற பிழம்பு தெரிந்தது. ஆஹா என்று ஹோமம் செய்பவர்கள் குதித்தார்கள், நீலமும், சிவப்பும், பச்சையுமாய் தழல் மாறியது. 'வாராஹி இங்கு வா' என்று கூவினார்கள். 'ப்ரித்யங்கரா எழுந்து நில்' என்று கூவினார்கள். 'ஏ ராஜமாதங்கி இந்த இடத்தில் வருவாயாக' என்று அழைத்தார்கள்.

காலபைரவரை துணைக்கு அழைத்து வாருங்கள். எதிரிகளை நாசம் செய்யுங்கள் என்று வேண்டினார்கள். படேர் என்று அக்னி பொங்கியது. இன்னும் நான்கு முழ உயரம் மேலே எழுந்தது, காற்று சுழன்று அடிக்க அக்னி அமுங்கி பிறகு கூர்மையாய் எழுந்தது. அடித்த காற்றில் ஏதோ உடைந்த கிளை ஒன்று மரத்திலிருந்து தழுவி பொடேர் என்று விழுந்தது. காற்றினுடைய சப்தம் மரங்களூடே போவதால் பெண் அலறும் குரல் போல கேட்டது. நடுநிசியில் அந்த சப்தத்திற்கு பயந்து பறவைகள் அலறத் துவங்கின, நரிகள் ஊளையிட்டன, குரங்குகளின் கீச்சுகள் அதிகம் கேட்டன, பறவைகள் சடசடத்து எழுந்து அடங்கின, மிருகங்கள் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு அந்த அக்னியின் வெளிச்சத்தில் வேகமாக அவர்களைத்



தாண்டி ஓடின. புலியோ, பெண் சிங்கமோ, வேங்கையோ எதுவும் அனுமானிக்க முடியவில்லை. ஆனால் வேகம், ஆக்ரோஷம், சீறல் மிகப் பலமாக இருந்தது.

"கிளம்பி விட்டாள் அன்னை கிளம்பி விட்டாள். நம்முடைய பிரார்த்தனை பலித்து விட்டது. வெகு நிச்சயம் சோழ மண்டலம் நிர்மூலமாகும் சோழ தேசம் மண்ணோடு மண்ணாகும். இந்த சோழத்தில் அன்னையே, மகாகாளி, பராசக்தி கோவில் தவிர, மரங்கள் தவிர மற்ற எல்லா மாளிகைகளையும் ஒரு துண்டு கூட நிற்க வொட்டாது இடித்து. கோவேறுக் கழுதை போட்டு உழுது பேய் சுரை விதைத்து இதை வெறும் காடாக, குப்பை மேடாக நீ மாற்ற வேண்டும். உன்னால் மாற்ற முடியும், தயவுசெய்து செய்.

லட்சக்கணக்கான ஜனங்களின் வேதனை தாங்காது, லட்சக் கணக்கான ஜனங்களின் அழுகை தாங்காது. நான் உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏ காளி, மகாசக்தி, மகாமாயி, மகாகாளி, சாமுண்டி, வாராஹி, ப்ரித்யங்கரா" என்று உரக்கச் சொல்லி ஒரு மனிதர் அக்னியை வலம் வந்தார்.

"உனக்கு நறவில் போதாது, எமித்துகள் போதாது. நல்ல விதை விதைகள் போதாது, தேனும், பாலும் போதாது. உனக்கு எல்லாவற்றிலும் சிறந்த ஒரு விஷயத்தை ஆகுதியாக அளிக்கிறேன். என்னையே இந்த இடத்தில் உனக்குத் தருகிறேன். என்னை ஏற்பாயாக. என்னை ஏற்பாயாக. இந்த சோழ தேசத்தை நிர்மூலம் செய்ய என்னை உபயோகப்படுத்திக் கொள்"

அவர் கணமும் தாமதிக்காமல் அக்னிக்குள் பாய்ந்தார். மிகப் பெரிய அலறல் ஒன்று அவரிடமிருந்து வெளிப்பட்டது. எல்லோரும் திகைத்துப் போனார்கள். அக்னி கொழுந்து விட்டு எரிந்தது. கட்டைகளுக்கு நடுவே சுருண்டு, விழுந்து பொசுங்கிப் போனார். தழல்கள் மூடிக் கொண்டன. திணநாற்றம் மேலே எழுந்து மூக்கைத் துளைத்தது.

தூரத்தே தீ கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டிருந்தவன் திடுக்கிட்டு எழுந்து நின்றான். மற்றவர்களை எல்லாம் பார்த்தான். "அந்த பானை நிறைய எடுத்து வாரும். சமனம் செய்யும், இங்கேயே நெருப்பை விட்டு விட்டு போகக்கூடாது. இந்நேரம் அவர் பஸ்பம் ஆயிருப்பார். அதனால் நாம் நீர் தெளித்து அக்னியுடைய வேகத்தை குறைத்து விடலாம்"

அவர்கள் விரைவாகச் செயல்பட்டார்கள். இந்த இடத்தை

விட்டு வேகமாக நகருவது நல்லது என்று பேசிக் கொண்டார்கள்.

நேரிடையாக தஞ்சை போய் முட்டாமல் நாம் கிழக்கே நடந்து தொண்டித் துறைமுகத்தை அடைந்து கடற்கரை வழியாகவே நாகை அடைந்து நாகையிலிருந்து மெல்ல மெல்ல கிழக்கு நோக்கி நகர்ந்து விடலாம். சோழ தேசத்தின் நடு மையத்தில் போய் மாட்ட வேண்டாம் என்று பேசிக் கொண்டார்கள். அவன் மெல்ல எழுந்தான்.

"ஏய் இங்கே வா" சைகை செய்து அவனை கூப்பிட்டார்.

அவன் கையில் சில கழஞ்சுகள் கொடுத்தார். "போய் வா போய் வா" என்று விடை கொடுத்தார். அவன் சரி என்று தலையசைத்தான்.

"பாவம் பேச்சு வராது. செவிட்டு ஊமை" என்று முதலாமவர் இரண்டாமவரிடம் சொன்னார். எல்லோரும் கிழக்கு நோக்கி வேகமாக நடந்தார்கள். அவன் காத்திருந்தான். நீர் நிறைந்த குடம் கொண்டு வந்து ஹோம குண்டத்தை சமனம் செய்தான். பானையை அந்த இடத்தில் போட்டு உடைத்தான். மெல்ல சுற்றி வந்தான். சில ஓலைத் துணுக்குகளை பொறுக்கிக் கொண்டான்.

ஒரு புதரில் மறைத்திருந்த தன் வாளை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டான். ஹோமத்தில் மிஞ்சிய உணவை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டான்.

'முட்டாள்களா. சோழ தேசத்தை ஹோமம் வளர்த்தா அழித்து விட முடியும். அது எரிமலையடா, அதை இந்த ஹோம குண்டத்திலா அமுக்கி அணைத்துவிட முடியும். முட்டாள்களா.' வாய் திறந்து சொன்னான்.

எங்கே போய் குதிரை சம்பாதித்துக் கொள்வது என்ற யோசனையோடு தஞ்சை நோக்கி நடந்தான். கிட்டத்தட்ட ஆறுமாத காலமாக இந்த காட்டில் இருந்தாகி விட்டது. இனி உணவு சாப்பிடப் போகிறோம். நல்ல மனிதர்களோடு பழகப் போகிறோம். தஞ்சையின் மையத்திலுள்ள மறவர்குடிக்கு போய் அங்குள்ள பெண்டு பிள்ளைகளைப் பார்த்து சுகம் விசாரித்து விட்டு மாமன்னர் இராஜேந்திரனை சந்திக்கப் போகிறோம். இங்கு நடந்ததை சொல்லப் போகிறோம்.

'நெருப்பால் சோழ தேசத்தை சாய்த்து விடுவார்களாம் முட்டாள்கள்' மறுபடியும் சொல்லி விட்டு நகர்ந்தான்.

அவன் போன பிறகு நீர் விட்டும் அணையாத ஹோம குண்டம் வீசிய காற்றில் மறுபடியும் பக்கென்று பற்றிக் கொண்டது. கொழுந்து



விட்டு எரிந்தது. உள்ளுக்குள்ளே பல கட்டைகளுக்கு நடுவே கிடந்த அந்த உருவம் முறுக்கி எழுந்தது, மறுபடியும் விழுந்தது.

ஒரு பிணம் கொழுப்பு நீங்கி முறுக்கி எழுந்து விழுவது இயல்பு தான். ஆனாலும் அது எதையோ சொல்வது போல் இருந்தது.



# 2

ஒரு வெள்ளி கிண்ணத்தில் ததும்பத் ததும்பப் பசு நெய்யை எடுத்தபடி இராமநாத சிவாச்சாரியார் சமையல் அறையிலிருந்து சாப்பாட்டு கூடத்திற்கு வந்தார். சாப்பாட்டு கூடத்தில் எதிரும் புதிருமாக பன்னிரெண்டு பன்னிரெண்டு அந்தணர்கள் அமர்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் வெறுமே விட்டத்தை பார்த்துக் கொண்டும், சிலர் கம்பீரமாக வேதகானம் செய்வது போலவும், சிலர் மிக அந்தரங்கமான அரசியல் விஷயத்தை பரிமாறிக் கொள்வது போலவும் பல்வேறு செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

எல்லார் முன்பும் தலைவாழை இலை போட்டு அதிர் பிசுக்களாய் துவையலும், மிளகு குழம்பும் ஊற்றப்பட்டு இருந்தன. இடரிக எனப்படும் அவித்த அரிசி உணவை பரிமாறுவதற்கு முன்பு அந்தணர்களின் உடல் சூடு குறைவதற்காக பசு நெய்யை உருக்கி இராமநாத சிவாச்சாரியார் கொண்டு வந்திருந்தார். விரலால் சூடு தணிந்திருக்கிறதா என்று பார்த்தார். சூடு தணிந்திருந்தது. வெதுவெதுப்பாக இருந்தது. ஒவ்வொரு அந்தணர் எதிரே போய் நின்றதும் அவர்கள் வலது கையை குவித்து வைத்துக் கொள்ள அதில் நெய்யை தாராளமாக விட்டார்.

நெய்யை வாங்கி மணத்தை முகர்ந்து உதடு வைத்து ச்ர்ரென்ற சத்தத்துடன் அந்தணர்கள் உறிஞ்சி குடித்தார்கள். நெய் வாய் முழுவதும் பரவி தொண்டைக்குள் இறங்கி உணவுக் குழாய்க்கு நகர்ந்து இரைப்பையை தொட்டு விரைவாய் குடலை கழுவுவதை அத்தனை பேரும் உணர்ந்தார்கள்.

நல்ல உணவு சாப்பிடும் முன்பு இப்படி நெய் உருக்கி உண்பது வயிற்றுக்கு மிகவும் நல்லது. உணவு எளிதாக இடம் விட்டு இடம் நகரும். ஜீரணமாகும். அதையும் தவிர பசு நெய்யில் இருக்கின்ற பல்வேறு விதமான சத்துக்கள் உடம்புக்கு நல்ல ஆரோக்கியத்தை தருகின்றன.

இருபத்தி நான்கு பேரும் நெய் உறிஞ்சி குடித்த பிறகு இராமநாத சிவாச்சாரியாரின் மகன் சங்கர சிவன் இட்லி எனப்படும் உள்ளங்கை அகல அரிசி பணியாரத்தை இரண்டு இரண்டாக இலைகளில் வைத்துக் கொண்டு போனான். வைக்கும் பொழுதே 'இன்னொரு எண்ணம்' என்று கை உயர்த்தி சிலர் கேட்க அவர்களை அலட்சியம் செய்தான். இருபத்தி நான்கு பேருக்கும் நாற்பத்தி எட்டு இட்லி வைத்து விட்டு காத்திருந்தான். அதற்குள் மிளகு குழம்பில் இட்லியை தோய்த்து பிசுக்காயோடு பிரட்டி வேகமாக அந்தணர்கள் உண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

சிறிது நேரத்தில் விரல் உயர்த்தி 'ஒரு எண்ணம்' 'இங்கு ஒரு எண்ணம்' என்று குரல் கொடுத்தார்கள். அங்கங்கே இட்லி வைத்து விட்டு மனதுக்குள் கணக்கெழுதிக் கொண்டான்.

அந்தணர்கள் சாப்பிடும் பொழுதே நடுவே சங்கரனுடைய தம்பி சந்தான சிவன் உருண்டையான இரு அப்பங்களை இலைகளில் வைத்துக் கொண்டு போனான். அப்பங்கள் பிய்த்து ஆவலாக உண்டார்கள். 'இன்னும் கொஞ்சம் நெய் வேண்டும்' என்று இராமநாத சிவாச்சாரியாரை கேட்டு இலையில் ஊற்றச் சொல்லி ஊற்றப்பட்ட நெய்யில் அப்பத்தை அழுத்தி, பிரட்டி, பிசைந்து உண்டார்கள். ஏற்கனவே நெய்யில் பொரிக்கப்பட்ட அப்பம் மீண்டும் ஒரு முறை நெய்யுக்குள் முங்கி அவர்கள் வயிற்றுக்குள் இறங்கியது.

இம்மாதிரி உணவெல்லாம் மிகப் பெரிய பாக்கியம். எல்லோருக்கும் கிடைக்காது. எல்லா தேசத்திலும் கிடைக்காது. எல்லா ஊரிலும் கிடைக்காது. இந்த தஞ்சை பெரு மண்ணில் இராஜேந்திர சோழர் ஆட்சி செய்கின்ற இந்த அற்புதமான காலத்தில் 'சோழ நாடு சோறுடைத்து' என்று மற்ற ஊர்க்காரர்கள் பொறாமைப்படும் வண்ணம் செழிப்பாக சுவையாக கிடைத்தது. இந்த செழிப்பு அந்த சமையற் கூடத்தில் பசு நெய் வாசனையாக, அப்பத்தின் இனிப்பாக, இட்லியின் ஆவியாக வெளியே தெரிந்தது.

அந்தணர்கள் எழுந்து புறக்கடை பக்கம் கை அலம்ப போனார்கள். உயர்ந்த பித்தளை அடுக்கில் வைக்கப்பட்டிருந்த நீரை மொண்டு வாய் கொப்பளித்து, முகம் தடவி அடுத்தவருக்கு மொண்டு கொடுத்து



விட்டு வீடு சுற்றி வெளியே வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அந்தணர்கள் உண்டு நகர்ந்த அந்த இடம் பரபரப்பாக சுத்தம் செய்யப்பட்டது. வேறு ஒரு சாப்பாட்டு கூடமும் திறக்கப்பட்டது. இந்த முறை அறுபது, எழுபது பேர் உட்காரக்கூடிய பெரிய சாப்பாட்டு கூடமாக இரண்டு கூடங்கள் இணைந்து ஒன்றாக்கப்பட்டன. இலைகள் வேகமாக பரிமாறப்பட்டன. வாசலில் காத்துக் கொண்டிருந்த உழவர்களும், மறவர்களும், கொல்லர்களும், சிற்பிகளும், தச்சர்களும் உள்ளே புகுந்தார்கள். அவர்களுக்கும் கடுமையான பசி இருப்பதை அவர்கள் முகத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

'இவங்ககிட்ட மட்டும் பசு நெய் இப்படி வாசனை அடிக்குதே எதனால' என்று சிற்பி ஆவல் தாங்காமல் பொற்கொல்லரை கேட்டார். 'புல்லு மட்டும் போட்டு வளக்கறாங்க அத்தான் பசுவுன்னு வாசனை வீசுது' 'புல்லுன்னா வைக்கோல் புல்லு தானே' 'இல்ல பசும்புல், உங்க வீட்லயும், எங்க வீட்லயும் தான் வைக்கோல்போர். மாடு தின்னாலும், அதும் தலை எழுத்து. இங்க அப்படி இல்ல. புல்லு வளர்க்கறதுக்குன்னே நிலம், புல்லு சாப்பிடறதுக்குன்னே பசு, இவங்க தனியா வைச்சிருக்காங்க'

ஒரு சண்டு விரல் அங்குலாஸ்தி ஆழமுள்ள சிறு கரண்டியால் நெய் அளவாக ஊற்றப்பட்டது. 'ஏங்க எங்களுக்கு நெய் கம்மியா கொடுக்கறீங்க' என்று வெகுநாள் முன்பே மறவர்கள் வாய்விட்டு கேட்டு இருக்கிறார்கள். அதற்கு மிகத் தெளிவான பதில் சோற்றுக்கடை நடத்தும் அந்தணர்களிடம் இருந்து வந்தது.

'நீங்கள் மாமிச உணவு சாப்பிடுகிறீர்கள். மாமிசமும் சேர்த்து, நெய்யும் சேர்த்து ஒன்றாக சாப்பிட்டால் உங்கள் உடம்பு அந்த கொழுப்பை ஏற்காது. மாமிசத்தை விட்டு விடுங்கள். அப்பொழுது நிறைய நெய் சாப்பிடலாம். மாமிசம் சாப்பிடாததை ஈடு செய்யவே அவர்களுக்கு நெய் ஊற்றப்படுகிறது. பசு நெய் என்பது பசுவின் இரத்தம் தான். ஆனால் வேறு பல வடிவம் எடுத்து சுத்தமாக்கப்பட்டு இரத்தமாக இல்லாமல் நெய்யாக கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த இரத்தத்தின் அத்தனை போஷாக்கும் அந்த நெய்யில் இருக்கிறது. உங்களுக்கு மாமிசம் தேவை. எனவே மாமிசம் சாப்பிடுங்கள். நெய் குறைந்த அளவு போதும். இது வாசனைக்காக' என்று சொல்ல, அவர்களுக்குள்ளாகவே பேசி அது சரிதான் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள்.

'வெறும் பசும்புல் சாப்பிடுவதால் தான் இத்தனை வாசனை வருகிறதோ நெய்யில்' என்று பதில் சொன்ன பொற்கொல்லரே புதிதாக

சந்தேகம் கேட்பது போல இராமநாத சிவாச்சாரியாரை கேட்டார்.

பசும்புல் சாப்பிடுவதால் மட்டும் பசுவினுடைய பால் மணமாகி விடுமா, அதைத் தாண்டி பல்வேறு விஷயங்கள் இருக்கின்றனவே.

"என்னென்ன?"

"கடலை புண்ணாக்கு, வாழைப்பழத் தோல், அரிசி கஞ்சி பசுவுக்கு ஊட்ட வேண்டி இருக்கிறது. பழங்களை கூழாக்கி ஒரு கை தருகிறேன், அதுவும் அவைகளுக்கு உற்சாகம் தருகிறது. பிறகு மேய விட்டு விட்டால் எகிறி, துள்ளி குதித்து நாலு பக்கமும் ஓடி உடம்பை வலுப்படுத்திக் கொண்டு பசு புல் மேயத் துவங்கும். பிற்பகலில் உட்கார்ந்து கொண்டு சகலமும் வாய்க்கு கொண்டு வந்து அசை போடும். நிம்மதியாக அசை போடும். உட்கார்ந்து இருக்கின்ற பசுவை எழுப்பி கை வலிக்க வலிக்க பால் கறந்து, அந்த கறந்த பாலை காய்ச்சி வெண்ணெய் எடுத்து, வெண்ணெய் எடுத்த பாலை விட்டு விட்டு வெண்ணெயை தனியாக காய்ச்சி உங்களுக்கெல்லாம் கொடுக்கிறேன். நீங்கள் இட்லிக்கு மட்டும் தான் காசு தருகிறீர்கள். அப்பத்துக்கு மட்டும் தான் காசு கேட்கிறேன். இந்த நெய் இலவசம்"

"எங்கள் கடைக்கு நீங்கள் வர வேண்டும் என்ற எண்ணத்தில் நான் ஏற்படுத்துகின்ற விளம்பரம்" அவர் குரலில் பெருமிதம் வழிந்தது. மிகப் பெரிய தானம் செய்கின்ற அலட்டல் தெரிந்தது.

"இப்ப கோவிலுக்கு போவதே இல்லை போலும்" ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருந்த மறவன் உரத்த குரலில் கேட்டான்.

"உமக்கு எங்க ஓய் வலிக்கிறது. நான் கோவிலுக்கு போனால் என்ன, போகலைன்னா என்ன, உனக்கு திருப்தியா சோறு போடறேனா இல்லையா, கோவிலுக்கு போய் பூஜை பண்றதை விட இது பெரிய புண்ணியம் ஓய்" என்று இராமநாத சிவாச்சாரியார் அலட்டலாய் பதில் சொன்னார். "புண்ணியம் மட்டும் இல்ல, காசும் கூடுதலா வருது இல்ல" பொற்கொல்லர் சொல்ல, "ஆமாம்" என்று தலை ஆட்டினார்.

"காசு கூடுதலா வருது. அப்படி வர்ற காசுலதான் பசுமாடு வாங்கி பால் கறந்து வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சி உங்களுக்கெல்லாம் ஊத்தறேன். உங்களுக்கெல்லாம் ஊத்தினா தான் நான் நன்னா இருக்க முடியும்னு தெரிஞ்சு ஊத்தறேன்" என்று இராமநாத சிவாச்சாரியார் மீண்டும் உரத்த குரலில் எல்லோருக்கும் காது கேட்கும் வண்ணம் பேசினார்.

"உமக்கு பெரிய மனசு ஓய். ஒரு முழு கரண்டி நெய் தானமா



தர்றீர்" என்று வேகமாக கேலி செய்கின்ற குரலில் ஒரு கருத்தச்சர் பேசினார். "நீங்க எனக்கு தானமா கொடுத்தா, நான் உங்களுக்கு தானமா கொடுக்கறேன். நான் காசு கொடுத்தா பசுமாடு வெச்சுண்டேன். எனக்கு ராஜா கிட்ட இருந்து நல்ல பசுமாடு குறைந்த விலையில் கிடைச்சது. நாலு பசுமாட்டுக்கு தீவனம் வைக்க நல்லபடியா வளர்த்து, அதுல வர்ற நெய்யை உங்களுக்கெல்லாம் பரிமாறரேன். நான் காசு கொடுத்து வாங்கி இருந்தா உங்ககிட்ட காசு வாங்கணும். ராஜா என்ன அப்படி வளர்க்கலியே. சௌகரியமா வைச்சிருக்காரே. சோழ தேசத்து மக்கள் வண்ணமா சாப்பிடட்டும் என்று தானே இவ்வளவு கஷ்டப்படறார்" என்ற சொல்ல, இராமநாத சிவாச்சாரியாரின் அந்த பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்க அங்குள்ள எவருக்கும் தைரியமில்லை.

"ஆக, இது உம்ம தானமில்லை" மறுபடியும் மறவர் துவங்கினார்.

"ஆமாம். இங்கு வந்த அத்தனையும் இராஜேந்திர சோழருடைய தானம் தான். நீ, நான், உங்கப்பா, அம்மா, உம்புள்ளை எல்லாமே அவருடைய தானம் தான். மொத்த சோழ தேசமும் அவர் சொத்து தான். அவர் போட்ட பிச்சை தான். அதனால் தான் சம்மணம் கட்டிண்டு சர் சர்ன்னு சாப்பிடுறீர். ரெண்டு நாள் நடந்து பாண்டிய தேசத்துக்கு போய்ட்டு வாரும். பொட்டக்காடு. புழுதிக் காத்து. ஒதுங்க வீடு கிடையாது. உட்கார திண்ணை கிடையாது. ஒவ்வொரு கிராமமும் குப்பை மேடா இருக்கு"

"பாண்டிய தேசம் பரவாயில்லை. இன்னும் கொஞ்சம் தள்ளி சேர தேசத்துக்கு போனாப் போதும். வெறும் காடு தான். வீடு இருந்த இடத்தில் எல்லாம் ஆல மரமும், அரச மரமும் முளைச்சு கிடக்கு. ஏற்கனவே அங்கொரு வீடும், இங்கொரு வீடுமா இருக்கும். ஒண்ணா கூடி உட்கார்ந்து சாப்பிட மாட்டாங்க. அவனவன் தாப்பாளை போட்டுண்டு வீட்டுக்குள்ள உட்கார்ந்து சாப்பாடு தின்பான். இப்ப இன்னும் மோசம். ஜனங்க இருக்காங்களான்னே தெரியல. ஜனங்களே இல்லாத காடு போல சேர தேசம் மாறிடுத்து"

"துரத்தி, துரத்தி அடிச்சோம். அதனால உட்கார்ந்து இருக்காறுங்க இல்ல. மோசமான பயலுக, அந்த மலையாளத்து சேனைகள்"

"போறுமய்யா, திரும்ப திரும்ப யுத்தத்தை பத்தியே பேசிக் கொண்டிருக்க வேண்டாம். நல்ல விஷயங்க பேசுவோம்"

"ஏன் யுத்தம் நல்ல விஷயமில்லையா?" மறவன் சீறலாகக் கேட்டான்.

"இப்பொழுது இந்த சோழ தேசம் அனுபவித்திருக்கிற அத்தனை

விஷயத்திற்கும் காரணம் யுத்தம். ஒன்றல்ல, இரண்டல்ல பல நூறு யுத்தங்கள். விஜயாலயர் காலத்திலிருந்து எத்தனை போர்கள் கண்டி ருக்கிறோம். எத்தனை முறை வென்றிருக்கிறோம். அந்த வெற்றி ளுடைய விளைவு தானே இன்று உட்கார்ந்து கொண்டு இடரிகையு அப்பமும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்"

அவர்கள் கை அலம்ப எழுந்தார்கள். வாய் கொப்பளித்தார்கள். வீடு சுற்றி வந்தார்கள். வாசலில் போடப்பட்டிருந்த மரப்பலகைகளில் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்கள். வெற்றிலையும், கொட்டைப் பாக்கும் வைக்கப்பட்டிருந்தன. கொட்டைப் பாக்கை எடுத்து சிறு துண்டாக மறவர் நறுக்கிப் போட ஆளுக்கு ஒரு துண்டு எடுத்துக் கொண்டார்கள். வாயில் அதக்கிக் கொண்டார்கள். பிறகு சுண்ணம் தடவிய வெற்றிலையை பிரித்து போட்டுக் கொண்டார்கள்.

"போட்டுக்கோப்பா, ஒண்ணும் தப்பில்ல. இதுக்கும் காச வாங்கல" என்ற மறவர் பொற்கொல்லரை கேலி செய்தார்.

பொற்கொல்லர் இன்னொரு பாக்கு எடுத்துக் கொண்டார்.

"மலையாளத்து பாக்கைய்யா. ஜாக்கிரதை. அதிகம் போட்டால் தொண்டை கட்டிக் கொள்ளும்"

"இது உடனே போட்டுக் கொள்வதற்கல்ல. இன்று மாலை போட்டுக் கொள்வதற்கு" எடுத்த பாக்கை இடுப்பில் பத்திரப்படுத்திக் கொண்டார்.

தொண்டை மண்டலத்து எல்லையிலிருந்து நல்ல அரிசி குடந்தையின் வெற்றிலை, தஞ்சாவூரின் வாழைப் பழங்கள், கங்க தேசத்திலிருந்து வந்த கடலை பருப்புகள் மறவர் சொன்னது போல இங்கு எல்லாமும் கிடைக்கிறது. தஞ்சை மிக சௌகரியமான வாசஸ்தலமாக போய் விட்டது.

ஆனால் ஒரு மாடைக்கு ஒரு தட்டு சோறு கிடைத்துத்திருந்ததய்யா. அந்த ஒரு தட்டு சோறு போதும். ஆனால் இப்போது மூன்று மாடை கொடுத்தால் தான் ஆறு இடரிகை கிடைக்கிறது. அது அரை வயிற்றுக்குத் தான், எனக்கு போதுமானதாக இருக்கிறது"

"பிற்பகல் உணவு என்ன விலை விற்கிறது" என்று மறவர் கேட்க, "ஆறு மாடைகள்" என்று பதில் வந்தது.

"இங்கிருந்து நாலு வீடு தள்ளி பொன்னம்மாள் என்கிற அந்தணப் பெண்மணி தன் இரண்டு மகளுடன், மூன்று மகன்களுடன் சோற்றுக் கடை நடத்துகிறார். இடரிகை கிடையாது. அதற்கு பதிலாக



...டும். தேங்காய் புட்டும். இவர் செய்வது போல நெய் ...று மாட்டாள். அதற்கு பதிலாக வாழைப் பழத்தை உரித்து ...த்திலேயே வெல்லத்தை வைத்து விடுவாள். வெல்லத்தோடு வாழைப் பழத்தை நசுக்கி சாப்பிட்டால் போதும், கொஞ்ச நேரத்தில் ... பசிக்கும். எவ்வளவு சாப்பிடுகிறோம் என்றே தெரியாது. இடரிகையாவது ஒரு எண்ணிக்கைக்கு கட்டுப்படுகிறது. அவள் ... காரண்டியாக வைப்பது தான் கணக்கு. அவள் சொல்வது தான் இறுதி. ஆனால் ஒரு பெண்மணியாக ஆறு அடுப்புகளில் ...கில் மூங்கில் அடைத்து வேக வைத்த தேங்காய் புட்டை தட்டி ...டி எடுத்து சுடச்சுட இலைகளில் போடுகிறாள்"

"பொன்னம்மாள் கடையை பற்றித் தானே பேசுகிறீர். அதற்கு அடுத்ததாக ஒரு கடை இருக்கிறது. மாலையில் தேன்குழல் பிழிகிறார்கள். உள்ளங்கை அகலமாக இருக்கிறது. ஒரு மாடைக்கு நாலு தேன்குழல். இரண்டு மாடை கொடுத்து எட்டு தேன்குழல் வாங்கி மடியில் கட்டிக் கொண்டால் போதும். அத்தனையும் சாப்பிட்டு விட்டு குளிர்ந்த நீர் குடித்தால் போதும். அடடா! உணவு எவ்வளவு சுகம் என்று அப்பொழுது தான் தெரிகிறது. மாமன்னர் இராஜேந்திர சோழர், வாழ்க. அவரால் கிடைத்த சுகம் இது"

"மூன்றாவது கடைக்கு இன்னும் நான்கு கடை தள்ளி போனால் ஒரு இனிப்பு. இளஞ்சூடாக சாப்பிட வேண்டும். அப்பா இப்போதே போய் சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது. எந்த நேரமும் கிடைக்கிறது. அவருடைய முக்கியமான விஷயம் திரட்டுப்பால் மட்டுமே"

"அடடா கடைசி வரை சோறு பற்றி தான் பேசிக் கொண்டிருப்பீர்களா. வேறு எதுவும் பேச மாட்டீர்களா? வேறு விஷயங்கள் பேசுங்களேய்யா" மறவர் அலுத்துக் கொண்டார்.

"சிற்பியாரே, இராஜேந்திரருக்கு தனித்த வேலை செய்யத் தானே நியமிக்கப்பட்டிருக்கிறீர். வேலை இங்கா, ஜெயங்கொண்டத்திலா. ராஜ ராஜேஸ்வரம் முற்றுப் பெற வேண்டாமா?"

"ஒன்றும் உத்தரவு வரவில்லை"

"ஏன் உத்தரவு வரவில்லை. மூளியாக விடப் போகிறீர்களா?"

"அதை மூளி என்று எப்படி சொல்வது. உங்கள் வீட்டில் பின்புறம் சுவர் எழுப்பாது வெறுமே வேலி போட்டிருக்கிறீர்கள் என்றால் அது மூளி என்று அர்த்தமா. இல்லையே. அது போலத் தான். சிறு சிறு வேலைகள் மீதம் இருக்கின்றன. ஆனால் அதை முடிக்கச் சொல்லி உத்தரவில்லை மாறாக..." அவர் பேச்சு நிறுத்தினார். முகத்தில்

லேசாக ஒரு வருத்தம். அந்த இடைவெளியில் மின்னி மறைந்தது.

"என்ன மாறாக" என்று எல்லோரும் கேட்டார்கள். உடனடியாக ஜெயங்கொண்டத்திற்கு கிளம்பச் சொல்லி உத்தரவு. பத்து பதினைந்து சிற்பிகள் தவிர அதுவும் வயதானவர்கள் தவிர மற்ற எல்லா சிற்பிகளும் ஜெயங்கொண்டம் நோக்கி வந்து விட வேண்டும்"

"போயிற்று. இந்த தஞ்சாவூரின் அற்புதமான சாப்பாடு உமக்கு கிடைக்காமற் போகப் போகிறது. வருத்தம் தான்" என்று சொல்ல,

"அதெல்லாம் இல்லை. ஒரு பொழுதும் இராஜேந்திர சோழர் நம் வயிறு வாட விட மாட்டார். நாங்கள் போவதற்கு முன்பு தொண்டை நாட்டு அந்தணர்கள் அங்கே போய் விட்டார்கள். பாத்திர பண்டங்களுடன் அங்கு குடியேறி விட்டார்கள்"

"அப்படியா? ஆனால் இங்கு கிடைக்கின்ற அரிசியும், பருப்பும், பாலும், நெய்யும் அங்கு கிடைக்குமா?"

"இதைவிட பத்து மடங்கு அதிகமாக கிடைக்கும். வீரநாராயண புரம் ஏரியை பார்த்ததே இல்லையா? உடையார்குடியை கேள்விப் பட்டதே இல்லையா? ஏரியை சுற்றி அத்தனை இடமும் நன்செய் நிலம். மூன்று போகம். ஊடுபயிறாக பருப்புகள் போடுகிறார்கள். கரும்புக்கு ஊடுபயிர். வெற்றிலைக்கு ஊடுபயிர் என்று எது போட்டாலும் ஊடுபயிர் போடுகிறார்கள். நெல் மட்டும் தான் தனித்து வளருகிறது. எனவே அரிசி, பருப்பு, பால், நெய் எதற்கும் கவலை இல்லை"

"பசுக்களுக்கு எங்கே போவது?"

"நடுநாட்டில் உள்ளவர்களுக்கு அதுதான் வேலை. கீழை சாளுக்கியத்திலிருந்து வந்த பசுக்களை மடக்கி அவர்களே வாங்கிக் கொள்கிறார்கள். பால் கறந்து உடனடியாக வெண்ணெய் கடைந்து நெய் காய்ச்சி எல்லா கிராமங்களுக்கும் அனுப்புகிறார்கள். மோர் கூட விற்கிறார்களய்யா"

"மோர் காசுக்கு விற்பதா?"

"ஆமாம். கனமான மோர். தொட்டால் ஒட்டிக் கொள்கிற பிசுபிசுப்பான மோர். அதை கீழை சாளுக்கியத்திலிருந்து வந்த இடையர்கள் விற்கிறார்கள். அவர்களுக்கு மோர் தான் சுலபமாக கிடைக்கும் போலிருக்கிறது"

"பெரிய பானைகளில் மோரும், உலர்ந்த மீனும் எடுத்து வருகிறார்கள். இரட்டை உறியில் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அங்கங்கே நின்று விற்கிறார்கள். மோருக்கு கீழை சாளுக்கியத்தில்



என்ன பேர் தெரியுமா?"

"தெரியாதே"

"பெருகு என்று பெயர். அவர்கள் பெருகு என்று விற்க மாட்டார்கள். பெருகூ என்று கத்துவார்கள். பெருகூ என்பதில் மற்றதெல்லாம் மறைந்து 'கூ' என்ற சத்தம் மட்டும் கேட்கும். குழந்தைகள் தாகத்துக்கு அந்த மோர் நன்றாக இருக்கிறது.

"மறுபடி சோற்று விஷயமாக வந்து விட்டோமா"

"ஜெயங்கொண்டத்தில் என்ன நடக்கிறது. யாருக்காவது தெரியுமா? மறவர் கேட்டார்.

"நீ கோட்டைக் காவலா? இடம் பெயர வசதியே இல்லையோ. ஜெயங்கொண்டத்தில் மிக அற்புதமான ஒரு நகரத்தை இராஜேந்திர சோழர் பார்த்து, பார்த்து கட்டிக் கொண்டிருக்கிறார். வரைபடத்தின் மாதிரியை பார்க்க நேரிட்டது. மாதிரியே மூச்சடைக்க வைத்தது" என்று சிற்பி தொடை தட்டிக் கொண்டு பேசினார்.

"இராஜராஜேஸ்வரம் போல மிக அழகான ஒரு கோவில். அந்த கோவிலை சுற்றி கோட்டை, கோட்டைக்கு பின்புறம் அரண்மனை, அரண்மனைக்கு அடுத்தபடி படைவீரர்கள் குடியிருப்பு. வலது பக்கமும் படைவீரர்கள் குடியிருப்பு, இடது பக்கமும் படைவீரர்கள் குடியிருப்பு. நடுவே வணிகர்கள். அதற்கும் நடுவே அந்தணர்கள் என்று விதம் விதமாக பிரித்துப் போட்டிருக்கிறார்கள். சுற்றி உள்ள எல்லா இடங்களும் காடு அழித்து விளை நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன"

"சிறிய கால்வாய்கள் வெட்டப்பட்டு எல்லா பக்கமும் நதிநீர் பாயும்படி வைக்கப்பட்டிருக்கிறது.

"கோவில் வேலை நடக்கிறதா?"

"ஒரு பனை உயரத்துக்கு எழும்பி விட்டதாக சொல்கிறார்கள்" சட்டென்று எல்லார் கவனமும் வேறு திசை நோக்கி நின்றது.

ஏதோ ஒரு கலவரக் கூச்சல் போல இரண்டும்கெட்டானாய் விளங்கியும் விளங்காததும் போல ஒரு சப்தம் வந்தது. சட்டென்று யாரோ ஓடுகின்ற சப்தம் கேட்டது. எல்லோரும் இறங்கி தெருவில் நின்று பார்த்தார்கள். பொன்னம்மாள் என்று சொல்லப்படுகின்ற அந்த அந்தணப் பெண்ணின் வீட்டு வாசலில் நாலைந்து பேர் கூடியிருக்க, யாரோ ஒருவன் திசை தெரியாமல் ஆடிக் கொண்டிருந்தான்.

வீட்டுக் கூரையில் இருந்த மூங்கில் கழியை உருவி ஓங்கி தரையில் அடித்தான். இடது பக்கம் உள்ள மணிக்கூண்டு விளக்கை

அரற்றி உடைத்தான். "யாருக்குத் தான் சோறு போடுவாயா, சோ... போட காசு வாங்குகிறாயா, என்ன? அந்தனை பஞ்சமா இ... நாட்டில். எதுக்காக சோற்றுக்கு காசு வாங்குகிறாய்" என்று அவ... தள்ளாடியபடியே கேட்டான்.

மறவனுடைய உச்சகட்ட போதையில் அந்த மறவன் இருப்ப... அவர்களுக்கு தெரிந்தது. மற்றொரு மறவர் தலையில் அடித்... கொண்டார்.

"இது சரியாக முடியப் போவதில்லை. மூன்றாவது நாளா... இவன் இதே தொந்தரவு செய்து கொண்டிருக்கிறான். சோற்றுக்... காசு வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறதாம். அப்படி சோ... விற்பது மிகப் பெரிய பாவமாம். பசிக்கிற நேரத்தில் பசிக்கி... ஆளுக்கு பசிக்காத ஆள் சோறு போட்டே ஆக வேண்டுமாம்"

"எந்த சட்டமய்யா, யாரைக் கேட்பது?"

வெளியே ஓடிவந்து மடக்கிய பொன்னம்மாள் பிள்ளைக்கு... பளீரென்று ஒரு அடி விழுந்தது. அந்த பிள்ளை தடுதடுத்து ஒதுங்... ஓரமாகப் போனான்.

"ஒரு தட்டில் உடனடியாக புட்டு எடுத்து வா. இல்லையென்றா... கொலை செய்து விடுவேன்" மூங்கிலை ஈட்டிபோல் பிடித்து... கொண்டு அந்த வீட்டிற்குள் எறிவதற்கு முயற்சி செய்த போது... வேறு சில மறவர்கள் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அவன் எந்த சமாதானத்திற்கும் ஒத்துப் போகவில்லை... மூங்கிலை கெட்டியாக பிடித்துக் கொண்டு 'வரப்போகிறா... இல்லையா' என்று உரத்த குரலில் கேட்க, 'முடியாது' என்று பெண்... குரல் உள்ளிருந்து கேட்டது.

முழு வீச்சில் கையில் இருந்த மூங்கிலை அவன் வீடு நோக்கி... எறிந்தான். பல்வேறு அலறல் குரல்கள் கேட்டன. வாசலில் இருந்தவ... கள் திடுதிப்பென்று பொன்னம்மாளின் வீடு நோக்கி போனார்கள்.

"அடேய்! யார் நீ? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்... எந்த தைரியத்தில் ஈட்டி எறிவது போல மூங்கிலை வீட்டுக்குள்... எறிகிறாய். யார் மேலும் பட்டிருந்தால் என்ன ஆகும். அறிவு... கெட்டவனே, தள்ளிப் போ" என்று சிற்பி முன்னே வந்து அவன்... நெஞ்சில் கை வைத்து தள்ளினான். எதிரே இருப்பவன் சிற்பி என்று... தள்ளாடியவனுக்கு தெரிந்து விட்டது. சிற்பிகளை யாரும் எளிதில்... பகைத்துக் கொள்ள மாட்டார்கள். சிற்பிகளை அரசர் மரியாதையாக



நடத்துவதால் ஊரும் மரியாதையாக நடத்திக் கொண்டிருந்தது.

"பசித்தவனுக்கு சோறு போட வேண்டும் என்று மனு தர்மம் சொல்கிறதய்யா. எனக்கு பசிக்கிறது. சோறு போடுங்கள்" என்று அந்த மறவன் குடிபோதையில் உரக்கக் கத்தினான்.

"பனங்கள்ளு பசி கிளறும்" யாரோ பின்னாலிருந்து பேசினார்கள்.

"ஆமாம். பனங்கள் சாப்பிட்டு விட்டுத் தான் வந்திருக்கிறேன், பசியெடுக்கத் தான் செய்கிறது. இதற்கு என்ன பதில்.

ஒரு மறவன் உயிரை தானமாக மதித்து போர் முனைக்கு போக வேண்டும். வெட்டும், குத்தும் பட்டு குத்துயிராக வரவேண்டும். அவனுக்கு ஒரு பிடி சோறு போடக்கூடாதா, கேட்டால் தரக்கூடாதா. மூன்று மாடை வேண்டுமாம். எங்கிருக்கிறது மூன்று மாடை"

"ஆமாம், மொத்த மாடையும் கள்ளுக்கே போயிற்று"

"கடன் வைத்திருக்கிறேனய்யா. கடன் வைத்து விட்டு குடித்து விட்டு வந்திருக்கிறேன்"

"அது இன்னும் உத்தமமான செயல். அப்பொழுது பசி கூடத்தான் இருக்கும்" வேறு யாரோ கேலி பேசினார்கள். அவர்கள் கேலி செய்கிறார்கள் என்று அந்த மறவனுக்கு புரியவில்லை. புரிகின்ற திறனும் இல்லை.

பேசிக் கொண்டே இருந்தால் எப்படி? எனக்கு புட்டு கொடு. அவன் இந்த முறை தடுமாறி சுவரில் இடித்துக் கொண்டு திண்ணை பக்கம் இருக்கின்ற கம்பத்தில் முட்டி கொண்டு உள்ளே போக எத்தனிக்கிற போது திடீரென்று வாசற் கதவு அடைக்கப்பட்டது.

உள்ளிருந்த பெண் குழந்தைகள் பயத்தோடு கூச்சலிட்டு கதவை அடைத்தார்கள். அவன் கதவை எட்டி உதைத்தான். இன்னொரு மூங்கில் கழியை பிடுங்கிக் கொண்டான். ஓங்கி கதவில் அடித்தான். தூணாக நின்றிருந்த மூங்கில் கழியை பிடுங்க அவன் முயற்சி செய்தான். பல பேர் அவனை அமைதிப்படுத்த முயற்சித்தார்கள்.


மறவன் ஒருவன் முன்னேறி "இதற்குமேல் ஆட்டம் போட்டால் அடி வாங்குவாய். இங்கு இருக்கின்ற யாரிடமாவது காசு வாங்கி அந்த காசை கொடுத்து உணவு சாப்பிடு. வீணாக ஆடாதே, கடன் வாங்கு" என்று சொல்ல அவன் மறுத்து விட்டான்.

"முடியாது. எனக்கு பசிக்கிறது. பசித்த வயிறுக்கு சோறு போட வேண்டும். அது உங்களுடைய கடமை"

"நீ அதிகமாக பேசுகிறாய்"

"கீழை சாளுக்கியத்தின் வட எல்லை வரைக்கும் போய் வந்திருக்கிறேன் அய்யா. எனக்கு ஒரு சட்டி புட்டு கொடுக்கக் கூடாதா அவ்வளவு இளக்காரமா?" என்று மறுபடியும் அவன் நாலாதிசையிலும் அலைந்து கத்த அவன் அலைவதை வேடிக்கை பார்த்தார்கள்.

"இராஜேந்திர சோழரின் நிர்வாகம் சரியில்லை" என்ற முணுமுணுப்பு அங்கங்கே தோன்ற ஆரம்பித்திருந்தது.



# 3

மூச்சின் மீது முழு கவனமும் வைத்து உள்ளுக்குள் இழுத்து வெளியே அனுப்புவதற்கு பெயர் தான் சுவாசம். மற்றபடி மூச்சு என்ன செய்கிறது என்று கவனிக்காது. அதாகவே உள்ளே போய் வெளியே வந்தால் அது ஆசுவாசம். உடம்பு இளைப்பாறிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

சுவாசிப்பது என்பது மற்ற எல்லா வேலைகளையும் விட மிகக் கூர்மையாக செய்ய வேண்டிய வேலை. எந்த வேலையை மிகக் கவனமாக செய்ய வேண்டுமோ அந்த வேலையை மனித குலம் சர்வ அலட்சியத்தோடு செய்கிறது. எவனொருவன் சுவாசத்தை மிகுந்த கவனத்துடன், ஈடுபாட்டுடன் செய்கிறானோ அவனுடைய மற்ற எல்லா காரியங்களும் மிகச் சுத்தமாகவும், வெற்றிகரமாகவும் இருக்கும்.

யார் நுரையீரலை முழுவதும் நிரப்பி முற்றிலும் காற்றை வெளியே அனுப்புகிறார்களோ அப்பொழுது பிராணவாயுவிலிருந்து பிராணசக்தி உடம்பில் ஒட்டிக் கொள்கிறது. பிராண வாயுவில் இருக்கின்ற பிராண சக்தி உடம்பில் ஒட்டிக் கொள்ள உடம்பு முழுவதும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கண்டு விரல் நுனி மூக்கின் நுனி, குதிகால், கழுத்தின் பின்புறம் என்ற பல சோம்பலான



இடங்கள் சுறுசுறுப்படைகின்றன. கண்கள் ஜொலிக்கின்றன. காதின் [illegible] மிக உன்னதமான இடத்தை அடைகிறது.

சுவாசம் என்பது ஒரு பயிற்சி அல்ல. ஒரு பழக்கமும் அல்ல. மிகச் சிறக காற்று இழுத்து வெளியே விடுதலை இயல்பாக, அதே நேரம் மிக முக்கியமானதாக செய்ய வேண்டும். இதை செய்கின்ற ஒரே உயிர் [illegible] பாம்பு மட்டுமே. அதிலும் நாகப்பாம்பு தான் இந்த சுவாசத்தை முற்றிலுமாக இழுத்து வாயுவில் இருக்கின்ற பிராண சக்தியை உடம்பு முழுவதும் அனுப்பி தன்னுடைய உடம்பு பளபளப்பையும், தன்னுடைய உணவுச் செறிவையும் அதிகப்படுத்திக் கொள்கிறது.

குதிரைகள் பழக்கப்படுத்தினால் கற்றுக் கொள்கின்றன. ஆனால் அவ்வப்போது மறந்து விடுகின்றன. பசுக்களுக்கு சுவாசம் பற்றி ஞாபகம் இருப்பதே இல்லை. யானைகள் ஒரு நாளில் சில வேளைகளில் மட்டும் இந்த பிராணத்தின் மீது கவனம் வைத்து செய்கின்றன. ஆனாலும், ஏராளவு வலிவுடையதாய், திறனுடையதாய் திகழ்கின்றன. மனிதர்களில் பாம்பாகவும், யானையாகவும், பசுமாடாகவும் பலர் இருக்கிறார்கள். பாம்பாக இருக்கிறவர்களை எளிதாக கண்டுவிடலாம். அவர்களால் அயர்ந்து உறங்க முடியாது. அடித்து போட்டது போல அயர்ந்து உறங்குவது மனிதருடைய குணமல்ல. அது சோம்பலான ஒரு மிருகத்தினுடைய குணம், யானைகளும், குதிரைகளும் நின்ற வண்ணம் தூங்குகின்றன. பாம்பு உறங்குவதே இல்லை. சட்டென்று சின்ன அசைவுக்குக் கூட ஒரு வாசனை மாற்றத்துக்குக் கூட விழித்துக் கொள்ளும்.

இன்னும் மூச்சு உள்ளே இழுப்பதற்கு மூச்சை முற்றிலுமாக வெளியே அனுப்ப வேண்டும். ஒரு துளி கூட மீதம் வைக்காமல் மூச்சை வெளியே விடும் போது உள்ளுக்குள் மிக வேகமாக காற்றுப் போய் நுரையீரலின் அத்தனை குமிழ்களிலும் காற்று நிரப்பப்படுகிறது. ஆரம்பத்தில் இது கடினம். ஆனால், இளம் வயதிலேயே இது பழகி விட்டால் மூச்சின் மீது எப்பொழுதுமே புத்தியின் ஒரு பகுதி கவனமாக இருந்து கொண்டிருக்கும்.

காந்தளூர் சாலையில் இளம் வயதில் கற்றுக் கொண்டது. ஆனால் என்ன சொல்கிறார்கள்? எதற்கு சொல்கிறார்கள் என்று புரியவில்லை. சொன்னவர்களும் விளக்கியது இல்லை. ஆனால் சமீபத்தில் நாகை போகும்போது அருள்மொழிப் பட்டன் மூச்சுப் பயற்சி செய்வதை பார்த்து ஒரு பிட்சு மெல்ல சிரித்தார்.

"இதென்ன வாள் வீச்சா? ஈட்டி எறிதலா அல்லது வில்

அம்பு சமாச்சாரமா? ஏன் இப்படி முறுக்கிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். அமைதியாக இருங்கள்" என்று சொன்னார்.

அருண்மொழிப் பட்டனுக்கு கொஞ்சம் அவமானமாக இருந்தது. "ஏன், என்ன தவறு" என்று உஷ்ணமாக கேள்வி எழுந்தது.

"அதற்குள் கோபம் வருகிறதா? அப்போது ஏதோ தவறு இருக்கிறது என்று தான் அர்த்தம்" சொல்லிவிட்டு மீண்டும் புத்த பிட்சு சிரித்தார்.

இன்னும் அவமானம் அதிகமாகியது. "தவறை சொன்னால் திருத்திக் கொள்கிறேன்" பதில் சொன்னான். இப்பொழுது சொல்லிய வார்த்தையில் கோபம் குறையவில்லை.

"நான் எதற்கு சொல்ல வேண்டும், அகந்தையும், அதிகாரமும் இருந்தால் எப்படி கற்றுக் கொள்ள வரும். கற்றுக் கொள்பவருக்கு முதலில் தேவை பணிவு. பணிவு என்பது ஒரு இழிவான குணமே அல்ல, பணிவு என்பது அறிவும் ஆவலின் உச்சகட்டம். பணிவு தன்னை முழுவதுமாக ஒரு விஷயத்திற்கு தயார் படுத்திக் கொள்கின்ற தெளிவு"

"மூச்சு விடுதல் என்பதை பயிற்சியாக ஏன் செய்கிறீர்கள். மூச்சு விடுவது என்பது எல்லா நேரத்திலும் செய்ய வேண்டிய விஷயம். எனவே, அது இயல்பாக இருக்க வேண்டும். இதை பயிற்சியாக செய்தால் அவ்வப்போது உபயோகப்படும். அவ்வப்போது உபயோகப் படுத்துகிற விஷயமாக ஒரு நாளும் மூச்சு இல்லை. மூச்சு இழுக்கவும் கூடாது. எல்லா நேரமும் உங்கள் மூச்சு உங்களுக்கு பயன்பட வேண்டும்"

"அதாவது எல்லா நேரமும் நீங்கள் மூச்சை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வப்போது எடுத்து சொறிந்து கொள்கின்ற பிரம்பு போல மூச்சு இருக்கக் கூடாது"

இப்படி பல நூறு விஷயங்கள் நாகைப்பட்டினத்து விகாரையில் ஆசிரியர்களாக இருக்கும் புத்த பிட்சுக்களால் அருண்மொழிப் பட்டனுக்கு சொல்லித் தரப்பட்டது.

"நான் வைஷ்ணவன் ஆயிற்றே, என்னை விகாரைக்குள்ளே விட மாட்டீர்கள் என்று நினைத்தேன். ஓரளவு அனுமதிப்பீர்கள் என்றும் நினைத்தேன். ஆனால் இவ்வளவு எளிதாக, இனிமையாக எல்லாமும் சொல்லித்தர தயாராக இருக்கிற உங்களைப் பார்த்தால் கட்டிக் கொண்டு கொண்டாட தோன்றுகிறது. பௌத்தம் இன்னும் ஒரு நல்ல மதமோ என்று தோன்றுகிறது" சொல்லி விட்டு அருள்மொழி பட்டன் ஆசாரியாரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"உங்கள் நன்றி அறிதல் புரிகிறது. ஆனால் உங்கள் நன்றி



அறிதலை இப்படி சிக்கலான மொழியில் வெளிப்படுத்துகிறீர்கள் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் வைணவர், நாம் இருப்பது சைவத் திருநாடு. நாங்கள் பௌத்தர். நான் இந்த கேள்விக்கு பதில் சொன்னால் நன்றாக இருக்கும். நாகை பட்டினத்து விகாரையை சேர்ந்த புத்த பிட்சுக்கள் சைவத்திற்கு எதிராக இருக்கிறார்கள் என்ற பேச்சல்லவா வரும்.

பௌத்தம் ஒரு மதமல்ல. அது ஒரு வழி. புத்தம் என்பது ஒரு பெயரல்ல. அது ஒரு நிலை. சித்தார்த்தன் என்கிற இளவரசன் கௌதம முனிவன் என்று மாறி அந்த கௌதம முனிவன் புத்தம் என்ற நிலையை அடைந்தான். அவ்வாறே நான் பிட்சு. புத்தம் என்ற நிலையை அடைய முயன்று கொண்டிருக்கிற ஒரு பிட்சு. பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிற ஒரு பிட்சு. இறைவனை நோக்கி இறைஞ்சிக் கொண்டிருக்கிற ஒரு பிட்சு. அவ்வளவே.

"சைவ சித்தாந்தத்தில் இல்லாததா. திருமூலரை நீங்கள் படித்ததில்லையா? பல சித்த புருஷர்கள் மூச்சு பற்றி மிக விவரமாக சைவத்தில் சொல்லி இருக்கிறார்களே, அவர்கள் தங்களை சைவன் என்று கூட சொன்னது இல்லை. வெறுமே தான் அனுபவித்ததை பகிர்ந்து கொள்வதோடு நின்று விட்டார்கள்"

"வைணவமும் உயர்ந்தது. இந்த பேச்சு, மூச்சு எல்லாவற்றையும் விட்டு விடு. எல்லாவற்றையும் தூக்கி எறி. இது ஒவ்வொன்றாக பிடித்துக் கொண்டு போவதற்குள் பல ஜென்மங்கள் ஆகிவிடும். வெறுமே ஏங்கி அழுது புலம்பி, கடவுளே கண்ணா, நீ வாடா என்று கை நீட்டி, விரித்து அவனை அழைத்தால் போதும். அவன் வந்து ஆட்கொள்வான் என்கிறது. இதைவிட எளிதான வழி உண்டா? பார்ப்பதற்கு எளிதாக இருக்கின்ற வழி மிகக் கடினமானது. எல்லாவற்றையும் துறந்து விட்டு இறைவனை நோக்கி கை விரித்து காத்திருக்க சகலராலும் முடியுமா? அது மிக மிகப் பெரிய சரணாகதி"

"எனவே, இது உயர்வோ, அது தாழ்வோ, அதில் இருக்கிறதோ, இதில் இல்லையோ என்றெல்லாம் குழப்பிக் கொள்ள வேண்டாம். நீங்கள் சில விஷயங்களை கற்றுக் கொண்டீர்கள். உங்கள் மதம் பற்றி மறந்து விடுங்கள். உங்கள் வாழ்வு பற்றி மறந்து விடுங்கள். மூச்சு, நீங்கள் என்றும் மட்டும் இருங்கள். அந்த மூச்சு உங்களை வாழ்விக்கும். உங்கள் வாழ்வு உங்களை வகையான இடத்திற்கு அழைத்துப் போகும்"

"நீங்கள் புத்தனாக இருந்தால் என்ன? வைஷ்ணவனாக இருந்தால் என்ன? சைவனாக இருந்தால் என்ன? அல்லது மிலேச்சனாக இருந்தால் தான் என்ன? பூரண அமைதியோடு இருங்கள். அது தான்

முக்கியம். இறைவனை விட்டு விட்டு மதத்தை பிடித்துக் கொண்டால் இறைவனும் தெரியாது. உங்கள் மதமும் உணராது. உங்கள் மதத்துக்குள் நீங்களே பிளவுகள் உண்டாக்கி, நீங்கள் இரண்டாக பிளந்து நீங்களே உங்களை அடித்துக் கொண்டு மரணமடைவீர்கள். அப்படி பல மதங்கள் அழிந்து போய் இருக்கின்றன" அருண்மொழிப் பட்டனை விட வயதில் நிறைந்த பிட்சு ஆணி அடித்தது போல் பேசினார்.

கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்த பயிற்சி இந்த வயதிலும் தொடர்கிறது. இந்த வயதில் இன்னும் உபயோகமாக இருக்கிறது. நிறைய மறவர்களுக்கு முதுகு தளர்ந்து விட்டது. மார் கூடி விட்டது. கால்கள் நடுங்குகின்றன. பற்களில் பாதகம் ஏற்பட்டு அது உடம்பு முழுவதும் விதம் விதமான பிரச்சனைகளை கொண்டு வந்து சேர்கின்றன.

மாமன்னர் இராஜராஜசோழரிடம் இருந்த பல மறவர்கள், பல வீர தளபதிகள் பெரும் மீசை மட்டுமே வளர்த்துக் கொண்டு ஈட்டியை கோலாக ஊன்றிக் கொண்டு சிரமப்பட்டு நிற்கிறார்கள். ஆனால் அருண்மொழிப் பட்டனுக்கு உடல் திறனும், புத்தி கூர்மையும் குறையவில்லை. மாறாய் கூடியிருக்கிறது. ஐம்பது அகவையா தெரியவில்லையே. ஒரு நரை கூட காணோமே என்றார். ஐம்பது வயது பூர்த்தியை பெரிதாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று இரண்டு மனைவியரும் சொல்கிறார்கள். குழந்தைகள் ஆமாம் என குதிக்கிறார்கள். நேரே அப்பாவிடம் போய் விண்ணப்பித்து இருக்கிறார்கள்.

'அதற்கென்ன செய்யலாமே, செய்வது வழக்கம் உண்டே.' என்று சொல்கிறார். எல்லோரும் வந்து கொஞ்சி, கெஞ்சிய பிறகு சட்டென்று ஒரு வெட்கம் வந்து விட்டது. அப்பாவிற்கு விருப்பம் என்றால் செய்யுங்கள் என்று பொதுவாக சொல்லி விட்டு இடத்தை விட்டு நகர்ந்து விட்டான். ஐம்பது வயது. ஒரு சோழ சாம்ராஜ்ஜியத்தினுடைய வளர்ச்சியோடு வளர்ந்த ஐம்பது வயது. கொஞ்சம் கொஞ்சமாக விலகி கவனித்த அரசியலில் இன்று முழு நேர பணியாக மாறி விட்டது.

ஒரு முறை கேரளாந்தகன் கோபுரத்திற்கு மிக நீளமாக செவ்வகப் பாறை தூணாக நிறுத்த தேவைப்படுகிறது என்று கணக்கிட்டு கல் எடுத்த இடத்திலேயே செதுக்கி தஞ்சையை நோக்கி கொண்டு வந்திருந்தார்கள். திடீரென்று ஒரு இடத்தில் மண் சரிந்து கல் இடது பக்கமாக வண்டியில் இருந்து நகர்ந்து சரியத் துவங்கி விட்டது. சட்டென்று அந்த பள்ளத்தில் அருண்மொழி இறங்கி சரிகின்ற கல்லை தடுத்து ஒற்றை ஆளாய் நிறுத்தினான். மற்றவர்களும் வர



முயற்சித்தபோது மண் வேகமாக சரிந்தது. அது எல்லோருக்கும் ஆபத்தாக முடியும் என்று தெரிந்தது. நல்ல வேளை சோழ சிற்பிகள் தடுத்து விட்டார்கள்.

'என்னால் அரைநாழிகை இப்படி நிற்க முடியும். அதற்குள் கயிறை இறுக்கி மேலே இழுத்து விடுங்கள்' என்று அடிக்குரலில் அருண்மொழி உறும சோழ சிற்பிகள் துரிதமாக செயல்பட்டார்கள்.

இருபது, முப்பது இடங்களில் கனத்த கயிறு போட்டு, சுருக்கிட்டு இழுத்து எதிர்பக்கம் கொம்பு நட்டு கொம்புக்கு நடுவே குறுக்கு கோல் சாய்த்து, அந்த குறுக்குக் கோலை இந்த கயிறுகளால் விசிறிப் போட்டு பிடித்து அங்கே வைத்து இழுத்து, இழுத்து, இழுத்து நடுத் தெருவுக்கு கொண்டு வந்து விட்டார்கள்.

கல் நடு இடத்தில் இருக்கும்வரை அருண்மொழி அதை தள்ளிக் கொண்டே போனான். எப்படி முடிந்தது? எல்லோரும் வியந்தார்கள்.

இதுவும் நாகை விகாரையின் கற்றல்தான். வினாடி நேரத்தில் உடம்பை வஜ்ரமாக மாற்றிக் கொள்ள முடியும். மூச்சு சரியானபடி உள்ளுக்குள் கும்பகம் செய்தால் உடம்பின் அத்தனை இடங்களும் மூச்சால் நிரப்பப்பட்டு ஒன்றுக்கு நான்கு மடங்காக பலம் பெறும். இரும்பு போல் ஆகும் என்று அவனுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது.

மண் சரியும் போது, நிறைய பேர் இறங்குவது ஆபத்து. சோழ சிற்பிகள் தடுத்து விட்டார்கள். மிகச் சாதுர்யமாக செயல்பட்டார்கள் அவர்கள். இவனை பாராட்ட இவன் அவர்களை பாராட்ட அந்த பெருங்கல் நல்ல கதையோடு தஞ்சையை நோக்கி பயணமாயிற்று.

இப்பொழுது கம்பீரமாக கேரளாந்தகம் வாயிலில் வலதுபுறத்தில் மூன்று கோல் உயரம் இருக்கிறது. பூமியில் இரண்டு முழ உயரம் தான் நிற்கப்பட்டிருக்கிறது. மேலே ஒரு முழ உயரம் கோபுரத்துக்குள் போயிருக்கிறது. மற்றதெல்லாம் வெளியே தெரிகிறது. இப்பொழுது போனாலும் அந்த கல் தூணை பார்க்க முடியும். சுவரோடு சுவராக இருக்கின்ற அந்த பாறையை தடவி விட்டு வர முடியும். ஒவ்வொரு முறை அதை தடவும் பொழுதும் மூச்சு முட்டி விரைப்பாக நின்ற அந்த வேகம் நினைவுக்கு வருகிறது. மரணத்துக்கு தயார் என்ற நிலையில் தான் அப்படி மூச்சு இழுந்து உடம்பு முழுவதும் வலுவாக்கி நிற்க முடியும்.

இன்று காலை எல்லா அதிகாரிகளுக்கும் இராஜேந்திர சோழரிடமிருந்து அவசர ஓலை வந்தது. தஞ்சையில் முக்கியமான

இடங்களை திடீரென்று முழுவீச்சில் ரகசியமாய் சோதனை செய் வேண்டும் என்ற ஆணை வந்தது.

அருண்மொழிபட்டனுக்கு இராஜராஜேஸ்வரம் நிர்வாகத்தை நன்கு கவனிக்குமாறு தனியே எழுதப்பட்டிருந்தது. நன்கு என்று குறிப்பிடுகிறபோது அங்கு ஏதோ சரியில்லை என்று மாமன்னர் நினைக்கிறார் என்பது தெளிவாகப் புரிந்தது. எனவே ஆட்டம் எதுவும் இல்லாது மெய்க்காவல்படை கூட இல்லாது தனியே குதிரை ஏறி அரண்மனையிலிருந்து கடைத்தெரு வழியாக பல முகமன்களை ஏற்றுக் கொண்டு இராஜராஜேஸ்வரம் நோக்கி போய்க் கொண்டிருந்தான். சோற்றுக் கடை பக்கம் திரும்பிய பொழுது அங்கு கூட்டம் தெரிந்தது. கோயில் போவதற்கு சோற்றுக்கடை வீதி வழியாக போக வேண்டிய அவசியம் இல்லை. வலது பக்கம் தனிச் சிறகாக அந்த வீதி இருக்கிறது. இது சமீபத்தில் ஏற்பட்ட வீதி. கல் கட்டடங்கள் கூட அல்ல. எல்லாமே கூரை வீடுகள்தான். ஆனால் திண்ணையும், சுவரும் மிக உறுதியாகக் கட்டப்பட்டு எப்பொழுதும் நடமாட்டம் உள்ள தெருவாக போயிற்று.

'என்ன கூட்டம் அங்கே?' அருண்மொழி தயங்கி நின்றான். குதிரை லேசாய் முன்னும் பின்னும் அலைந்தது. தடவிக் கொடுத்து சமாதானப்படுத்தினான். புரவி அசையாமல் நின்றது.

'என்ன அங்கே?' எழுந்து நின்று முகமன் சொன்னவரைக் கேட்டான்.

"வழக்கம் போலத்தான். மது போதையில் அலட்டல் உரக்கக் கூடுதல். இந்த தெருவில் இது அதிகமாகி விட்டது" என்று அந்த பெரியவர் அலுப்போடு சொன்னார்.

"யார் அவன் அப்படி அலட்டுவது" நெற்றியை சுருக்கிக் கொண்டு விசாரித்தான்.

அருண்மொழி பட்டனை கண்டுவிட்டு சில வீரர்கள் குதிரையில் தாவி ஏறி சோற்றுக்கடை மத்திமத்திலிருந்து வீதியின் ஆரம்பத்திற்கு வந்தார்கள்.

"என்னப்பா என்ன ரகளை?"

"அப்பா. கண்டன்மாறன் என்கிற குதிரைப் படை வீரர் முழு போதையில் இருக்கிறான். கையில் காசு இல்லை. சோறு போடு என்று ஒரு பெண் நடத்துகின்ற சோற்றுக்கடை மீது மூங்கிலை ஈட்டி போல் எறிகிறான். கதவை அடித்து உதைக்கிறான். யார்



தடுக்கினாலும் பதிலுக்கு முகவாயில் குத்துகிறான். மறவன் என்று விட்டு விடுவதா? அடக்குவதா? புரியவில்லை. ஆனால் ஒரு சிற்பி அவன் தலைமுடியை பிடித்து அடித்து பின்கை கட்டாக கட்டி இழுத்துக் கொண்டு வருகிறார்.

"என்ன பிரச்சினை அவனுக்கு?"

"பசிக்கிறது. சோறு போடு என்கிறான்"

அருண்மொழி பட்டன் மௌனமாக நின்றான்.

"ஏன் காசு இல்லையா?"

"எல்லா காசுக்கும் குடித்து விட்டான். ஆகவே உணவுக்கு காசு இல்லை"

"சோறு போட்டார்களா இல்லையா?" அருண்மொழி பட்டருடைய கேள்வியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

மௌனமாக இருந்தார்கள்.

"உங்களைத் தான் கேட்கிறேன். அந்த வீரனுக்கு சோறு போட்டார்களா இல்லையா?"

"இல்லை. போடவில்லை. மாறாக அடித்து இழுத்து வருகிறார்கள்"

அருண்மொழி பட்டன் சட்டென்று குதிரையை திருப்பினான். மத்திம வயதுள்ள அந்த வீரனை குதிரையில் சுற்றி வந்தான். அவனை உற்றுப் பார்த்தான்.

பல போர்களில் இவனை பார்த்திருக்கிறேன். இவன் இளைஞனாக இருந்தபொழுது கவனித்திருக்கிறேன். திறமையான போர் வீரன். கொஞ்சம் அயர்ந்து உறங்குவான். உரத்த குரலில் தான் பேசுவான். இது சில வீரர்களுடைய வழக்கம். அதனால் யாரும் கண்டிக்காமல் விட்டு விட்டார்கள். ஆனால் மது அருந்தி நடு வீதியில் சண்டையிடுவது நல்லதில்லையே. ஒரு மறவனுக்கு இழுக்கான விஷயமாயிற்றே.

எல்லோரும் விலகிக் கொள்ள அந்த வீரனுக்கு அருகே குதிரை வந்து நின்றது. அவன் அவரைப் பார்த்ததும் முகம் கோணி அழத் துவங்கினான். ஒரு வேளை அவனுக்கு பல போர்கள் ஞாபகம் வந்திருக்கும்.

"யார் கட்டியது?"

சிற்பி முன்னே வந்து தலை வணங்க.

“அவர் கட்டை தயவு செய்து அவிழ்த்து விடுங்கள்” என்று பணிவாக அருண்மொழி கட்டளை இட்டான்.

உடனே செயல்படுத்தப்பட்டது. இது யாருடைய கடை என்று பார்க்க, அந்த இடத்தில் அப்பமும், இட்லியும் இருந்தது. மறவனை அந்த திண்ணையில் உட்கார வைத்து அவனுக்கெதிரே இலை போட்டு உள்ளே இருக்கின்ற நல்ல உணவுகளை பரிமாறச் சொல்லுங்கள். முதலில் இவன் பசியாறட்டும். பசி குறைந்தால் தானே போதை குறையும். வெறுமே இவர் போதையில் ஆடவிட்டு ஏன் வேடிக்கை பார்க்கிறீர்கள்”

“ஏன் என்ன ஆயிற்று உமக்கு. சும்மா இருக்க இயலாதா?” என்று கடிந்து கொண்டார்.

விரைவாக திண்ணை சுத்தம் செய்யப்பட்டு, திண்ணையில் ஒரு பலகை போடப்பட்டு, பலகையின் மீது வாழை இலை போடப்பட்டு வாழை இலை மீது அப்பங்கள் வைக்கப்பட்டன. எல்லோரும் பார்க்க அந்த வீரன் அப்பத்துக்கு எதிரே கைகட்டி உட்கார்ந்து கொண்டான். கை கூப்பி, கண் மூடி இறைவனை வணங்கினான். கூட்டம் மெல்லியதாக சிரித்தது. “சற்று நேரம் முன்பு செய்த அலம்பல் என்ன? இப்பொழுது செய்கிற பூஜை என்ன?” என்று ஒருவர் உரக்கச் சொன்னார்.

கூட்டம் மீண்டும் சிரித்தது. அருண்மொழி பதில் சொல்லாது அந்த வீரனையே பார்த்துக் கொண்டிருந்தான். வீரன் அப்பத்தை உண்டான். ஆவி பறக்க இட்லி பரிமாறப்பட்டது. மிளகுக் குழம்பு, பீர்க்கங்காய் துவையல் வைக்கப்பட்டது. எள் எண்ணெய் ஊற்றப்பட்டது. எல்லாம் கலந்து ஒரு வினோதமான வாசனை எல்லோருடைய மூக்கிலும் பரவின. பசி கிளறின.

காலையில் பன்னிரெண்டு வாழைப் பழங்களும் கொய்யா பழங்களும் சாப்பிட்டு இருந்தும் இந்த வாசனை பசியை மறுபடியும் கிளறியது. அருண்மொழி மெல்ல அதட்டி மனதை அடக்கினான்.

“அவன் எவ்வளவு சாப்பிடுகிறானோ, அதற்கு உண்டான மாடையை இந்த சிற்பியிடம் இருந்து வாங்கிக் கொள்ளுங்கள். பசிக்கிறது என்று சொன்னவருக்கு உணவு இல்லை என்று சொல்வது அவ்வளவு உயர்ந்த விஷயம் அல்ல. அவர் ஒரு வீரர், மறவன். சோழ தேசத்துக்காக போரிட்டவர். இப்பொழுது சோறு போட்டு விட்டு நாளை அல்லது நாளை மறுநாள் இவர் வருகிறபொழுது, இத்தனை சோறு தின்றீர். இவ்வளவு ஆயிற்று. அதற்குண்டான காசு



[illegible] என்று கேட்டால் அது மரியாதையாக இருக்கும். அப்படி [illegible]. போதையில் இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக [illegible] சோறு மறுத்ததும், அவரை சீண்டியதும் தவறு என்று நினைக்கிறேன்” என்று அருண்மொழி மெல்லிய குரலில் பேச, [illegible] அட்டகாசம் செய்ததை தலைக்கு தலை விவரித்தார்கள்.

“நீர் இப்போது பேசும்போது கூட போதையில் பேசுவது போலத்தான் இருக்கிறது. விசாரிக்காமல் அடித்துவிட முடியுமா? உரத்த குரலில் பேசியவர்கள் எல்லோருமே போதையில் இருப்பார்கள் என்று சொல்லவா. அவர் போதையில் இருந்தது உண்மை தான். ஆனாலும் மறவரை இழிவுபடுத்தாதீர்கள். மறவருடைய தியாகத்தை மறந்து விடாதீர்கள். அவருடைய உக்கிரமான போர் இன்று உங்களுக்கு உணவாக இருக்கிறது. நீங்கள் உணவு உண்ண பல்வேறு [illegible]களை உபயோகப்படுத்தி சம்பாதிக்கிறீர்கள். மறவருக்கு போர் தவிர ஒன்றும் தெரியாது. போர் நடக்கின்ற காலத்தில் அவரிடத்தில் [illegible] பூரணம். மற்ற நேரங்களில் இல்லாது போகும்.

எனவே, கடுமையாக இருக்க வேண்டாம். மறவரே உம்முடைய பெயர் என்ன?”

“கண்டன் மாறன்”

வலங்கை வீரன். சேனை, தெரிஞ்ச கைக்கோளப் படை உபதளபதி. பரமன் மழபாடி என் தலைவர்.

“உம்மைப் பற்றி பரமன் மழபாடியிடம் சொன்னால் என்ன ஆகும்?”

உணவு உண்பது சட்டென்று நின்றது. விழிகள் பெரிதாயின. முகத்தில் பயம் பரவியது. “பிரம்பெடுத்து விளாசிவிடுவார்”

“தெரிந்தும் இப்படி செய்கிறீர்களே?”

“தெரியாது செய்து விட்டேன்” கெஞ்சினான்.

“அடிப்பார் என்று தெரியாது செய்து விட்டீரா?”

“இல்லை. போதையில் என்ன செய்கிறோம் என்று தெரியாது செய்து விட்டேன்”

“உண்டு விட்டும் ரகளை செய்வீரோ, எங்கு அலம்பல் செய்தீரோ அங்கு போய் பலமுறை மன்னிப்புக் கேட்டு, காசு கொடுத்து உணவு உண்ண வேண்டும். சமரசம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்”

“நிச்சயம் செய்கிறேன்”

"கண்டன் மாறன் இன்னொரு முறை இப்படி நீங்கள் செய்வது தெரிந்தால் உங்களை படையில் இருந்து விலகிக் கோட்டை காவலில் உட்கார வைத்து விடுவேன்"

கண்டன் மாறன் சட்டென்று எழுந்து நின்று கை கூப்பினான் விழுந்து வணங்கினான்.

"தயவு செய்து அப்படி செய்து விடாதீர்கள். போரே என் வாழ்க்கை. போரில்லை என்பதாலேயே கோபம் வருகிறது. அந்த கோபம் இப்படி தாறுமாறுகிறது. கோட்டைக் காவல் வேண்டாம் செத்து விடுவேன். போர் முனைக்கு அனுப்புங்கள்.

இவன் வீரன். சுத்த மறவன். போர் போர் என்று மது குடிக்க வைத்து புத்தி வெறியேற்றி ஆயிரக்கணக்கான கிராமங்கள் தாண்டி அழைத்து வெட்டிக் கொல்லச் சொல்லி, அடித்து உதைக்கச் சொல்லி உபயோகப்படுத்தி விட்டு இப்போது அமைதியாய் இரு என்றால் முடியுமா? பணங்கள் புத்தியை சிதுப்பி விட்டது.

கோட்டை காவலில் செத்து விடுவானான். அப்போது வாழ்வது என்பது போரா? போர் முனையிலா?

இவனைப் போன்றவர்களால் தான் சோழ சாம்ராஜ்யம் உருவாயிற்று. எத்தனை ஆயிரம் மறவர்கள், எத்தனை விதமான திறமை, திடம்.

"மறவரே கண்டன் மாறன், வருகிறேன்" விடை பெற்றார்.

அவன் கூப்பிய கை பிரிக்காது. அவரையே கண்ணீர் வழிய பார்த்துக் கொண்டிருந்தான். அருண்மொழிப் பட்டன் குதிரை இராஜராஜேஸ்வரம் நோக்கி திரும்பியது. சோளாந்தகன் வாயில் தொட்டான் இறங்கினான்.


அருண்மொழிப் பட்டரே இந்த பாறைத் தூணையா தூக்கி நிறுத்தினீர். மாமன்னர் இராஜராஜர் இந்த தூணை தடவிக் கொடுத்தார். அற்புதம், அற்புதம் வியந்தார்.

அவர் தடவிய இடத்தில் அருண்மொழி கன்னம் வைத்துக் கொண்டான். மெல்லியதாய் கண்களில் நீர் கோர்த்தது.

எப்பேர்பட்ட ஒரு மனிதர், என்ன அற்புதமான ஒரு மன்னன். ஈடு இணையில்லாத சக்கரவர்த்தி. அய்யா அய்யா எப்படி இருக்கிறீர்கள். உள்ளே அமைதியாய் ஒரு விசும்பல் அருண்மொழிக்கு ஏற்பட்டது.

www.palsuvainovel.com





# 4

"தாகத்திற்கு இளநீர் சாப்பிடுகிறீர்களா?"

உயர்ந்த செவ்வக வடிவிலான அந்த பாறைத் தூணை [illegible] நகர்ந்து சோளாந்தகன் வாயிலின் உள்ளே புகுந்த [illegible] சிறிதான அறையின் இருட்டிலிருந்து ஒரு குரல் வந்தது. சட்டென்று அனிச்சையாக அருண்மொழி பட்டனின் இடது கை வாளின் உறைக்கு போக வலது கை கருக்கி விரிந்தது. இன்னும் ஒரு அசைவு வந்தால் வாள் சட்டென்று உருவப்பட்டு இருட்டை நோக்கி காண்பிக்கப்படும். இது திட்டமிட்டு செய்யப்படுவது அல்ல. பயிற்சியில் படிந்து போன வேலை.

"பதட்டப்படுத்தி விட்டேனா மன்னிக்க வேண்டும். நான் வெளியே வர விருப்பமில்லாமல் தான் உள்ளே உட்கார்ந்திருக்கிறேன். இங்கே நூற்றுக்கு மேற்பட்ட இளநீர்கள் இருக்கின்றன. நான் செம்புலி. செம்பக் காப்பாளர் படையில் உபதளபதி. என்னை உங்களுக்கு நினைவு இருக்குமா என்று தெரியவில்லை. நாம் சந்தித்து நாளாயிற்று"

"செம்புலி ஞாபகம் இருக்கிறதே இந்தப் பெயர். ஏன் இருட்டில் இருக்கிறீர்கள், வெளியே வாரும்" அருண்மொழித் தேவர் இருட்டைத் துழாவியபடி கேள்வி கேட்டார்.

"இப்போதைக்கு வர வேண்டாம் என்று நினைக்கிறேன். காய்கள் சீவி அனுப்புகிறேன். அப்படி உட்கார்ந்து தாகசாந்தி செய்து கொள்ளுங்கள்"

"வெளியே வந்தால் என்ன?"

"இங்கு பலருக்கு அடையாளம் தெரியும். நான் வந்தால் வேறு யார் முக்கியஸ்தர்கள் வருவார்கள் என்று கேள்வி கேட்பார்கள். மண்டைக்குள் ஆராய்வார்கள். எனவே, அப்படி எவருக்கும் சந்தேகம் எழாவண்ணம் உட்கார்ந்திருக்கிறேன்"

"யார் இங்கு முக்கியமாக வரப் போகிறார்கள்? எதற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள்?" இப்பொழுது செம்புலியின் உருவம் நன்றாகத் தெரிந்தது.

"வல்லவரையர் வந்தியத் தேவர் என்று சொல்லப்பட்டது"

அறுபது அகவைக்கு மேலும் செம்புலியின் வயது இருக்கக்கூடும். மெய்க்காவல் படையில் வெகு நாளாக செம்புலி கலந்திருப்பதை பார்த்திருக்கிறார். பத்து வருடங்கள் முன்பு இராஜேந்திர சோழரின் உணவை சோதிக்கும் ஆளாக வந்து அதற்குப் பிறகு எந்நேரமும் உடனிருக்கும் ஆளாக மாறி பிறகு இராஜேந்திர சோழருடைய நகர்வுக்கு முன் நகர்வாய் போகின்ற ஆளாக வந்திருக்கின்றார்.

"வேறு யார் இங்கு வரப் போவது? இராஜேந்திர சோழரோ?"

"நீங்கள் வருவீர்கள் என்றும் சொல்லியிருக்கிறார். இரண்டு அதிகாரிகள் இருக்கிற பொழுது அந்த இடத்தின் சூழ்நிலையை தக்கவாறு ஆராய்ந்து செய்தி சொல்ல வேண்டும் என்றும் எனக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. நான் வந்திய தேவருக்கு செய்தி சொல்லி விட்டேன். இந்த இடம் சுத்தமாக இருக்கிறது. எந்த பிரச்சனையும் இல்லை என்று சமிஞ்ஞை அனுப்பி விட்டேன்"

"என்ன சமிஞ்ஞை அது?"

"பிரகதீஸ்வரர் உறங்கி கொண்டிருக்கிறார். இது தான் நான் அனுப்பிய செய்தி"

"என்னய்யா இது அக்கிரமமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய அற்புதமான ஒரு கோவிலை எழுப்பி இது கடவுளுடைய இடம் என்று இராஜராஜர் அறிவித்திருக்க, இந்த இடத்தில் உள்ள கடவுள் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்ற சமிஞ்ஞை அனுப்ப எவ்வளவு தைரியம் வேண்டும்"

"கடவுளுடைய உறக்கம் நம்முடைய உறக்கம் போல் அல்ல. இந்த இடத்தில் இந்த நேரத்தில் ஆக்கலோ, அழித்தலோ எதுவுமில்லாது அமைதியாக அவர் இருக்கின்றதால் ஊர் சுகமாக இருக்கின்றது. அவர் இருக்கின்ற தைரியத்தில் எல்லாம் நலமாக நடந்து கொண்டிருக்கிறது என்ற அர்த்தம்தான் அது. காவல் காக்க அவர் இருக்கிறார் என்ற அர்த்தமும் அதில் அடங்கியிருக்கிறது. நம்முடைய உறக்கம் மெய் மறந்த உறக்கம், கடவுளுடைய உறக்கம் செயலற்ற அமைதி"

"அடி சக்கை. தஞ்சாவூரில் யார் தான் தத்துவம் பேசுவது என்றில்லை. இராஜராஜர் ஆரம்பித்து வைத்த பழக்கம். எல்லாவற்றிலும்



[illegible] பொருள் தேடுவது என்பது அவருடைய இயல்பு. அதை [illegible] கைக்கொண்டு எல்லோரும் இராஜராஜராகவே நடிக்கவும் [illegible] ஆரம்பித்து விட்டீர்கள். நீர் வலப்பக்கம் மிகப் பெரிய [illegible] குடுமி முடித்ததும் இராஜராஜருடைய சாயல் [illegible], அவரைப் பார்த்து போட்டுக் கொண்டதுதானோ"

"என்ன தவறு? இருக்கிறது. போட்டுக் கொள்கிறேன். வழுக்குத் [illegible] இராஜராஜரை வேறு ஏதாவது ஒரு விதத்தில் நான் [illegible]படுத்தியிருப்பேன்"

"உமக்கு வழுக்குத் தலை. எப்படி இருப்பீர்?"

"குறுந்தாடி, அடர்த்தியான மீசை, நெற்றியில் பட்டைத் திருநீறு, [illegible] சந்தனம். அதற்கு நடுவே குங்குமம். காதுகளில் ருத்ராட்ச [illegible], கழுத்தில் பெரிய ருத்ராட்சம், வலது கையில் என்னுடைய [illegible]. இடது கையில் ருத்ராட்ச வளையம்"

"சரி. வந்தியத் தேவருடைய வருகை அதிரடிச் சோதனை என்று யார் உமக்குச் சொன்னார்கள்"

"வந்தியத் தேவரே சொன்னார்"

"வந்தியத் தேவரும் நானும் வருவதற்கு மெய்க்காவல் படை [illegible] வருவானேன்"

"ஒருவேளை வரலாம்"

"யார் வரலாம்"

"யார் வர வேண்டுமோ அவர் வரலாம்"

"அடடா, மெய்க்காவல் படை உபதளபதி என்றால் நேரடியாக பேச மாட்டீர்களோ? நான் சோழப் படையின் சேனாதிபதி என்பது மறந்து போயிற்றோ?"

"எப்படி மறக்கும், உங்கள் வீரமும் புகழும், அறிவும், ஆற்றலும், மாமன்னர் இராஜராஜரால் கொண்டாடப்பட்டது. இப்போது சக்கரவர்த்தி இராஜேந்திர சோழர் அவர்களாலும் போற்றப்படுகிறது. உங்களை நெல்முனை அளவு கூட குறைத்து நான் மதிப்பிடவில்லை. நிதானமாக பேசுவதற்கு நாங்கள் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, எப்படி பேசினாலும் அப்படித் தான் வரும். அதுவும் தவிர"

"அதுவும் தவிர"

"நான் சோழ தேசத்தின் சேனாதிபதி. அருண்மொழிப் பட்டருக்கு கட்டுப்பட்டவன் அல்ல. இராஜேந்திர சோழருக்கு

மட்டுமே கட்டுப்பட்டவன், எனவே உம்மை உடனிப்படுத்து என்னை வெளிக்காட்டிக் கொள்வதிலும், உங்களோடு செல்வதும் வாக்குவாதத்தோடு பேசுவதும் என்னுடைய கடமைகளில் ஒன்று"

"நீர் வெளியிட்ட மெய்க்காப்பாளர் தானே?"

"ஆமாம்"

"அப்படியானால் இராஜேந்திர சோழர் வருகிறார் என்று அர்த்தமா"

"தெரியாது"

"வந்தியத் தேவருக்கு சமிஞ்ஞை அனுப்பவா இராஜேந்திர சோழரின் ஆனை உபயோகப்படுத்திக் கொண்டார்கள்"

"வந்தியத் தேவருக்கு இராஜேந்திர சோழரின் உத்தரவை மாற்றியமைக்கவும் உரிமை உண்டு. எனவே, அவர் சொல்படி இந்த இடம் வந்து பிரகதீஸ்வரர் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்ற சமிஞ்ஞையும் அனுப்பி விட்டேன்"

"சகிக்க முடியவில்லை அய்யா, உங்கள் வயது குறித்து ஒரு மரியாதை தரும் வண்ணம் அமைதியாக இருக்கிறேன்"

"இருங்கள். இப்பொழுது தாகசாந்தி செய்து கொள்ளுங்கள். நல்ல இனிப்பாக இருக்கிறது சேர தேசத்து தென்னங்கன்று. நட்ட நான்கு வருடத்தில் பெரும் பலன் கொடுத்திருக்கிறது"

"எங்கே நட்ட தென்னங்கன்று?"

"இவை அனைத்தும் திருக்கோவில் குளம் சுற்றி நட்டப்பட்டு இருக்கிறது. நீர் வரும் இடம். நல்ல கன்று. அமோக விளைச்சல். சரியான இடத்தில் சரியானபடி நட்டிருக்கிறார்கள். இல்லையெனில் இந்த இடத்தில் இவ்வளவு இனிப்பான இளநீர் எவ்வளவு அற்புதம்"

"இன்னும் இரண்டு வெட்டவா?" எதிரே பதிலுக்கு காத்திராமல் கத்தியும் இளநீரும் மோதுவது தெரிந்தது. இப்பொழுது இருட்டில் அந்த மனிதர் செம்புலி தெளிவாகத் தெரிந்தார். கிட்டத்தட்ட இராஜராஜரின் நடை, உடை, பாவனைகளை தன்னுள் ஏற்றுக் கொண்டு அவரைப் பற்றிய நினைவோடு வாழ்பவர் போலவே தெரிந்தார்.

தஞ்சையிலுள்ள வயதான மறவர்கள் இன்னும் பல பேர் இராஜராஜரின் மயக்கத்திலிருந்து விடுபடவில்லை. எது பேசினாலும், எப்பொழுது பேசினாலும் அவர்கள் பேச்சு இராஜராஜரிடம் தான் வந்து முடியும்.



"நீங்கள் தொட்ட பாறையை சுருக்குக் கட்டி மேலே இழுத்ததில் எனக்கும் பங்கு உண்டு. உமது பக்கம் பாறையை மூன்று பேர் தூக்க அடியில் கையிட்டு கயிறை மறு பக்கம் இழுத்தவன். அவர்கள் பிடி தவறினால் என் இரண்டு கைகளும் துண்டாயிருக்கும். என் கதி அந்த கதி ஆயிருக்கும். ஆனால் சோழ வீரர்கள் ஒருபொழுதும் கைவிட மாட்டார்கள். சோழ வீரர்களுடைய உறுதியும், துணிச்சலும் தான் இன்றைய நல்வாழ்வுக்கு அடிவாரம்"

இளநீர் கிறுகிறுப்பான தித்திப்போடு இருந்தது. வழுக்கை நல்ல மணத்தோடும், சுமமான சுவையோடும் இருந்தது. மூன்று இளநீர் வயிறை நிறைத்தது. இது இந்த நேரம் நிச்சயம் தேவை. ஆனால் வருகிறவர்களுக்கு இளநீர் வெட்டவா இவரை அனுப்பி இருப்பார்கள். வந்தியத்தேவர் இந்த இடம் சுத்தமாக இருக்கிறதென்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன? சோழ தேசத்தில் எந்த இடம் அசுத்தமாக இருந்திருக்கிறது. எந்த பகுதி பயப்பட வேண்டிய இடமாக இருந்திருக்கிறது.

ஆனால் வந்தியத் தேவர் வருகைக்காகவும், என்னுடைய வருகைக்காகவும் செம்புலி வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வெகு நிச்சயம் இராஜேந்திர சோழர் இங்கு வரப் போகிறார். என்ன காரணமாக இருக்கும். அருள்மொழி பட்டரின் மனம் வேகமாக ஆராயத் துவங்கியது.

முன்னும் பின்னும் நாற்பது வீரர்கள். அதற்குப் பின்னால் நூறு பேர் ஈட்டியும், கேடயமுமாய் ஓடி வருகின்ற சிறிய படை. பிறகு சிறிது நேரம் கழித்து தேர் படை. அவசியமெனில் யானைகளும் வரும். இது தானே இராஜேந்திர சோழரின் உலா. இப்படி செம்புலியை அனுப்பி வேவு பார்க்க வேண்டுமென்றால் அப்படி வரப்போவதில்லை என்றுதானே அர்த்தம். அப்படி வராமல் இரகசியமாக மாறுவேடமிட்டு வரப்போகிறாரா. அப்படி வரவேண்டிய அவசியம் என்ன? அறையின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டிருந்த அருள்மொழி மெல்ல எழுந்து கோபுரத்தின் வாயிலைத் தாண்டி பெரும் வெளி ஒன்றை கடந்து இராஜராஜரின் வாயிலை அடைந்தான். அங்கும் இதுபோல பாறைகள், பாறைத் தூண்கள் இருந்தன. குறுக்குக் கட்டைகளும் நல்ல அகலத்திலும் நீளத்திலும் இருந்தன.

ஒவ்வொன்றாய் உற்று கவனித்தபடி இவை கட்டப்படும் போதெல்லாம் நான் கவனித்திருக்கிறேனே என்ற பூரிப்போடு நகர்ந்து சென்று கொண்டிருந்தான்.

கோளாந்தகன் வாயிலும் இராஜராஜரின் வாயிலும் தான் அவர் பெரும் திடலுக்குள் காலடி வைத்ததும் எதிரே பறா"ம் என் ஒலியற்ற வரிவடிவத்தோடு விமானம் குபீரென்று தெரிந்தது. மனம் கை கூப்பியது. வெட்டவெளிக்கு நடுவே தனியாக ஒரு விமானம். உள்ளே இறைவன் என்று ஒரு அழகு வேகமாய் நெஞ்சில் ஒட்டிக் கொண்டு உள்ளுக்குள் இருப்பது மட்டும் இறைவனல்ல அருள்மொழி. இந் விமானமே சிவலிங்க ரூபம் தான். இந்த சிவலிங்கத்திற்குள் இன்னொரு சிவலிங்கம் உள்ளே இருக்கிறது. இந்த சிவலிங்கம் விமான சிவலிங்க திற்கு மேலே ஆகாயம் இன்னொரு சிவலிங்கமாக இருக்கிறது. ஆ ஆகாயம் என்ற சிவலிங்கம், விமானம் என்ற சிவலிங்கம் அதற்குள்ளே நடுவே உயரமாக நாம் அமைத்த சிவலிங்கம்.

இதுதான் இறைவன் என்று பிரமித்துப் போய் நின்றால் இல்லை, இதனினும் பெரியவன் என்று வேறொரு வடிவம் தோன்றும். அட்டே இது தான் இறைவன் என்று பிரமித்துப் போய் நின்றால் இல்லை இது பிரபஞ்சம் முழுவதுக்கும் சொந்தமான ஒரு விஷயம் என்று தோன்றும்.

உள்ளுக்குள்ளே தோன்றுகின்ற ஆத்ம தரிசனம் மட்டுமே கடவுள் தேடலாக முடிந்து விட முடியாது. அந்த ஆத்ம தரிசனம் தாண்டி எதிலிருந்து ஆத்மா உண்டானது என்ற கேள்வி ஒன்று வரும். அப்பொழுது வேறு ஒரு வரி வடிவம் தோன்றும். அந்த வரி வடிவம் எங்கிருந்து ஏற்பட்டிருக்கும் என்ற போது பிரபஞ் சக்தியுடைய மிகப்பெரிய பரப்பு நமக்குள் வந்து அமர்ந்து கொள்ளும். பிரபஞ்சத்திற்கு மேலே என்ன இருக்கிறது தெரியாது. தெரிந்தாலும் சொல்ல முடியாது. சொல்ல முடிந்தாலும் புரிந்து கொள்ள முடியாது. அது சொல்லுக்கு அப்பாற்பட்டது. பிரபஞ்ச சக்தியின் பிரம்மாண்டம் வரை ஓரளவு அமைதியாக இருந்தால் புரிந்து கொள்ளலாம்.

இராஜராஜர் தோளில் கை வைத்து விமானம் பார்த்தபடி சொன்ன காலம் ஒன்று உண்டு.

"வந்திய தேவர் வந்து விட்டார்" செம்புலி அடிக்குரலில் பேசினார். அவருடைய மெய்காவலர்கள் இரண்டு பேர் நகர்ந்து உள்ளே போனார்கள். அவர்களும் பிரகதீஸ்வரர் உறங்குகிறார் என்று செய்தி அனுப்புவார்களோ"

"இருக்காது. வேறு ஏதேனும் செய்தியாக இருக்கும்"

"என்ன செய்தி"

"கருடப்பட்சி வந்து விட்டது"

"என்னது கருடப்பட்சி, யாரைச் சொல்கிறீர்கள்?"



"உங்களைத் தான்"

"நான் கருடப்பட்சியா?"

"ஆமாம்"

"என்னய்யா இது?"

"நீ வைஷ்ணவர். அந்தண சொரூபம். ஆனால் மாமிசப் பட்சிணி. போர் தொழில் உம்முடைய வேலை. கருடன் பார்ப்பதற்கு அந்தணன் போல கழுத்து வெள்ளையாக இருந்தாலும் சீறிப் பாய்ந்து வேட்டைகள் செய்வதில்லையா? அதேபோல நீரும் செய்கிறீர். எனவே, உமக்கு கருடப்பட்சி என்றுதான் பெயர்"

"என்னை அவர்கள் பார்க்கவில்லையே?"

"பார்த்ததும் பார்க்காதது போல் நடிப்பதுதான் எங்களுக்கு அடிப்படை பாடம்"

"இராஜேந்திரர் வருவாரா?"

"எனக்குத் தெரியாது" அருள்மொழி மௌனமானான். என்ன காரணம் என்று செம்புலியை கேட்கலாமா? வேண்டாம். பிசகாகப் போகும். செம்புலிக்கு அவ்வளவு மரியாதை கொடுத்து விட வேண்டாம்.

அருள்மொழி பட்டன் எழுந்து நின்றான். தொலைவில் குதிரைகள் வரும் புழுதி உயர்ந்தது. முன்னும் பின்னுமாக முப்பது படை வீரர்களோடு வந்தியத் தேவர் நடுநாயகமாக வந்திறங்கினார்.

என்ன வயதானால் என்ன? இந்த மனிதருக்கு மட்டும் எப்படி ஒரு பொலிவு. முகத்திலும், உடம்பிலும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அரசிளம் குமரிகளை மயக்க வைக்கின்ற சொக்க வைக்கும் அழகு இவர் எங்கிருந்து பெற்றார். காதோரம் நரைமயிர் சிரிக்குமா? வெண்ணிற தாடியும் சிரிக்குமா? நீண்ட பின் சிகை சிரிக்குமா? சோழ வீரர்களை விட ஒரு பிடி உயரம், உடம்பு கட்டுப்பாட்டாலும் பயிற்சியாலும் இறுகிய உடம்பு. கழுத்தில் முத்து வடம், நீண்ட தங்கச் சங்கிலி. சங்கிலியில் கோர்த்த பதக்கம். பதக்கத்தில் இராஜராஜரின் உருவம். சோழ தேசத்தின் நிதி நன்மைக்கு முக்கிய மந்திரி என்பதற்காக இரண்டு பக்கமும் புலிச்சின்னம் பதிக்கப்பட்ட கேயூரங்கள். வாள் வீரர்கள் இறுக்கமாக அணிந்து கொள்கின்ற மணிக்கட்டு பட்டை இடுப்பிலும், மேலும் சீனப்பட்டு. ஆனால் மூன்றாம் துண்டு பருத்தி துணியில் முறுக்கிக் கட்டப்பட்டு இடுப்பில் இறுகி இருந்தது. தலைப்பாகை பற்றியோ, கிரீடம் பற்றியோ எப்பொழுதுமே வந்திய தேவர் கவலைப்பட்டதில்லை.

நிதி அமைச்சராக இருப்பதால் தலையில் அவருக்கென் அணிந்து கொள்கின்ற ஒரு பாகை உண்டு. ஆனால் அதை அ அணிந்து பார்த்ததே இல்லை. கோளத்தின் சந்தன நறுமணம் அ காதோரத்தில் இருந்தும், கழுத்துப் பிடரியில் இருந்தும் வீசிற் இவர் உடுப்பதில் படுகந்தும், சுகவாசி என்று உடம்பின் எல் அங்கங்களிலும் தெரியும். பாதரட்சையை வாசலிலேயே கழற் போட்டிருப்பார் போல விரல் நகங்கள் சுத்தமாக இருந்தன.

"சோழ தேசத்தில் மிகப் பெரிய தானை, நிதியமைச்சரை சேனாதிபதி அருள்மொழி வர்மன் நமஸ்கரிக்கிறேன். நான் கௌண்டி கோத்ரம், யஜுர் வேதம். ஸ்ரீகிருஷ்ணன் என்பது எனக்கு வைத் பெயர். ஆனால் அருள்மொழி வர்மன் என்று அழைக்கிறார்கள் நான் இன்னமும் மாணாக்கன்" என்று நமஸ்கரித்தான்.

"எதற்கு இப்படி ஒரு வணக்கம். நீர் அந்தணர். நான் மறவன் இது செய்வது வழக்கமில்லையே" அவர் மெ லச் சிரித்தார்.

அந்த சிரிப்பிலும் வசீகரம் கொடி கட்டி பறந்தது. குலப் பிறப்பு மரியாதையை கொடுத்து விடாது. ஆனால் சில முகங்களை பார்க்கும் பொழுது இவர் அந்தணரை விட உயர்வு என்று தோன்றும். தன்னாலேயே மரியாதை இயல்பாக வரும். தன்னைப் பற்றி விண்ணப்பித்துக் கொள்ள ஆசை வரும். உங்களைப் பார்த்த பிறகு அப்படித் தான் தோன்றுகிறது. நான்கு தினங்களுக்கு முன்பு பார்த்தேன். ஆயினும் நமஸ்கரிக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

"அருள்மொழிப்பட்டா, உன்னுடைய பதவியில் வேறு எவர் இருந்தாலும் பேயாட்டம் ஆடி இருப்பார்கள். உன் தகப்பனார் கிருஷ்ணன் ராமனிடம் இருந்த செல்வாக்கை எந்த மகன் அனுபவித்திருந்தாலும் எந்த விதத்திலாவது ஆடியிருப்பர். இராஜராஜருக்கும் நெருக்கம், இராஜேந்திர சோழருக்கும் நெருக்கம். சோழ தேசத்தின் எல்லா படைகளுக்கும் மூத்த தளபதிகளில் ஒருவர் என்ற தகுதிகள் இருப்பினும் அது பற்றிய அக்கறை கொஞ்சமும் கொள்ளாது எல்லா இடத்திலும் புகுந்து புறப்படுகிறாய் பார். இதுதான் உன்னை உயிர்போடு வைத்திருக்கிறது. இதுதான் உனக்கு முன்னேற வாய்ப்புகள் அள்ளித் தருகிறது.

உன்னைப் பற்றி இன்று காலை ஒருவர் சொன்னார். ஒரே ஒரு வார்த்தையில் உன்னைப் பற்றி விளக்கினார்"

"என்னவென்று தெரிந்து கொள்ளலாமா?" அருள்மொழி சிரிப்போடு கேட்டான்.



"ஞானஸ்தன் என்று சொன்னார். தத்துவ ஞானத்தில் சிறந்தவர் என்று நினைத்தல் அர்த்தமில்லை. கெட்டிக்காரர் என்று அர்த்தம். கெட்டிக்காரத் தனத்தை அலங்காரமாகவே சொல்லாமல் ஞானஸ்தன் என்று சொல்லியிருக்கலாமே ஏன்? யாருக்கும் தீங்கு செய்யாத கெட்டிக்காரத்தனம் தான் ஞானம். அந்தது இல்லாத கெட்டிக்காரத்தனம் தான் ஞானம். உன்னை கெட்டிக்காரன் என்று சொல்லவில்லை. ஞானஸ்தன் என்று சொன்னார்"

"சொன்னது மாமன்னர் இராஜேந்திரரா?"

"இதுதான் ஞானஸ்தன் அடையாளம். காய்ந்த மூங்கிலில் நெருப்பு பிடித்துக் கொண்டது போல உடனே குப்பென்று விஷயத்தை புரிந்து கொள்கிறாய். எதற்காகச் சொன்னார் தெரியுமா?"

"சொல்லுங்கள் அதையும் காது குளிரக் கேட்கிறேன்"

"நாகை போகிறாயாமே?"

"ஆமாம்"

"விகாரையில் தங்குகிறாயாமே?"

"ஆமாம்"

"அங்கு வருகின்ற கடல் பயணிகளை ஆவலோடு கவனிக்கிறாயாமே?"

"உண்டு"

"மரக்கலன்கள் ஏறி சோதிக்கிறாயாமே?"

"அது என் வேலையின் ஒரு பகுதி"

"மரக்கலன்களை படம் வரையச் சொல்லி தனித் தனி சுருளாக வைத்திருக்கிறாயாம். எப்பொழுது வேண்டுமானாலும் இராஜேந்திரர் வந்து பார்க்கலாம் என்று அழைப்பு அனுப்பினாயாம்?"

"உண்மை. ஆனால் இதில் ஞானஸ்தன் என்று சொல்வதில் என்ன இருக்கிறது. என்னுடைய வேலைகள் தானே?"

"சோழ தேசத்தின் அடுத்த இடம் கடற்பயணம் என்று அருள்மொழி புரிந்து வைத்திருக்கிறான் என்று பாராட்டினார்"

"அவருக்கு என் நன்றியைச் சொல்லுங்கள். ஆனால் அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பது மாமன்னர் இராஜேந்திரரே தவிர நான் அல்ல. அப்படி அவர் ஏதேனும் ஒரு விஷயம் பற்றி கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டும் அல்லவா. அதற்காகத் தான் எப்பொழுதும் என்னை தயார்படுத்திக்

கொள்கிறேன். தெரியாது என்று சொல்வது சேனாதிபதிக்கு அழகல்ல என்பதால் தகவல்கள் சேகரித்த வண்ணம் இருக்கிறேன்"

"ஸ்ரீ விஜயத்திலிருந்து வந்த கப்பலை மடக்கி கடுமையாக சோதனையிட்டாயாம். அந்த நாவாயிலுள்ள ஊழியர்கள் ஆறு பேரை இரண்டு மாலுமிகள் உட்பட கைது செய்து வைத்திருக்கிறாயாம்"

"ஆமாம். குடந்தை சிறையில் இருக்கிறார்கள்"

"பிட்சுக்கள் விடுவிக்கும்படி மன்றாடியும் மறுத்து விட்டாயாம்"

"ஆமாம். அந்த மாலுமிகள் நடவடிக்கை அசம்பாவமாக இருந்தது. அந்த புத்த பிட்சுக்கள் எதனாலேயோ அந்த மாலுமிகளுக்கு பயப்படுகிறார்கள்? அதில் ஒருவன் மிக அகங்காரத்தோடு நடந்து கொண்டான். புத்த பிட்சு எதிரிலேயே கால் மீது கால் போட்டுக் கொண்டு அமர்ந்து கொண்டான். இழுத்து தரையில் போட்டு மிதித்தேன். மிக வேகமாக மோதினான். இரும்பு போன்ற கைகள் அவனுக்கு. அந்த கைகளையே இறுக்க பற்றி திசை திருப்பி பிடரியில் ஓங்கி அடித்தேன். எழுந்திருக்க ஒரு நாளாயிற்று"

"வேறு ஏதேனும் முக்கிய தகவல்கள் கிடைத்தனவா?"

"எங்கே?"

"அந்த மரக்கலத்திலிருந்து, அந்த மாலுமிகளிடமிருந்து"

"மாமன்னர் இராஜேந்திரர் வருகிறாரா?"

"அருண்மொழி நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் சொல். வேறு ஏதேனும் முக்கிய தகவல்கள் அந்த மரக்கலத்திலிருந்து கிடைத்ததா?"

"மாமன்னர் இராஜேந்திரர் வருகிறாரா?"

"ஏன்? என் கேள்விக்கு பதில் சொல்ல மாட்டாயா?"

"நீங்கள் கேட்ட கேள்விக்கு உண்டான பதிலை மாமன்னர் இராஜேந்திரர் கேட்டால் அவரிடம் சொல்வது தான் உசிதமே தவிர அவருக்கு முன்பு உங்களிடம் சொல்வது முறை அல்ல. சேனாதிபதியான எனக்கு வழி-தவறி நிற்றல் என்ற கெட்ட பெயரை கொண்டு வந்து கொடுக்கும்"

"அசம்பாவமாய் பேசுகிறாய் அருண்மொழி"

"சற்று நேரம் முன்பு ஞானஸ்தன் என்று சொன்னீர்கள்"

"ஞானஸ்தன் என்று நான் சொல்லவில்லை. மாமன்னர் இராஜேந்திரர் சொன்னார். அது பிசகு என்று இப்பொழுது தோன்றுகிறது"



"மாமன்னர் பிசகு என்பதையும், நீங்கள் தான் சரி என்பதையும் நான் அவசியம் தெரிவித்து விடுகிறேன்"

"என்ன பூச்சி காட்டுகிறாயா? அருண்மொழி நீ அவருக்கு கீழே கை கட்டி வேலை செய்கிறவன். நான் அப்படி அல்ல. மாமன்னர் இராஜேந்திரருடைய தமக்கை குந்தவையை இந்த சோழ தேசத்து அரசியலில் முக்கியமான பெண்மணியை திருமணம் செய்து கொண்டிருக்கின்றேன். நான் அவர் வீட்டு மாப்பிள்ளை. அவர் சிங்காசனத்தில் அமர்ந்து நான் உட்காருகிறேனா என்று பார்த்து, என்னை உட்காரச் சொல்லி மரியாதை செய்த பிறகு தான் நிமிர்ந்து உட்காருவார்"

"கவனித்திருக்கிறேன். அந்த மரியாதை எல்லாம் உங்களுக்கு முறையாகத் தான் தரப்பட்டுக் கொண்டிருக்கிறது"

"ஆனால் உன்னிடத்தில் இருந்து வரவில்லையே"

"ஒரு நூல் இழைகூட என் மரியாதை குறையவில்லை. ஆனால் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் எனக்கில்லை. சேனாதிபதி மன்னருக்கு அடங்கிய வரே தவிர நிதி அமைச்சருக்கு கை கட்டி பேசுகிறவர் அல்ல"

"சோழ தேசத்தின் மீது எனக்கு அக்கறை உண்டு"

"யாருக்குத் தான் இல்லை. இங்குள்ள செம்புலி என்கிற மெய்காவல் படை கூட தனக்கு சோழ தேசத்தின் மீது மிகுந்த அக்கறை உள்ளதாய் பேசினான்"

"செம்புலி எங்கே?"

"யாருக்குத் தெரியும்"

"செம்புலியைப் பார்த்தீர்களா"

"எனக்குத் தெரியாது?"

"செம்புலி என்ன தகவல் சொன்னான்"

"எனக்குத் தெரியாது"

"இப்பொழுது உன்னுடைய முறையா? நீ பதில் சொல்ல மாட்டாயா?"

"சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்று ஒரு நிதி அமைச்சருக்கு தெரிய வேண்டும். எப்படி தகவல் வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களோ, அப்படியே தகவல் கொடுக்கவும் தெரிய வேண்டும். தகவல் கொடுத்தால் தான் தகவல் கிடைக்கும் என்பது சாதாரணமான ஒரு கணக்கு. இது உங்களுக்கு ஏன் புரியவில்லை

என்று எனக்குத் தெரியவில்லை.

"மாமன்னர் இராஜேந்திரருடைய வருகையைப் பற்றி நீ ஏ... கேட்கிறாய்?"

"முறையீடு செய்ய வேண்டியிருக்கிறது"

"செம்புலி எங்கே?"

"உங்கள் வயது முன்னிட்டு, உங்கள் அறிவுத்திறன் முன்னிட்டு உங்களுடைய அனுபவம் முன்னிட்டு நீங்கள் போர் செய்கின்ற திறன் முன்னிட்டு உங்கள் கேள்விக்கு நான் பணிவாக பதில் சொல்கிறே... செம்புலி இந்த இடத்திலிருந்து கிளம்பி அரைக்கால் நாழிகை ஆ... விட்டது. கேரளாந்தகன் வாயில் தாண்டி வடக்கு நோக்கி சற்று தூ... நகர்ந்து அங்கு நின்றபடி வடக்கு திசையில் மன்னர் வருகிறாரா என்... பார்ப்பதற்கு போயிருக்கிறார். மன்னர் வருகிறார் என்று தெரிந்தால் தான் அப்படி பரபரத்து போயிருக்கிறார் என்பது என் அபிப்ராய...

எனவே, மாமன்னர் இராஜேந்திர சோழர் இங்கு வருகிறா... என்பது திண்ணம்"

வெளியூரிலிருந்து வரும் மாட்டு வண்டிகள் கோவிலுக்குள் நுழைந்தன. ஆண்களும், பெண்களுமாய் உள்ளே கிராமத்து மக்கள் உட்கார்ந்திருந்தார்கள். கேரளாந்தகன் வாயில் தாண்டியதும் கூச்சலிட்டார்கள். இராஜராஜன் வாயில் தாண்டியதும் இன்னும் வியந்தார்கள். கீழே இறங்கி நிலம்பட விழுந்து வணங்கினார்கள். சிவோஹம், சிவோஹம் என்று கத்தினார்கள். மாமன்னர் இராஜராஜ... வாழ்க என்று பிளறினார்கள்.

இரண்டு பெண்களுடன் கூடிய ஒரு மாட்டு வண்டி வலப்பக்கம் திரும்பி நின்றது. இடப்பக்கம் மற்ற வண்டிகளெல்லாம் நிற்க வலப்பக்கம் அந்த வண்டி திரும்பியதை ஒரு கோவில் காவல்காரன் மறுபக்கம் திருப்ப அருகே போய் நின்று விசாரித்தான். அவன் முகம் மாறியது. பின்னடைந்தான். வணங்கினான்.


அருண்மொழிக்கு புரிந்து விட்டது. மாமன்னர் இராஜேந்திர... மாட்டு வண்டியில் வெறுமே முண்டாசு கட்டிக் கொண்டு தன்னுடைய துணைவி வீரமாதேவியருடன், தன்னுடைய துணைவி பரவையாருடன் வந்திருக்கிறார் என்பது தெரிந்தது.

நேரிடையாகப் போய் வரவேற்பதா அல்லது விலகி நின்று மன்னர் என்ன செய்கிறார் என்று பார்ப்பதா?

மன்னர் வந்ததை அருண்மொழி கவனித்தான். ஆனால் வந்திய...



... கவனிக்கவில்லை. அவர் செம்புலியின் வரவை நோக்கி ...காத்திருந்தார்.



# 5

ஆனால் இது வழக்கம் தான். இராஜேந்திர சோழர் தனக்கு வரும் தகவல்களை மட்டுமே நம்பாமல் சட்டென்று மக்களோடு மக்களாக கலந்து தன்னுடைய நிர்வாகம் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நேரடியாய் தெரிந்து கொள்வதற்கு வேஷமிடுவதாய் உருமாறி உள்ளே புகுந்து விடுவது அவருடைய தன்மைகளில் ஒன்று தான்.

மக்களை சோதிக்க மட்டும் இல்லாமல் தன்னுடைய மெய்க்காவல் படையை, தன்னுடைய சேனையின் குதிரைப் படையை, கைக்கோளப் படையை, யானைப் படையை என்று அவர் சோதிப்பதும் வழக்கம் தான். யானைப் பாகர்களுக்கு மெல்லப் பேசத் தெரியாது. அவர்கள் அந்த மிருகத்தோடு அதட்டிப் பேசி பேசி எது பேசினாலும் உரக்கத் தான் பேசுவார்கள். எனவே அந்த இடத்தில் பாகனோடு பாகனாய் யானையில் ஏறி நின்று ஏதேனும் ஒரு யானையை மெல்ல நகர்த்திக் கொண்டு போவார். மற்றவர்கள் பேசுவதை உரக்கக் கேட்பார். அப்பொழுது அவருடைய உடை யானைப் பாகனுடைய உடையைப் போல முறுக்கிய தலைப் பாகையும், அந்த தலைப்பாகை அவிழாமல் இருப்பதற்கு அங்கங்கே பித்தளை ஊசியும் சொருகி இருப்பார்கள். தோளில் துண்டு போட்டு அதன் மீது அங்குசம் தொங்க விட்டிருப்பார்கள். வேட்டியை பஞ்சகச்சமாக கட்டாது வெறுமே மடித்து தட்டு சுத்தமாக கட்டிக் கொள்வார்கள். அந்த தட்டு சுத்துக்கு மேல் மூன்றாம் துண்டை விரித்து வேட்டி அழுக்காகாமல் உடுத்திக் கொள்வார்கள். அந்த மூன்றாம் துண்டு யானையின் மீது பட்டு அழுக்காக இருக்கும்.



வேட்டி சுத்தமாக இருக்கும். யானையின் கழுத்துக்கு அருகே உட்கார்ந்திருப்பதால் காதுகளில் சமிஞ்ஞை செய்ய சில சமய கற்கள் பொருத்திய வீரக் கழலை வலது காலில் அவர்க அணிவதுண்டு. அதேபோல வணிகனாய் உடுத்திக் கொண்டு பல சமயம் இராஜேந்திர சோழர் தஞ்சையை உலா வந்திருக்கிறா வேறு ஊருக்கு பயணப்பட்டிருக்கிறார்.

இரவு நேரம் மெல்ல நகர்ந்து போய் மெய்காவல் படைக்கு அருகே தூங்கி இருக்கிறார். விடியற்காலையில் மெய்க் காவல் படை முழித்துக் கொண்டு மன்னரை காணோம் என்று பதறி நாலாபுறமு தேட இவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார். இவரை தட்டி எழுப் அட எழுந்திரய்யா. மன்னரைக் காணோம் என்று உலுக்குவார்கள்.

இவர் எழுந்து நின்று சோம்பல் முறிக்க மொத்த மெய்காவ படையும் இவர் காலில் விழும். "வெகு தூரம் நடந்த களைப்பு அதனால் தான் நல்ல தூக்கம். இல்லையா நண்பர்களே" என்று அவர் பேசுவதை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியாம மெய்க்காவல் படை விழிக்கும். ஆமாம் என்று சொன்னாலும் தவறு இல்லை என்று சொன்னாலும் குற்றம்.

ஒரு தடவை வணிகக் குழுவுக்கு காவலாக நெடுந்தூரம்



உடுத்திருக்கிறார். "அடே குண்டா" என்று அந்த வணிகர் இவரிடம் [illegible]த்திருக்கிறார்." நான் அவ்வளவு பருமனாகவா இருக்கிறேன்" என்று வணிகரிடம் கேட்க, அந்த வணிகர் உற்றுப் பார்த்து வியந்து அலறி போட்டுக் கொள்ள, "வீரமாதேவியார் கூவிக் கொண்டே இருக்கிறாள். இளைக்க முயற்சிக்க வேண்டும். இப்போது காடு தாண்டி விட்டோம். இனி எந்த கவலையும் இல்லை. நீங்கள் தொடர்ந்து தைரியமாக பயணம் செய்யலாம்" என்று திரும்ப குதிரை ஏறி ஒற்றை ஆளாய் தஞ்சைக்கு திரும்பி இருக்கிறார்.

ஒரு நாள் பயணம் எங்கெல்லாம் பார்த்தாரோ என்னவெல்லாம் கற்றாரோ தெரியவில்லை. அவர் எப்பொழுதும் எங்கு வேண்டுமானாலும் புகுந்து புறப்படுகிறவர் என்ற பெயர் அவரை அச்சங்கொள்ளத் தக்க நபராகவே சோழ தேசத்தில் காட்டியது.

"ஆனால் மறைந்த இராஜராஜ தேவருக்கு இம்மாதிரியான சங்கடங்கள் இல்லை. உத்தம சோழரை அரசாட்சி செய்ய விட்டுவிட்டு அவர் சாதாரண படை அதிகாரியாக எல்லா இடத்திற்கும் பயணப் பட்டிருக்கிறார். கிராமம் கிராமமாக அலைந்திருக்கிறார். பல குறுக்கு வழிகளை மனப்பாடம் செய்து வைத்திருக்கிறார். பல வீரர்களை நேரிடையாக பெயர் சொல்லி குடும்ப வாழ்க்கை கேட்டு புரிந்து கொண்டிருக்கிறார். கிராம நிர்வாகிகளின் சங்கடங்களை அவர்களின் வேலை பளுவை அறிந்திருக்கிறார்.

படை எடுப்பால் பாதிக்கப்படுவது யார்? பெண்கள். அவர்களில் விதவைகளுக்கு என்ன மரியாதை. இந்த ஊரில் யார் அவர்களை காப்பாற்றுகிறார்கள் என்று விசாரிப்பது அவருடைய விசாரணைகளில் முக்கியமான ஒன்று. இதனால் பெண்கள் மத்தியில் அவருக்கு மிகப் பெரிய பெயர் இருந்தது.

"என்னை சாப்பிட்டாயா?" என்று கேட்க இந்த ஊரில் ஒரு ஆள் இருக்கிறார். அவருக்கு பெயர் மாமன்னர் இராஜராஜர். எனக்கு அது போதும்" ஒரு விதவை முகத்தில் அடித்துக் கொண்டு அழுதிருக்கிறாள். அவருடைய ஆட்சி காலத்தில் பெண்களுக்கு பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு நிர்வாகத் திறமை உண்டு என்பதை புரிந்து கொண்டு அவர்களில் பலரை அரண்மனையில் அதிகாரிச்சிகளாக நியமித்தார்.

உத்தம சோழன் ஆண்டிருந்த பதினாறு ஆண்டு காலம் இவருக்கு சோழ தேசத்தினுடைய மொத்த மனோ நிலைமையும் தெள்ளத் தெளிவாக பிடிபட்டு விட்டது. எனவே அவர் மன்னரான பிறகு

மறைந்து ஒளிந்து பார்க்க வேண்டிய அவசியமே இல்லாது போய் விட்டது. அவர் ஒரு கேள்வி கேட்டால் பதினைந்து பதில்கள் தயாராக அவரிடம் பரிமாறுவதற்காக காத்திருக்கும். கேட்டதற்கு மேலும் விவரம் கிடைக்கும்.

ஆனால் இராஜேந்திர சோழர் அவ்விதம் இல்லை. இளவரசராகவே இருந்து மாதண்ட நாயகராக உயர்ந்து படை எடுப்புகளுக்காக பல தேசங்களில் வெளி ஊரில் அலைந்து திரும்பி வந்தவர். அவருடைய கோபம் சோழ தேசத்தில் மிகவும் பிரசித்தமானது.

ஒரு முறை மேலை சாளுக்கியத்திலிருந்து ஒரு ஒற்றர் படை கும்பலாக பிடிபட்டது. குறி வைத்து சோழருடைய உளவுப் படை பிடித்தது. எத்தனை கேள்வி கேட்டாலும் எந்த பதிலும் சொல்லாது அழும்பு காட்டினார்கள். வாயில் காப்போனிடம் மெல்லிய பிரம்பு வாங்கி சபை நடுவே சிம்மாசனத்திலிருந்து இராஜேந்திர சோழர் கீழ இறங்கினார். அவர்களில் பலவீனமான ஒருவனை மெல்ல அழைத்து எதிரே நிறுத்தினார்.

"அடித்துக் கொல்லப் போகிறேன். தோல் உரியும்படி அடிக்கப் போகிறேன். உரித்த தோலின் மீது உப்போ, வேறு காரமோ தேய்க்கப் போகிறேன், என்ன அலறினாலும் விடாது அடிக்கப் போகிறேன். சொல்லி விடு. இவர்களுடைய பெயர்கள் என்ன, இவர்களுடைய தகுதி என்ன, பதவி என்ன, இவர்களுடைய பணி என்ன என்று சொல்லி விடு. அப்படி சொல்லி விட்டால் உடனடியாக உன்னை ஒரு நல்ல குதிரையும், உணவும் கொடுத்து கையில் கொஞ்சம் காசும் கொடுத்து மேலை சாளுக்கியம் வரை கொண்டு போய் விட்டு வர நான் ஏற்பாடு செய்கிறேன். மேலை சாளுக்கியம் போகிறாயா அல்லது இங்கேயே அடிபட்டு சாகிறாயா. நான் இறங்கி அடிப்பேன் என்று நினைக்கவில்லை அல்லவா. பலமுறை அடித்திருக்கிறேன். பல பேரை அடித்திருக்கிறேன்"

"உதாரணமாக இந்த பிரம்பினால் உன் கன்னத்தில் அடித்தால் எப்படி இருக்கும். பிரம்பு சுழன்று அவன் கன்னத்தை பளீரென்று தாக்கியது. துடித்துக் கதறினான். இப்பொழுது இரண்டு கைகளாலும் நீ முகத்தை பொத்திக் கொண்டு இருக்கிறாய். உன் முதுகு எனக்கு வாட்டமாக இருக்கிறது. இப்பொழுது முதுகில் அடிக்கப் போகிறேன்" இப்பொழுது பிரம்பை சுழட்டி மிக வேகமாக முதுகில் அடித்தார். சத்தம் படீர் என்று வந்தது. அவன் வளைந்து முதுகை தடவ ஆரம்பித்தான். "இப்பொழுது முகம் கிடைத்து விட்டதே" மறுபடியும்



முகத்தில் அடித்தார். முகம், முதுகு முகம் மாறி மாறி அடிக்க நின்று கொண்டிருந்த அத்தனை மேலை சாளுக்கிய உளவுப் படையும் பணிந்துவிட்டது.

தங்கள் பெயரைச் சொன்னது, பதவியைச் சொன்னது. அதில் உபதளபதியாக ஒருவன் இருக்கிறான் என்பதும் தெரிய வந்தது.

படைத்திறனை கணக்கிட்டு வருவது தான் எங்கள் பணி. மூன்று வார காலம் அவகாசம். எத்தனை யானைகள் இருக்கின்றன என்று மட்டும் முக்கியமாகக் கணக்கிடச் சொன்னார்கள். குதிரைகள் கணக்கும் இருக்கின்றன. காலாட் படையை, தெரிஞ்ச கைக்கோளப் படையை எங்களால் நிர்ணயம் செய்ய முடியவில்லை. உங்களிடம் அம்பும், வில்லும் குறைவு. ஈட்டிகள் அதிகம் என்ற விவரங்களை சேகரித்து விட்டோம். நாளை மறுநாள் நாங்கள் கிளம்பி போவதற்காக ஒன்று கூடினோம். மடக்கி விட்டார்கள். இவ்வளவு தான் எங்களுடைய வேலை, தயவு செய்து அவரை துன்புறுத்தாதீர்கள்.

"ஏன்? ஒரு சாதாரண வீரனை துன்புறுத்தினால் உபதளபதியாகிய உங்களுக்கு எங்கே வலிக்கிறது"

"அவர் சாதாரணர் இல்லை"

"பிறகு"

"இராஜ வம்சத்தைச் சார்ந்தவர். மூன்றாவது இளவரசர்" சபை திகைத்து நின்றது.

ஆஹா ஆஹா என்று கோஷம் போட்டது. பலர் பல் கடித்து எழுந்தார்கள். வாள் உருவினார்கள். இராஜேந்திர சோழர் பிரம்பை கீழ போட்டார்.

அரண்மனை வைத்தியரை கூப்பிடுங்கள். உடனடியாக வைத்தியம் செய்யச் சொல்லுங்கள். வலி மறப்பதற்கு மதுக் கஷாயத்தை, புளித்த காடியை வாயில் ஊற்றச் சொல்லுங்கள். உண்பதற்கு உணவு கொடுங்கள். இவருக்கு படுப்பதற்கு நல்ல இடம் கொடுங்கள். நன்கு தூங்கட்டும். பிறகு ஒரு பெண் குதிரையை கொடுத்து அதில் உட்காரச் சொல்லி மிருதுவாக மேலைச் சாளுக்கியம் அனுப்பி விடுங்கள்.

உபதளபதியாரே, என்னுடைய மொத்தப் படை விவரமும் உமக்கு இன்று மாலைக்குள் தரப்படும். உமது இளவரசருடைய உடல்நலம் தேறியவுடன் நீங்கள் அத்தனை பேருமே மேலைச் சாளுக்கியம் திரும்பி விடலாம். உங்களுக்கு ஒருவித தொந்தரவும் இருக்காது.

இதை நான் ஆணையாக பிறப்பிக்கிறேன். சோழ தேசத்தின் எல்லை வரை சோழப் படைவீரர்கள் உங்களுக்கு துணையாக வருவார்கள். அது வரை உங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கும். சோழ தேசம் எல்லை தாண்டியதும் கட்டவிழ்த்து குதிரைகள் கொடுக்கப்பட்டு நீங்கள் ஊருக்கு அனுப்பப்படுவீர்கள். நடுவில் ஏதேனும், எந்தவித விவகாரமும் நீங்கள் செய்து விடக்கூடாது அல்லவா அதற்காகத் தான் இந்த ஏற்பாடு.

உங்கள் இளவரசர் நல்லபடி கவனிக்கப்பட்டு கை, கால் பிணைக்கப்படாமல் உற்சாகமாக மேலைச் சாளுக்கியம் போய் சேருவார். கவலைப்பட வேண்டாம்.

விஷயம் எளிதாக முடிந்தாலும் அந்த இளவரசன் வாங்கிய பிரம்படி சோழ சபையை கதிகலங்கச் செய்திருந்தது.

இப்பொழுது இராஜேந்திர சோழர் தலைப் பாகையை இறுகக் கட்டியிருந்தார். இவர் முக்கியமாக கவனிப்பது தன்னுடைய தலை அலங்காரத்தை. அவர் கேசம் மிருதுவானது, கொஞ்சம் விநோதமானது. நீண்டது. முகத்தில் அடர்ந்து விழக்கூடிய தன்மையுடையது. அப்படி கேசம் பறந்து தன் நெற்றியை மறைக்காமல் இருக்க அவர் பிஞ்சு ருத்ராட்சமோ, பவழ மாலையோ தன் தலையில் அழுத்தமாக அணிந்து கொள்வார். சைவ மடாதிபதிகள் செய்கின்ற அலங்காரம் போல அவருக்கு இருந்தது. அவர் இந்த அலங்காரம் ஆரம்பித்ததும் சைவ மடாதிபதிகள் அப்படி மாலை அணிவதை கைவிட்டு விட்டார்கள்.

இப்பொழுது என்ன செய்வது. இராஜேந்திரரை நோக்கி போவதா அல்லது இங்கேயே நிற்பதா. இராஜேந்திரர் உள்ளே வரலாம் என்ற சைகை அவரது மெய்க்காப்பாளர்களால் தொலைவே இருந்து காட்டப்பட்டது. தலைப்பாகை அவிழ்த்து ஒருமுறை உதறி மறுமுறை கட்டிக் கொண்டார்கள். அது பார்வைக்கு சாதாரணமாக தெரிந்தாலும் உள்ளே வரலாம் என்பதற்கான தனித்த சமிக்ஞை என்பது அருண்மொழி புரிந்து கொண்டான்.

இராஜேந்திரர் மெல்ல பரவை நாச்சியாரோடு பேசியபடி கோவிலின் இடப்புறம் இருக்கின்ற வாசலை நோக்கி நடந்தார். வலப்புறம் பொதுமக்கள் போய்க் கொண்டிருந்தார்கள். விமானத்தை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். வலப்பக்க வழியாக ஏறுவதற்கு இன்னும் சில நாழிகைகள் ஆகும். இவர்களுக்கு சாப்பாடு எங்கேயிருந்து வரும். எடுத்து வந்திருக்கிறார்களா? வேறு ஏதேனும் வழங்க வேண்டுமா? குடிநீருக்கு இங்கு வசதி இருக்கிறதா? அவர்,



[illegible] இதற்கு அனுப்புவது என்கிறபோது செம்புலி அருகே வந்தான்.

"நான் வந்தியதேவரின் மெய்க்காவல் படைகளை சுற்றிலும் நிற்க வைத்து விட்டேன். அவர்கள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தான் இப்பொழுது மன்னருக்கு அருகே உறுதுணையாக இருக்க வேண்டும்"

சற்று வியப்பாக இருந்தது.

"நான் உங்களிடமிருந்து சற்று தொலைவில் நின்று கொண்டிருப்பேன். பொது மக்களை உடனடியாக உள்ளே வரவேண்டாம் என்று தடுப்பதற்கு அதிகாரிகளை கேட்கப் போகிறேன்"

"அது தவறாக வராதா. மன்னர் இருப்பது தெரிந்து விடாதா?"

"இல்லை. உள்ளே சில சீரமைப்பு வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பொது மக்களிடம் தெரிவித்து விடுவேன், கால் நாழிகை அரை நாழிகையில் அனுப்பி விடுவார்கள் என்று உட்கார வைத்து விடுவேன்"

"உட்கார்ந்தால் போதுமா, உணவுக்கு ஏதேனும் வழி உண்டா?"

"அவர்களே கையில் எடுத்து வந்திருப்பார்கள்"

"இளநீர் இருக்கிறதல்லவா"

"சரி. வீரர்கள் மூலம் அந்த இடத்திற்கு அனுப்புகிறேன். ஒரு இளநீர் ஒரு மாடை"

"ஏன்? இலவசமாக கொடுத்தால் என்ன?"

"முப்பது நாற்பது பேர்கள் இருக்கிறார்கள். இலவசம் என்று சொன்னால் ஆளுக்கு ஆறு சாப்பிடுவார்கள். ஒரு மாடை என்று சொன்னால் ஆளுக்கு ஒரு இளநீர் கிடைக்கும். எனவே, அதுதான் சரி. இந்த இடத்தில் நீங்களெல்லாம் தயவு செய்து வாராதீர்கள்"

"அந்த மாடைக் காசு யாருக்கு போகும்?"

"எனக்கு போகாதய்யா, கோவிலுக்கு போகும். போதுமா?"

செம்புலி கொஞ்சம் கடுப்பாக பேசினான்.

"சிவன் சொத்து குலநாசம் உங்களுக்கு மட்டும் தான் தெரியுமா? எங்களுக்கும் அது தானய்யா பாடம்" அலுத்துக் கொண்டான்.

தொலைவே மாமன்னர் இராஜேந்திரர் ஒரு கல்வெட்டருகே நின்று நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், தாம் கொடுத்தார் கொடுத்தனவும் என்று அவர் படித்துக் கொண்டு போக பரவையாரும், வீரமா

தேவியரும் தலை சாய்த்து தொடர்ந்து படித்தார்கள். படியேறினார்கள் அவர் உள்ளே போனதும், வந்திய தேவரும், அருண்மொழியும் விரைவாக உள்ளே நுழைந்தார்கள்.

"மாமா வணக்கம்" இராஜேந்திர சோழர் மரியாதையாக வந்திய தேவரை நோக்கி கை கூப்பினார். "மைத்துனரே வணக்கம்" மன்னர் நிதியமைச்சர் என்பதெல்லாம் போய் உறவுமுறை முதலில் வந்து நின்று கொண்டது. அருண்மொழி குனிந்து வணக்கம் சொன்னார் "பொது மக்கள் அதிகமாக இருக்கிறார்களே, என்ன செய்வது" இராஜேந்திரர் கேட்டார்.

"உள்ளே சீரமைப்பு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு அரை நாழிகை உட்கார்ந்து கொண்டால் போதும். உள்ளே சுவாமி தரிசனத்திற்கு போய் விடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது செம்புலி போய் இருக்கிறார்"

"அந்த மக்கள் குடிப்பதற்கு நீர் இருக்கிறதா?"

"இளநீர் போய் கொண்டிருக்கிறது"

"அப்படியா, இந்த இடத்தை மற்றவரை அனுப்பாமல் நானே நேரே வந்து சோதிக்க வேண்டுமென்று விரும்பினேன். இதை தொடர்ந்து எப்படி பராமரிப்பது. பராமரிக்க என்ன செலவு, இந்த கோவிலிலுள்ள முடியாத வேலைகளை எப்படி முடிப்பது, யாரை வைத்து முடிப்பது? அதற்கு என்ன செலவு என்பது பற்றி நிதி அமைச்சரோடு எனக்கு பேச வேண்டும்? அதுவும் தவிர இந்த கோவிலில் உள்ள இந்த குறைகள், குறைகள் தானா? இந்த கோவில் மூளியாக இருக்கிறதா அல்லது இந்த வேலைகள் மொத்தமும் முடிக்கப்பட வேண்டுமா? முடிக்க வேண்டிய அவசியம் எனக்கு உண்டா? அல்லது வேறு எவர் தலையிலாவது சுமத்தலாமா? இது நாள் வரை ஏன் எவரும் இந்த கோவிலுனுடைய முழுமை பூர்த்தியாக வேண்டுமென்று முயற்சி செய்யவில்லை. ஏன் குறையாக முடிந்த வேலைகளை முடிக்க வேண்டுமென்று எவருக்கும் தோன்றவில்லை. இதற்கும் இராஜேந்திர சோழன் வந்து இங்கு நிற்க வேண்டுமா? அவன் தான் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமா? எல்லா இடத்திலும் இராஜேந்திர சோழனை எதிர்பார்த்து தான் தஞ்சை காத்திருக்குமா? அப்பொழுது தஞ்சையிலுள்ள இராஜராஜ சோழருடைய அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்?" பேசப் பேச இராஜேந்திர சோழர் குரலில் உஷ்ணம் ஏறியது. வீரமாதேவியார் அருகே வந்து தோள் தொட்டு "போதும்" என்பது போல் சமாதானம் செய்தார். சட்டென்று



இராஜேந்திரர் அடங்கினார்.

"இந்தக் கோவில் மூளி என்று ஒருகாலும் சொல்ல முடியாது" அருண்மொழி பட்டன் மெல்லப் பேசினான். "சில வேலைகள் முடிவு பெறாமல் இருக்கின்றன. மற்றபடி ஆகம விதிகளின் கீழ் இந்த கோவில் வழிபாட்டுத்தலமாக மாறி விட்டது. சரியானபடி ஹோமயஞ்ஞங்கள் நடந்து, பலவிதமான அபிஷேகங்களால் சிவரூபம் ஜனிக்கப்பட்டு அதில் சாந்நித்யம் ஏற்பட்டு விட்டது. தொடர்ந்து பூஜைகள் அற்புதமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஓதுவார்கள் எவரும் குறையில்லாமல் வந்து தேவார, திருவாசகம் ஓதுகிறார்கள். நிருத்தம் நடைபெறுகிறது. வீணை வாசிக்கப்படுகிறது. குழல் ஊதப்படுகிறது. மற்றவித தாள வாத்தியங்களும் ஒலிக்கப்படுகின்றன. வேதம் ஓதப்படுகிறது. எனவே, இது ஒரு முழு கோவிலாக சரியான விதத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது" அருண்மொழி பட்டன் தொடர்ந்து பேசினான்.

"மேலே நடன கரணங்கள் முடியவில்லை. ஓவியங்கள் சில முற்றுப் பெறவில்லை. தலைக்கு மேல் இருக்கின்ற மாடத்தின் கீழ் பகுதி முடிவு பெறவில்லை. அந்த மாடத்தின் உள்ளே தளத்திற்குப் போக படிகள் அமைக்கப்பட்டு விட்டன. ஆனால் தூண்கள் நிறுவப்படவில்லை. தூண்கள் நிறுவி தளம் அமைத்து அந்தப் படிகள் உபயோகப்படுத்தினால் அந்த தளத்திலிருந்து, மகாலஷ்மி சிலையும், கைலாய மலையும் இன்னும் அருகே நின்று தரிசனம் செய்யலாம். அப்படித்தான் மாமன்னர் இராஜராஜ சோழருடைய எண்ணமாக இருந்திருக்க முடியும். அப்படித்தான் இதை செதுக்கிய சிற்பிகளுடைய எண்ணமும் இருந்திருக்கக் கூடும். எதனால் இந்த வேலை முடியவில்லை என்று தெரியவில்லை. இராஜராஜர் மரணமடைந்ததும் எல்லோரும் ஒரு மாதிரி சோர்வடைந்து விட்டார்கள். ஒரு சிற்பி சொன்னது நினைவிலே இருக்கிறது"

"என்ன சொன்னார்" இராஜேந்திரர் வினவினார்.

"அவர் தொட்டுப் பார்க்காத கல்லை நான் தூக்கிக் கொண்டு போய் எங்கே நிறுத்த, ஏன் நிறுத்த வேண்டும். அவர் பார்த்த பார்வையில் இந்த கோவில் எப்படி இருந்ததோ அப்படியே இந்த கோவில் இருந்துவிட்டு போகட்டுமே. இதை எதற்காக முழுமையாக்க வேண்டும் என்று சொன்னார். தலைமை சிற்பியின் எண்ணமும் அதுவாகத் தான் இருக்கும்"

"என்னிடம் வந்து கேட்க வேண்டும் என்று ஏன்

தோன்றவில்லை?"

"உங்களிடம் ஒரு பயம்"

"என்ன பயம்"

"முடியாது என்று சொல்லி விடுவீர்களோ என்று பயம்"

"முடியாது என்று நான் ஏன் சொல்லப் போகிறேன்"

"தெரியவில்லை. நீங்கள் தனியாக ஒரு கோவில் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த கோவிலை சீர் செய்ய வேண்டுமென்றால் முடியாது என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பயப்பட்டிருக்கலாம்"

"ஆக, இராஜராஜருக்கு எதிராக நான் இருக்கிறேன் என்று சிற்பிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்களா?"

"அப்படி சொல்லிவிட முடியாது. இந்த இடத்தின் மீது உங்களுக்கு ஏற்படுகின்ற அக்கறையை விட ஜெயங்கொண்டத்தில் நீங்கள் கட்டிக் கொண்டிருக்கின்ற அரண்மனையும், கோட்டையும், கோவிலும் மிக உன்னதமான நிலைக்கு வரப்போகின்றன. அதில் தான் உங்கள் முழுக் கவனமும் இருக்கும். இது உங்கள் கவனத்தில் இருப்பானேன் என்கிற எண்ணமும் இருக்கலாம்"

"அதை விடும். இந்தக் கோவில் மூளி இல்லை என்கிறீரா?"

"ஒருக்காலும் இல்லை. நீங்கள் அதைப் பற்றி அச்சம் கொள்ள தேவையில்லை. ஒரு வேளை இந்த கோவில் மூளி என்று உங்களுக்கு எவரேனும் சொன்னால் உங்களுக்கு ஒரு இரகசியத்தை நான் சொல்ல விரும்புகிறேன்"

"என்ன இரகசியம்?"

"இந்த சிவலிங்கத்தை சுற்றி உள்ள ஆவுடையார் ஒரே கல் என்று பொதுமக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி சொல்லப்பட்டு வருகிறது. சிற்பிகளை கேட்டால் 'ஆமாம்' என்று பதில் சொல்லாது வெறுமே தலையசைத்து விடுவார்கள். ஆனால் உண்மையில் அது ஒரே கல் அல்ல. எட்டுக்கல் ஒன்றாக பொருத்தப்பட்டு ஆவுடையாராக மாற்றப் பட்டிருக்கிறது. எட்டுக்கல் துண்டாக இருக்கின்ற ஆவுடையாரை இதுவரை நான் எந்தக் கோவிலிலும் பார்த்ததில்லை?"

"இது எனக்கு புதிதல்ல. இதைப்பற்றி நான் ஒரு சிற்பி சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். என்ன காரணம் என்று கேட்டிருக்கிறேன்" மாமன்னன் குறுக்கிட்டார்.



[illegible]க்கு ஆவுடையார் முக்கியமில்லை. சிவலிங்கம் தான் முக்கியம். சிவலிங்கம் என்பது அந்த பாணம் தான். அந்த பாணம் விழாமல் இருப்பதற்காக சுற்றி முட்டுக் கொடுத்தது போல ஆவுடையாரை வைத்திருக்கிறோம். சிவலிங்கமாக இருப்பதற்கு ஆவுடையாரை வைத்தது போதும் ஆயிற்று. முட்டுக் கொடுத்து [illegible] சரியானபடி விஷயமுமாயிற்று என்று சொன்னார்"

"ஏன் ஒரே கல்லில் ஆவுடையார் செய்யக் கூடாதா?" என்று கேட்டதற்கு.

"ஆவுடையாரை செய்து பாணத்தை இறக்குவதா, பாணத்தை நிறுத்திவிட்டு ஆவுடையார் இறக்குவதா? ஒரே கல்லில் அவ்வளவு பெரிய பாணத்தை அல்லது ஒரு ஆவுடையாரை இடிக்காமல் எப்படி கீழே இறக்க முடியும் என்ற மிகப் பெரிய கேள்வி இருக்கிறது. இந்தக் கேள்விக்கு எங்களுக்கு பதில் தெரியவில்லை. ஆகவே, நாங்கள் துண்டு துண்டாகவே ஆவுடையார் இருக்கும்படி அமைத்து விட்டோம்" என்று சொன்னார். அவர் பேச்சும் நியாயமாகப்பட்டது.

"நீ கட்டுகிறாயே, ஜெயங்கொண்டத்தில் அந்த கோவில் சிவலிங்கம் எப்படி இருக்கும்? இதைவிட அது பெரியது என்று கேள்விப் பட்டிருக்கிறேனே" வந்தியத் தேவர் விசாரித்தார்.

"ஆ, மாமா சரியான இடத்திற்கு வந்து விட்டார். மிகவும் நன்றி. கிட்டத்தட்ட இதே உயரம் தான் இருக்கும். ஆனால் பிளந்த ஆவுடையார் அல்ல. முழுமையான ஆவுடையார். ஆவுடையார் செய்து அமைத்து வைத்து அதில் சிவலிங்கத்தை இறக்குவார்கள். இறக்குவதற்கு உண்டான வசதிகள் செய்திருப்பார்கள்"

"அற்புதம் அற்புதம் திட்டம் தயாராகி விட்டதா? வேலை முடிந்து விட்டதா?"

"இன்னும் செதுக்கவே ஆரம்பிக்கவில்லை. அதைவிட அற்புதம் ஒன்று இருக்கிறது மாமா"

"என்ன இராஜேந்திரா"

"அந்த தளத்திற்கு மேல் தளம் சந்திர காந்தக் கல்லால் ஆனது. அந்தக் கல் இங்கு கிடைக்கவில்லை. மேலைச் சாளுக்கியத்திலிருந்து பலகைப் போல செங்குத்தாக நிற்க வைத்து, பல சக்கரங்கள் பொருத்தப்பட்ட மாட்டு வண்டியில் மெல்ல மெல்ல கொண்டு வந்து விட்டார்கள். கல் இப்பொழுது சாய்த்து வைக்கப்பட்டிருக்கிறது"

"என்ன கல் அது"

"சந்திரகாந்தக் கல்"

"என்ன விசேஷம் அதில்?"

"குளுமையாக இருக்கும். அந்தக் கல்லை தாண்டி உஷ்ண உள்ளே இறங்கவே இறங்காது" கருவறையை நெருங்கிக் கொண் பின்னால் திரும்பிப் பார்த்தார்கள். பரவையோடும், விசாரதேவியோ கல்வெட்டுகளை படித்தபடி அங்குள்ள துவாரபாலகரின் சிலை பார்த்து வியந்தபடி நிற்க, அவர்கள் மூவரும் கருவறைக்கு வந்தார் கொஞ்சம் இருட்டாக இருந்தது.

"இப்பொழுது தரிசனத்திற்கு அனுமதி இல்லையே. மாமன் இராஜேந்திரர் வரப் போகிறார். எனவே, சற்று விலகி இருங்கள். அ வந்து போன பிறகு உங்களை அனுமதிக்கிறேன்" சிவாச்சாரியார் சொ அவர்கள் விளக்கு வெளிச்சத்திற்கு அருகே வந்து நின்றார்கள்.

இராஜேந்திர சோழர் மெல்ல தன் தலைப் பாகையை சுற் அதை தன் தோளில் போட்டுக் கொண்டார். சிவாச்சாரியாருக் அடையாளம் தெரிந்தது. குனிந்து வணங்கினார். கைகளை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்.

"மிகுந்த சந்தோஷம். ஆறுகால பூஜையும் சிறப்பா நடைபெறுகிறதா?"

"நடைபெறுகிறது"

"ஏதேனும் குறைகள் உண்டா?"

"நெல்முளையளவும் எந்தக் குறையும் இல்லை"

"உங்களை மரியாதையுடன் நடத்து கிறார்களா?"

"மிகுந்த மரியாதை. நல்ல வரவேற்பு"

"மக்கள் வந்து பார்க்கிறார்களா?"

"ஏகத்துக்கும் வருகிறார்கள். இன்று கொஞ்சம் கூட்டம் குறை உண்மையில் மாதப் பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி தினங்களில் நல்ல கூட்டமாக இருக்கிறது. பௌர்ணமி தினங்களில் வெளியூர் ஜனங்கள் வருகிறார்கள். அமாவாசை நாட்களில் உள்ளூர் ஜனங்கள் வருகிறார்கள்"

"சரி, திரையைப் போடும்"

"என்ன விசேஷம்"

"நாங்கள் மூவரும் கருவறைக்குள் போக வேண்டும்"

"அதற்கு அனுமதி இல்லையே"



"யாருடைய அனுமதி இல்லை"

"எங்களுடைய குழு அனுமதிக்க வேண்டும். எங்கள் தலைமை சிவாச்சாரியார் சரி என்று சொல்ல வேண்டும். தவறாக நினைக்கக் கூடாது. இப்படி பல்வேறு நபர்கள் அனுமதிக்கு பிறகே"

"ஏன் நான் பார்க்கக் கூடாது"

"நீங்கள் மாமன்னர் ஆனாலும் சிவாச்சாரியார் தொடுகின்ற லிங்கத்தை நீங்கள் தொடக் கூடாது"

"மாமன்னர் என்றால் யாரைச் சொல்கிறீர்கள்"

"உங்களைத் தான் சொல்கிறேன். மாமன்னர் இராஜேந்திரரைத் தான்" என்று அவர் பணிவாக கை கூப்பினார்.

"மன்னர் என்ன அம்சம்?"

"நிச்சயமாக மன்னர் விஷ்ணு அம்சம்"

"விஷ்ணு சிவனைத் தொட்டால் தவறா?"

"அப்படியில்லை"

"ஏன்? என்னிடம் விஷ்ணு அம்சம் குறைவாக இருக்கிறதா? அல்லது விஷ்ணு மாதிரியே இல்லை ராட்ஷஸனாக இருக்கிறேனா?"

"அப்படியெல்லாம் வேகமாக பேச வேண்டாம். எங்களுக்குள்ள நியதியைச் சொன்னேன். நீங்கள் விஷ்ணு அம்சம். தாராளமாக நீங்கள் உள்ளே போய் வரலாம். போய் என்ன வேண்டுமானாலும் சோதிக்கலாம். ஆனால் இப்படி நீங்கள் வந்து போனது வெளியே தெரியாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் ஒவ்வொருவரும் தான் விஷ்ணு அம்சம் என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தால் தடுப்பது எங்களுக்கு கஷ்டமாக இருக்கும்"

"அது பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் மூவரும் உள்ளே போகிறோம்"

"தயவு செய்து நில்லுங்கள்"

"ஏன்?"

"நீங்கள் விஷ்ணு அம்சம். உள்ளே போகலாம். அவர்கள் அப்படி இல்லையே. அருண்மொழி பட்டரைக் கூட உள்ளே அனுமதிக்க முடியாதே. அவர் அந்தணராக இருந்தாலும் சிவ பூஜை செய்பவர் அல்லவே"

"விஷ்ணுவின் படைக்கலன்கள் என்ன?"

"பாஞ்சஜன்யமும் சக்ராயுதமும்"

"இது பாஞ்சஜன்யம்" வந்தியதேவரை சுட்டிக் காட்டினார்.

"இது சக்ராயுதம்" அருண்மொழி பட்டனை சுட்டிக் காட்டி…

"விஷ்ணு இப்பொழுது பாஞ்ச சன்யத்துடன், சக்ராயுதத்து…
உள்ளே நுழையப் போகிறார். எனவே, வாசலில் காவல் இரும்" அ…
ருடைய உத்தரவுக்கு காத்திராமல் இராஜேந்திர சோழர் தடாலடி…
உள்ளே நுழைந்தார். அவர்கள் உள்ளே நுழைந்தது பரவை யா…
ரும், வீரமாதேவியாருக்கும் தெரியவில்லை. எங்கே என்று தே…
னார்கள். சுற்றி சுற்றி வந்த மூவருக்கும் ஆவுடையாரின் அ…
திகைப்பூட்டியது.

என்ன அற்புதமான வேலை. எவ்வளவு அழகாக இணைத்தி…
கிறார்கள். அடடே சோழ சிற்பிகளுக்கு இணை வேறு எவருமே இல்ல…
இந்த பாணம் நிற்க வேண்டுமென்றால் இந்த ஆவுடையார் இரு…
தான் ஆக வேண்டும். இந்த ஆவுடையார் இல்லாமல் வெறும் பாண…
நின்றால் பாணத்திற்கு வயது குறைவாக இருக்கும். ஆவுடைய…
வைத்து இறுக்க அடித்து விட்டார்கள், மருந்து போட்டு கெட்டித்…
விட்டார்கள். இப்பொழுது புரிகிறது. மருந்து ஓட்டவில்லை. மருந்…
ஒட்டவில்லை என்று ஏன் சொன்னார்கள் என்று புரிகிறது. எல்…
இடுக்குகளிலும் மருந்து பூசப்பட்டிருக்கிறது. அதனால் தான் அவர்க…
அவஸ்தைப் பட்டிருக்கிறார்கள். எல்லா இடுக்குகளிலும் கட்ச் க…
மருந்து ஊற்றி கயிறு போட்டு இறுக்க வைத்திருக்கிறார்கள்.

வாழ்க வாழ்க சோழ சிற்பிகள். இப்போதைக்கு இது நகராது…
ஏன் எப்போதைக்கும் இது விடுபடாது. அற்புதமான வேலை…
இராஜேந்திர சோழன் வாய் நிறையக் கொண்டாடினார்.

ஆக, ஆவுடையார் எட்டு துண்டாக இருக்கிற பொழுது மற்…
வேலைகளைப் பற்றி நாம் ஒன்றும் அலட்டிக் கொள்ள வேண்டி…
அவசியம் இல்லை.

அங்கே, என்னை குறைவாக நினைத்து விடுகிறார்களோ, இராஜே…
திர சோழன் கைவிட்டு போய் விட்டான் என்று சொல்கிறார்களோ,
இராஜேந்திர சோழனால் இந்த கோவில் மூளியாக்கப்பட்டது என்று
என் பெயரை இழுத்து விடுவார்களோ என்ற பயம். அதனால் தான்
நேரே வந்தேன்.

இனிமேல் சிவாச்சாரியாரை சங்கடப்படுத்த வேண்டாம். மூவரும் தஞ்சை பெருவுடையாரை இறுக்கத் தழுவிக் கொண்டார்கள்.



படிகளில் ஏறினார்கள். மேலே ஏறி அங்கிருந்தபடி குடங்களில் இருந்த நீரை அவர் தலையில் சொரிந்தார்கள். இறங்கி கீழே வடிந்த நீரை தங்கள் தலையில் தெளித்துக் கொண்டார்கள். முகத்தை துடைத்துக் கொண்டார்கள்.

இராஜேந்திர சோழர் மிக கவனமாக தனது மூன்றாம் துண்டில் அபிஷேக நீரை ஏந்தி நனைத்துக் கொண்டார்கள். கருவறையை விட்டு வெளியே வந்தார். ஆக, நான் தஞ்சையை விட்டு வெளியேறி ஜெயங்கொண்டம் போய் அங்கே என் அரண்மனை வேலைகளையும், கோவில் வேலைகளையும் கவனிக்கலாம் அல்லவா. தஞ்சையை நிர்வாக அதிகாரிகளிடம் கொடுத்து விட்டு அவர்களை வைத்துக் கொண்டு இந்த கோவிலை நடத்தலாம் அல்லவா" என்று இராஜேந்திரர் கேள்வி கேட்க,

வந்தியத்தேவர் "நடத்தலாம்" என்று மறுமொழி சொன்னார்.

"என்ன அருண்மொழி என்ன மௌனம்" என்று இராஜேந்திரர் கேட்க,

"ஆமாம். நாம் அடுத்த வேலை நோக்கி போக வேண்டிய அவசியம் வந்து விட்டது" என்று அருண்மொழி பதில் சொன்னார்.

இரண்டு பேர் பதிலும் திருப்தியாக, இராஜேந்திரர் கருவறை இருட்டிலிருந்து வெளியே வர, தொலைவே அவர்களுக்குண்டான அடுத்த வேலை வாசலுக்குள் நுழைந்தது.

மூன்று குதிரை வீரர்கள் வேகமாக கேரளாந்தகன் வாயில் தாண்டி இராஜராஜன் வாயில் தாண்டி அந்த இடப்பக்க படியை நோக்கி குதிரையில் வந்தார்கள். வழக்கமாக குதிரையில் யாரும் அவ்வளவு தொலைவு வருவதில்லை. இறங்கி நடப்பது தான் வழக்கம். மிக அவசரம் என்பதால் அவர்கள் குதிரைகள் அனுமதிக்கப்பட்டன. அவர்கள் இறங்கினார்கள். படியேறினார்கள். வழியே வீர நாச்சியாரும், பரவை நாச்சியாரும் தடுத்து நிறுத்த, அவர்கள் தாங்கள் வந்த விஷயத்தை அவர்களிடம் தெரிவித்தார்கள்.

பரவை வாய் பொத்திக் கொண்டாள். வீர நாச்சியார் தலையில் அடித்துக் கொண்டாள்.

தஞ்சையை விட்டு வெளியே போக முடியாதபடி ஏதோ ஒரு தடை வந்து விட்டது என்று இராஜேந்திரருக்கு புரிந்தது.

"என்ன பரவை என்ன அங்கு விசேஷம்" உரத்த குரலில் கேட்க, சுவர் முழுவதும் பட்டு எதிரொலித்தது. மூவரும் விரைவாக

வாயில் நோக்கி வந்தார்கள். வெளிச்சம் பரவிய அந்த துவாரபாலகர்கள் இருக்கின்ற மாடத்தில் வந்து நிற்க மூன்று வீரர்களும் விழுந்து வணங்கினார்கள். எழுந்து நின்றார்கள். அரசருடைய உத்தரவுக்கு காத்திருந்தார்கள்.

"பரவை என்ன விஷயம்"

"உங்கள் தங்கை குந்தவை பற்றிய விஷயம். குந்தவை அவளுடைய விமலாதித்தனால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த தகவலை அவளுடைய மெய்க்காப்பாளன் ஒரு ஓலையில் எழுதி உங்களுக்கு அனுப்பி இருக்கிறான்"

"என்ன அது?"

"ஒன்பது லட்சம் படைவீரர்களுடன் உடனடியாக கீழைச் சாளுக்கியத்தில் புகுந்து அந்த தேசத்தை நிர்மூலம் செய்து அவளை மீட்டு அவளுடைய மகனை அரசாக அங்கே நிலை நிறுத்த வேண்டும் என்று உங்களுக்கு கட்டளை இட்டிருக்கிறாள்"

"ஒன்பது லட்சம் வீரர்களா? இவளுக்கென்ன கணக்கு இது"

"அவர்களைத் தான் கேட்க வேண்டும்" அருண்மொழிப் பட்டன் சிரித்தான்.

"குந்தவை ஏன் தவறான பெண்ணாகவே இருக்கிறாள்?" இராஜேந்திரர் அலுத்துக் கொண்டார்.

"பட்டென்று அப்படி பேசாதீர்கள். கொஞ்சம் ஆத்திரக்காரி. சொடுக்கு நேரத்தில் தனக்கு எல்லாம் நடக்க வேண்டும் என்கிற பேராசைக்காரி. இராஜேந்திர சோழன் என்ற மிக வலிமைமிக்க ஒரு மாமன்னர் தனக்கு அண்ணனாக இருப்பதால் தனக்கு சகலமும் கிடைத்துவிடும் என்று நினைக்கின்ற தங்கையாக இருக்கிறாள். ஆனால் ஒன்பது லட்சம் வீரர்களுடன் உள்ளே வந்து என்று எழுதப்பட்டது அபத்தம்"

"இப்பொழுது என்ன செய்ய?"

இவர்களை அரண்மனைக்கு வரவழைத்து விடுங்கள். சபையை கூட்டுங்கள். அங்கு பேசிக் கொள்வோம். "நீங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு மாலை நேரம் சபைக்கு வந்தால் போதும்" இராஜேந்திரர் உத்தரவு கொடுக்க,

அவர்கள் மெல்ல விலகினார்கள்.

இராஜேந்திரரும், வந்திய தேவரும், அருண்மொழியும் தரை.




திறக்க, சுற்றி இருந்த ஜனங்கள் திடீரென்று புரிந்து கொண்டு கூச்சலோடு அரசரை நோக்கி ஓடி வந்தார்கள். விழுந்து வணங்கினார்கள்.

"மாமன்னர் இராஜேந்திரர் வாழ்க" என்று பிளறினார்கள்.

"எங்களுக்கு பக்கத்திலுள்ள பூந்தோட்ட மய்யா. நாங்கள் அங்கிருந்து வருகிறோம். நாங்கள் எல்லோரும் ஒரே கிராமம் என்று பெருமை பொங்க சொல்ல,

இராஜேந்திர சோழர் தனது தங்கை குந்தவையை மறந்து போனார். அவர்களோடு இரண்டறக் கலந்தார்.



# 6

இந்தக் காட்சி ஒன்றும் புதிதல்ல. பற்றி எரிகிற பிரச்சனைகள் வருகிறபொழுது இராஜேந்திர சோழர் அந்த பிரச்சனை நடக்கும் இடத்தை விட்டு அல்லது அது பேசப்படும் இடத்தை விட்டு நகர்ந்து விடுவார். வேறு ஏதேனும் காரியங்களில் ஈடுபடுவார். மிகுந்த முக்கியமான நேரங்களில் முடிவெடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிற பொழுது அவர் அதைப் பற்றி சிந்திக்காமல் வேறு விஷயங்களை சிந்திப்பதும், விளையாட்டாக இருப்பதும் அவருடைய வழக்கம்.

போனமுறை மேலைச் சாளுக்கியம் நோக்கி படை எடுக்கும் பொழுது அவர் அரண்மனை முற்றத்தில் நீர் இறைத்து வெளியே போகாமல் மர ஆப்பு வைத்து அடித்து இடுப்பு உயரமளவுக்கு குளம் போலச் செய்து அதில் மனைவியருடன் நீராடினார். கால் விரல் நகங்களை சுத்தம் செய்து கொண்டார். தலையை நுரை எழும்ப சிகைக்காய் போட்டு அலம்பி பிறகு கரையேறினார்.

உடம்பு துடைத்து, உடுத்தி, திருநீறு இட்டு, பூஜை செய்து

வெளியே வந்ததும், "நாளை நம் படைகள் மேலைச் சாளுக்கியம் நோக்கி நகருகின்றன. இன்றிலிருந்து பதிமூன்றாம் நாள் நாம் மேலைச் சாளுக்கியத்தை முழு வெறியோடு தாக்குகிறோம்" என்று கட்டளையிட்டார்.

"குளித்ததும் ஏற்படுத்திய முடிவா அல்லது குளிப்பதற்கு முன்பே ஏற்படுத்திய முடிவா" என்று அருண்மொழிப் பட்டனுக்கு திகைப்பாக இருந்தது. மெல்ல சந்தேகம் கேட்ட போது,

"படை எடுப்பு நிச்சயம் என்று தெரிந்து விட்டது. என்ன சேதம் ஏற்படும் யாரெல்லாம் பாதிக்கப்படுவார்கள், யாருக்கெல்லாம் மிக வேதனைத் தரும் என்று யோசித்து என்னுடைய நஷ்டக் கணக்குகளை ஒருமுறை சரி பார்த்தேன். நஷ்டங்கள் அதிகம் தான், ஆனாலும் இதை செய்தே ஆக வேண்டும் என்ற முடிவோடு எழுந்து வந்து அறிவித்தேன். ஒரு உத்வேகத்தில் ஒரு ஆவேசத்தில் எடுத்தேன். கவிழ்த்தேன் என்று ஒரு படை எடுப்பை சொல்ல முடியாது அருண்மொழி. பரமன் மழபாடிக்கு அவ்வளவு தொலைவு வருவது தாங்க முடியுமா. அப்பொழுது பரமன் மழபாடி தலைமை ஏற்கவில்லையெனில் யார் தலைமை ஏற்பார்கள். கிருஷ்ணன் ராமனால் மேலைச் சாளுக்கியம் வர முடியுமா? எத்தனை முறை வந்திருக்கிறார்? இந்த முறை அழைத்துப் போவதா? அல்லது விட்டு விடுவதா? அழைத்துப் போனால் கொண்டாட்டமா? அல்லது விட்டு விட்டால் கொண்டாட்டமா? என்று அவர் சார்பில் நான் யோசிக்க வேண்டியிருக்கிறது" இராஜேந்திர சோழர் விளக்க அருண்மொழிப் பட்டன் நெகிழ்ந்துப் போனான்.

இவன் வெறும் மன்னனல்ல. 'சாலச் சிறந்த பெரியோன்' இவன் சாதாரண மனிதனல்ல. 'பண்டிதச் சோழன்' இவர் புலமை வெறுமே செருக்கு காட்டுவதற்கு அல்ல. மற்றவருடைய சுக துக்கங்களை சீர்தூக்கி பார்ப்பதற்காக உபயோகப்படுகிறது. மாமன்னர் இராஜராஜரை விட இராஜேந்திர சோழர் இன்னும் ஒரு படி உயரமோ என்ற எண்ணத்தை தவிர்க்கவே முடியவில்லை. வெளியே சொன்னால் முறைத்துக் கொள்வார்கள். பதிலுக்கு அப்படி இல்லை என்று கத்துவார்கள். 'எதனால் அப்படி யோசிக்கிறாய்' என்று ஏகடியம் பேசுவார்கள். ஆனால் உள்ளே தோன்றுகிறதை ஒருபொழுதும் எவராலும் தவிர்த்து விட முடியாது. எனக்குத் தோன்றியதைப் போல மற்றவருக்கும் வெகு நிச்சயம் தோன்றும்.

கோவில் மண்டபத்துக்கு வெளியே வந்து வலதுபுற சிறு



[illegible] இறங்கி பொது மக்களை நோக்கிப் போக பொது மக்கள் [illegible] இனங்கண்டு கொண்டு ஓ என்று கூச்சலோடு வந்தார்கள். [illegible] திடுக்கிட்டார்கள். எதிர்ப்புறமாக போனார்கள். எல்லோ[illegible] அரவணைத்து அருகே வரச் சொன்னார். அவருக்கென்று [illegible] மர நாற்காலி போடப்பட்டது. அதில் உட்கார்ந்து கொண்டார். [illegible] மடியில் வெற்றிலைப் பெட்டி வைக்கப்பட்டது. திறந்து, [illegible] பாக்கைப் போட்டு கடித்து அதக்கிக் கொண்டார்.

"எந்த ஊர்? என்ன விஷயம்?" என்று விசாரிக்க ஆரம்பித்தார்.

ஆளுக்கு ஆள் தங்களுடைய கிராமம் பற்றியும், பெயர் பற்றியும் [illegible] ஆரம்பித்தார்கள். ஒற்றை விரலால் அடக்கினார்.

"நீ சொல்" என்று ஒரு இளைஞனை சுட்டிக் காட்டினார்.

"அய்யா, நாங்கள் பூந்தோட்டத்தில் இருந்து வருகின்றோம். பூந்தோட்டம் என்பது காவிரிக் கரையின் கடை முகத்தில் இருக்கின்ற ஒரு செழிப்பான கிராமம். காவிரி கடந்த பதினோரு வருடங்களாக ஒருமுறைக் கூட பொய்க்காமல் முழு வேகத்தில் எங்கள் ஊர் பக்கம் வருவதால் விவசாயம் நன்கு நடைபெறுகிறது. வெற்றிலைக்கு ஊடுபயிராக துவரை போடுகிறோம். நெல் நன்றாக அறுவடை ஆகிறது. மூன்று போகம் செய்ய முடியவில்லை. இரண்டு போகம் செய்கிறோம். வீட்டுக்கென ஒரு போகத்திற்கு சோளமோ, கம்போ, துவரையோ, காராமணியோ போட்டு வருகிறோம். எல்லார் வீட்டிலும் கறிகாய் தோட்டம் இருக்கிறது. வாழை நன்கு வளர்கிறது. வாழைத் தாரை வணிகர்களே வந்து வெட்டிக் கொண்டு போய் காசு கொடுத்து விடுகிறார்கள். நாங்கள் எல்லோரும் மாமன்னர் இராஜேந்திரன் ஆட்சியில் சிறப்பாக இருக்கிறோம். உங்கள் தந்தையார் ஒரு அற்புதமான கோவில் கட்டி இருக்கிறார் என்று கேள்விப்பட்டு இப்பொழுது தான் முதன் முதலாக பதினைந்து வருடங்கள் கழித்து பார்க்க வந்திருக்கிறோம்.

இவ்வளவு உயரத்துக்கு இந்தக் கோவிலை எப்படி அய்யா கட்டினார்கள். எங்களுக்கு புரியவே இல்லை" என்று அவன் வியப்போடு கேட்டான்.

அருகிலே ஒரு கிழவர் அதற்கு தனக்கு தெரியும் என்பது போல விடை சொன்னார். "நான் அப்பொழுதே சொன்னேன். இவன் கேட்க மாட்டேன் என்கிறான். படுக்க வைத்து நிமிர்த்தி இருப்பார்களடா. படுக்க வைத்து கட்டி இருப்பார்கள். அப்பொழுது கட்டுதல் எளிதல்லவா. பிறகு கட்டடை கொடுத்து நிமிர்த்தி இருப்பார்கள் என்று

சொன்னேன். இவன் இல்லை என்று சிரிக்கிறான். உண்மை எப்படி கட்டினார்கள். நீங்கள் சொல்லுங்கள் அப்பா?"

இராஜேந்திரர் இடிபோல சிரித்தார்.

இந்த கோவிலை படுக்க வைத்து கட்டி நிமிர்த்தி நிறுத்துவ என்றால் இந்த கிராமவாசி எவ்வளவு வெள்ளையான ம கொண்டவர். என்ன கல் என்ன எடை என்று தெரியாது. அவருக்கு தெரிந்த எடை எல்லாம் உழுகலப்பை மட்டுமே. அ மட்டுமல்ல. எல்லா விவசாயிகளும் வெள்ளந்திகள் தான். பயிரோ பேசுபவர்களுக்கு மனிதரோடு பேசக் கூட தெரியாது.

கிருஷ்ணன் ராமனான சேனாதிபதி முன்பே, சிறு வயதிலேயே சொல்லி இருக்கிறார்.

"நாளைக் காலைக்குள் பால் பிடிச்சுடணும், என்ன புரிகிறதா?" என்று நெல்லை நோக்கி விவசாயிகள் அதட்டுவார்களாம். இரண்டு மூன்று நாட்களில் பால் பிடித்து விடுமாம்.

"பார்த்தாயா சொல் பேச்சு கேட்கிறது" என்று சந்தோஷப்படுவார்களாம். பருவத்தால் ஏற்பட்ட மாற்றமா? அல்லது இவர் சொன்னதால் ஏற்பட்டதா? எதுவாகினும் தன்னால் தான் விளைந்தது என்று அந்த விவசாயி பூரிப்படைவார்.

"நான் சொன்னதை நீ கேட்டாய் அல்லவா, உனக்கு வேண்டும் மட்டும் நான் தருகிறேன்" என்று முதுகு வலிக்க வலிக்க சாண உரத்தை நாலாபக்கமும் வீசுவார். விழித்துக் கொண்டு நெற்பயிர் இன்னும் அதிகம் கதிர்கள் தள்ளும். தகப்பன் அப்படி நெற்பயிர்களோடு பேசுகிறான் என்பதால் வீட்டிலுள்ள பெண்ணும் வீட்டிலுள்ள செம்பருத்தி பூவோடு பேசும். "பாக்கியலஷ்மி என்னாடி செய்யறே" "செம்பருத்தி பூ பூக்க மாட்டேன் என்கிறது. திட்டிக் கொண்டிருக்கிறேன்" திட்டு. திட்டு. நல்லா திட்டு. அப்பொழுது தான் பூக்கும்" "வெட்டி போட்டுடுவேன். பூக்கவில்லை யென்றால்" எட்டு வயது பாக்கியலஷ்மி இடுப்பில் கை வைத்துக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருப்பாள். வீடு முழுவதும், சுற்றியும் வேலி போட்டது போல் செம்பருத்தி உள்ளங்கை அளவிற்கு பூக்கும்.

இந்த ஒரு மரம் மட்டும் பூக்கவில்லை யெனில் பாக்கியலஷ்மிக்கு கோபம் வராதா? என்று கிருஷ்ணன் ராமன் நாடகம் போல் பேச இளம் வயது ராஜேந்திரன் எகிறி குதித்துச் சிரித்தான்.

"அவ்வளவு வெள்ளேந்தியா? அவ்வளவு வெள்ளையான



ளா? நாம் ஏன் இப்படி இருக்கிறோம்?" என்று குறுக்குக் கேள்வியாக கிருஷ்ணன் ராமனிடம் கேட்டார்.

"அது தானய்யா தலை எழுத்து. நாம் வெள்ளையாக இருக்க முடியாது. இருந்தால் இந்த தேசம் உறுதியாக இருக்காது. யார் எது பேசினாலும் சந்தேகப்படுவது மன்னன் இயல்பு. நீ அப்படித்தான் இருக்க வேண்டும்" என்று விவசாயிக்கு நேர்பதமாக வாழ கிருஷ்ணன்ராமன்தான் சொல்லிக் கொடுத்தார்.

சூழ்ச்சி, சூழ்ச்சி, சூழ்ச்சி என்று வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியும் சூழ்ச்சியாகவே போய் விட்டது. ஒவ்வொரு நாழிகையும் எதிராளியை எடை போடுவதாகவே போய் விட்டது. இப்பொழுதும் அந்த வேலை தான் வந்திருக்கிறது.

விமலாதித்தன் என்ற மடையன் என்ன செய்கிறான். என்ன செய்யப் போகிறான் என்ற கவலை உள்ளே பிடித்துக் கொண்டது. ஆனால் வெள்ளேந்தியான இந்த மனிதர்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டிருப்பது சந்தோஷமாக இருந்தது.

கோவில் எப்படி கட்டினார்கள் என்று விளக்க, கூட்டம் சிறிய சப்தம் கூட எழுப்பாமல் கேட்டது. அதில் பாதி பேருக்கு புரிந்தது. பாதி பேருக்கு புரியவில்லை என்பது முகத்தில் தெள்ளத் தெளிவாக தெரிந்தது. இதை எப்படிச் சொன்னாலும் அவர்களுக்கு புரிவது கஷ்டம் தான். வேண்டுமென்றால் எப்படி கட்டினார்கள் என்று சிற்பிகளை வைத்து ஒரு மாதிரி அமைக்கச் சொல்லலாம் என்று சிந்தித்தார். சட்டென்று அது சரியான யோசனை என்று பட்டது.

அடிக்கடி தினம் தினம் வந்து பார்க்கிறவர்களுக்கு தனியாக ஒரு மாதிரி அமைத்தால் என்ன. செம்புலியை நோக்கித் திரும்பினார். செம்புலி அருகே வந்து கை கட்டிக் கொண்டார். மெல்ல அவர் காதில் சில பெயர்களைச் சொன்னார்.

"உடனே ஆகட்டும்" என்றார்.

செம்புலி இரண்டு வீரர்களை அழைத்து சிற்பிகளை உடனே வரச் செய்தார்.

இராஜேந்திரருடைய அடுத்த குணம் இது. எப்பொழுது என்ன நினைத்தாரோ அதை அப்பொழுதே செய்து ஆக வேண்டும்.

பல்வேறு சிற்பங்களாக, களிமண் மாதிரிகளாக இந்தக் கோவில் எழுப்பப்பட்டதை பொம்மைகளாக செய்ய வேண்டும் என்று உள்ளுக்குள் தீர்மானித்துக் கொண்டார். அதை சுடுமண்

பொம்மைகளாக செய்து வைக்க வேண்டும் என்றும் உறுதி செ
கொண்டார். ஆனால் உள்ளுக்குள்ளே விமலாதித்தனை பற்
கவலையும் ஓடிக் கொண்டிருந்தது.

விமலாதித்தன் மீது கூட தவறு இருக்காது. இந்த குந்தவை
ஏதேனும் அதிகப்பிரசங்கித்தனம் செய்திருப்பாள். குந்தவை
அடக்கி வைக்காதது தன்னுடைய தவறு அல்ல. மாமன்ன
இராஜராஜர் செய்த தவறு. முதல் பெண் என்று செல்லம் கொடுத்
முற்றிலும் மோசமானவளாக அவளை வளர்த்து விட்டார். த
தமக்கையைப் போல மிகுந்த கெட்டிக்காரியாகவும், சூட்சம புத்
உடையவளாகவும், கருணை மிக்கவளாகவும் இருப்பாள் என்
தன்னுடைய தமக்கையின் பெயரை அவளுக்கு வைத்தார். ஆனா
அந்தைக்கு நேர் எதிரே இந்த குந்தவை வளர்ந்தாள். ஆங்கார
அலட்சியம், பிடிவாதம், எடுத்தெறிந்து பேசுதல், சீற்றம், பெண் என்
நாணத்தை விட்டு விட்டு துக்கிரித்தனமாக அலைதல் போன்றவை
அவளுடைய இயல்பாக இருந்தது.

வீரமாதேவியார் காதோரம் ஒரு முறை இவளைப் பார்த்து விட்டு
இராஜேந்திர சோழனிடம் சொன்னாள். 'இவள் கற்புக்கரசியாக இரு
கிறாளே, அதுவே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இவள் நினை
தால் அந்த விஷயத்தையும் தூக்கி எறிந்து விடுவாள். எதனாலேயோ
அதற்கு கட்டுப்பட்டு இருக்கிறாள்' என்று சொன்னாள்.

கொஞ்சம் கோபத்தோடு வீரமாதேவியாரை முறைத்து பார்த்த
போது, "உங்களுக்கு பெண்களைப் பற்றி தெரியாது. குந்தவை
எதற்கும் துணிந்தவள். இதை மட்டும் உங்கள் மனதில் ஞாபகம்
வைத்துக் கொள்ளுங்கள்" என்று தெள்ளத் தெளிவாகச் சொன்னாள்.

வீரமாதேவியர் மட்டும் தான் இராஜேந்திர சோழனிடம் இத்தனை
உரிமையோடும், இத்தனை விவரமாகவும் பேச முடியும்.

இராஜேந்திரர் திரும்பி வந்தியத் தேவரும், அருண்மொழியும்
என்ன செய்கிறார்கள் என்று பார்த்த போது இரண்டு பேரும்
மூலைக்கு ஒரு திக்காய் மெல்ல அசைந்து கொண்டிருப்பது
புரிந்தது. அவருக்கு சந்தோஷமாக இருந்தது. பிரச்சனையை தன்
தலையில் போட்டு விட்டு அவர்கள் நகர்ந்து விடவில்லை. மாறாக
அவர்களும் யோசிக்கிறார்கள். போய் உட்கார்ந்தால் போதும்.
மடமடவென்று அடுத்தபடியான விஷயங்களை இரண்டு பேருமே
தெளிவாகப் பேசுவார்கள். இந்த சாம்ராஜ்யத்தின் மிகப்பெரிய
அதிர்ஷ்டம் அற்புதமான அதிகாரிகள் கிடைத்தது தான்.



ஆனால், வந்தியத்தேவர் ஒரு கோணம் என்றால் அருண்மொழிப்
பட்டன் இன்னொரு கோணம். இந்த இரண்டு கோணங்களுமே
நன்கு உபயோகமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டார்.

கோயில் வாசலில் இருந்து வந்த இளநீரை வீரர்கள் வெட்டிக்
கொடுக்க, கிராமவாசிகள் வெட்கத்தோடு வாங்கிக் கொண்டார்கள்.
குடிக்காமல் கையிலேயே வைத்திருந்தார்கள். "ம்" என்று கை
உயர்த்தியதும் மடமடவென்று குடித்தார்கள். மன்னரின் செல்வாக்கு
அவர்கள் இளநீர் குடிப்பதிலும் தெரிந்தது.

"உண்பதற்கு என்ன வைத்திருக்கிறீர்கள்" என்று கேட்க,
அவர்கள் "புளியஞ்சாதம்" என்று சொன்னார்கள்.

"எங்கே எனக்கு ஒரு கை கொடுங்கள்" என்று சொல்ல
வெட்கப்பட்டார்கள்.

"அய்யோ, உங்களுக்கு எதற்கு அது. நீங்கள் பஞ்ச பட்சு
பரமான்னம் சாப்பிடுகிறவர்கள்"

"இல்லையே நேற்றும் எங்கள் வீட்டில் புளியஞ்சாதம் தான்"
என்று மன்னர் சொல்ல.

"அப்படியா?" என்று வெள்ளையாய் மறுபடியும் வியந்தார்கள்.

அருண்மொழிப் பட்டன் மெல்ல வந்தியத் தேவருக்கு அருகே
போய் நின்று அவருக்கு அருகே குனிந்து காதோரம் பேசினான்.
"உங்களோடு குந்தவை விஷயம் பற்றி பேச விரும்புகின்றேன்.
நீங்கள் பேச விரும்புகிறீர்களா அல்லது வேறு ஏதேனும் சிந்தனையில்
இருக்கிறீர்களா?" வந்தியத் தேவர் தாமதித்தார். நெட்டுயிர்த்தார்.
பிறகு மெல்ல.

"சரி பேசலாம்" என்றார்.

"இராஜேந்திர சோழரின் தமக்கையார் குந்தவை பிராட்டியாரை
பற்றி எனக்குத் தெரியும். ஆயினும் உமது அளவு நெருங்கிய
பழக்கம் இல்லை. அரண்மனைக்குள் என்ன நடக்கிறது என்று
தெரிய எனக்கு வாய்ப்புகள் குறைவு. அதுவும் தவிர அவருடைய
வாழ்க்கையில் நான் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. ஒருமுறை
எனக்கும், அவர்களுக்கும் லேசாக சண்டை மூண்டது.

ஸ்ரீரங்கம் பெரிய கோவிலுக்கு ஒரு முறை போகும் போது என்
உடைவாளை சுற்றி துவாரபாலகர் மீது சார்த்தி விட்டு போனேன்.
உள்ளுக்குள் கருவறையில் நுழைந்து மலர் சாத்தி வணங்கிவிட்டு
வெளியே வந்தபோது எனக்கு முன் போன குந்தவை பிராட்டியார்

அந்த வாளை கையில் எடுத்து "யாருடைய வாள் இது? எதற்கு இங்கே இருக்கிறது?" என்று எகத்தாளமாகக் கேட்டார்.

நான் "என்னுடைய வாள் தான்" என்று சொன்னேன். "என்ன வாளை இங்கே போட்டு விட்டு போகிறீர்கள்? உங்களைப் போல சேனாதிபதியாக நியமித்தார்களே என்று சொல்லி விட்டு பதிலுக்குக் காத்திராமல் போய் விட்டார். சுற்றி இருந்த அவர் தோழிகள் வேண்டுமென்றே உரக்கச் சிரித்தார்கள். அவர்கள் வார்த்தை தான் முடிவு என்பது போல் நடந்து கொண்டார்கள். அதற்கு பதில் சொல்ல கோபம் பொங்கி எழுந்தது. வீரமாதேவியார் 'வேண்டாம்' என்று விரல் அசைத்து அமைதியாக்கி விட்டார்கள்.

நரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன. மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி என்று நான் நகர்ந்து விட்டேன். இப்பொழுது பிரச்சனை பூதாகரமாக இருப்பதால் உங்களிடம் விஷயங்களை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். குந்தவை பிராட்டி எந்த மாதிரி?"

"அபத்தக் களஞ்சியம், ஆணவம் பிடித்த பெண்மணி. அட்டகாசம் செய்வதற்கே இடைபறாது ஆசைக் காட்டுகிற அநாகரீகம். அரச குடும்பத்து பெண் என்றால் எல்லாவித பலமும் தனக்கு இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறவர். சேடிப் பெண்களை, வேலை ஆட்களை பிரம்பால் அடிக்க முயற்சிக்கிறவர். இராஜேந்திர சோழர் என்னவெல்லாம் செய்கிறாரோ அத்தனையும் தானும் செய்ய வேண்டுமென்று முட்டாள்தனமாக ஆசைப்படுபவர். எல்லையில்லா ஆசை அது. ஒரு விஷயம் கேள்விப் பட்டிருக்கிறாயா? அநேகமாக இராஜராஜரிடம் இருந்த அத்தனை தளபதிகளுக்கும் தெரியும்.

இராஜேந்திர சோழருக்கு பட்டாபிஷேகம் நடந்தபோது குந்தவை தனக்கும் பட்டாபிஷேகம் நடந்த வேண்டும் என்று சொன்னார். அப்படி நடத்துவது இயலாது என்று சொன்ன போது தன்னுடைய அரண்மனை வளாகத்தில் பெரிய சிங்காசனம் போட்டு காவிரியிலிருந்து ஜலம் கொண்டு வரச் சொல்லி சேடிகளை விட்டு தண்ணீர் ஊற்றச் சொல்லி தானே கிரீடம் அணிந்து கொண்டு தானே மலர் மாலை அணிந்து கொண்டு, தானே செங்கோல் வைத்துக் கொண்டு "நான் சோழ தேசத்தின் மகாராணி" என்று பிரகடனம் செய்து கொண்டார். "எந்த சோழ தேசத்தின் மகாராணி" என்று இராஜராஜரின் மனைவி பஞ்சவன்மா தேவி கேட்டதற்கு "சோழ தேசத்தை இரண்டாகப் பிரித்து வடபகுதி இராஜேந்திர



ருக்கும், தென்பகுதி எனக்கும் தரப்பட வேண்டும்" என்று சொன்னார். இரண்டடி முன் வைத்து பளீர் என்று ஒரு அறை பஞ்சவன்மாதேவி குந்தவை கன்னத்தில் அறைந்தார். என்ன என்கிறபொழுது மறுபடியும் ஒரு அறை. "யாரை அடிக்கிறீர்கள்" என்று சீறி சினந்தபோது "சோழ தேசத்தை துண்டாக்கச் சொல்லி எவர் பேசினாலும் இப்படித்தான் இராஜேந்திரர் நடந்து கொள்வார்" என்று சொல்லி மறுபடியும் ஒரு அறை விழுந்தது.

சுற்றியுள்ளோர் எல்லோரும் பதறிப் போனார்கள். எவரும் இந்த ஒரு நடவடிக்கையை எதிர்பார்க்கவில்லை. 'ஐயோ ஐயோ' என்று கொஞ்சத் துவங்கினார்கள். அத்தனை பேரையும் ஒரு அதட்டில் விலக்கினார். "இம்மாதிரி பேச்சுக்கள் இதுவே கடைசி முறை. இன்னொரு முறை உனக்கு இந்த பேச்சு வருவதாக இருந்தால் உன்னை என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும் என்று பயமுறுத்தி விட்டுப் போனார்.

இராஜேந்திர சோழரின் காதுக்கு அவர் சிற்றன்னை பஞ்சவன்மாதேவியின் அடிதடி ரகளை விஷயம் வந்தது. "சிற்றன்னை செய்தால் சரியாகத் தான் இருக்கும். அவர்கள் தவறே செய்யாதவர்கள்" என்று ஒரே வார்த்தையில் அந்த விஷயத்தை விலக்கி விட்டார். இராஜராஜருக்கு மட்டும் கொஞ்சம் வருத்தம் இருந்தது.

"அடிக்காமல் சொல்லிக் கொடேன்" என்று மெல்லியதாய் பஞ்சவன் மாதேவியை கடிந்து கொண்டார்.

"ஆனால் அடித்து சொல்லியும் கூட அந்த பெண்மணிக்கு புரியவில்லை"

"என்ன காரணம்? வளர்ப்பு தவறா? அல்லது பிறப்பிலேயே ஜாதகக் கோளாறா?"

"இரண்டும் தான். கோளாறான ஜாதகம். பிறகு பட்டத்து அரசர் இராஜராஜ சோழரின் பதினான்கு மனைவிகளும் பட்டமகிஷியின் பெண் என்பதால் கொஞ்சி, கொஞ்சி வைத்துக் கொண்டிருந்தார்கள். இவள் எல்லோரையும் மிரட்டிக் கொண்டிருந்தாள். இராஜராஜரும் முதல் மகள் என்பதால் அதிகம் கண்டு கொள்ளவில்லை"

"நடுவில் பெண் பிள்ளை. அதாவது மாதேவடிகள் என்ற சந்திரமல்லி ஏன் பௌத்த மதத்தை தழுவினார். சைவ சமயம் செழித்தோங்கிய சோழ தேசத்தில் அரசர் குடும்பத்தில் ஒருவர் பௌத்த மதத்தை தழுவுவது நியாயமானதா?" அருள்மொழி வினவினாள்.

"விட்டால் தீரும் போயிருப்பீரல்லவா? பொத்தம் அந்தவ கவர்ச்சியானது. அதில் பல்வேறு நல்ல விஷயங்கள் இருக்கின்றன. அவை நடுவில் பெண் பிள்ளைக்கு ஒப்புமையாக இருந்தன. அவ அதிகம் குந்தவையால் காயப்பட்டவர். குந்தவை ஆடுகின்ற ஆ டத்தை பார்த்து எப்படி இருக்கக்கூடாது என்று பாடமாக எடுத்து கொண்டவர். அந்த பாடம் தான் பொத்தம் நோக்கி திருப்பி இரு க்கூடும். நான்காவது பெண் பிள்ளை இவளை கண்டு கொள் வேயில்லை. இவளிடமிருந்து விலகி வேறு விதமாக வளர்ந்தாள். அவள் நேரிடையாக போரில் ஈடுபடாமல் போருக்கு வேண்டிய கருவிகளையும், தானியங்களையும் தருகின்ற ஒரு சிற்றரசுக்கு வாழ்க்கைப்பட்டு மிக சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்"

"போர் என்று தீர்மானித்து விட்டால் முதலில் வருவது கங்கம்மா என்கிற அந்த மூன்றாவது பெண்ணினுடைய பெயர் தான். மிக எளிமையான குடும்பம் அவருடையது. அங்கே இடையறாது புலவர் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்"

"சரி, குந்தவையாரைப் பற்றி சொல்லுங்கள். அவர் திருமணம் விமலாதித்தனோடு ஏன் நடந்தது?"

"திருமணம் என்றால் என்ன அர்த்தம்?" வந்தியத் தேவர் எதிர் கேள்வி கேட்டார்.

"இதற்கு என்ன பதில் சொல்வது. திருமணம் என்றால் இரண்டு குடும்பங்கள் இணைகின்றன என்று அர்த்தம். பெரியவர்கள் நீர்வார்த்துக் கொடுக்க பெண்ணை தானமாக கொடுப்பது என்று அர்த்தம். அம்மி மிதித்து அருந்ததி பார்த்து என் வாழ்நாளில் உறுதியாக உன்னை ஏற்கிறேன் என்று அர்த்தம். உன்னை விட்டு பிரியமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்து கொள்வதாக அர்த்தம்"

"கூடலுக்கு பிறகு திருமணம் என்றால்..."

"என்ன சொல்கிறீர்?"

"விமலாதித்தனை ஓடி ஓடிப்போய் குந்தவையார் காதலித்தார்கள்"

"எங்கிருந்து எங்கு ஓடிப்போய்"

"தஞ்சையிலிருந்து திருவையாறு ஓடிப்போய் அங்கு அடைக்கலமாக இருந்த விமலாதித்தனை சுற்றி சுற்றி வந்து காதலித்தார்கள். விமலாதித்தனுக்கு வேறு வழியில்லை. கீழைச் சாளுக்கியத்தில் ஒட்டர்களாலும், மேலைச் சாளுக்கியத்தாலும், சுற்றியுள்ள நம்பிக்கை துரோகிகளாலும் அடித்து துரத்தப்பட்டு உயிர் பிழைப்பதற்காக தஞ்சைக்கு வந்து



சரண் அடைந்திருக்கிறார். இராஜேந்திர சோழனின் பாதுகாப்பில் இருக்கிறார். இராஜராஜரும் அவனை ஆதரித்து இங்கேயே இரு ஒரு நல்ல நாள் பார்த்து அந்தப் பக்கம் போய் உன்னை அரசனாக நியமிக்கிறேன் என்று சொல்ல, அமைதியாய் காத்திருக்கிறார். இப்பொழுது ராஜராஜரின் மகள் ஓடி வந்து காதலித்தால் அவன் என்ன செய்வான். பாவம் தர்மசங்கடம் தான். குந்தவையைப் பற்றி தெரிந்தும் காதலித்தான். எங்கே தன்னை மிரட்டக் கூடிய புருஷன் வந்து விடுவானோ என்று பயந்திருந்த குந்தவைக்கு விமலாதித்தனுடைய மென்மையும், அனுசரணையும் மிகவும் பிடித்துப் போயிற்று"

எனவே உடனடியாக திருமணம் செய் என்று பிடிவாதம் பிடித்தாள்.

"அப்படியெல்லாம் செய்ய முடியாதம்மா. நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டும்" என்று சொல்ல.

அதெல்லாம் செய்ய முடியாது. நான் கருவுற்றிருக்கிறேன் என்று சொன்னாள். அரண்மனை கதி கலங்கி விட்டது.

"அடக்கடவுளே" அருண்மொழி பதறினான்.

"பாதகண்டம் முழுவதும் ஜெயித்த இராஜராஜர் எப்படி பதறி இருப்பார். யோசித்துப் பாரும். ஒரு தகப்பனுக்கு இது எவ்வளவு பெரிய வேதனை யோசித்துப் பாரும்"

"இது உண்மையா? பொய்யா?"

"அற்புதம், சரியான கேள்வி கேட்டீர். அது உண்மையில்லை. பொய், உடனடியாக திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காக அந்தப் பெண் சொன்ன பொய்"

"எப்படி பொய் என்று தெரிந்தது?"

"இது குறித்து விசாரித்து ஆட்களை அனுப்பி, விமலாதித்தரே ஏன் இப்படி செய்து விட்டீர். அடைக்கலம் கொடுத்தால் இப்படி செய்வதா? என்று இராஜேந்திரர் விசாரிக்க, பூமி சத்தியமாக, என் தாய், தந்தையர் சத்தியமாக நான் இளவரசியை தொடவே இல்லை என்று அழுதபடியே சொன்னாராம்"

"அடக்கடவுளே"

"இவனிடம் வந்தால் நான் கருவுற்றிருக்கிறேன் என்று மறுபடி சொன்னாள். இப்பொழுது சிக்கல் வேறு விதமாகி விட்டது"

"ஆம் யார் காரணம் என்றல்லவா வந்து விடும்"

"யார் காரணம் என்று வந்து விட்டால் விமலாதித்தன் மறுத்துவிடக் கூடும் அல்லவா. இவ்வளவு தொலைவு வந்தபிறகு அவன் மறுத்து இவர் மேற்கொண்டு வேறு ஆட்டம் போட சரியாக இருக்குமா? ஆகவே, எல்லா அரசிகளையும் அனுப்பி, தாயே, பொய் சொல்லாதே. நிச்சயமாக உனக்கு விமலாதித்தனை திருமணம் செய்து வைக்கிறேன் உண்மையைச் சொல் என்று கேட்டபொழுது உண்மையைச் சொல்லி இருக்கிறாள் அந்த பெண்மணி"

"கொஞ்சம் ரசக்குறைவாக இருக்கிறதே"

"ரசக்குறைவு தான். அரண்மனை ரசக்குறைவு. இதுவே ஒரு மறவர் வீட்டில் நடந்திருந்தால் வெட்டி வீழ்த்தியிருப்பார்கள். ஒரு வேளாளர் வீட்டில் நடந்திருந்தால் அடித்து வெளியே போ என்று ஊர் விட்டு துரத்தியிருப்பார்கள். அந்தணர் வீட்டில் நடந்திருந்தால் தற்கொலை செய்து கொள் என்று சொல்வார்கள். அரச குடும்பம், என்ன செய்வது. எது செய்தாலும் ஊரில் வெறும் புரளியாக கூட அவச்சொல்லாக வரும். அது எதிரிகளின் வாய்க்கு அரிசியாக போய் விடும். எனவே உடனடியாக விமலாதித்தன், குந்தவை திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

நிதானமாக நடக்க வேண்டிய ஒரு போர் விமலாதித்தனை மாப்பிள்ளையாக ஏற்றதும் அவருக்கு பரிசளிப்பதற்காக கீழைச் சாளுக்கியம் நோக்கி இராஜேந்திர சோழர் படை எடுக்க வேண்டியதாயிற்று. இராஜராஜர் சார்பில் இராஜேந்திரர் போய் கீழைச் சாளுக்கியம் முழுவதும் ஒரு சுற்று வந்து ஒட்டர்களை அடக்கி மேலைச் சாளுக்கியம் ஆட்களை துரத்தி இங்கே நம்பிக்கை துரோகம் செய்தவர்களை தூக்கிலேற்றி பலரை தண்டித்து மிகச் சரியான ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி அங்கு விமலாதித்தனுக்கு பட்டாபிஷேகம் செய்து விட்டு வந்தார்.

பட்டாபிஷேகம் செய்த நாளிலிருந்து பத்தாவது மாதம் இராஜ நரேந்திரன் பிறந்தான்"

"பிரச்சனை முடிந்து போயிற்றே. இனி இராஜநரேந்திரன் தானே இளவரசன்"

"அதெப்படி, கீழைச் சாளுக்கியத்தில் அப்படி பிரச்சினை தீராது. இந்த அம்மையார் அமைதியாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். சிம்மாசனத்திற்கு அருகே இன்னொரு சிம்மாசனம் போட்டு விமலாதித்தனுக்கு அருகே தானும் உட்கார்ந்து தன் கையிலும் செங்கோல் வைத்துக் கொண்டு தனக்கும் மெய்கீர்த்தி சொல்லச்



சொல்லி ரகளை செய்து விட்டாள். கீழைச் சாளுக்கியத்தில் உள்ள சிற்றரசர்களுக்கு சிறிதும் பிடிக்கவில்லை. கோதாவரியை தாண்டி உள்ள சிற்றரசர்களுக் கெல்லாம் கடுங்கோபம். 'இதென்ன குரங்கை கொண்டு வந்திருக்கிறாய்' என்று காதுபடவே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு தெளிவு இருந்தது"

"என்னுடைய மனைவியான குந்தவையை அவர்கள் நன்கு அறிவார்கள். இராஜராஜ சோழனுடைய தமக்கையின் பண்பும், உத்தம குணமும், கருணையும், ஆதுரச் சாலைகள் ஏற்படுத்திய பாங்கும் அவர்கள் மிகவும் விரும்பினார்கள்" வந்தியத் தேவர் மிருதுவாகத் தொடர்ந்தார்.

"குறிப்பாய் விண்ணகரங்களுக்கு குந்தவை தேவியார் நிறைய உதவிகள் செய்வது கீழைச் சாளுக்கியத்தில் உள்ளவர்களுக்கு புரிந்தது. கீழைச் சாளுக்கியத்தவர்கள் வைஷ்ணவர்கள், விண்ணகரம் என்பது வைஷ்ணவத் திருக் கோவில்கள், சைவப் பழமாக இருந்தாலும், வைஷ்ணவக் கோவில்களுக்கு வாரி வாரி வழங்கும் தன்மை கீழைச் சாளுக்கியத்தவர்க்கு மிகவும் பிடித்திருந்தது"

"திருவேங்கடமுடையான் வீற்றிருக்கும் திருமலை திருப்பதிக்கு வரச்சொல்லி அவர்களை பலமுறை வற்புறுத்தி கேட்டிருந்தார்கள். இவர்களும் பல காணிக்கைகளை அனுப்பி வைத்தார்கள். சோழ அரச குடும்பத்தில் பலரும் சரி, இது மட்டும் கெட்டுப் போயிருக்கிறது என்பதை புரிந்து கொண்டார்கள். ஏதேனும் தவறு நடக்கும் எனில் இராஜேந்திர சோழர் சரியானபடி தீர்ப்பளிப்பார் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருந்தது"

"ஆனால் அதில் காயம்பட்ட சில பேர் இருந்தார்கள். அவர்களை மேலைச் சாளுக்கியத்தினர் வளைத்துப் பிடித்து ஒன்றாக்கி அவர்கள் மூலம் மிக அழகிய ஒரு அரசகுலப் பெண்ணை விமலாதித்தனை சந்திக்க வைத்து அவளை இரண்டாம் முறையாக விமலாதித்தன் மணந்து கொண்டான். அந்தப் பெண்மணிக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. சண்டை ஆரம்பமாகி விட்டது"

"அது சரி இப்பொழுது இராஜேந்திரர் என்ன முடிவுக்கு வருவார்?"

"ஒரே ஒரு முடிவுதான் இராஜேந்திரர் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்"

"என்னவென்று?"

"குந்தவையை கொன்று விடலாமா என்று தான் இராஜேந்திரர்

யோசிப்பார்"

"விளையாடுகிறீர்களா? உடன் பிறந்த சகோதரி அல்லவா அவளை கொல்ல வேண்டுமென்றா மன்னர் யோசிப்பார்"

"உனக்கு இராஜேந்திரரைப் பற்றி தெரிந்தது அவ்வளவு தான். இங்கு வந்தவுடன் நம் இருவரையும் நோக்கி அவர் கேட்கும் முதல் கேள்வி குந்தவையை கொன்று விடலாமா என்பது தான்"

"அப்படி அவர் கேட்கவில்லை என்றால்" அருண்மொழி பட்டர் வந்தியத் தேவரை நோக்கி கைதட்டி ஆரவாரிக்கும் விதமாக கேட்டான்.

"என்னுடைய இந்த நாற்பது வருட அரசியல் வாழ்வை உதறிவிட்டு உத்தம சோழனின் மகன் மதுராந்தகன் போல நானும் கோயில் கணக்குகளை சரி பார்க்க போய் விடுகிறேன்"

"அட உடனே ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டதா?"

"உனக்கு அவ்வளவு தெரியுமா என்பது போல் நீ கேள்வி கேட்டால் எனக்கு அதைவிட அதிகமாக தெரியும். அன்பாகத் தான் உனக்கு நான் பதில் சொல்ல வேண்டும். என்னுடைய அபிப்ராயத்தில், என்னுடைய அரசியல் கணிப்பில், என்னுடைய அரசியல் அறிவில் நீ வெறும் குழந்தை. கை சூப்பும் பாலகன், வெறும் குந்தாணி குண்டு"

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே செம்புலி அவர்களை நோக்கி நடந்து வந்தது தெரிந்தது. செம்புலி அருகே வந்ததும் மடியிலிருந்து சரக்கென்று ஒரு ஓலைச் சுருளை எடுத்து வந்தியத் தேவரிடம் நீட்டினான். "என்ன அது?" வந்தியத்தேவர் வாங்காமல் செம்புலியை கேட்டார்.

"உங்கள் இருவருக்கும் இந்த ஓலையை கொடுக்கச் சொன்னார்"

"இருவருக்கும் கொடுக்கச் சொன்னார் என்று சொல்கிறாய். இருப்பது ஒரு ஓலை. அதை என்னிடம் நீட்டினால் எப்படி? அவர் சேனாதிபதி அல்லவா. சேனாதிபதிக்கு முதலில் கொடு. நான் நிதியமைச்சர் தானே"

"இல்லை. அவர் சேனாதிபதி. நீங்கள் நிதியமைச்சர் என்று பிரிவுகள் இருக்கலாம். ஆனால் வயதிலும், அறிவிலும் மூத்தவர் நீங்கள். உங்களுக்குத் தான் முதல் மரியாதை. பிறகு தான் அருண்மொழிப் பட்டனுக்கு மரியாதை செலுத்துவது என்பது விவரம் அறிந்த எவரும் செய்யக்கூடிய ஒன்று. அதைத்தான் நான் செய்தேன்"

"அப்பொழுது சேனாதிபதி பட்டம் வெறும் ஒப்புக்குச் சப்பாணி



என்று சொல்கிறாயாக்கும்"

"என்னை வம்பில் மாட்டி விடாதீர்கள். சேனாதிபதி மிகச் சிறந்தவர் தான். ஆனால் இரண்டு பேரில் யாரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னால் அதில் வயதில் முதிர்ந்த உங்களை தேர்ந்தெடுக்க வேண்டும்"

"சரிதான் செம்புலி, கிழவர்களுக்கு மரியாதை கொடுப்பது தான் சோழ தேசத்தின் பண்பாடு" அருண்மொழிப் பட்டன் கேலி செய்தான்.

"செம்புலி ஓலை சுருளை அவரிடமே கொடு. அவர் படித்து விட்டு முழிக்கட்டும். பிறகு நான் பார்த்து விளக்கம் சொல்கிறேன்"

"வேண்டாமப்பா. நீ யாரிடம் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறாயோ அவரிடமே கொடு. நீ எடுத்த முடிவு சரி. வந்தியத் தேவர்தான் இங்கு மிகப் பெரிய அதிகாரி. அவர் அதிகாரி மட்டுமல்ல. அரசருக்கு உறவு. அவர் தமக்கையை மணந்த பேரறிவாளன். அத்தான் முறை மன்னர் மாமா என்று வாஞ்சையுடன் அழைக்கின்ற மனிதரல்லவா? தன் மருமகன் கடிதத்தை அவரே படிக்கட்டும்" என்று இரண்டடி அருண்மொழி பின்னே நடந்தான்.

ஓலைச்சுருள் வந்தியத் தேவரிடம் கொடுக்கப்பட்டது. ஓலைச் சுருளை பிரித்துப் படித்தார். மெல்ல அருண்மொழியிடம் நீட்டினார். அருண்மொழி அவரைப் பார்த்து "என்ன?" என்று கேட்டான்.

"படி." என்று ஒரு வார்த்தையில் சொன்னார். மெல்ல பிரித்து படித்தான். 'குந்தவையை கொன்று விடலாமா' இரண்டே வார்த்தைகள் இருந்தன. அருண்மொழிப் பட்டன் திகைத்துப் போனான். ஆச்சரியத்துடன் வந்தியத் தேவரைப் பார்த்தான்.

"இது சிவன் சன்னதி. சிவன் சன்னதியில் சிவனைத் தவிர வேறு எவரையும் வணங்குவது முறைமை அல்ல. எனவே, உமது இரண்டு கைகளையும் கால்களாக பாவித்து நான் கண்ணில் ஒற்றிக் கொள்கிறேன்" இரண்டு கைகளையும் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

வந்தியத் தேவர் நெகிழ்ந்து போனார். குனிந்து வணங்கிய அவன் முதுகை தடவினார். தலையை கோதினார். இழுத்து அருகே உட்கார வைத்துக் கொண்டார்.

"என்னை பாராட்டுவது இருக்கட்டும். சொல். குந்தவையை கொன்று விடலாமா?"

"கூடாது"

"ஏன்?"

"இராஜநரேந்திரனுக்காக குந்தவை உயிரோடு இருக்க வேண்டும். குந்தவையை கொன்று விட்டு இராஜநரேந்திரனை என்ன செய்வதாக உத்தேசம். அவனை அங்கு அரசாக நியமிக்க வேண்டும். விமலாதித்தன் லாயக்கில்லாதவன். இராஜநரேந்திரனை சிம்மாசனத்திற்கு லாயக்கு உள்ளவனாக அங்கே திடமாக கால் ஊன்றி நிற்பவனாக நாம் செய்ய வேண்டும். வேண்டுமென்றால் குந்தவையை இராஜ நரேந்திரனிடமிருந்து பிரித்து விடலாம். மிகச் சிறந்த பண்டிதர்களை அவனுக்கு துணையாக வைக்கலாம். தாயைக் கொன்று விட்டு பிள்ளைக்கு பட்டம் என்றால் எங்கோ ஒரு இடத்தில் பிள்ளைக்கு வலிக்கத் தானே செய்யும். அதை செய்யக்கூடாது. செய்தது இராஜேந்திரர் என்றால் கசப்பு அதிகமாகும். கசப்பு அதிகமானால் அவனும் மேலைச் சாளுக்கியம் பக்கம் சாய்வான். அப்படி மேலைச் சாளுக்கியம் பக்கம் சாய்ந்தால் கீழைச் சாளுக்கியம் மேலைச் சாளுக்கியம் வசம் எளிதாகச் சிக்கிக் கொள்ளும். அப்படி கீழைச் சாளுக்கியம், மேலைச் சாளுக்கியத்தின் வசம் சிக்கிக் கொண்டால் கீழைச் சாளுக்கியத்திலிருந்து, மேலைச் சாளுக்கியம் படைகள் திரட்டிக் கொண்டு தெற்கு நோக்கி திருவெற்றியூர் வரும். திருவொற்றியூர் தாக்கத் தொடங்கி தொண்டை நாடு, நடு நாடு எல்லாம் தாண்டி தஞ்சையில் கால் வைக்கும். நாம் பலஹீனமாவோம். ஒருபோதும் குந்தவையை கொன்று விடக்கூடாது.

நாம் பலமாக இருக்க வேண்டுமென்றால் அந்த அம்மையார் உயிரோடு இருக்க வேண்டும். நாம் அந்த அம்மையாரை விட பலமும், தெளிவும் மிக்கவனாக இராஜநரேந்திரனை மாற்ற வேண்டும். இது இந்த எளியேனுடைய எண்ணம்"

"அற்புதமடா. அற்புதம். ஒரு நூல் காட்டினால் போதும். மொத்த சேலையின் தரத்தை சொல்லி விட்டாய். நீ இப்படி சொன்னாய் என்று இராஜேந்திரரிடம் சொல்லி விடுகிறேன்"

"இருங்கள். ஏதேனும் தவறு இருக்கிறதா?"

"இல்லையே"

"அப்பொழுது நீங்கள் சொன்னதாக சொல்லி விடுங்களேன்"

"இல்லை. அருண்மொழிப் பட்டன் எவ்வளவு தெளிவாக இருக்கிறான் என்று நான் அவரிடம் சொன்னால் அது கூடுதல் மதிப்பு. நீ விழுந்து வணங்கினாய் அல்லவா. உனக்கு நான் ஏதேனும் பரிசு தர வேண்டுமல்லவா. இதை என் பரிசாக வைத்துக் கொள். இராஜேந்திரர் வந்தவுடன் உன்னுடைய புத்திசாலித்தனத்தை நான்



மனமார, உண்மையாக பாராட்டப் போகிறேன்"

இந்த முறை அவர் அவனை இறுக்க அணைத்துக் கொண்டார். அவனும் அவரை அணைத்துக் கொண்டான்.

ஐம்பது வயது இளைஞனும், அறுபத்தைந்து வயது கிழவனும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு உட்கார்ந்திருப்பது அற்புதமான காட்சியாக இருந்தது. தொலைவில் திரும்பி சட்டென்று இதைப் பார்த்த இராஜேந்திரர் புன்னகை செய்து கொண்டார்.

அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். நான் இன்னும் வரவில்லையே என்று பரபரத்தார். ஜனங்களை நோக்கி கை கூப்பினார். மெல்ல கீழே இறங்கினார். விடை பெற்றுக் கொண்டு வந்தியத் தேவரையும், அருண்மொழியையும் நோக்கி நடக்கத் துவங்கினார். நண்பர்கள் எழுந்து நின்றார்கள்.



# 7

"என்ன முடிவு செய்தீர்?" வீரமாதேவியார் கேட்டுக் கொண்டே மாமன்னர் இராஜேந்திரரை நோக்கி வந்தார். அவருக்கு அருகே வந்து மிக நெருக்கமாக உட்கார்ந்து கொண்டார். மறுபுறத்தில் பரவையார் அழகாக அசைந்து வந்து இன்னும் நெருக்கமாக மன்னரிடம் உட்கார்ந்து கொண்டார்.

வந்தியத்தேவரும், அருண்மொழிப் பட்டனும் மெல்ல விலகி எதிர்பக்கம் கைகட்டி நின்று கொண்டார்கள்.

"அடடே நீங்கள் நிற்கிறீர்களே" என்று மன்னர் பரபரத்தார். ஆனால் தொலைவில் செம்புலி நீண்ட மர ஆசனத்தை தலையில் சுமந்து கொண்டு வந்தான். அந்த மர ஆசனம் உட்காருவதற்காக அல்ல. கோவிலில் உள்ள பாத்திர, பண்டங்களை வைப்பதற்கு உண்டானது. பாத்திர, பண்டங்களை எடுத்து வைத்து விட்டு அதை சுத்தமாக்கி கொண்டு வருகிறான்.

அதை அருகே கொண்டு வந்து போட்டு, தன் மூன்றாம் துண்டை எடுத்து துடைத்து அதை விரித்து வைத்தான். வந்தியத் தேவரை நோக்கி "உட்காருங்களய்யா" என்று மரியாதையாக விளவினான். வந்தியத் தேவர் அமர்ந்து கொண்டார். பிறகு அருண்மொழியும் உட்கார்ந்து கொண்டான்.

என்னை உட்கார் என்று சொல்லவில்லை அல்லவா செம்புலி, உன்னை கதற அடிக்கிறேன் பார் என்று மனதுக்குள் மெல்லியதாய் அருண்மொழி கறுவிக் கொண்டான்.

செம்புலியின் ஊர் தஞ்சை தான். தஞ்சாவூரில் அவனுக்கு வீடுகளும், நிலங்களும், தோப்புகளும் உண்டு. எனவே அவன் இங்கிருந்து போகப் பிடிக்காமல் அவன் அரண்மனை மெய்க்காவல் அரசரின் மெய்க்காவல் என்று இடம் மாறி விட்டான். இவன் படைதளபதிகளில் ஒருவன் அல்ல. ஆனால் மெய்க்காவல் படைக்கு முக்கியமானவன். கிட்டத்தட்ட உளவாளி. இவன் தஞ்சையிலிருந்து விரட்டி அடித்தால் சிறகு ஒடிந்தது போல ஆவான். தஞ்சையிலிருந்து இவனை வெளியே அனுப்ப ஏற்பாடு செய்து பிறகு செம்புலி வேண்டாம் வேறு யாரையாவது வைத்துக் கொள்ளலாம் என்று அவனை பின் தள்ளி விட வேண்டும். தனியே கூப்பிட்டு பிய்த்து எறிந்து விடுவேன் ஜாக்கிரதை என்று பயமுறுத்த வேண்டும்.

செம்புலி போன்று போன தலைமுறை ஆட்களை அதிகம் ஆட விட்டால் இன்னும் வேகமாக ஆடிக் கொண்டிருப்பார்கள். 'அடேய் அருண்மொழி' என்று கூப்பிட்டாலும் கூப்பிடுவார்கள் என்று உள்ளுக்குள் லேசான ஒரு கோபம் பொங்கியது.

இது மெய்க்காவல் படைக்கே உண்டான ஒரு திமிர். இதை அடக்கி வைக்க வேண்டும் என்ற எண்ணமும் எழுந்தது.

"என்ன முடிவு செய்தீர்கள்" மறுபடியும் வீரமாதேவி உரத்த குரலில் கேட்டாள்.

மன்னர் கோவிலை விட்டு வெளியே வந்து விட்டதால் கூட்டம் கோவிலுக்குள் 'சிவோஹம்' என்று சொல்லியபடியே உள்ளே போனது. இப்பொழுது வந்தியத்தேவரின் படைவீரர்கள் பெரிய வட்டமாக தள்ளி நின்று கொண்டார்கள். அவர்களைத் தாண்டி யாரும் உள்ளே வர இயலாது.

பின்னே இருக்கின்ற மண்டபத்தில் இராஜேந்திர சோழர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அங்கு வரிசையாக சிவலிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இருந்தன. சோழ சாம்ராஜ்யத்தில் மிக முக்கியமான



பதவியில் இருப்பவர் இறந்து போனால் அவருக்கு நினைவாக இப்படி சிவலிங்கங்கள் வைப்பது வழக்கம். இது தவறான பழக்கம் என்று கிருஷ்ணன் ராமன் இரண்டு மூன்று முறை சொல்லியும் யாரும் கேட்கவில்லை. இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு சிவலிங்கமாக நின்று விடுகிறது.

இப்படியே, போனால் கோவிலைச் சுற்றி பல வரிசையில் சிவலிங்கங்கள் இருக்கும். எதற்கும் வழிபாடு இருக்காது. எதற்கும் மரியாதை இருக்காது. குழந்தைகள் ஒவ்வொரு சிவலிங்கமாக காலில் தடம் வைத்து ஓடிக் கொண்டிருப்பார்கள் என்று எச்சரித்தார். ஆனால் அந்த எச்சரிக்கை எதற்கும் பயன் தரவில்லை.

மிகச் சிறந்த தலைநகராக விளங்கிய தஞ்சாவூர் மெல்ல மெல்ல சோபை இழந்து கொண்டு வருகிறது என்பதற்கு இதுவும் ஒரு சாட்சி. அருண்மொழிப் பட்டன் அதையும் மனதில் குறித்துக் கொண்டான். ஊர் விட்டு போகும் பொழுது இந்த இடத்தில் இதற்கு மேல் சிவலிங்கங்கள் வைக்கக் கூடாது என்று எழுத்து மூலமாக உத்தரவு வாங்கி அதை கல்வெட்டாக அடித்து விட வேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டது.

மாமன்னர் ஒரு சிறிய யோசனை சொன்னார். அது எனக்கு உவப்பாக படவில்லை. நண்பர் அருண்மொழிப் பட்டனும் அவ்விதமாகவே எண்ணுகிறார். அதைப் பற்றி இனிமேல் தான் மன்னரிடம் தெரிவிக்க வேண்டும்.

"என்ன யோசனை சொன்னீர்கள்?" வீரமாதேவி வாஞ்சையோடு விளித்தார்.

வீரமாதேவி நல்ல உயரம், கிட்டத்தட்ட இராஜேந்திர சோழருக்கு இணையான உயரம். அகலமான தோள்கள் கொண்ட கைகள். உறுதியான முன் கை. இறுக்கமான இடுப்பு. அகலமானது. பயிற்சியால் கெட்டிப்பட்டதுமான தொடை, சிறிய மார்பகங்கள். வீரமாதேவி போர் பயிற்சி பெற்றவர். ஓடுகின்ற குதிரையிலிருந்து ஈட்டி எறிவதற்கு அவருக்கு மிகவும் பிடிக்கும். குறி தவறாமல் எறியக்கூடியவள். மாமன்னருடன் பலமுறை அவர் போருக்கு போயிருக்கிறார்.

மேலைச் சாளுக்கியத்தை ஊடுருவிப் போன போது ஹொட்டூர் என்ற ஊரில் 'இரட்டைப்பாடி' நாட்டில் பாடி இறங்கியிருந்தார்கள். அப்பொழுது மாமன்னர் இருக்கின்ற இடத்திற்கு அருகே உள்ள குளத்தில் குழந்தைகளை விடியற்காலையில் அனுப்பி விஷம் கலக்கச் செய்திருந்தார்கள். விஷம் இருப்பது தெரியாமல் சோழ வீரர்கள் பல்

தேய்க்க நீர் அள்ளி குடித்து விட்டு உடனே மயக்கமானார்கள். கூல கூட கொடுக்க முடியாமல் விழுந்து இறந்து போனார்கள். ஒன்று இரண்டு, மூன்று என்று பலநூறு பேர்கள் இறந்து போக திடீரென்று மாமன்னர் விழித்துக் கொண்டு 'ஏதோ தவறு, ஏதோ தவறு' என்று எழுந்து பதற என்ன தவறு என்று சில நிமிடங்களுக்குள் தெரிந்து விட்டது. அதற்குள் மூன்னூறுக்கும் மேற்பட்ட வீரர்கள் இறந்து போனார்கள்.

இதுதான் உங்கள் நாகரீகம் என்றால், இந்த விதமாகத் தான் உங்கள் போர் என்றால் எங்கள் போர் இந்த விதமானது என்று வீரமாதேவி உரக்க கத்தினார். தரையில் அடித்தார்.

கிராமம் முழுவதும் சோழப்படை சூறையாடியது. வீரமாதேவியாரே ஈட்டியை கையில் எடுத்துக் கொண்டு பலபேரைக் குத்திக் கொன்றார். 'தூ' என்று முகத்தில் துப்பிய ஒரு பெண்மணியின் புடவை உருவி பிரம்பால் விளாசினார். கதறக் கதற அடித்தார். பிறகு அருகே போய் கத்தியை கழுத்தில் வைத்து 'பரக்' என்று இழுத்து தலையை துண்டாக்கினார்.

மாமன்னரின் கோபத்திற்கு இணையான ஒரு பெண் கோபத்தை அப்பொழுது தான் சோழப்படை பார்த்தது. அன்றிலிருந்து மிகப்பெரிய மரியாதை வீரமாதேவிக்கு சோழப்படையில் இருந்தது. தொடர்ந்து அந்த மேலைச் சாளுக்கிய போர் முழுவதும் வீரமாதேவியார் தன் திறமையை காட்டினார்.

ஆனால் பரவையார் வேறு விதம். பரவையார் நடனப் பெண்மணி. மாமன்னரின் கோபத்திற்கு சில சமயம் வீரமாதேவியார் கூட கலவரப் பட பரவையார் முன்னேறி போதும் கோபப்பட்டது. உடல் நலத்திற்கு கேடு என்று சொல்லி அவரை அடக்க முயற்சிப்பார். மன்னரும் அடங்கிப் போவார்.

பரவையார், இராஜேந்திர சோழர் காதல் சோழ தேசத்தில் பிரசித்தமானது. நாட்டிய நாடகமாகக் கூட நடைபெறுகிறது. பரவையாரின் உயரத்திற்கு வெண்கல விளக்கு செய்து அதை பரவையாரை சந்தித்த இடத்தில் ஏற்றி தூக்கிக் கொண்டு போய் அழகாக கோவில் கருவறையில் வைத்திருக்கிறார். 'எங்களுடைய காதல் தீபம்' என்று மன்னர் சொல்ல பரவையாருக்கு மிகப்பெரிய மரியாதை சோழ தேசத்தில் கிடைத்தது. பரவையாரோடு ஒரே தேரில் ஏறி மாமன்னர் திருவாரூரை வலம் வந்தார். நக்கன், நடனப் பெண்மணி என்று இருந்த பரவையாருக்கு அந்த ஊரில் மிகப்பெரிய மதிப்பு ஏற்பட்டது.



சில சமயம் அரசருடைய மற்ற மனைவியர் கூட மன்னரிடம் பரவையார் மூலமாக காரியம் சாதிப்பது உண்டு. அரண்மனைக் காவல், மெய்க்காவலர் இவர்களும் பரவையாரை தங்களுடைய விருப்பு, வெறுப்புகளுக்காக அணுகுவது உண்டு. பரவையார் சொன்ன சொல்லை அனேகமாக மன்னர் மீறியதே இல்லை. காதல் திருமணம் முடித்து பத்து வருடங்கள் ஆனாலும் பரவையாரின் அழகு சற்றும் குறையவில்லை.

தொடர்ந்து அரண்மனைக்குள்ளே நடனமாடுவதாலும், குறைவாக உண்பதாலும், சிவபூஜை செய்வதாலும் அவருடைய உடம்பு கச்சிதமாக இருந்தது. உடுப்பதில் மிக அழகான நறுவிசு தெரியும். தலை அலங்காரம் தனித்ததாக இருக்கும். நகைகள் அவருடைய அழகை கூட்டும்.

"என்ன சொன்னார் மாமன்னர்" மறுபடியும் வீரமாதேவியார் கேட்டார்.

"குந்தவையை கொன்று விடலாமா" என்று மாமன்னர் ஓலை அனுப்பினார். வந்தியத் தேவர் விளம்பினார்.

"அதையே நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தோம்"

"என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்" மன்னரை விட்டு வந்தியத் தேவரை நோக்கி வீரமாதேவி திரும்பி உட்கார்ந்துக் கொண்டாள்.

"எந்த முடிவுக்கும் வரவில்லை. என்ன செய்வது என்று நாங்களும் யோசித்துக் கொண்டிருந்தோம்"

"என்ன முடிவுக்கு வந்தீர்கள்? ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டுமே" என்று வீரமாதேவியார் வந்தியத் தேவரை மடக்க, வந்தியத் தேவர் மெல்லிய பரிதாபத்தோடு அருள்மொழியைப் பார்த்தார். அருள்மொழி சுதாரித்துக் கொண்டாள்.

அரசருக்கு அருகே இருக்கின்ற பெண்களின் கர்வம் இப்படி அடிக்கடி வெளிப்படும். இதை சமாளிக்க ஒரு சேனாதிபதியோ, அமைச்சரோ கற்றுக் கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் பின் வாங்கினால், தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டால் அந்த பெண்களின் கர்வம் அதிகமாகி விடும்.

எனவே சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும் என்று மூளைக்கு கட்டளையிட்டாள்.

"வீரமாதேவியாரே குந்தவையை கொன்று விடுவதால் எந்த பயனும் இல்லை. அது இராஜ நரேந்திரனுக்கு மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தும். ஒரு வேளை இராஜ நரேந்திரனுக்கு குந்தவையை கொன்றது மாமன்னர் தான் என்று தெரிந்தால் மாமன்னர் மீது

வெறுப்பு வரும். அப்படி வெறுப்பு வந்தால் அவர் சோழ தேசத்தை விட்டு விட்டு மேலைச் சாளுக்கியம் பக்கம் சாய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படி ஒரு இளவரசர் தன் பக்கம் சாய்வதற்கு மேலைச் சாளுக்கியம் காத்துக் கொண்டிருக்கிறது. மேலைச் சாளுக்கியம் விரைவாக விமலாதித்தருடைய முதல் மகனான இராஜநரேந்திரனை அரசராக்கும். உன்னுடைய தாயைக் கொன்ற உன்னுடைய மாமனை அடித்துக் கொல் என்று உசுப்பேற்றி விடும். உற்சாகப்படுத்தும்.

பெரிய படைபலத்தை திரட்டி இராஜநரேந்திரனை முன்னே அனுப்பி திருவொற்றியூரை தாக்கச் சொல்லும். தொண்டை நாடு நடுநாடு என்று சகலமும் தாக்கி காஞ்சிபுரத்தை சூறையாடி, பிறகு சோழ தேசத்தின் எல்லையில் கால் வைக்கவும் துணியும். மேலைச் சாளுக்கியம் கீழைச் சாளுக்கியத்தோடு ஒன்று சேர்ந்து கொண்டால், நம்மால் அவர்களை எதிர்ப்பது கடினம். அதே நேரம் பின்பக்கத்திலிருந்து பாண்டியர்களும், சேரர்களும் என் இலங்கை கடற்படையும் நம்மை தாக்கத் துவங்கலாம். இந்த பக்கமும் நாம் மிக மோசமாக சிக்கிக் கொள்வோம். நம்மால் அப்பொழுது வெற்றி பெற முடியுமா என்பது கூட சந்தேகம். எனவே ஒருநாளும் இராஜநரேந்திரனுடைய மனம் கோணும்படியான செயலை செய்யக்கூடாது.

குந்தவை நல்லவளோ, கெட்டவளோ, சரியோ, தவறோ, இராஜநரேந்திரனின் தாய், அவளை பாதுகாக்க வேண்டியது மிக முக்கியம்.

"மேலைச் சாளுக்கியத்தாலேயே குந்தவையை கொன்று விடும்படியான ஒரு ஏற்பாடு செய்தால்" மன்னர் பேசினார்.

"இல்லை மேலைச் சாளுக்கியத்தார் ஒருநாளும் அந்தச் செயலை செய்ய மாட்டார்கள். அப்படி செய்தால் குந்தவையாருடைய புருஷன் விமலாதித்தனுடைய ஆதரவுகூட கிடைக்காது. இப்பொழுது விமலாதித்தனுடைய ஆதரவால் தான் மேலைச் சாளுக்கியம் ஆடிக் கொண்டிருக்கிறது. 'குந்தவையைக் கொல்' என்று ஒரு நாளும் விமலாதித்தர் சொல்ல மாட்டார். அவருக்கு உங்கள் மீது பயம்"

"மேலைச் சாளுக்கியத்தை நீங்கள் என்ன தூண்டினாலும், என்ன தந்திரம் செய்தாலும் ஒருபொழுதும் குந்தவையின் மீது கை வைக்க மாட்டார்கள். குந்தவையை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறார்களே அதுவே எனக்கு மிகப்பெரிய சந்தேகம். இந்த அம்மையாரே அரண்மனைக்குள் புகுந்து கதவை தாழிட்டுக் கொண்டு என்னை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறார்கள் என்று ஓலை அனுப்பி



இருக்கலாம்"

"விமலாதித்தருக்கு அவளை சமாதானம் செய்யத் தெரியாது. சமாதானம் செய்யவும் விட மாட்டார்கள். அப்படியே கிடக்கட்டும் விடு என்று சொல்வார்கள்" அருண்மொழிப் பட்டன் பேசியபடி எழுந்து நின்று கொண்டான்.

"நீங்கள் படையெடுத்து வருவதை எதிர்பார்ப்பார்கள். எப்பொழுது படை வரும் என்று அதற்கு ஆயத்தமாக இருப்பார்கள். மேலைச் சாளுக்கியத்தினுடைய பெரும்படை இந்நேரம் கீழைச் சாளுக்கியத்தை அடைந்து விமலாதித்தனுக்கும், அவனது இரண்டாவது மகனுக்கும் காவலாக இருக்கும். எல்லைப் பகுதிகள் பலப்படுத்தப்படும். நீங்கள் யானைகளோடு வருவீர்கள் என்று தெரிந்து அவர்கள் குதிரைப் படையை தயார் செய்வார்கள்"

"வில்லாளிகளை முன்னே நிறுத்தி அம்பின் நுனியில் நெருப்பு பற்ற வைத்து தீப்பந்தத்தோடு யானைகள் மீது எறிவார்கள். யானைப் படைக்குள் கலவரம் ஏற்படுத்த முயற்சி செய்வார்கள். சோழப் படையின் தற்போதைய பலம் யானைப் படை என்று அவர்களுக்குத் தெரியும். ஒருவேளை இரட்டைப்பாடி தேசத்தில் இருந்தும் ஒரு படை வரலாம். கெட்டிக்காரர்களாக இருந்தால் ஒட்டர்களை துணை சேர்த்துக் கொண்டு பெரிய பலத்தோடு உங்களை எதிர்க்கலாம். எனவே போருக்கான ஆயத்தங்கள் அங்கு நடக்கும்"

"இப்பொழுது என்ன செய்வது?"

"என்னுடைய அபிப்ராயம் ஒன்று உண்டு. தவறாக இருந்தால் மன்னிக்க வேண்டும்" வீரமாதேவி உள்ளே புகுந்தாள்.

"நாடகமாடாதே வீரமாதேவி. எல்லோரும் தங்களுடைய பேச்சை எந்தவித பீடிகையும் இன்றி சொல்லிக் கொண்டிருக்க நீ மட்டும் மிக அடக்கமானவள் போல் நடக்க வேண்டாம் சொல். உன்னுடைய எண்ணம் என்ன?"

வீரமாதேவி அமைதியாக இருந்தாள். எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். "ஒரு சிறு படையை அனுப்பி குந்தவையையும், இராஜ நரேந்திரனையும் சோழ தேசத்திற்கு கடத்திக் கொண்டு வந்து விட வேண்டும்"

"பிறகு"

"அங்கு என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். சோழ தேசத்திற்கு குந்தவையும், இராஜ நரேந்திரனும் வந்து விட்டால்

அங்கு இரண்டாவது மகனுக்கு இளவரசு பட்டமோ அல்லது மன்னர் பட்டமோ கட்ட விமலாதித்தன் துணிவாரல்லவா. அப்பொழுது விமலாதித்தனுக்கு துணையாக மேலைச் சாளுக்கிய படை ஈடுபடுமல்லவா. அந்த மேலைச் சாளுக்கிய படைக்கு உதவியாக இருக்கின்ற கீழைச் சாளுக்கிய தளபதி யார் அதிகாரி யார் என்று அடையாளம் காண வேண்டும். யாருக்கெல்லாம் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கிறது என்று அங்கு வேவுப்படையினர் வைத்து கவனித்துக் கொள்ள வேண்டும். இராஜநரேந்திரனும், குந்தவையும் பத்திரமாக இங்கு வந்து சேர்ந்த பிறகு பெரும்படையோடு வேங்கியை நோக்கி நாம் நகர வேண்டும்"

"மேலைச் சாளுக்கியத்தை வேங்கியிலிருந்து மட்டும் விரட்டுவது மட்டுமல்லாமல் இன்னும் நகர்ந்து போய் கலிங்கரையும் ஒட்டர் தேசத்தையும் நாம் தாக்க வேண்டும். ஒட்டருடைய துணையும் மேலைச் சாளுக்கியத்திற்கு தேவை. அவர்களுடைய ஆளுமையும் விமலாதித்தன் தலையில் இருக்கிறது. ஒன்றுக்கு இரண்டு சுமைகளை சுமந்து கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் விமலாதித்தன் விழித்துக் கொண்டிருக்கிறார். அதே நேரம் சோழ தேசத்தைப் பற்றிய மிகப்பெரிய கலவரம் அவருடைய வயிற்றில் இருக்கிறது. மூன்று விதமான தாக்குதலுக்கு ஆளாகி தூங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய வேலை இப்போதைக்கு அவர்கள் இருவரையும் கடத்திக் கொண்டு வருவது தான்"

"கடத்தல் எளிதல்ல. என் தங்கை குந்தவையை நம்பி நாம் எந்த காரியத்திலும் ஈடுபட முடியாது" மன்னர் சற்று சந்தேகமாக சொன்னார்.

"எனக்கு புரிகிறது. ஆனால் இதை விட்டால் வேறு வழியில்லை. குந்தவையை நீங்கள் மயக்க மருந்து கொடுத்து யானை மீது கடத்திக் கொண்டு வந்து விட வேண்டியது தான். இராஜ நரேந்திரனுக்கு உற்சாகம் கொடுத்து அழைத்து வந்து விட வேண்டியது தான். அதற்காக நம்முடைய வீரர்கள் சிலரையும் நாம் பலி கொடுக்க வேண்டியிருக்கும். நாம் உள்ளே நுழைந்து அவர்களை கடத்திக் கொண்டு போகிறோம் என்றால் கடைசிவரை திருவொற்றியூர் வரை அவர்கள் துரத்திக் கொண்டு வருவார்கள்.

எனவே, வர, வர அவர்கள் முன்னேற முன்னேற அங்கங்கே படைகள் நிறுத்தி கடும் எதிர்ப்பை நாம் காட்ட வேண்டும். அதாவது பத்து பேர் கொண்ட படை குந்தவையினுடைய மாளிகையைச் சுற்றி கதவு உடைத்து வெளியே அவர்களை அழைத்து வர



வேண்டும். அடுத்த மூன்று கல் தொலைவில் இன்னொரு நாற்பது பேர் கொண்ட படை காத்திருக்க வேண்டும். அடுத்த ஒரு பத்து கல் தொலைவில் நூறுபேர் கொண்ட நம்படை சரியாக இருக்க வேண்டும். அடுத்து ஒரு பத்துகல் தொலைவில் நானூறு பேர் கொண்ட படை இருக்க வேண்டும்.

ஆக தெற்கு நோக்கி வர வர, சோழ தேசம் நோக்கி வர வர, நமது படை பலமாக இருக்கும். எனவே மிகக் கவனமாக செயல்பட வேண்டும்"

"இதில் ஒரு குறை இருக்கிறது தாயே" வந்தியத்தேவர் சட்டென்று பதில் சொன்னார்.

"என்ன குறை" வீரமாதேவி அவர் பக்கம் திரும்பினார். "நீங்கள் சொல்வது போல கிட்டத்தட்ட ஆயிரம் பேர் கொண்ட ஒரு படையை திருவொற்றியூரைத் தாண்டி மேலைச் சாளுக்கியம் நோக்கி அனுப்பினால் ஒற்றர்கள் மூலம் வெகு எளிதாக இது வேங்கி தேசத்துக்குப் போய் சேர்ந்து விடும். எனவே நம்மை தாக்க வருகிறவர்கள் மெல்லியதாக நூறு பேர் கொண்ட படையோடு வர மாட்டார்கள். வருவது பல்லாயிரக்கணக்கான படைகளாக இருக்கும்.

ஒருவேளை நீங்கள் அவர்களை மீட்க வரக்கூடும் என்ற எண்ணத்தையும் அவர்கள் வைத்திருக்கக் கூடும். சோழ தேசத்தினுடைய எல்லா அசைவுகளும் மேலைச் சாளுக்கியத்திற்கு அத்துப்படி. இது மிகச் சிறந்த திட்டமாக எனக்கு தோன்றவில்லை"

"எனக்கு தோன்றுகிறது" வந்தியத்தேவர் பேசி முடித்த அடுத்த கணம் அருண்மொழிப் பட்டன் ஆரம்பித்தான். மாமன்னர் வாய்விட்டுச் சிரித்தார்.

"அதுதானே பார்த்தேன். நீங்கள் இருவரும் என்ன ஒற்றுமை ஆகி விட்டீர்களோ என்று. அந்த அதிசயமெல்லாம் சோழ தேசத்தில் நடைபெறாதே" மாமன்னர் மறுபடியும் சிரித்தார்.

மற்றவர்களும் அந்த சிரிப்பில் சேர்ந்து கொண்டார்கள். அருண் மொழிப் பட்டன் சிரிக்காது தரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆனால் ஒரு சிறு திருத்தம் கொண்டு வர விரும்புகின்றேன். பத்து பேர் கொண்ட படை ஒன்று போதாது. ஒரு லட்சம் பேர் கொண்ட படையை நாம் அனுப்ப வேண்டும்"

"என்ன சொல்கிறாய் அருண்மொழி"

"ஒரு லட்சம் பேர் கொண்ட படை திருவொற்றியூரைத் தாண்டி மேலைச் சாளுக்கியம் நோக்கி நடக்க வேண்டும். அவர்கள் பதறுவார்கள். துடிப்பார்கள். பெரிய போருக்கு தயாராவார்கள். அதே நேரம் குந்தவை தேவியாரின் வீட்டு பூட்டை உடைத்து அவளையும், அவளது மகனையும் பத்திரமாக தேரில் ஏற்றி நமது படைகளுக்கு நடுவே கொண்டு வந்து விட வேண்டும். படைகள் எதிர்த்து வரும் நமது படை வேங்கி தேசத்து படைகளை தடுத்து நிறுத்தி. இவர் மட்டும் நம்முடைய படையை கிழித்துக் கொண்டு தஞ்சையை நோக்கி பயணப்பட வேண்டும்"

"அவர் திருவொற்றியூர் எல்லையை கடந்து விட்டார் என்று தெரிந்ததும் நமது படை மெல்ல மெல்ல பின் வாங்க வேண்டும். சோழர்களை வெற்றி கொண்டதான ஒரு சந்தோஷத்தை விமலாதித்தனுக்கும், அவனது இரண்டாவது மகனுக்கும், மேலைச் சாளுக்கியத்திற்கும் ஏன் ஓட்டர்களுக்கும் தர வேண்டும்"

"பிறகு"

"என்ன, ஏது என்று குந்தவையையும், இராஜ நரேந்திரனையும் விசாரித்த பிறகு அவர்கள் சொன்னது போல ஒன்பது லட்சம் படை வீரர்களுடன் உள்ளே புகுந்து கீழைச் சாளுக்கியத்தின் பல்வேறு விடயங்களை நாம் வேறுத்து வீசி எறிந்து. ஓட்டர்கள் வரை தாக்க வேண்டும். மேலைச் சாளுக்கியத்து படையை அடித்து துரத்த வேண்டும். அம்மையார் சொன்ன படி யாரெல்லாம் எதிரிகளாக செயல்படுகிறார்கள் என்று தெரிந்து களையெடுப்பு நடத்த வேண்டும்.

வீட்டு கதவை திறந்து வாருங்கள், வாருங்கள் வெளியே என்று குந்தவையைச் சொல்லி அழைத்து வருவது தான் நல்லது. ஏன் என்று கேட்டால் ஒன்பது லட்சம் வீரர்கள் வந்து விட்டார்கள் என்று குந்தவையாரிடம் சொன்னால் போதும். அவர் உடனே தன் வார்த்தைக்கு மிகப்பெரிய மரியாதை இருக்கிறதென்று தேர் ஏறி அவர்கள் நமது படையை கிழித்துக் கொண்டு தெற்கு நோக்கி வருவார்கள்.

அதற்குப் பிறகு திமிறினால் மயக்க மருந்து கொடுத்து விட வேண்டியது தான். விமலாதித்தன் மகனான இராஜ நரேந்திரனிடம் விவரத்தைச் சொல்லி அவனையும் அழைத்து வந்து விட வேண்டியது தான்" என்று அருண்மொழி சொல்ல, மாமன்னருக்கு அந்த திட்டம் சரி என்று தோன்றியது. இது ஒரு ஏமாற்று வேலை. மிகப்பெரிய படையெடுப்பு போல ஏமாற்று வேலை. குந்தவையையும் இராஜநரேந்திரனையும் பத்திரமாக கொண்டு வந்து சேர்ப்பதே மிக



முக்கியம். அவர்கள் வந்து சேர்ந்து விட்டால் சோழக் குலக்கொழுந்து காப்பாற்றி விட்டால் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் விமலாதித்தனை தாக்கி கீழைச் சாளுக்கியத்தில் தனது கொடியை பறக்க விடலாம். மேலைச் சாளுக்கியத்தை அடித்து நொறுக்கலாம். ஓட்டர்களை அடக்கி வைக்கலாம் என்று தெளிவாக அவருக்கு புரிந்தது.

வந்தியத் தேவர் அருண்மொழியை நோக்கி பிரியமான ஒரு புன்னகையை சிந்தினார். அருண்மொழிக்கு ஏன் என்று வியப்பு வந்தது.

"இவன் துடிப்பான அந்தணன், கிருஷ்ணன் ராமனுக்கு மிகச்சரியான ஒரு பிள்ளை. மூன்று பேர் சொன்ன விஷயத்தின் தலையில் கால் வைத்து நான்காவதாக ஒரு விஷயத்தை மிக எளிதாக தொட்டு விட்டான். அதுவரை அடக்கமாகவும் இருந்திருக்கிறான்" தனது இடக்கையை தூக்கி ஆதரவாக அருண்மொழிப் பட்டனின் வலது தோளில் வந்தியத்தேவர் வைத்தார். அருண்மொழிப் பட்டன் அவர் கையை பற்றிக் கொண்டு கன்னத்தில் வைத்துக் கொண்டான். கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"அட நீங்கள் ஒற்றுமையாகக் கூட இருப்பீர்களா" என்று மாமன்னர் சொல்ல அவர்கள் இரண்டு பேரும் சிரித்தார்கள். வீரமாதேவியார் மட்டும் மிகத் தீவிரமாக அந்த விஷயத்தை யோசித்து கொண்டிருந்தாள் என்பது அவர் இருக்கின்ற நிலையிலேயே புரிந்தது.

"அனுப்புவது தான் நல்லது" வந்தியத் தேவர் இம்முறை அவருக்கு எதிர்புறமாக பேசினார்.

"சரி அனுப்பலாம். அதில் ஒன்றும் பெரிய தவறில்லை. வேண்டுமென்றால் நமது மெய்க்காவல் செம்புலியை இரகசிய தூதனாக அனுப்பலாம். மாறுவேடமிட்டு மாடு ஓட்டிச் செல்பவன் போல அங்கு போய் ஓலைகளை தனித்தனியே இராஜ நரேந்திரனுக்கும் குந்தவைக்கும் கொடுத்து விடலாம். ஒன்பது லட்சம் வீரர்கள் என்று அதில் எழுதலாம்"

சற்று தொலைவில் உள்ள செம்புலிக்கு குப்பென்று வியர்த்தது. 'அடடா ஐயன் மாட்டி விடுகிறாரே' என்று படபடப்பு ஏற்பட்டது. கால்கள் தளர்வதிலிருந்து, கைகள் பின்னி பிணைவதிலிருந்து செம்புலி பதட்டமாகி விட்டான் என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்தது.

அருண்மொழிப் பட்டன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

"ஒரு லட்சம் வீரர்களுக்கு யார் தலைமை தாங்கிப் போவது" வந்தியத்தேவரை நோக்கி மாமன்னர் கேட்டார். ஒரு வேளை வந்தியத்தேவருக்கு ஆசை இருக்குமோ அதை மறுத்துவிடக் கூடாது என்பதற்காக கேள்வியை முதலில் அவரிடம் கேட்டார்.

"ஏன் அருண்மொழிப் பட்டனை அனுப்பலாமே" வந்தியத்தேவர் திசை திருப்பினார்.

அருண்மொழிப் பட்டனுக்கு லேசாக கோபம் வந்தது. நீ போ என்று மன்னர் சொல்வது எப்படி, அருண்மொழிப் பட்டனை அனுப்பலாமே என்று இவர் சொல்லி மன்னர் சொல்வது எப்படி, இது ஒரு மாற்று குறைவானது அல்லவா என்று கோபம் எழுந்தது.

"நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகின்றேன்" வீரமாதேவி குறுக்கிட்டாள்.

"சொல் வீரமாதேவி" மன்னர் பரவையார் மீது சாய்ந்து கொண்டு வீரமா தேவியாரை ஏறிட்டு நோக்கினார். நான் போகட்டுமா? ஒரு லட்சம் படைவீரர்களுக்கு தலைமை தாங்கி நான் போய் மேலைச் சாளுக்கியத்தை தடுத்து நிறுத்தட்டுமா. குந்தவையை மீட்டுக் கொண்டு வரட்டுமா"

"இதைவிட அவமானம் எனக்கு வேறென்ன வேண்டும். இவன் வீட்டில் குப்புற படுத்துக் கொண்டு மனைவியை போருக்கு அனுப்புகிறான். நல்ல அரசன், நல்ல அரசாங்கம், நல்ல சோழ தேசம் என்று மேலைச் சாளுக்கியத்தில் வழித்துக் கொண்டு சிரிக்கவா"

"நன்றாக சிரிக்கட்டும். ஆனால் அடித்து வைத்து விட்டு அல்லவா வருவேன். நான் எப்படி அடிப்பேன் என்று மேலை சாளுக்கியத்திற்கு தெரியுமே"

"தெரியும் தேவி. உன் உக்கிரம் தெரியும். ஆனாலும் இந்த நேரத்தில் உன்னை அனுப்புவது சரி என்று எனக்கு தோன்றவில்லை"

"நான் என்றால் நான் மட்டுமா. பரமன் மழபாடியாரும், உத்தம சோழ மிலாடுடையாரும் எனக்கு துணையாக வரலாம் அல்லவா"

"பேசாமல் நான் கிளம்பிப் போகிறேன். என் சொல்லுக்கு குந்தவை கீழ்படிவாள். ஒரு முறை முறைத்து கை ஓங்கினால் போதும் பொட்டிப் பாம்பாக அடங்கி விடுவாள். உங்கள் யாருக்கும் அவள் அடங்க மாட்டாள்"

"இந்த பேச்சை என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள்" வீரமாதேவி சீறலாகப் பேசினாள்.



"என்னிடம் வாலாட்டினால் ஒட்ட நறுக்கி விடுவேன். உங்கள் தங்கை என்று பார்க்காமல் பிருஷ்டம் முழுவதும் பிரம்பால் அடிப்பேன். இராஜநரேந்திரனை கைகால் கட்டி குதிரையில் குப்புறப் போட்டு அழைத்து வருவேன்.

"முன்னூற்று அறுபது வீரர்கள் தொட்டூரில் விஷம் குடித்து செத்தார்களே. அந்த கோபம் எனக்கு இன்னமும் தணியவில்லை. மறுபடியும் வெட்டி எறிய வேண்டும் என்ற ஆத்திரம் எழுகிறது"

"உன்னுடைய ஆத்திரத்தை காட்டுவதற் கான நேரம் இதுவல்ல. வீரமாதேவி தலைமை தாங்க முடியாது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது. எனவே தேவை இல்லாமல் பேச வேண்டாம்" மன்னர் கடுமையான குரலில் அந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

"அப்படியானால் யார் போவது?"

"நீங்கள் இரண்டு பேரும் போவதில்லை. உங்களுக்கு இங்கே வேலை இருக்கிறது"

"என்ன வேலை?"

"ஒன்பது லட்சம் வீரர்களை திரட்ட வேண்டிய வேலை. பாண்டிய தேசத்து வீரர்களை சேர தேசத்து வில்லாளிகளை நடுநாடு தொண்டை நாட்டிலிருந்து படைகளை கங்கதேசம், இராஷ்டிரகூடம் என்று எல்லா படைகளையும் நாம் ஒன்று திரட்ட வேண்டும்.

ஒட்டரை அடக்க வேண்டுமென்றால், நாம் அவ்வளவு தூரம் பயணப்பட வேண்டுமென்றால் நம்முடைய படைகள் சோர்வடையாமல் இருக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு லட்சமாக மாறி மாறி இளைப்பாற வைத்து, அடுத்த லட்சத்தை தொடர்ந்து பயணம் செய்ய வைத்து மறுபடியும் அவர்களை இளைப்பாற வைத்து மூன்றாவது லட்சத்தை முன்னே அனுப்பி மாறி, மாறி படைகளை நடத்திச் செல்ல மேலைச் சாளுக்கியத்து வீரர்களை தாக்க வேண்டும்"

"அப்படியானால் தலைமைக்கு யாரை அனுப்புவது?" வீரமாதேவி உரத்த குரலில் கேட்டாள். அவளுக்கு தனக்கு வாய்ப்பில்லை என்பது வருத்தமாக இருந்தது.

"அரையன் இராஜராஜன், சோழ தேசத்தின் மிக முதன்மையான சேனாதிபதி, அருண்மொழிப் பட்டனுக்கு [illegible] பரமன் மழபாடிக்கு இணையவர், பரமன் மழபாடி போன்ற [illegible] இவ்வளவு தொலைவு அனுப்புவதில் [illegible] அரையன்

இராஜராஜன் தான் சரி, தடுத்து நிறுத்துவதில் மட்டுமல்லாமல் கீழைச் சாளுக்கியத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் மிக திடமாக படை இறக்க வேண்டும். இந்தப் படையைத் தாண்டி மேலைச் சாளுக்கியம் வர முடியாதபடி செய்ய வேண்டும். அப்படி அவர்கள் வருகிறார்கள் என்றால் கூடுதலான படை திருவொற்றியூரில் தயாராக இருக்க வேண்டும்.

ஒரு லட்சம் என்பது முன்னேறுவதற்கு. அடுத்த ஒரு லட்சம் திருவொற்றியூரில் இருக்கும் தொடர் பயணத்தில் வேங்கையை ஊடறுத்துப் போக வலுவாக இருக்க வேண்டும். அத்தனையும் குதிரைப் படைகள், நடந்துப் போக எவருக்கும் அனுமதி இல்லை.

இன்னொரு லட்சமும், அடுத்த இன்னொரு லட்சமும் குதிரைப் படைகளை கொண்டிருக்கும். சில யானைகள் இருக்கும். தேர்கள் ஐம்பது இருக்கும். வில்லாளிகள் முன்னூறு பேர் இருப்பார்கள்.

சேனாதிபதி அரையன் இராஜராஜன் இப்போது எங்கிருக்கிறார் மன்னர் விசாரிக்க, "தஞ்சையில் தான் இருக்கிறார். இன்று காலையில் கூட அவரை சந்தித்து விட்டு வந்தேன்"

வாசற்பக்கம் குதிரைகள் வரும் சத்தம் கேட்டது. என்ன என்று வியக்க, வந்தியத்தேவர் படைகள் இன்னும் நெருக்கமாக அரசருக்கு அருகே நின்று கொண்டார்கள். உடைவாளில் கை வைத்தபடி இருந்தார்கள்.

"வல்லவரையர் வந்தியத்தேவரின் மாதேவியார் குந்தவை பிராட்டியார் வருகிறார்" என்று குரல் எழும்பியது. முன்பக்கம் இரண்டு பட்டையாக நரைத்துப் போனாலும் முகத்தில் லேசாக தொய்வு இருந்தாலும், சிறிதுகூட அழகு குறையாத கம்பீரம் மிக்க அந்தப் பெண்மணி தேரில் இருந்து கீழ இறங்கி வந்தார். அவருடைய கையில் மெல்லிய ஊன்றுகோல் இருந்தது. அந்த ஊன்றுகோல் நடப்பதற்கு துணை என்பதைவிட அவருக்கு கம்பீரம் கொடுத்தது என்பதே உண்மை.

"குந்தவையை கைது செய்திருக்கிறார்களாமே, விமலாதித்தன் சிறை வைத்திருக்கிறானாமே" என்று பதட்டத்தோடு குந்தவை பிராட்டியார் சொல்ல,

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" கைகூப்பி மாமன்னர் வரவேற்றார்.

"ஓலை வந்தது. குந்தவை அதில் கதறி இருக்கிறாள். எப்படியேனும் என் உயிரை காப்பாற்றுங்கள், என் மகனை காப்பாற்றுங்கள் என்று கதறி இருக்கிறாள்"

"போதும் இந்த நாடகம்" மாமன்னர் இராஜேந்திர சோழருக்கு கோபம்



தலைக்கேறியது. தரையில் கால் உதைத்தார். முஷ்டியை மடக்கினார். பல் கடித்தார். முகம் சிவந்தது. பரவை நாச்சியார் மெல்ல புஜம் தொட்டு வெற்றி வேண்டாம் என்று தலையசைக்க சட்டென்று மாறிப் போனார்.

"அத்தை நாளை காலைக்குள் என் உளவுப்படை உண்மை என்ன என்று தெரிவித்து விடும். இவள் நாடகமாடுகிறாள். இவளை இன்னும் நம்பிக்கொண்டா இருக்கிறீர்கள்" என்று அருகே போய் அத்தையின் கைகளை கோர்த்துக் கொண்டார்.

அத்தையும், மருமகனும் முன்னே நடந்து போக மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

"செம்புலி எதற்கும் கீழைச் சாளுக்கியம் போக தயாராக இரு" அருள்மொழிப் பட்டன் உத்தரவிட்டான்.

"ஆகட்டுமய்யா, நீங்கள் போகும் பொழுது நான் வராமல் இருந்து விடுவேனா. நீங்கள் முன்னே போக நாங்கள் பின்னே வரத்தானே வேண்டும்" என்று மறுபதில் சொன்னான்.

தான் முதலில் போகப் போவதில்லை என்று அவனுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

தஞ்சையிலுள்ள ஒவ்வொரு ஆளும் சூட்சமம் மிக்கவர்கள். சூது நிறைந்தவர்கள். எதிராளி எப்படி அசைகிறான் என்று மிக உன்னிப்பாக கவனிப்பவர்கள். தஞ்சை மண்ணில் பிறந்தவர்களை ஏமாற்றுவது எளிதான விஷயமல்ல என்று அருள்மொழிப் பட்டனுக்குத் தெரிந்தது. சிரித்தான்.



# 8

விடியல் நேரத்தில் நான்கு குதிரை வீரர்கள் தஞ்சைக்குள்ளே நுழைந்தார்கள். காவிரி, கொள்ளிடம், அரசலாறு, குடமுருட்டி என்று பல ஆறுகளைத் தாண்டி குதிரைகள் சொட்ட சொட்ட நனைந்த வண்ணம் கருந்தட்டான்குடியை நோக்கி நகர்ந்த வண்ணம் இருந்தன.

வடகிழக்கு பக்கமுள்ள கடுமையான பாதுகாவலை முத்திரை மோதி-
ரம் காட்டி அரண்மனை நோக்கி நகர்ந்தன. அரண்மனைக் கதவு த...
பட்டது. அந்தப்புரத்துக்குள் அதிகாரிச்சிகள் வேகமாக நுழைந்தார்கள்.
மெல்ல கதவு தட்டினார்கள். மணி ஓசை எழுப்பினார்கள்.

பரவை கண் விழித்துக் கொண்டாள். மெல்ல மாமன்னரை
உலுக்கி, "யாரோ கதவு தட்டுகிறார்கள், அவசரச் செய்தியாக இருக்கும்
போல் தெரிகிறது. நான் போய் பார்க்கவா?"

"இல்லை நானும் வருகிறேன்"

மன்னர் சட்டென்று புரண்டு கட்டில் விட்டு இறங்கி விரைவாக
உடுத்திக் கொண்டார். பரவையும் தன் உடைகளை சீர் செய்து
கொண்டாள். அதே வேகத்தில் படுக்கையையும் சரி செய்தாள்.

இரண்டு பேரும் நகர்ந்து கதவுக்கருகே போய் கதவு திறந்தார்கள்.
முத்தாளம் பொன்னம்மை காத்திருந்தாள். "கீழைச் சாளுக்கியத்தி-
ருந்து உங்களது மெய்க்காவல் படை அரண்மனைக்குள் வந்து விட்டது.
உள்ளே வரட்டுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்"

"உடனே வரச் சொல்" மன்னர் உத்தரவிட்டார்.

அறைக்குள் நுழைந்து வேறுபக்க வழியாகப் போய் முகம், கை
கால் கழுவிக் கொண்டார். வாய் கொப்பளித்தார். கருவேலங்குச்சி
யாலும், உமிப் பொடியாலும் பல் துலக்கினார். மறுபடியும் வாய்
கொப்பளித்து மீண்டும் முகம் கழுவி தலையை சீவி முடிந்து இறுக்
கக் குடுமியாக முடிந்துக் கொண்டார். மேலே போர்வை போர்த்திக்
கொண்டார். பரவை வேகமாக வந்து நெற்றியில் தேன் மெழுகு
தேய்த்து குங்குமம் இட்டு பிறகு விபூதி குழைத்து நெற்றியில் இட்டாள்.
புறங்களில் தடவினாள். மேலாடையில் வாசனை திரவியங்களை தெளித்
தாள்.

"பசிக்கிறது பரவை" என்று சொல்ல,

"நீங்கள் முற்றத்துக்கு போங்கள், பின்னாலேயே வந்து விடும்"
என்று சொல்லி வேறு வழியே பரவை பறந்து ஓடினாள். முற்றம் நோக்கி
மாமன்னர் நகர்ந்தார். முற்றத்தில் பெரிய நாற்காலி போடப்பட்டிருந்தது.
உட்கார்ந்ததும் சேடிப் பெண்கள் விசிறத் துவங்கினார்கள். குதிரை
வீரர்கள் வந்து விட்டார்கள் என்று வாசலில் உள்ள சப்தம் தெரி
வித்தது. குதிரை வீரர்கள் உள்ளே நுழைந்தார்கள். முற்றத்தில் இறங்கி
நீண்ட நெடுஞ்சாண் கிடையாய் மாமன்னர் நோக்கி வணங்கினார்கள்.
எழுந்து நின்று கைகட்டிக் கொண்டார்கள்.



"நான்கு பேர் வருவதாக அல்லவா செய்தி வந்தது. இரண்டு
பேர் வந்திருக்கிறீர்களே"

"ஆமாம், ஒருவருக்கு பலத்த காயம் தோளில் ஏற்பட்டு விட்டது"

"என்ன விதம்"

"வெட்டுக்காயம்"

"எதனால்?"

"மேலைச் சாளுக்கியத்தினர் வழியில் மடக்கி என்ன ஓலை
கொண்டு போகிறீர்கள். எங்கு போகிறீர்கள் என்று கடுமையாக
விசாரித்தார்கள். தள்ளு முள்ளு ஏற்பட்டு விட்டது. வேகமாக எதிர்ப்பு
காட்டி விட்டு அங்கிருந்து தப்பித்து வரும் போது நமது வீரர்கள்
தோளில் கத்தியால் வெட்டி விட்டார்கள். ரத்த சேதாரத்தோடே
அவர் நெடுஞ்தொலைவு பயணப்பட்டார். ஈரத்துணி சுற்றி கட்டு
போடப்பட்டது என்றாலும் சோர்வாக இருக்கிறார். நேற்று நள்ளிரவில்
திருவொற்றியூரில் வைத்தியரை எழுப்பி தையல் போடப்பட்டது"

"வலி அதிகம் இருக்குமே"

"இருந்தது. ஆனாலும் புளித்த காடி ஏதும் தரப்படவில்லை.
புளித்த காடி கொடுத்தால் குதிரையை செலுத்த முடியாது மயங்கி
விழுந்து விடுவேன் என்று சொன்னதால் அவரை புளித்த காடி ஏதும்
கொடுக்காமல் அப்படியே உட்கார வைத்து பதினாறு இடத்தில் தையல்
போட்டார்கள். எலும்பை ஒருவாறு பொருத்தி, மடக்கி, இறுக்க கட்டு
போட்டிருக்கிறார்கள். கையை அசையாத வண்ணம் இடுப்போடும்
மார்போடும் கட்டியிருக்கிறார்கள்"

"பதினாறு தையலா, காடி கொடுக்கப்படாமலா"

"ஆமாம்"

"வலி, கதறி இருப்பாரே"

"இல்லை. பல் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்"

மாமன்னருக்கு அந்த வீரம் சந்தோஷத்தை கொடுத்தது.

"இப்போது எங்கே?"

"தஞ்சையிலுள்ள ஆதுரச் சாலையில் ஜுரம் அதிகமாகி படுத்து
விட்டார். வரமுடியவில்லையே என்று ஏக்கம். நான் தான் சமாதானம்
செய்து படுக்க வைத்து விட்டு வந்தேன். உடன் ஒரு வீரன் இருக்கி
றார். நாங்கள் இருவரும் மட்டும் உங்களை சந்திக்க வந்தோம்"

"சரி, விஷயம் சொல்லுங்கள்"

"குந்தவை தேவியார் உங்களுக்கு ஓலை அனுப்பினார் என்று கேள்விப்பட்டோம்"

"ஆமாம் வந்தது"

"ஓலையில் அவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் எழுதியிருந்ததையும் சொன்னார்கள்"

"சரி, அது உண்மை"

"ஆனால் அவர் வீட்டுக் காவலில் வைக்கப்படவில்லை தானே கதவை பூட்டிக் கொண்டு அப்படி இருக்கிறார். ஏன் என்று கேட்டதற்கு, இப்படி வீட்டுக் காவலில் இருக்கிறேன் என்று தெரிந்தால் தான் இராஜேந்திர சோழன் உடனடியாக படை எடுத்து வருவான் என்று சொன்னார்"

"முட்டாள்தனம், மேற்கொண்டு"

"அவர் அப்படி இருப்பது இராஜ நரேந்திரனுக்கு பிடிக்கவில்லை. தாய்க்கு எதிராக சண்டையிட்டு பார்த்தார். ஆனால் அவர் தாயார் கடுமையான வார்த்தைகளால் சாடினார். அவர் மௌனமாகி விட்டார்"

"என்ன கடுமையான வார்த்தைகள்?"

"இப்படி என்னை எதிர்த்து பேசினால், நான் உன்னை விட்டு உன் தம்பிக்கு ஆதரவாக போய் விடுவேன். அவனுக்கு பட்டம் சூட்டச் சொல்வேன். நீ தெருவில் நாய் போல அலைய வேண்டியது தான்" என்று சொல்ல, அவருக்கு தன் பதவி பறிபோய் விடுமோ என்ற பயத்தில் இருந்து விட்டார். தாயாரை கொள்ளவும் முடியவில்லை. தள்ளவும் முடியவில்லை. தாயார் செய்வது தவறு என்று தனியாக புலம்பிக் கொண்டிருக்கிறார்"

"பிறகு"

"விமலாதித்தர் வந்து மூன்று முறை சமாதானம் செய்ய முயற்சி செய்தும் எதுவும் புண்ணியமில்லை. கதவு திறக்கப்படவே இல்லை. ஜன்னல் வழியே இரண்டு பேரும் பேசினார்கள். கதவை உடைத்து உள்ளே வருவேன் என்று விமலாதித்தர் எச்சரித்தபோது பெரும் கூச்சல் எழுந்தது"

"யாரிடமிருந்து?"

"குந்தவையாரிடமிருந்து"

"என்னவிதமான கூச்சல்"



"மாளிகை முழுவதும் நெருப்பு வைத்து பற்றி தானும் விழுந்து இறந்து விடுவேன், இராஜநரேந்திரனும் அதில் இறப்பான் என்று சொன்னார்கள். அவர் பயந்து போய் வெளியே வந்து விட்டார்"

"என்ன கொடுமை இது. எனக்கென்று ஏன் இப்படி சோதனைகள் வருகின்றன" இராஜேந்திரர் மௌனமாக மனதுக்குள் அழுந்தும் கொண்டார்.

அவருக்கு அரிசி கஞ்சியில் பாலூற்றிக் கொண்டு வந்திருந்தார்கள். சூடாற்றி அருகில் வைத்தார்கள்.

"அவர்களுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டாமா" வீரர்களை சுட்டிக் காட்டினார்.

"எடுத்துக் கொண்டு விட்டோம் மன்னா, தஞ்சையிலுள்ள அறச்சாலையில் மோர் கலந்த அரிசி கஞ்சி கொடுத்தார்கள். ஊறுகாய் கொடுத்தார்கள். வயிறு நிரம்பி விட்டது. முகம், கை, கால் கழுவிக் கொண்டு சாப்பிட்டோம். தெளிவாக இருக்கிறோம்"

"மேலைச் சாளுக்கியத்தில் குறிப்பாய் வேங்கி தேசத்தில் என்ன நிலைமை?"

"அவர்கள் யுத்தத்திற்கு தயாராக இருக்கிறார்கள்"

"எவர்கள்?"

"மேலைச் சாளுக்கியத்தினர்"

"கீழைச் சாளுக்கியத்தில் எத்தனை பேர் மேலைச் சாளுக்கியத்துக்கு ஆதரவு"

"சரிபாதியாக ஆதரவாகவும், சரிபாதி எதிர்ப்பாகவும் இருக்கிறார்கள்"

"ஆதரவாளர்கள் என்ன விதமான ஆதரவாக இருக்கிறார்கள்"

"இனி மேலைச் சாளுக்கியம் தான் கீழைச் சாளுக்கியத்தை ஆட்சி செய்யும். அந்த தாயாதி உறவு தான் பலப்பட வேண்டும். சோழ தேசத்தை நம்பி புண்ணியமில்லை என்று சொல்கிறார்கள்"

"ஏன் அப்படி, அதற்கு காரணம் நானா"

"இல்லை மன்னா, ஒருகாலும் நீங்கள் இல்லை. அதற்கு காரணம் குந்தவை தேவியார், எவ்வளவு அலம்பல் செய்ய முடியுமோ, எத்தனை அட்டகாசம் செய்ய முடியுமோ, எவ்வளவு அருவருப்பாக நடந்து கொள்ள முடியுமோ அப்படி நடந்து கொள்கிறார்"

"உதாரணத்திற்கு...?"

"விமலாதித்தன் அமர வேண்டிய சிம்மாசனத்தில் விமலாதித்தன் வருவதற்கு முன்பே தான் போய் உட்கார்ந்து கொண்டு சபை இன்று என்ன விசேஷம் என்று கேட்டிருக்கிறார். சபை தலை போய் விட்டது"

"மயிரைப் பிடித்து தரையில் இழுத்து அடிக்க வேண்டும்"

"ஆமாம். அப்படிப்பட்ட கோபம் அவர்களில் சிலருக்கு இருக்கிறது. அதை இப்பொழுது வேறு விதமாக காட்டுகிறார்கள்"

"என்ன விதமாக?"

"குந்தவையை இந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டு இராஜ நரேந்திரனை தூரத்திவிட்டு, இராஜநரேந்திரன் தம்பி மேலை சாளுக்கிய வம்சத்தில் இருந்து பிறந்த பிள்ளைக்கு இளவரச பட்டம் கட்டி உடனடியாக அவனை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டும் என்று நினைக்கிறார்கள். குந்தவையை தூரத்த வேண்டும் என்பது தான் அவர்களுக்கு முக்கியமான குறிக்கோளாக இருக்கிறது"

"அவர்கள் இராஜேந்திரனை மறந்து விட்டார்களா"

"மறக்கவில்லை. இப்பொழுது உங்களை எதிர்க்க ஒட்டர்களும், கலிங்கர்களும், மேலை சாளுக்கியத்தினரும், இரட்டைபாடி ஏழாயிரத்திலிருந்து ஒரு படையும் வந்திருக்கின்றன. நிறைய வில்லாளிகள் வந்திருக்கிறார்கள். குறிப்பாக அந்த வில்லாளிகளுக்கு சேர தேசத்திலுள்ள அந்தணர்கள் பயிற்சி அளிக்கிறார்கள். ஒட்ட தேசத்து வீரர்கள் குதிரையில் ஏறி இடது கையில் வில் பிடித்து வலது கையில் அம்பு தொடுத்து, ஓடியபடி குறி பார்த்து அம்பெய்யும் வித்தையை அவர்களிடம் கற்றிருக்கிறார்கள். எனவே வீதி முழுக்க குதிரை ஓட்டமும், வில்லாளிகள் சாகசமும் நடந்து கொண்டிருக்கிறது"

"எந்த மாதிரி சாகசங்கள்?"

"இரவு நேரம் அவை நடைபெறுகின்றன. உயரே தீப்பந்தத்தை அனுப்புகிறார்கள். அந்த தீப்பந்தத்தை தொடர்ந்து பல நூறு அம்புகள் எய்யப்படுகின்றன. அந்த தீப்பந்தத்தை குதறி எறிகின்றன. பெரியதாய் நெருப்பு சிதறி விழுகின்றது. "ஓ" என்று மக்கள் கூவுகிறார்கள். சில சமயம் ஏதோ தாமிரபஸ்பம் கலந்து, வேறு வெள்ளி பஸ்பம் கலந்து சிவப்பாகவும், மஞ்சளாகவும், பச்சையாகவும் நெருப்பு பொறி பறக்கிறது.

காய்ந்து போன பனை மரத்து குருத்தை பற்ற வைத்து மேலே அனுப்புகிறார்கள். அதை சிதற அடிக்கிறார்கள். நாலாபுறமும் நெருப்பு



சிதறி விழுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

னங்களுக்கு வெறி மூட்டவும், மிகப்படை ஒன்று தயாராக இருக் து என்று உற்சாகமூட்டவும் இவை தினசரி நடைபெறுகின்றன. வீதி வதும் குதிரை வீரர்களின் அட்டகாசம் தான் அதிகமாக இருக்கி சில நேரங்களில் இது கீழைச் சாளுக்கியமா அல்லது ஒட்டர்க தேசமா என்று தெரியாத வண்ணம் ஒட்டர்கள் நிறைந்து காணப் டுகிறார்கள்.

கலிங்கர்கள் தனிக்குழுவாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். றுமையாக பயிற்சி செய்கிறார்கள். இம்மாதிரியான வான வேடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை"

"குந்தவையிடம் பேசி பார்த்தாயா, அவளுடைய மனோநிலைமை எப்படி இருக்கிறது?"

"கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாள்"

என்ன கற்பனை?"

"விமலாதித்தனை தன் கையாலேயே வெட்டிக் கொல்ல வேண்டும் என்று விருப்பப்படுகிறாள்"

"எதற்காக?"

"கன்னத்தில் அறைந்தாராம்"

"எப்போது?"

"சுழற்றி வைத்திருந்த விமலாதித்தன் கிரீடத்தை, குந்தவையார் எட்டி உதைத்தாராம். அது தரையில் விழுந்து நசுங்கியதாம், இதற்காக கோபப்பட்டு விமலாதித்தர் அடித்திருக்கிறார்"

"இராஜ நரேந்திரன் தாயாரை காப்பாற்ற போகவில்லையா?"

"இல்லை. அதற்கு பதிலாக அந்த மணிமுடியை எடுத்து முத்துக்களையும், சிதறிய மற்ற கற்களையும் பொறுக்கி எடுத்து பொற்கொல்லரை நோக்கி போயிருக்கிறாள். போவதற்கு முன்பு 'அம்மா, நீ அப்பா அணிந்து கொண்டிருந்த மணிமுடியை எட்டி உதைக்கவில்லை. நான் அணியப் போகும் மணிமுடியை எட்டி உதைக்கிறாய். இது அடாத செயல்' என்று சொல்லிவிட்டு போயிருக்கிறான்"

"அற்புதம். அற்புதம் என் மருமகனல்லவா. மிக நிதானமாக செயல்பட்டிருக்கிறான்" எழுந்து நின்று இராஜேந்திரர் கை தட்டினார்.

அமர்ந்தவருக்கு பரவை நாச்சியார் அரிசி கஞ்சி கொடுத்தார். கரண்டியில் கொடுக்கப்பட்ட அரிசி கஞ்சியை குடித்து விட்டு

தலைவலை அப்படியே வாயில் போட்டு மறுபடியும் அரிசி ... குடித்தார். வயிறு நிரம்பியது.

இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள். சோழ தேசத்திலுடைய எதிர்ப்பு எப்படி இருக்க வேண்டும்"

"இதை சொல்லும் அளவிற்கு எனக்கு திறமை இல்லை மன்னா"

"பரவாயில்லை. சொல்லுங்கள். உங்கள் அபிப்ராயம் என்ன?"

"மிகப்பெரிய படையெடுப்பு நடத்தப்பட வேண்டும். அப்படி நடத்தினால் இராஜ நரேந்திரனை காப்பாற்றுவது மட்டுமல்லாமல் விமலாதித்தனையும் காப்பாற்றப்பட வேண்டும். ஏனெனில் விமலாதித்தனுக்கு மேலை சாளுக்கியத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை. வேறு வழியில்லாமல் அந்தப் பக்கம் சாய்ந்திருக்கிறார்.

கீழைச் சாளுக்கிய மக்கள் பல பேர் நம்மை நம்பி இருக்கிறார்கள். பல அதிகாரிகள் நமக்கு விசுவாசமாக இருக்கிறார்கள். மிகச் சிலரே மேலை சாளுக்கியத்தின் பிடியில் சிக்கி இருக்கிறார்கள். காசுக்கு ஆசைப்பட்டும், அங்கிருந்து வந்த பெண்டிருக்கு ஆசைப்பட்டும் இவைகள் நடக்கின்றன. "ம்..ம்..ம்... இப்பொழுது இன்னொரு விஷயமும் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்"

"சொல்"

"இராஜ நரேந்திரனின் தம்பியார் விஷ்ணுவர்த்தன். அங்கு உல்லாசமாக, சுகபோகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். மது அருந்தியும், பெண்களோடு சல்லாபித்தும் இரவு முழுவதும் கழிக்கிறார். ஆனால் இங்கு இராஜ நரேந்திரன் இடுப்பில் கோவணத்துடன், மேலே ஒற்றை ஆடையுடன் நின்று ஒற்றைக்காலில் தவம் செய்கிறார். விடியற்காலையில் சூரிய நமஸ்காரம் செய்கிறார். சிவபூஜை செய்கிறார். கால பைரவர் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருக்கிறார். மதுவோ, மாமிசமோ உண்பதில்லை. மங்கையரோடு பேசுவதே இல்லை. 'எனக்கு ஒரு இலட்சியம் இருக்கிறது. அதை அடைய நான் விரதம் இருந்து தான் ஆக வேண்டும்' என்று எங்களுக்கு நடுவே அவர் பேசுவது வழக்கம்"

"குந்தவையாரை மீட்டுக் கொண்டு வர முடியுமா?"

"குந்தவையார் ஒத்துழைத்தால் முடியும்"

"குந்தவையார் ஒத்துழைக்க மாட்டார். உம்முடைய அபிப்ராயம் என்ன?"

"குந்தவையார் எப்போது என்ன செய்வார் என்று இறைவனாலும்



...ளிக்க முடியாது" சிறிது கூட பயமின்றி, பதட்டமின்றி அந்த ... பதில் சொன்னான்.

இராஜேந்திரர் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இது உன்னுடைய அபிப்ராயமா?"

"இல்லை. என்னுடைய அபிப்ராயம் மட்டும் இல்லை. இங்கு ... நான்கு பேருடைய அபிப்ராயமும் இதுதான். அவர்கள் ...னவிடமும் இன்னும் கடுமையாக பேசக்கூடும். அப்படி ...வும் அவசியம் இல்லை. ஆனால் கீழைச் சாளுக்கிய மக்கள் ...ந்த நொந்த நிலையில் இருக்கிறார்கள்"

"இந்த பெண்குரங்கை ஏன் விமலாதித்தர் கட்டிக் கொண்டு ...தார்" என்று கேட்கிறார்கள். சோழ தேசத்தில் உள்ள எல்லாப் பெண்களுமே இப்படி குரங்குகள் தானா என்று பேச்சும் உண்டு"

"மந்தி என்று சொல்கிறார்களா?"

"இல்லை, அங்கு பெண் குரங்குக்கு வேறு பெயர்"

"என்ன பெயர்"

"ஆட கோந்தி" அவன் சொல்ல இராஜேந்திரர் சிரித்தார்.

"ஒரு இலட்சம் படைவீரர்கள் போதுமா?"

"போதாது"

"ஏன்?"

"அங்கே மூன்று முதல் நான்கு இலட்சம் வரை படைவீரர்கள் இருக்கலாம். எனவே நாம் அதிகமான படையோடு தான் உள்ளே போக வேண்டும். உள்ளே புகுந்து கோட்டையை தாக்குவதோடு நிற்காமல் கலிங்கமும், ஒட்ட தேசத்தையும், நாம் அடக்கி ஆள வேண்டும். ஒட்டர்கள் மிகுந்த அட்டகாசத்தோடு இருக்கிறார்கள். உங்களை தாக்கி போரில் ஜெயித்து விட்டால் கீழைச்சாளுக்கியத்தை தாங்கள் தங்களுடைய ராஜ்ஜியத்துடன் இணைத்துக் கொண்டு விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற கனவில் இருக்கிறார்கள்.

"மேலைச் சாளுக்கியத்தை அடித்து விரட்டி விடலாம் என்று தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்"

"இது மேலைச் சாளுக்கியத்தாருக்கு தெரியுமா?"

"தெரியும். யார் அடித்து, யார் ஓடுவது என்பதை பார்த்துக் கொள்ளலாம் என்று அவர்களும் கூறியிருக்கிறார்கள்"

"ஆகவே, அவர்களுடைய ஒற்றுமை மேலோட்டமானது"

"ஆமாம். மிக மேலோட்டமானது. ஒருவரை ஒருவர் கொல்ல சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்"

"ஒற்றுமையாக கீழைச் சாளுக்கியத்தோடு இருப்பது யார்?"

"எவரும் இல்லை"

"இராஷ்டிரகூடர் நிலைமை என்ன?"

"யானைப் படைகள் வந்திருக்கின்றன. மேலும் யானைகள் வரு தற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஊருக்குள் ஊரின் எல்லையில் இருக்கிறார்கள். ஊருக்குள் முழுவதும் குதிரை படை நடமாட்டம் தான். ஒட்டர்களுடைய ஆட்சிதான்"

"விமலாதித்தனுக்கு வெட்கமாக இல்லையா?"

"மேலைச் சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மன் கூடவே இருப்பதால் எதுவும் செய்ய முடியவில்லை"

"என்ன, ஜெயசிம்மன் அங்கே தான் இருக்கிறானா?"

"ஆமாம். மேலைச் சாளுக்கியத்திலிருந்து ஆறுமாதத்திற்கு முன்பு கிளம்பி இங்கு வந்து விட்டார். இந்த இடத்தை எப்படியாவது கபளீகரம் செய்து விட வேண்டுமென்று துடிதுடிக்கிறார். மேலைச் சாளுக்கியமும், கீழைச் சாளுக்கியமும் உறவு ஏற்படுத்திக் கொண்டு விட்டால், இரண்டாவது பிள்ளைக்கு பட்டம் ஏற்படுத்தி விட்டால் அவர்களுடைய உறவு வெட்டிப்பட்டு விடும் என்றும் அந்த உறவு வெட்டிப்பட்டதோடு அவர்கள் தொண்டைநாடு நோக்கி படை எடுத்து வரமுடியும் என்றும் தொண்டை நாடு, நடுநாடு கலந்து வெகுவிரைவாக தஞ்சையை தாக்கி விட முடியும் என்றும் கனவு காண்கிறார்கள்"

"இந்த இராஜேந்திர சோழனைப் பற்றி மறந்து போயிற்றா?"

"இல்லை. மறக்கவில்லை. மாறாக அடிக்கடி நினைத்துக் கொள்கிறார்கள்"

"எப்படி?"

"புலம்புகிறார்கள்"

"என்ன விதமாக?"

"ஒப்பாரி பாட்டுக்கள் மூலமாக"

"என்ன விதமான ஒப்பாரி பாட்டு"

"ஹொட்டூர் சோகம் என்பதான ஒப்பாரிப் பாட்டு. ஹொட்டூரில் இராஜேந்திர சோழர் செய்த அட்டூழியங்கள் என்று ஒரு ஒப்பாரி பாடலாக செய்யப்பட்டு நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுகிறார்கள்.



கள் சிவக்க கதறுகிறார்கள். பழிக்குப்பழி, இரத்தத்துக்கு இரத்தம், ட்டுக்கு வெட்டு. கொலைக்கு கொலை, தஞ்சையை நிர்மூலமாக்கு ம் என்று உரக்க கத்தினார்கள்"

"சரி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். படை திரட்டிப் போக ரம் ஆகும். எனவே அதுவரை நீங்கள் உங்கள் சொந்த ஊருக்கு ய் வரலாம். உன்னுடைய சொந்த ஊர் எது?"

"மருவூர்"

"எங்கு இருக்கிற மருவூர்?"

"திருக்காட்டு பள்ளிக்கு அருகே இருக்கிற மருவூர்"

"அட, அங்கு மிகப்பெரிய அக்ரஹாரம் இருக்கிறதே"

"ஆமாம், அதைச் சுற்றிலும் நல்ல மறவர் குடியிருப்பும் இருக்கிறது. நல்ல விளைநிலங்கள் இருக்கின்றன"

"மருவூரில் சாம்பான் கோவில் இருக்கிறதல்லவா"

"ஆமாம். சாம்பான் கோவிலும், அந்தணர்களால் ஸ்தாபிக்கப்பட்ட எல்லைக்காளியும் இருக்கின்றன. அதற்கு மருவூர் மாயா என்று பெயர். ஸ்ரீ சக்கரப்பிரதிஷ்டை நடந்திருக்கிறது"

"நல்லது. நல்லது. ஊர் ஞாபகம் பசுமையாக இருக்கிறது போலும்"

"ஆமாம். மன்னா, தஞ்சைக்குள் நுழைந்ததுமே ஊர் ஞாபகம் வந்து விட்டது"

"வரும். உங்களுக்கு ஓய்வு தருகிறேன். உடனடியாக நீங்கள் உங்களுடைய சொந்த ஊருக்கு பயணப்படலாம். நண்பருடைய ஊர் எது?"

"அதுவே, மருவூரே. அங்கு இருக்கின்ற நண்பர்கள் இருவரும் தஞ்சையைச் சேர்ந்தவர்களே, வெட்டுப்பட்ட வீரனின் குடும்பத்திற்கு செய்தி போயிற்று. இந்நேரம் அவர்கள் அங்கு வந்திருப்பார்கள்"

"நானும் கிளம்புகிறேன்"

"எங்கே?" பரவை வியப்போடு கேட்டாள்.

"வெட்டுப்பட்டு ஒரு வீரன் ஆதுரச் சாலையில் இருக்கிறான். நான் இங்கு உட்கார்ந்து கொண்டு என்ன செய்யப் போகிறேன். எனக்காக வெட்டுப்பட்டவனை நான் பார்க்க வேண்டாமா?"

"மன்னா நான் அழைத்து வருகிறேன்"

“அவரால் வர முடியாது. அவரால் வர முடியாவிட்டால் என்ன இந்த இராஜேந்திரசோழன் அவர் இருக்கும் இடத்திற்குப் போவான் குதிரையை தயார் செய்”

“அருண்மொழிப் பட்டனுக்கும், வந்தியத் தேவருக்கும், அரையன் இராஜராஜனுக்கும் செய்தி அனுப்பு. ஆதுரச் சாலைக்கு வரச்சொல் வீரமாதேவியாருக்கு தகவல் சொல்லி என்னை உடனடியாக சந்திக்கச் சொல். அத்தை குந்தவை பிராட்டியாருக்கு செய்தி அனுப்பி, ஆதுரச் சாலைக்கு ஒருமுறை சென்று வெட்டுப்பட்ட அந்த வீரனை பார்க்கச் சொல். குந்தவையார் வந்து பார்த்தால் அந்த வீரனுக்கு உற்சாகமாக இருக்கும். அவன் குடும்பத்திற்கு சந்தோஷமாக இருக்கும்”

“மன்னா அவ்வளவு அவசியமில்லை”

“இதுபற்றி நீ கவலைப்படாதே. நண்பனே, வெட்டுப்பட்டவன் எனக்காக வெட்டுப் பட்டிருக்கிறான். இந்த தேசத்திற்காக வெட்டுப் பட்டிருக்கிறான். அவனை பார்க்க வேண்டியது என்னுடைய கடமைகளில் ஒன்று. நீ இப்பொழுது உன் ஊர் நோக்கி கிளம்பலாம்”

“இல்லை மன்னா, உங்களோடு நானும் ஆதுரச் சாலைக்கு வருகி றேன். என் நண்பனை பார்த்து விட்டு இரவு ஊருக்குப் போகிறேன்”

“நல்லது கிளம்பலாம்”

வெளியே சிறு முரசு அடிக்கப்பட்டது. எக்காளம் ஊதப்பட்டது மன்னர் வெளியே பயணப்படுகிறார் என்று கோட்டையில் உள்ள சகலருக்கும் தெரிவிக்கப்பட்டது. கோட்டைக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டன. மெய்க்காவல் படைகள் விரைவாக தயார் ஆயின. முன்னே இருபது குதிரைகள், பின்னே இருபது குதிரைகள். சுற்றிலும், வளையமாக பத்து பேர் என்று தயார் ஆனார்கள். நடுவே தேர் நிறுத்தப்பட்டது.

மாமன்னர் படியிறங்கினார். தெருவில் இறங்கி தேர் ஏறினார். திரும்பி பரவையாரை பார்த்தார். பரவையார் சிரித்து கையசைக்க,

“என்ன அங்கே நின்று கை அசைக்கிறாய். வா, நீயும் வா, வந்து அந்த வீரனைப் பார். தலையைத் தடவி கொடு. அவருக்கு சந்தோஷமாக இருக்குமல்லவா?” என்று சொல்ல, துள்ளிக் குதித்து வந்த பரவையாரும் தேரில் ஏறிக் கொண்டார்.

வெகுநாளைக்கு பிறகு மாமன்னர் இராஜேந்திர சோழரோடு ஒரே தேரில் பயணப்படுகிற சந்தோஷம் அவருக்கு பெருமகிழ்ச்சியை கொடுத்தது. இந்த மாதிரி திருவாரூரில் எத்தனை முறை பயணப்



...ருக்கிறோம். தஞ்சையில் சில தினங்களே இந்த வாய்ப்பு ...டைத்திருக்கிறது.

‘வெகுநாளைக்குப் பிறகு எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ...ளே, வீரமாதேவி இதை நீங்கள் பார்க்கவில்லையே’ என்று ...யார் சொல்ல,

வீரமாதேவி தன்னுடைய அந்தப் புரத்திலிருந்து வெளியே வந்து ...லாரியில் தாவி ஏறினார். அவரை தேர் கடந்து போகும் போது ...வை நாச்சியார் கை அசைத்தார். வீரமாதேவி நாக்கை துருத்தி ...மாக குதிரையை திருப்பி எடுத்தார். பரவை நாச்சியாருக்கு ...ப்பு பொத்திக் கொண்டு வந்தது.

ஆனால் மாமன்னர் இராஜேந்திர சோழர் கனத்த சிந்தனையோடு ...ரின் முன்பக்கம் பிடித்துக் கொண்டு நிற்க, தேர் விரைவாக தஞ் ...வூர் ஆதுரச் சாலை நோக்கி ஓடியது. அரண்மனை சுற்றியுள்ள கடைத் ...தெருவில் உள்ள மக்கள் விலகி நின்றார்கள். உள்பக்கக் கடையில் உள்ள ...ர்கள் வெளியே வந்து கை கூப்பினார்கள். சிலர் கைகளில் வைத்திருந்த ...கடையிலுள்ள மலர்களை இராஜேந்திரர் மீது வீசி எறிந்தார்கள். பதி ...லுக்கு கை அசைத்த வண்ணம், எங்கோ சிந்தித்தவண்ணம் இராஜேந் ...திரர் ஆதுரச் சாலை நோக்கி பயணப்பட்டார்.

“மொத்த தையலையும் பிரிக்க வேண்டும். சரியாக தைக்கவில்லை அல்லது பதட்டமாக தைத்து இருக்கிறார் அல்லது நீங்கள் சரியாக ஒத்துழைக்க வில்லை. நான் முற்றிலுமாக உங்களை மயக்கப்படுத்தி விடுவேன். நிதானமாக வரி வரியாக தைக்கப் போகிறேன். எலும்பு பொறுத்தப் போகிறேன், எலும்பு உடைந்திருக்கிறது. பொறுத்தி தைத்து விட்டு ரணம் ஆற மருந்து போட்டு விட்டு கை அசைக்காமல் மாவுக் கட்டு போட்டு விடுவேன். உள்ளுக்குள் இரத்த விருத்திக்கு மருந்து கொடுத்து விடுவேன். மூன்று நாட்கள், நான்கு நாட்கள் வலி தெரி யாமல், தூங்கும்படியாக இருக்கும்படி வைத்துக் கொள்வேன். உங்கள் உறவினர்களா...” என்று வைத்தியர்கள் வந்தவர்களை சுட்டிக் காட்ட வீரன் “ஆம்” என்று தலையசைத்தான்.

“ஒரு வாய் காடி குடியும்” என்று சொல்ல,

“முடியாது” என்று மறுத்தான்.

“ஏன்?”

“ஒரு வேளை மாமன்னர் என்னை சந்திக்க வந்தாலும் வருவார். அப்பொழுது நான் குடித்துவிட்டு உறங்கக்கூடாது. எனவே வலி

இருந்தாலும் பரவாயில்லை. அவர் வரும்வரை காத்திருக்கிறேன் அவர் வரமாட்டார் என்று தெரிந்தால் பிறகு குடிக்கிறேன்" என்று மெல்லிய குரலில் சொன்னான்.

அவனுடைய பேச்சு சரியாக இருந்தது. வைத்தியர்கள் தலை அசைத்தார்கள்.

"இது நல்ல சிந்தனை" என்று பாராட்டினார்கள்.

"கைகளில் மருந்து தடவுகிறேன். மயிலிறகால் வருடித் தருகிறேன்" என்று சொல்லி கைகளில் மருந்து தடவினார்கள். மயிலிறகால் மெல்ல தோளிலிருந்து முழங்கை வரையும் வருடிக் கொடுத்தார்கள். அந்த வருடிக் கொடுத்த சுகத்தில் மெல்ல வீரன் கண்மூடி தூங்கிப் போனான். அவன் உறவுகள் கவலையோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. வாசலில் மெய்க்காவல்படை இறங்கியது. ஆதுர சாலையை சுற்றி வளைத்தது. உள்ளுக்குள் வேகமாக நுழைந்தது.

"யார் முக்கியம், யார் முக்கியம்" என்று விசாரித்து தேவை இல்லாதவர்களை வெளியே அனுப்பியது. வைத்தியர்கள் மட்டும் இருக்கச் சொன்னது. "நண்பரே, மன்னர் வந்திருக்கிறார்" ஒரு வைத்தியர் அவசரமாக அந்த வீரனை எழுப்ப முயற்சி செய்ய, "தூங்குகிறான், எழுப்பாதீர்கள். தூங்குவதற்கு மருந்தும் கொடுத்து பிறகு எழுப்பவும் செய்தால் எப்படி. நான் அவரைப் பார்க்க வந்திருக்கிறேன். அவன் என்னை பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று அருகே உட்கார்ந்து கொண்டு இராஜேந்திரர் அவன் தலையை தடவிக் கொடுத்தார்.

வேறு எங்கெல்லாம் காயம் என்று பார்த்தார். வலது கை விரல்களில் அடிப்பட்டிருந்தது. நெஞ்சில் கீறல் இருந்தது. கன்னத்தில் கட்டையாலோ, கத்தியாலோ அடித்து வீங்கி இருப்பது தெரிந்தது. எங்கோ வகையாக மாட்டிக் கொண்டிருக்கிறான். சுற்றி சூழ்ந்து அடித்து விட்டார்கள் என்று தெரிந்தது. எழுப்பி உட்கார வைத்து முதுகு பக்கம் பார்க்க, அங்கேயும் இரண்டு பிரம்பு காயங்கள் தெரிந்தன. அந்த வீரன் வருடிக் கொடுத்த சுகத்தில் இன்னும் கண் விழிக்காமல் இருந்தான். மெல்ல அவனை உட்கார வைத்தார்கள்.

"இதற்கு செலவு முழுவதும் அரண்மனை ஏற்கும். குந்தவை தேவியாரிடம் சொல்லி இருக்கிறேன். அவர் தானே இந்த ஆதுர சாலைக்கு தலைவி. அவர் அடிக்கடி வந்து கவனித்துக் கொள்வார். எவ்வளவு சீக்கிரம் அவர் குணமாக வேண்டுமோ அப்படி குணமாக வேண்டும். இடது கை இயங்க வேண்டும். இது மிக முக்கியம். ஒரு நல்ல போர் வீரனை நாம் இழந்து விடக்கூடாது" என்று சொல்ல,



வைத்தியர்கள் "சரி" என்று தலையசைத்தார்கள்.

"அந்த வீரனுக்கு துணையாக இருந்த இன்னொரு வீரன் எங்கே?" என்று கேட்டு அவனை எதிரே வரவழைத்தார். உற்றுப் பார்த்தார்.

"நீர் தஞ்சையை சேர்ந்தவரா?"

"ஆமாம்"

"யாருடைய மகன்"

"அவர் ஒன்றும் முக்கியமானவர் அல்ல. சாதாரண மறவர் தான். ஆனால் என்னுடைய தமையனார் நக்கன் சந்திரன். யானைப்படையின் உபதளபதி"

"அட, சந்திரனுடைய தம்பியா நீ. எனக்கு உம்முடைய வீரமும், வேலையும் மிகவும் பிடித்திருக்கின்றன. இவரை கவனமாக நீயும் பார்த்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய ஊர் மக்கள் எங்கே?" என்று கேட்க, ஒரு ஓரமாக நின்றிருந்த பெண்களை, வீரன் சுட்டிக் காட்டினான். அவர்களை பார்த்து இராஜேந்திரர் தலை அசைத்தார். அவர்கள் கை கூப்பினார்கள். கீழே விழுந்து வணங்கினார்கள்.

இவருடைய உறவினர்கள் யார் என்று விசாரிக்க அவர்களையும் அவன் அடையாளம் காட்டினான். அவர்கள் முன்னே வந்து வாய் பொத்திக் கொண்டு அழுதார்கள்.

"ச்சு. அவர் தூங்குகிறார். இப்படி அழக்கூடாது. அது அச்சானியமாக இருக்கும். எந்தவித பிரச்சனையும் இல்லை. நோய் குணமாகி விடும். கவலைப்பட வேண்டாம். இதற்குண்டான செலவுகளை அரசே ஏற்கும். இவர் மனைவி யார்?

ஒருவள் முன் வந்தாள்.

"இந்தா இருவத்தைந்து கழஞ்சு" என்று ஒரு பையை அவள் கையில் போட்டார். இன்னொரு பை இன்னொரு வீரனுக்கு கொடுக்கப்பட்டது. வந்த இரண்டு பேருக்கும் இரண்டு பைகள் தரப்பட்டன.

"என்னை அழைத்தாயாமே இராஜேந்திரா?" அத்தை குந்தவைப் பிராட்டி உள்ளே வந்தார்.

"மிக முக்கியமான ஒரு நண்பருக்கு கடுமையான காயம் ஏற்பட்டு விட்டது. கை துண்டாகி விடுமோ என்ற பயம் இருக்கிறது. ஆனால் கை சரியானபடி பொருத்தி வைக்க மறுபடியும் தீவிர சிகிச்சை நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். குறிப்பாக போட்ட தையலை பிரித்து விட்டு மறுபடியும் தையல் போடச் போகிறார்கள். இது மிகப்பெரிய

வேலை. அவர்கள் சரியாக செய்ய வேண்டும். அப்படி நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

குந்தவையார் தலை அசைத்தார். ஆதுரச் சாலை விட்டு இராஜேந்திரர் வெளியே வரும்போது, வந்தியத்தேவரும் அருண்மொழிப் பட்டனும் வந்திறங்கினார்கள்.

ஆதுரச்சாலை பெரிய தோட்டத்திற்கு நடுவே இருந்தது. ஆதுரச் சாலையில் உள்ளே இருந்தவர்களை வீரர்கள் பட்டியல் திருத்திக் கொள்ள இராஜேந்திரரும், மற்றவர்களும் தோட்டத்தில் இறங்கினார்கள். அங்கே அவர்களுக்கு ஆசனங்கள் போடப்பட்டன.

குந்தவை தேவியார் மட்டும் உள்ளே வைத்தியர்களோடு வேகமாக பேசிக் கொண்டிருந்தார். புதிய மருந்துகளுக்கு ஆட்களை வெளியே அனுப்ப வேண்டுமென்று தெரிந்து உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

"வீரமாதேவி சொன்னது சரி. குந்தவையே தான் போட்டுக் கொண்டு அலம்பல் செய்து கொண்டிருக்கிறாள். உள்ளே இருக்கின்ற என் அத்தையை பார்க்கும்பொழுது என் தங்கையினுடைய அபத்தம் இன்னும் பெரிதாக தெரிகிறது. ஒரு சொல், கவனித்துக் கொள் என்று சொன்னதும் எவ்வளவு மும்முரமாக இறங்கி அந்த வேலையைத் தவிர எந்த நினைப்பும் இல்லாமல் இங்கே தம்மிடையே வந்து கலந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறைகூட இல்லாமல் அங்கே போராடிக் கொண்டிருக்கிறாள். அவளல்லவா பெண்மணி. மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று பிறப்பு எடுத்தவரல்லவா குந்தவை பிராட்டியார். இவரை என் அத்தையாக அடைந்தது எவ்வளவு பெரிய பாக்கியம். இது என் தங்கைக்கு தெரியவில்லை. இதற்கு தெரிவையாய், சோழ தேசத்தின் சாபமாய் வந்து சேர்ந்திருக்கிறதே என்ன செய்ய, விமலாதித்தனை தன் புருஷனை தன் கையாலேயே வெட்டிக் கொல்ல வேண்டுமாம். இவளைப் பற்றி கீழைச் சாளுக்கியத்தில் என்ன நினைப்பார்கள். சோழ தேசத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள். என்னுடைய அத்தையைப் பற்றி எவ்வளவு கேவலமாக பேசுவார்கள். என் மனைவிகளை எப்படி இழிவாக நடத்துவார்கள். சோழ தேசத்தில் இருக்கும் அத்தனை பெண்களும் பெண் குரங்குகளா என்று கேட்கிறார்களாம். எப்படி இருக்கிறது வந்தியத்தேவரே, 'ஆட கோத்தி' என்று அழைப்பார்களாம்"

"கீழைச் சாளுக்கிய மக்கள் அபிப்ராயத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அடுத்தது நாம் என்ன செய்ய வேண்டும்?"



வந்தியத்தேவர் இடைமறித்தார்.

"இப்பொழுது நாம் அனைவரும் கிருஷ்ணன் ராமனான பிரம்ம ராயரின் இல்லத்திற்கு போவோம். நம் வருகையை சொல்லி விடு. நான் குளிக்கவில்லை. பரவாயில்லையா?" என்று அருண்மொழியை நோக்கி பேச, அருண்மொழி வாய்விட்டு சிரித்தான்.

"நான் கூட குளிக்கவில்லை, இரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்ல மாமன்னர் வாய் விட்டு சிரித்தார்.

அந்த பிரச்சனை தீவிரத்திலும் அவர்கள் ஒருவரை ஒருவர் கேலி செய்து கொள்வதை இராஜேந்திர சோழரின் மனைவி பரவை நாச்சியார் வியப்போடு பார்த்தார்.

சோழ தேசத்து பெண்களைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். சோழ தேசத்தின் ஆண்கள் சிங்கங்களடா. அந்த சிங்கங்கள் ஊடுருவி உங்கள் ஊருக்குள் வரப்போகிறது. என்ன செய்ய முடியும், என்று மனதுக்குள் உரத்தக் குரலில் பேசினாள். இந்த படை எடுப்புக்கு தானும் வீரமாதேவியரோடு போனால் என்ன என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.



# 9

மாமன்னர் இராஜராஜ சோழனிடம் சேனாதிபதியாக இருந்த கிருஷ்ணன் ராமனுடைய மாளிகை மிகப்பெரியது. அந்த மாளிகைக்கு அடுத்த படியாகத் தான் பரமன் மழபாடியின் பெரிய மாளிகையும் இருக்கிறது. இந்த வீதியின் கடைசியில் பழுவேட்டரையர் கண்டன் மறவன், பெரிய தோப்போடு கூடிய மாளிகையில் குடியிருக்கிறார். அது கிட்டத்தட்ட கோட்டையைப் போலவே இருக்கும். இவர்கள் அத்தனை பேருக்கும் விவரம் சொல்லப்பட்டு சேனாதிபதி கிருஷ்ணன் ராமனிடம் வரச் சொல்லும்படியாய் உத்தரவு போய் விட்டது.

இராஜராஜரிடம் சேனாதிபதியாக இருந்த கிருஷ்ணன் ராமன் அந்த சேனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. அதே சமயம் அவரை ஒரு முக்கியமான நபராக இராஜேந்திரன் சேர்த்துக் கொள்ளவும் இல்லை.

"என்னிடம் ஏன் கலந்தாலோசிக்கவில்லை" என்று இரண்டு முறை வாய் திறந்து கிருஷ்ணன் ராமன் கேட்டபோது,

"உங்கள் ஓய்வை கலைப்பானேன் என்ற கவலைதான்" என்று பணிவாக இராஜேந்திரர் பதில் சொன்னார்.

"எனக்கு ஓய்வு யார் கொடுத்தது?"

"வயதானவர்களுக்கு தருகின்ற முதல் மரியாதையே அவருக்கு தகுந்த ஓய்வு கொடுக்க வேண்டும் என்பது தானே"

"அதாவது பதவியிலிருந்து வெளியே தள்ள வேண்டும் என்பதா"

"ஒரு நாளும் இல்லை. நீங்கள் சேனாதிபதி"

"ஆனால் ஒப்புக்கு சப்பாணி" வேகமாக கிருஷ்ணன் ராமன் பேசினார். அந்த பேச்சில் கோபம் இருந்தது.

"இல்லை. படை எடுத்து நடத்துவதற்கும், கடும் வெய்யிலிலும், காற்றிலும், குளிரிலும் போவதற்கும் உங்கள் உடம்பு பழக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது தளர்ந்திருக்கிறது. சேனாதிபதி என்ற பொறுப்பை கொடுத்துவிட்டு நீங்கள் வீட்டில் உட்காருங்கள் என்று சொல்வதைவிட, யார் படை எடுத்து போகிறார்களோ அவர்களுக்கு முக்கிய பொறுப்புகளை தருவது உற்சாகமாக இருக்கும் அல்லவா. அதுவும் தவிர, உங்களை கலந்து கொள்ளாமல் இங்கு என்ன நடக்கும். தஞ்சையின் நிர்வாகம் முழுவதும் உங்களுடையது தானே, வேண்டாமெனில் நானே கட்டி அழுகிறேன் இதை" என்று சொல்ல.

"மாமன்னரே, என்னை தஞ்சை நிர்வாகத்திற்கு தள்ளி விட்டீர்கள் என்பது புரிகிறது. இதற்கு மேலும் நான் உங்களோடு விவாதம் செய்ய விரும்பவில்லை. தஞ்சை நிர்வாகத்தை ஏற்று சீரும், செம்மையாகவும் செய்கிறேன். மன்னரே என்னைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் என்னைப் பற்றி நீங்கள் கவலைப்படுவதற்கு பதில் என் மகனைப் பற்றி கவலைப்படுங்கள். உங்களைப் பற்றி நான் கவலைப் படுவதற்கு பதில் என் மகன் கவலைப்படுவான். சோழ குலத்துக்கு சேவை செய்வதற்காகவே எங்கள் குலம் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. சோழ மன்னர்களுக்கு வலது கரமாக திகழ்கிறோம் என்பதில் எனக்கு மிகப்பெரிய கர்வம்.



அது என்னோடு முடியவில்லை, என் மகனோடு முடியவில்லை. என் பேரனும் தொடர்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" அவர் கம்பீரமாக பின் வாங்கினார்.

அடர்த்தியான தோப்புகளுக்கு நடுவே இருந்த அந்த மாளிகை பரபரத்தது. அருள்மொழி பட்டன் தந்தையோடு இல்லாமல் அரச குடைய அரண்மனைக்கு பக்கத்தில் ஒரு மேல் தளத்தில் மனைவியோடும், குழந்தைகளோடும் வசித்து வந்தான். விரைவாக தந்தையினுடைய மாளிகையை அடைந்து உள்ளே போய் தந்தைக்கு அருகே உட்கார்ந்து என்ன நடந்தது, எதற்காக வருகிறார்கள் என்பதை விரைவாகச் சொன்னான்.

எந்த பதிலும் சொல்லாது, தலையைக் கூட அசைக்காது அமைதியாக கிருஷ்ணன் ராமன் கேட்டுக் கொண்டார். எழுந்து நின்று பின்பக்கம் போனார். முகம் துடைத்துக் கொண்டார். கண்ணாடியில் முகம் பார்த்து திருமண் இட்டுக் கொண்டார். கோல் ஊன்றி எழுந்து வேலை ஆட்கள் துணையோடு வாசலுக்கு வந்தார்.

மாமன்னர் இராஜேந்திரர் வீரமாதேவியுடன் படியேறியதும், கைகூப்பி குனிந்து வரவேற்றார். அந்தணர்கள் மூவரால் ஒரு பொற்குடத்தில் மாவிலையும், தேங்காயும் வைத்து அவர் முன்பு நீட்டப்பட்டது.

"மாமன்னரே, உள்ளே வரவேண்டும். உள்ளே நீங்கள் நுழைவதால் எல்லாவித மங்களங்களும் நிகழ வேண்டும். மிகுந்த சந்தோஷத்தோடு இங்கே வருபவர்கள் உங்களை வரவேற்கிறார்கள். உங்கள் வருகை உங்களுக்கு வெற்றியைத் தரட்டும். எங்களுக்கு சந்தோஷத்தை தரட்டும்" என்ற ஸ்லோகத்தை அவர்கள் சொன்னார்கள்.

வெளி நடையை கடந்து, குறுகலான இடத்தை தாண்டி, பெரிய கூடத்திற்கு வந்ததும், கூடத்தில் கிழக்கு பக்கம் பார்த்து குடந்தை நகரத்து ஒப்பில்லாத அப்பன் திருவுருவம் வண்ணத்தில் வரையப்பட்டிருந்தது. அதற்கு மிகப்பெரிய விருட்சி மாலை போடப்பட்டிருந்தது. அதற்கு அருகே கிட்டத்தட்ட இரண்டு முழ கை அகலத்தில் அனந்த பத்மநாபஸ்வாமி பாம்பு படுக்கையின் மீது பள்ளி கொண்டிருந்தார். அவரது வலது கை சிவலிங்கத்தின் மீது இருந்தது. அந்த நிலையிலும் விஷ்ணு சிவபூஜை செய்கிறார் என்பதாக அந்த காட்சி தெரிந்தது.

காந்தளூர் சாலை நோக்கி இராஜராஜர் போய் அந்த படையெடுப்பை நடத்தி முடித்த பிறகு அனந்தபுரத்தில் வெகுநாளைக்கு

தங்கி, தினம் தினம் பத்மநாப ஸ்வாமி தரிசனத்தை செய்து வந்தார். பரசுராமருடைய க்ஷேத்திரம் அல்லவா என்று வியந்தார். அரசாக நடுங்க வைத்த அந்தணரல்லவா என்று கொண்டாடினார்.

"நீங்கள் தொடக்கூடாது" என்று ஒரு நம்பூதிரி முறுமுறுக்க போது "ஏய்" என அதட்டினார்.

"நீங்கள் வைஷ்ணவர் என்பதால் அனுமதிக்கிறோம்" என்று இன்னொரு அந்தணர் சொன்ன போது பிரம்பெடுத்து படீர் என்று வாசற்படியில் அடித்தார்.

"நாளை இராஜராஜர் வருவார், அவரும் உள்ளே நுழைந்து இந்த பிரதிமையை தொட்டு வணங்குவார், யாரும் ஒன்றும் செய்து விட முடியாது" என்று புல் பிடுங்குவது போல ஒரு சைகை செய்தார்.

சேர தேசத்து நம்பூதிரிகள் முகம் கவிழ்ந்து கொண்டார்கள்.

"நீங்கள் அகந்தையோடு ஆசார, அனுஷ்டானங்கள் செய்கிறீர்கள் என்று நான் தெரிவித்தால் போதும், இந்த கருவறைக்குள் பல சோழ வீரர்கள் நுழைவார்கள். பத்மநாப ஸ்வாமியை தொடுவார்கள். எனவே அமைதியாக இருப்பது நல்லது என்று எச்சரிக்க, அவர்கள் 'சரி' என்று தலையசைத்தார்கள்.

பலநூறு சோழ வீரர்கள் உள்ளே நுழையும் காட்சியை அவர்களால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

கிருஷ்ணன் ராமன் இல்லத்திற்குள் செம்புலி முதலில் உள்ளே நுழைந்தான். தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். உள்ளே சோதிக்க வேண்டும் என்று கிருஷ்ணன் ராமனிடம் அனுமதி கேட்டான். அவர் 'சரி' என்று தலையசைத்தார்.

விரைவாக கூடத்திற்கு போய் அனந்த பத்மநாப ஸ்வாமியின் முன்பு நீண்ட நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான். கை கூப்பினான். சிரித்தான். சேர தேசத்து பத்மநாபர் நினைவுக்கு வந்தார்.

"அவர் இடுப்பிலே இருக்கின்ற ஒட்டியாணத்தை கழற்றி கொடு" என்று உள்ளே இருக்கின்ற நம்பூதிரியைக் கேட்டான்.

"அதெல்லாம் முடியாது" என்று நம்பூதிரி சொல்ல, உருவிய வாளோடு கருவறையில் கால் வைத்தான். அவர் பதறினார்.

"என்ன வேண்டும் உனக்கு. நில்" என்று சொன்னார்.

"அந்த ஒட்டியாணத்தை எனக்குக் கொடு. எனக்கு வேண்டும். நான் என் வீட்டில் அதை வைத்து பூஜை செய்யப் போகிறேன்" என்று சொல்லி, ஒட்டியாணத்தை கத்தி முனையில் பறித்துக்



கொண்டு வந்தான்.

அந்த ஒட்டியாணம் வந்த பிறகு அவனுடைய வசதிகள் அதிகமாயின. சோழ தேசத்தில் அவனுடைய வீட்டில் இன்னும் அந்த ஒட்டியாணம் இருக்கிறது.

செம்புலி விரைவாக கிருஷ்ணன் ராமன் வீட்டின் பின்கட்டுக்கும், மேல் மாடிக்கும் போய் வந்தான்.

வந்தியத்தேவருடைய ஆட்கள் வீட்டைச் சுற்றி நின்று கொண்டார்கள். சோழப் படையின் மெய்க்காவல் படை அடுத்தபடியாக நுழைந்தது. செம்புலி அதன் தலைவருக்கு விஷயம் சொல்ல, அவர் கட்டளையிட அந்த வீட்டின் உட்புறமாக அவர்கள் நின்று கொண்டார்கள்.

மாமன்னர் வரப்போகிறார் என்ற செய்தி தெரிந்து அந்த வீதியில் உள்ள மக்கள் விரைவாக மாளிகையின் முன்பு கூடினார்கள். வந்தியத்தேவரின் மெய்க்காவல் படையால் தடுக்கப்பட்டார்கள்.

"மாமன்னரை பார்த்துவிட்டு போகிறோம் அய்யா. ஏன் குறுக்கே நிற்கிறீர்?" என்று மக்கள் சொன்னார்கள்.

"தாராளமாக பார்க்கலாம். குறுக்கே நிற்கவில்லை, ஆனால் அருகே போய் நின்று விடக்கூடாது என்பதற்காகத் தான் உங்களை எச்சரிக்கிறேன். இந்த இடம் விட்டு ஒரு அடி முன்னே வந்தால் கூட நான் உங்களை தாக்கக் கூடும்" என்று ஒரு வீரர் பலமாக எச்சரித்தார்.

பரமன் மழபாடியும், பழுவேட்டையார் கண்டன் மறவரும் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் படி ஏறியதும் அரண்மனை வளாகத்தில் குடியிருக்கின்ற அரையன் இராஜராஜன் தன்னுடைய சிறிய குதிரைப் படையுடன் மாளிகையின் வாசலுக்கு வந்திறங்கினார். குதிரைகளை காவல் வீரர்களிடம் ஒப்படைத்தார். மேலே போர்த்தி இருந்த போர்வையை விலக்கி இடுப்பில் கட்டிக் கொண்டு காலணிகளை வாசலில் வைத்து விட்டு கைகூப்பிய வண்ணம் மரியாதையாக உள்ளே நுழைந்தார்.

கிருஷ்ணன் ராமனுக்கு அருகே போய் குனிந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

"நன்றாகத் தெரியுமே, இதென்ன புதிய அறிமுகம்" என்று சொல்ல, நெடுஞ்சாண்கிடையாக காலில் விழுந்து வணங்கினார்.

"தீர்க்காயுஷ்மான் பவ. ஜெயதேவி உன் முகத்திலே குடியிருக்கிறாள். சாக்த உபாசகம் செய்யும் எவரும் உன் நெற்றியைப் பார்த்து, நீ ஜெயிக்கவே பிறந்தவன் என்று சொல்லி விடுவார்கள்"

"ஆனால் நீங்கள் வைணவர் அல்லவா"

"ஆமாம். பிறப்பால் வைணவன். வேலை செய்வது சைவர்களிடத்தில், ஆனால் உள்ளுக்குள் சாக்த உபாசகன்"

"எதனால் சாக்த உபாசகத்தை நீங்கள் மேற்கொண்டீர்கள்"

"செய் அல்லது செத்துமடி என்று சொல்வது சாக்த உபாசனை. அது எளிதல்ல. கடினமான பயிற்சிகளை உடையது. எந்நேரமும் ஜபத்தில் நினைத்திருக்க வேண்டும் என்று சொல்வது, மனைவியைப் புணரும் போது கூட ஜபம் செய்ய வேண்டும் என்று சாக்த மதம் உபதேசிக்கிறது. ஜபத்தினுடைய வலிமையால் தான் மனம் ஒருமைப்படும். மனம் ஒருமைப்பட்ட ஜபத்திற்கு பிரயோகம் ஏற்படும். ஜபத்திற்கு பிரயோகம் ஏற்பட்டால் வெற்றி என்பது வெகு நிச்சயம். அந்த வெற்றி உலகாய வெற்றியாகவும் இருக்கலாம். கடவுளை வெற்றி கொள்வதாகவும் இருக்கலாம்"

"கடவுளை வெற்றி கொள்வதா, முடியுமா?"

"உண்மையான பக்தன் வந்து சொடுக்கினால் கடவுள் வந்து நிற்க வேண்டியது தான். ஆனால் சொடுக்கத் தெரிந்திருக்க வேண்டுமே. அதை சாக்தம் கற்றுக் கொடுக்கும்"

"எனது சிற்றறிவுக்கு இது பெரிய விஷயம்"

"இல்லை. உமக்கும் ஒருநாள் புரியும். அதனால் தான் இப்போது இந்த பேச்சை எடுத்தேன், போய் அமர்ந்து கொள்ளும்.

"அடேய், குடிக்க தாகசாந்திக்கு ஏதாவது கொடு" என்று உத்தரவிட்டார்.

அவருக்கு வலப்புறத்தில் மன்னருக்கு உண்டான நாற்காலி இருக்க, இடப்புறத்தில் அரையன் ராஜராஜன் அமர்ந்து கொண்டார். அருண்மொழிக்கும், அரையன் இராஜராஜனுக்கும் ஒரே வயது. ஆனாலும் எல்லா படைகளுக்கும் முதன்மை ஏற்கின்ற பொறுப்பை அரையன் இராஜராஜன் தன்னிடம் வைத்திருந்தார்.

"என்னோடு எப்போதும் இருப்பதற்கு அருண்மொழி. எனக்கு பதில் செயலாற்றுவதற்கு அரையன், நிதி நிர்வாகத்திற்கு வந்தியத் தேவர். ஊர் நிர்வாகத்திற்கு மிலாடுடையார். போர் பயிற்சிகளுக்கு பரமன் மழபாடி. அரசியல் சாசனங்களுக்கும் சட்டங்களுக்கும், அடுத்தபடியான போர் திட்டங்களுக்கும், முதன் மந்திரியும், சேனாதிபதியுமான கிருஷ்ணன் ராமன்"

நடுசபையில் தெள்ளத் தெளிவாக அவரவர்க்கு உண்டான போக்யதையை மாமன்னர் இராஜேந்திரர் விவரித்திருக்கிறார்.



தஞ்சையை சுற்றியுள்ள பல கிராமங்களில் பரமன் மழபாடிக்கு நிலம் இருந்தது. கணக்கில்லாத வகையில் மாடுகளும், எருதுகளும், ஆடுகளும் இருந்தன. அவர் தனித்த படையை தன்னிடம் கொண்டிருந்தார்.

சோழ தேசத்தின் அத்தனை படைகளும் அரையன் இராஜராஜனின் விரல் அசைவுக்கு கட்டுப்பட்டன. வந்தியத் தேவரிடம் பொக்கிஷ சாவி கொடுக்கப்பட்டு, மற்ற தேசத்திலிருந்து கொள்ளையடித்துக் கொண்டு வரப்பட்ட அத்தனை பொன், பொருள்களும் வகைப்படுத்தப்பட்டு, கணக்கிடப்பட்டு மன்னரிடம் தரப்பட்டது. பெரிய பொற்பாத்திரங்களை உருக்கி காசுகளாக மாற்றுகின்ற அக்கச் சாலையும் வந்தியத் தேவரிடமிருந்தது. மதிப்பிடவே முடியாத மிக அற்புதமான நவரத்தினங்களெல்லாம் அந்த பொக்கிஷத்தில் இருக்கிறது என்று கேள்வி. வந்தியத்தேவரின் வாசமும் அரண்மனை ஒட்டியே இராஜேந்திருக்கு அடுத்தபடியாகவே இருந்தது.

பூமியிலிருந்து இரண்டு ஆள் உயரத்து ஒரு நடைபாதை. அது இராஜேந்திருடைய அரண்மனையையும், வந்தியத் தேவரின் அரண்மனையையும் இணைத்தது. அவ்வப்போது குந்தவையார் இடம் பெயர்ந்து இராஜேந்திரனை சந்தித்து விட்டு போவது வழக்கம்.

படைவீரர்கள் இராஜேந்திரர் கோபத்திற்கு முன்பு பிரம்படிபட்டு தவிக்கிறபொழுது வந்தியத்தேவர் முன்னேறி மன்னர் கையிலிருந்து பிரம்பை பிடுங்கி போடுவதற்கு உரிமை உள்ளவர்.

இவருக்கெல்லாம் அடுத்தபடியாகத் தான் அருண்மொழி சேனாபதியாக இருக்கிறான். அவனிடமும் பணம் காசு ஒரு குறிப்பிட்ட அளவு இருந்தது. அவன் சம்பாதித்த சொத்து மட்டுமல்லாமல், கொள்ளையடித்து அவன் பங்கீடுக்கு எடுத்து வந்தது மட்டுமில்லாமல் தந்தையாருடைய சொத்தின் பெரும் பகுதியும் அவனை வந்து சேர்ந்தன. தஞ்சையிலுள்ள பல மாளிகைகள் அவனுக்கு சொந்தமானவை. அதில் அரசாங்க அதிகாரிகள் குடியிருந்தார்கள். அருண்மொழிக்கு வாடகை செலுத்தினார்கள். அந்த வாடகைக் காசிலேயே ஒருவர் பலகாலம் சுகமாக இருக்கலாம். அதனால் அருண்மொழிக்கு 'மாராயன்' என்ற சிறப்புப் பட்டமும் இருந்தது. பெருந்தனக்காரன், பெரிய பணக்காரன் என்ற அர்த்தம் அந்த வார்த்தைக்கு உண்டு.

அத்தனை பேரும் உள்ளே நுழைய மாமன்னர் கடைசியாக வந்திறங்கினார். பொதுமக்களுக்கு அருகே போய் நின்று ஒவ்வொரு முகமாகப் பார்த்தார். பெயர் கேட்டார், குசலம் விசாரித்தார். சோழ

அதிகாரிகளைப் போல மாமன்னர் போவதே இல்லை. பொதுமக்களை புறக்கணிப்பதே இல்லை.

"எந்த தேசத்து மறவனடா நீ" ஒரு சிறுபிள்ளையை தூக்கி அருகிலுள்ள மேடையில் நிறுத்தினார். அவன் உடனே கால் அகட்டி கைகளை கட்டிக் கொண்டான்.

"திருவிடைமருதூர் மறவனய்யா, வல்லவரையர் வந்தியத் தேவருடைய படையில் என் தகப்பனார் நல்ல பதவியில் இருக்கிறார். உங்களை பார்க்க வேண்டுமென்ற ஆவல். யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு வந்து விட்டேன்" என்று சொன்னான்.

கை கட்டி, கால் அகட்டி நிற்பது மறவர் மரபு, கால் அகட்டுதல் தயார் நிலையைச் சொல்கிறது. கை கட்டுதல் பணிவை குறிக்கிறது.

"என்ன கற்றுக் கொள்கிறாய்?"

"களரி"

"இடங்கையா, வலங்கையா?"

"வலங்கை"

"என்ன ஆயுதம் பழகுகிறாய்?"

"கேடயமும், குறுவாளும்"

"இதைத் தவிர?"

"மகாராணி வீரமாதேவியார் போல ஈட்டி எறிவதில் எனக்கு உற்சாகம் உண்டு. ஈட்டியை தொலைவே எறிகின்ற அளவுக்கு எனக்கு இன்னும் வலுவு வரவில்லை"

"வந்துவிடும். வந்துவிடும். சிறுபிள்ளை தானே. வாலிபனாகும் போது வரும்" என்று உற்சாகமூட்டினார்.

அவன் குனிந்து வணங்கினான். மேடையை விட்டு கீழே குதித்து பெரிய சிரிப்புடன் மக்கள் கூட்டத்திற்கு வந்தான்.

அவன் ஆயுசுக்கு இராஜேந்திரர் சொன்ன அந்த இரண்டு வார்த்தைகள் போதும். அந்த நம்பிக்கை வைத்துக் கொண்டு அவன் மிகப்பெரிய வீரனாக வருவான்.

"கிழவி, அந்தணர் மாளிகையில் உனக்கு என்ன வேலை" இன்னொரு கிழவியை நோக்கி பிரம்பால் தோள் தொட்டார். பிரம்பு எடுத்து அவள் கன்னத்தில் வைத்துக் கொண்டாள். தலையில் வைத்துக் கொண்டாள்.

"அந்தணர் வீட்டுக்கு நான் போக மாட்டேன் ஐயா"



"பிறகு இது என்ன? கிருஷ்ணன் ராமனுடைய இடம் அல்லவா"

"அவர் அந்தணர் இல்லையே"

"யார் சொன்னது?"

"அந்தணர் போல நடிக்கிறார். உண்மையில் அவர் சரியான மறவர். இராஜராஜ சோழர் காலத்தில் இயனுடைய குதிரை தான் முன்னும், பின்னும் அலைந்தபடி வரும். இராஜராஜர் குதிரை நேரே கோடு கிழித்தது போல் வரும். குதிரையில் சவாரி செய்வதை பார்க்கும் பொழுது அவரை அந்தணர் என்றே சொல்ல முடியாது. அவருடைய கத்தி மிகப் பட்டையானது. பலபேரை வெட்டி இருக்கிறது. ஆயிரம் பேருக்கு மேற்பட்டு கொலை செய்தவரை அந்தணர் என்று எப்படி அழைப்பது"

"அதனால் உள்ளே வந்து விட்டாயாக்கும்"

"இல்லை. இல்லை. உங்களை பார்க்க வந்தேன்"

"இன்னும் பயிற்சி போதவில்லையம்மா. இராஜராஜ சோழர் போல நான் இன்னும் தயார் ஆகவில்லை" வேண்டுமென்றே அடக்கமாக இராஜேந்திரர் நடித்தார்.

"நன்றாக இருக்கிறதே இந்தக் கதை. நாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பது எங்களுக்கும் தெரியும். நீங்கள் பதினாறு அல்ல. அறுபது அடி தாண்டப் போகிறீர்கள். மொத்த பாரத கண்டத்தையும் தஞ்சைக்கு கீழே கொண்டு வந்து அடிபணிய வைக்கப் போகிறீர்கள்"

"யார் சொன்னது?"

"எங்கள் ஊர் பூசாரிகள் சொல்கிறார்கள். ஜோசியர்கள் சொல்கிறார்கள். பாண்டியர்களுக்கு போதாத காலம். சோழர்களுக்கு உன்னதமான காலம் என்று சொல்கிறார்கள்"

"வேறு என்ன விசேஷங்கள் சொல்கிறார்கள்?"

"நான் அதிகம் கேட்டுக் கொள்ளவில்லை"

"பரவாயில்லைச் சொல்"

"வேறொரு குறத்தி மட்டும் 'கிழக்கே தளர்ந்திருக்கிறது. அதை மட்டும் உன் மன்னனிடம் சொல்' என்று சொன்னாள். நீங்கள் கேட்டீர்கள் சொல்லி விட்டேன்"

"கிழக்கே தளர்ந்திருக்கிறதா. என்ன தளர்ந்திருக்கிறது"

"கட்டுக்காவல் தளர்ந்திருக்கிறது என்கிறாள்"

"சரி, சரி செய்து விடலாம்" அவர் வலது கையை நீட்ட மூன்று கழஞ்சுகள் கொடுக்கப்பட்டன. அந்த கழஞ்சுகள் எடுத்து அந்த கிழவியின் கையில் வைத்தார். முகம் தடவினார். மெல்ல நெற்றியில் முத்தமிட்டார். நடந்து கிருஷ்ணன் ராமன் இல்லத்தின் படியேறினார்.

உள்ளே இருந்து கோஷமன்றியபடி வெளியே வந்து கிருஷ்ணன் ராமன் கை கூப்ப, சிறிதும் தயக்கம் இல்லாமல் நீண்ட நெடுஞ்சாண் கிடையாக கிருஷ்ணன் ராமன் காலில் விழுந்து வணங்கினார்.

"இராஜேந்திரா, போதும். மறுபடியும் இதைச் செய்யாதே நீ மன்னன். யார் காலிலும் விழக்கூடாது. உன் காலில் நான் விழலாம் இராஜேந்திரா. என் காலில் நீ விழ வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் அந்த கிழவி சொன்னது போல நான் அந்தணனும் இல்லை. மறவனும் இல்லை"

"நாம் இரகசியம் பேசினோம் என்று நினைத்துக் கொண்டிருந்தோமே"

"என் வீட்டிற்கு நீ வரும் போது, என் அகத்தில் நீ என்ன என்ன செய்கிறாய் என்று எனக்கு தெரியாமல் இருக்கலாமா, தெரிந்து கொள்ள ஆட்களை வைத்திருக்கிறேன்"

"மன்னனையே வேவு பார்க்க கிருஷ்ணன் ராமனால் மட்டும் தான் முடியும்"

"உன் தந்தையையே வேவு பார்த்தவன்"

"ஆனால் என் பெரியப்பா ஆதித்த கரிகாலனை கோட்டை விட்டு விட்டீர்கள். ரவிதாஸனும், பரமேஸ்வரனும் குத்தி அவரை கொல்லும்படி பரிதாபமாக இறக்கும்படி வைத்து விட்டீர்கள்"

"அதற்கு காரணம் நானல்ல, உன் பெரிய தந்தை, யார் பேச்சையும், எதன் பொருட்டும் கேட்பதில்லை. நில் என்றால் ஓடுவான். ஓடு என்றால் நிற்பான். அப்படி செய்வது அதான் வீரமென்று அவனுக்கு யாரோ கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அது கிரகக் கோளாறு. அதுவும் தவிர சிறு வயதிலேயே களிப்பாக்கை மெல்லுகின்ற குணம் வந்து விட்டது. சேர தேசத்து பாக்கை அதிகம் சாப்பிடக்கூடாது"

"சாப்பிட்டால் என்ன ஆகும்?"

"பாக்குப் போலவே ஜாதிக்காய் என்று ஒரு காய் இருக்கிறது. அந்த ஜாதிக்காயை வாயில் அதக்கிக் கொள்ள அது மூளையில் பரபரப்பை ஏற்றும். மூளை தன்னுடைய வழக்கத்திற்கு மாறாக வேலை செய்யும், அது மனிதரை பரபரப்பாக வைக்கும். ஆதித்த



கரிகாலன் அப்படி பரபரப்பாக மாறி விட்டார். அந்த பழக்கத்திலிருந்து அவர் மீண்டு விட்டாலும் படபடப்பிலிருந்து அவர் மீளவேயில்லை. அவருடைய முடிவுக்கு அவரே காரணமானார். வேறு எவரும் காரணமல்ல"

"அப்போது என் தந்தை இராஜராஜர் படை எடுத்து காந்தளூரை அழித்தது"

"ஒரு சாக்கு, காந்தளூரின் முதுகை உடைக்க வேண்டும் என்பது இராஜராஜரின் நெடுநாளைய கனவு, பதினான்கு வருடங்கள் அவர் சோழ தேசத்தை சுற்றி சுற்றி வந்த போது சேர தேசத்திலிருந்து மலையாளிகள் கும்பல் கும்பலாக சோழ தேசத்தில் குடியிருப்பதைப் பார்த்தார். சோழ தேசம் முழுவதும் பரவியது மட்டும் அல்லாமல் சிதம்பரத்தில், உடையார்குடியில், நாகைக்கு அருகே இருக்கின்ற ஊரில், பூம்புகாரில் என்று பல இடங்களில் அவர்கள் குடியேற்றப்படுவதைப் பார்த்தார். திட்டமிட்டு உள்ளே நுழைகிறார்கள் என்று புலம்புவார்.

இதை பாஸ்கர இரவிவர்மன் செய்யவில்லை. சேர தேசத்தின் மன்னனின் காரியமில்லை அது. காந்தளூர்சாலை மட்டும் தான் ஒரு முக்கியமான புள்ளியாக மாற வேண்டுமென்று பேராசைப்பட்டு தன் மூலம் சோழ தேசத்தை கபளீகரம் செய்து விடலாம் என்று கற்பனை யோடு நுழைந்த செயல். சேர தேசத்து நம்பூதிரிகளின் அந்த கர்வம்.

அதைத்தான் குறி வைத்து தாக்கினார். ஆதித்த கரிகாலனின் இறப்பு ஆதித்த கரிகாலனாலேயே ஏற்பட்டது. சேர தேசம் சிதறிப் போனதற்கும் அந்த காந்தளூர் வலிய சாலை தான் காரணம். அதை நிர்வகித்து வந்த நம்பூதிரிகள் காரணம். வாள் எடுத்த அந்த அந்தணர் குழு காரணம்.

இப்பொழுது அங்கே என்ன நடக்கிறது தெரியுமா, வாள் எடுத்த அந்தணனை ஜாதியிலிருந்து விலக்கி விட்டார்கள். நமக்கு தேவை இல்லாத தொழிலை, நமக்கு தேவை இல்லாத நேரத்திலே செய்தவர்கள் இவர்கள் என்று சேர தேசத்தின் பாழ்பட்ட நிலைக்கு இவர்களே காரணம் என்று ஒதுக்கி வைத்து விட்டார்கள். ஒதுக்கி வைத்த பிறகும் அவர்கள் ஆட்டம் அடங்கவில்லை. நீ போய் தான் முற்றிலுமாக அடக்கினாய். இப்பொழுது அந்தணை நம்பூதிரிகளும் மேலைச் சாளுக்கியத்தில் இருப்பதாக கேள்வி"

"இருக்கட்டும். எங்கிருந்தாலும் உதை வாங்கப் போவது நிச்சயம். உங்களுக்கு ஒரு தொந்தரவு தரப் போகிறேன். இந்த இடத்தில் அரச சபையை கூட்டப் போகிறேன்"

"இது உன்னுடைய இடம், எப்படி வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் நிகழ்த்திக் கொள்ளலாம்"

"என் அரண்மனையை விட்டு இங்கு வந்து விட்டீர். நான் தெரிந்து கொள்ளலாமா" பணிவாகக் கேட்டார்.

"என் அரண்மனை வேவு பார்க்கப்படுகிறதோ என்ற சந்தேகம் இருக்கிறது. மேலைச் சாளுக்கியம் படை எடுப்புக்கு தயாராக இருக்கிற பொழுது வெகு நிச்சயமாக ஆட்களை ஊடுருவி அரண்மனைக்குள் அனுப்பி இருப்பார்கள். அரண்மனையில் நடமாட்டம் அதிகமாகி விட்டது. குந்தவையார் ஒரு பக்கம், மாதேவடியார் ஒரு பக்கம், சிற்றன்னைகள் ஒரு பக்கம் என்று குடியிருக்க அவர்களை தேடி வரவும், அவர்களுக்கு வைத்தியம் செய்யவும் ஆட்கள் வந்து புழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அரண்மனை அவ்வளவு இரகசியமான இடமாக இல்லை. மிகத் திறந்தவெளியாக இருக்கிறது"

"அதுவும் ஒரு காரணமோ"

"என்ன அதுவும் ஒரு காரணமோ என்றால்"

"நீர் இடம் பெயரப் போவதாக பேசிக் கொள்கிறார்கள். ஜெயங்கொண்டத்துக்கு நகரப் போவதாக சொல்கிறார்கள். அதுவும் காரணமோ"

"ஆமாம். அதுவும் ஒரு காரணம். யாரை வெளியேறச் சொல்ல முடியும். யாரை ஆட்களை உள்ளே அனுப்பாதே என்று சொல்ல முடியும். எனவே இந்த இடத்தை இராஜராஜருடைய மனைவியருக்கு கொடுத்துவிட்டு, நல்ல காவல்களை ஏற்படுத்திவிட்டு நான் இன்னும் வடக்கு நோக்கி நகரலாம் என்றிருக்கிறேன்"

"இது மட்டும் தான் காரணமா?"

"இன்னொன்றும் இருக்கிறது நுயன்"

"சொல், என்ன இருக்கிறது?"

"இப்பொழுது சோழ தேசத்துக்கு ஆபத்து வடக்கேயிருந்து தான் இருக்கிறது. பாண்டியர்களின் முழங்காலை உடைத்து விட்டேன். சேரர்களை சர்வநாசம் செய்து விட்டேன். சிங்களவர்கள் எந்த காரணம் கொண்டும் படை எடுத்து வர மாட்டார்கள். வடக்கே கீழைச் சாளுக்கியத்தை மேலைச் சாளுக்கியம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. கீழைச் சாளுக்கியம் இன்னும் நம்மை நம்பிக் கொண்டிருக்கிறது.



கீழைச் சாளுக்கியத்தை பாதுகாக்க வேண்டுமென்றால் நான் இன்னும் சற்று ஒருநாள் தொலைவில் அவர்களுக்கு அருகே இருக்க வேண்டும்.

குதிரை ஏறினால் எசாளம், எண்ணாயிரம் வழியாக நான் திருவொற்றியூரை அடைந்து கீழைச் சாளுக்கியத்திற்கு போய் விட முடியும்.

பெரும் கோட்டையும், உள்ளுக்குள் நகரமுமாக கட்டுகிறேன். மிகச் சிறந்த கோவில் ஒன்றை நிர்மாணிக்க எண்ணம் கொண்டிருக்கிறேன். நுயன் வந்து அங்கு குடியேற வேண்டும்"

"ஆஹா, அவசியம் வருகிறேன்"

சொன்ன வேகத்திலேயே அது மிகப்பெரிய மறுதலிப்பு என்று இராஜேந்திரருக்கு புரிந்தது.

அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். அவரவர் ஆசனத்தில் அமர்ந்தார்கள். வெல்லம் கலந்த கடலைப் பருப்பு பாயசம் கொடுக்கப்பட்டது. மன்னர் எதிரே சேர தேசத்து முந்திரி பருப்புகள் வைக்கப்பட்டன. மற்றவர்களிடம் நீட்டிய போது வேண்டாம் என்று மறுதலித்து விட்டார்கள்.

இன்னும் கொஞ்சம் கடலைப் பருப்பு பாயசம் வேண்டும் என்று வந்தியத்தேவர் கேட்டு வாங்கி உண்டார்.

அரசருடைய தங்கை குந்தவையின் நிலைமை அங்கு உள்ளவர்களுக்கு அடிக்குரலில் சொல்லப்பட்டது. எல்லோரும் காது கொடுத்து கவனமாக கேட்டுக் கொண்டார்கள்.

"விமலாதித்தனுடைய நிலைமை என்ன, எண்ணம் என்ன?" பரமன் மழபாடி அவசரமாகக் கேட்டார்.

"தெரியவில்லை"

"இந்நேரம் தெரிந்திருக்க வேண்டுமே"

"ஆதரவாகவும் இல்லை எதிர்ப்பாகவும் இல்லை"

"அப்படித்தான் இருக்க முடியும்"

"நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்"

"நீங்கள் சொல்லுங்கள். என்ன செய்யலாம் என்று" எகிறிக்

"நீங்கள் சொல்லுங்கள். கங்க தேசத்திலோ, இராட்டிரகூடத்திலோ கொண்டிருக்கிறார்கள். கங்க தேசத்திலோ, இராட்டிரகூடத்திலோ

"உங்களுடைய எண்ணம் என்ன ஐயன்" என்று பணிவாக இராஜேந்திரர் கிருஷ்ணன் ராமனை நோக்கிக் கேட்டார்.

"படையெடுப்பு எளிது. நம் படை அங்கு போய் சேருவதற்கு முன்பு கைது செய்தவர்களுக்கு ஏதேனும் ஆபத்து வந்து விட்டால் அவர்களை வெட்டி எறிந்து விட்டால் என்ன செய்வது. எனவே உடனடி படையெடுப்பு என்பதை நான் ஆதரிக்கவில்லை"

"அரையன் இராஜராஜன் நீ என்ன சொல்கிறாய்?"

"நான் ஒரு நூறு வீரர்களோடுப் போய் இரவோடு இரவாக அவர்களுடைய மாளிகையைத் தாக்கி அவர்கள் இரண்டு பேரையும் எடுத்துக் கொண்டு நான் இந்தப் பக்கம் வந்து விடுகிறேன்"

"வருவதற்கு குந்தவை விரும்பவில்லை எனில்"

"கயிறு கட்டி இழுத்து வர வேண்டியது தான்"

"நல்ல யோசனை, ஆனால் நீர் போகக்கூடாது"

"வேறு யார் போக வேண்டும்?"

"அதையும் யோசிக்க வேண்டும்" அடிக்குரலில் மன்னர் பேசினார்.

"இன்னொரு பிரச்சனையும் உங்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கிறது மன்னா" கிருஷ்ணன் ராமன் சொல்ல, என்ன என்பது போல் பார்த்தார்.

"உங்களிடம் நேரே வர பயந்து, என்னிடம் வந்திருக்கிறார்கள்"

"யார்"

"சோழ தேசத்து வணிகர்கள். நானா தேசிகள்"

"என்னவாம்?"

"ஸ்ரீ விஜயத்தில் அவர்களை கடுமையாகத் தாக்கி பிரமோசமாக தண்டித்து இருக்கிறார்கள்"

"யார்?"

"ஸ்ரீ விஜயத்து படைகள்"

"எதனால்?"

"சோழ தேசம் எங்களுக்கு அடங்கியது. எனவே நாங்கள் இல்லாது சீன தேசத்தினர் சோழ தேசத்தினரோடு வியாபாரம் செய்யக்கூடாது. நடுவே எங்களைத் தாண்டித்தான் போக வேண்டும். எங்கள் மூலமாகத் தான் போக வேண்டும் என்று சொல்ல, அவர்கள்



முறைத்திருக்கிறார்கள்"

"பிறகு"

"சோழ தேசத்தினர் சரி என்று சொல்லி இருக்கிறார்கள்"

"அடடே"

"ஆக, சீன தேசத்து வணிகர்களை பயமுறுத்த, அந்த வணிகத்தை நடத்தி விட்டு சோழ மரக்கலன்கள் கிளம்பியவுடன் அதை சுற்றிக் கொண்டு தீக்கிரையாக்கி அங்குள்ளவர்களை அடித்து 'இனிமேல் இந்த பக்கம் வராதே. நாங்கள் சொல்கிற வரைக்கும் இங்கு வரக்கூடாது. அதுதான் சீனனுக்கு தண்டனை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதே சமயம் சோழர்களை கடுமையாக தண்டித்திருக்கிறார்கள். நமது நானாதேசிகளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை"

"என்ன விதமான தண்டனை?"

"கொஞ்சம் கொடுமையாக இருக்கிறது"

"சொல்லுங்கள்"

"இரண்டு உள்ளங்கைகளையும் கத்தியால் செதுக்கி ஒன்றாக வைத்து கைகூப்பும்படி கட்டி விடுகிறார்கள். இருபது நாள் இருபத்தைந்து நாள் அப்படியே கட்டிப் போடப்படுகிறது. பிறகு கட்டைப் பிரித்துப் பார்த்தால் கைகளை விலக்க முடியவில்லை. இரண்டு தோலும் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு வளர்ந்து விடுகிறது. அப்படி வளர்ந்து விடும்படியான மருந்தும் அவர்கள் அதில் தடவி விடுகிறார்கள்.

ஆக ஆயுதம் எடுக்க முடியாமல், படகு செலுத்த முடியாமல் மூட்டை தூக்க முடியாமல், மூட்டை இறக்க முடியாமல் அந்த வணிகர்கள் கூப்பிய கையாகவே இருக்கிறார்கள்"

"எங்கே அந்த வணிகர்கள்?"

"என் வீட்டு வாசலில் இருக்கிறார்கள்"

"ஏன் என்னை நேரே வந்து சந்திக்கவில்லை. எதற்கு உங்கள் மூலமாக வருகிறார்கள். நானாதேசிகளுக்கு என்னை என்ன பழக்கமில்லையா"

"பழக்கம் உண்டு மாமன்னா. ஆனால் நாங்கள் வரும் போதெல்லாம் நீங்கள் வேறு ஏதேனும் ஒரு தேசத்தில் மும்முரமான படை எடுப்பில் இருக்கிறீர்கள். அதனால் தான் நான் இங்குள்ளவர்களிடம் தெரிவித்தேன்"

"கூப்பிய படியே இருக்கிறதா?"

"ஆமாம்"

"எங்கே, துணியை விலக்கு" ஒரு வணிகரின் துணியை விலக்க அவர் கூப்பிய கையோடு நின்றிருந்தார்.

ஊர் சபை எழுந்து நின்று அவரைப் பார்த்தது. வந்தியத்தேவர் அருகே போய் நின்றார். மெல்ல அவர் கையை தொட்டார்.

"நீங்கள் தொட்டாலும் வலிக்கிறது வந்தியத்தேவரே" என்று அவர் முனகினார்.

மன்னர் அந்தக் கையை பிரிக்க முயற்சிக்க, அலறல் இன்னும் பெரிதாக இருந்தது. மன்னர் அவனை விட்டு விட்டார்.

"இதைத் தவிர இன்னொரு கொடுமையும் நடக்கிறது"

"என்ன அது?"

"இரண்டு கால் கட்டை விரல்களையும் வெட்டி விடுகிறார்கள்"

"அப்படி வெட்டி விட்டால்?"

"நிற்க முடியாது. நடக்க முடியாது. ஓட முடியாது. கம்பு ஊன்றி நின்ற ஒருவனை அழைத்து வந்தார்கள். அவரது இரண்டு கால் கட்டை விரல்களும் வெட்டப்பட்டு இருந்தன.

"அருண்மொழி" மாமன்னர் கர்ஜித்தார். அவர் முகம் சிவந்து காணப்பட்டது.

"நாகை விகாரத்தில் ஸ்ரீ விஜயத்து தூதுவர் இருக்கிறாரல்லவா?"

"ஆமாம்"

"நமக்கு ஏதோ பரிசுப் பொருளை கொண்டு வந்தாரல்லவா"

"ஆமாம்"

"அந்தப் பரிசுப் பொருளை சிதற அடித்து விட்டு அவரை கைது செய்து கொண்டு வா, தஞ்சை சிறையில் அடைத்து விடு. இதை யாரேனும் தடுக்க முயன்றால்..."

"புத்த பிட்சுக்கள் முயலுவார்கள்"

"பிரம்பால் அடி, கூசாது அடி, முன்பக்கம் தூதுவர், பின்பக்கம் கொள்ளையா, எந்த ஊர் நாகரீகம் இது. சோழன் இளிச்சவாயனா? அவனுக்கு அடங்கியவனா. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் ஸ்ரீ விஜயத்தில். ஸ்ரீ விஜயத்து மன்னனுக்கு இங்கு உள்ள புத்த பிட்சுகள் உளவு பார்க்க வந்திருக்கிறார்களா, மொத்த விகாரையும்



மட்டமாகி விடும் என்று சொல்லுங்கள்"

"அப்படி எல்லோரையும் சந்தேகப்பட முடியாது"

"இல்லை. நான் எல்லோரையும் சந்தேகப்படுவேன். எப்போதும், எல்லோரையும் சந்தேகப்படுவேன். அது என் இயல்பு. புத்த பிட்சு என்பதால் அவனை ஒரு காலமும் சோழ தேசத்தின் நண்பன் என்று …க மாட்டேன். அவனவன் அவன் தேசத்திற்கு உண்மையாக இருக்கிறான். நாம் தான் நம் தேசத்திற்கு உண்மையாக இல்லை"

"என்ன சொல்கிறீர்கள் மாமன்னரே" கிருஷ்ணன் ராமன் இரண்டு கையும் விரித்துப் பேசினார்.

"என் தங்கை இல்லையே. என் சோழ தேசத்துக்கு இல்லையே. சோழ தேசம் சரியாக இருக்க வேண்டுமென்றால் இப்படிப்பட்ட ஒரு அபத்தமான முயற்சியை செய்வாளா. சோழ தேசத்தை நாசமாக்க வேறு யாரும் வர வேண்டாம். சோழ தேசத்தில் உள்ளவர்கள் போதும்" மாமன்னர் இராஜேந்திரர் கிட்டத்தட்ட பிளிறினார்.

சோழ தேசத்து வணிகர்களுடைய பரிதாபமான நிலை அவருக்கு கோபமூட்டியது. அவரை கையாலாகாதவன் என்று சொல்வது போல் இருந்தது.

"அருண்மொழி, உன்னிடம் வந்து இவர்கள் சொன்னார்களாமே நீ என்ன நடவடிக்கை எடுத்தாய்"

"அந்த மரக்கலனிடமிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்கள் ஸ்ரீ விஜய மரக்கலனில் ஏற்றப்பட்டு இங்கு வந்து சேர்ந்தது. அதாவது தாங்களே நேரடியாக விற்பது போல ஸ்ரீ விஜயம் மாலுமிகள் நடந்து கொண்டார்கள். ஆனால் இந்த செய்தி இவர்கள் மூலம் வந்துவிட நான் உள்ளேயே சோதித்தேன். உள்ளே வரக்கூடாது என்று தடுத்தார்கள். இரண்டு பேரை வெட்டிப் போட்டேன் பயந்து பின் வாங்கினான். அதில் எதிரிப் பேசிய மாலுமிகளை கைது செய்தேன். அந்த மரக்கலம் இந்த இடத்தை விட்டு போகக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறேன். அதில் இருக்கின்ற அத்தனை பாய் மரங்களையும் கழற்றி தரைக்கு கொண்டு வந்து விட்டேன்.

அதிலுள்ள பொருள்கள் அத்தனையும் கரையில் இறக்கி ஒரு பெரிய கிடங்கியில் இறக்கி விட்டேன். புத்த பிட்சுக்கள் இதற்கே மறுப்பு தெரிவித்தார்கள். தலையிட வேண்டாம். இது அரசியல் என்று அவர்களை தடுத்து விட்டேன்"

"அந்த தூதுவர் எங்கிருக்கிறார்?"

"அங்கேயே தான் இருக்கிறார். ஆனால் அவர் தீர்ப்பில் தலையிடவே இல்லை"

"நல்லது. நான் மறுபடியும் சொல்லும்வரை சோழ தேசத்திலிருந்து எந்த கப்பலும் ஸ்ரீ விஜயம் நோக்கியோ அல்லது வேறு எந்த திசை நோக்கியோ பயணப்படக் கூடாது. இந்த வருடம் நீங்கள் கடக்கவில்லை என்றால் எந்தக் குறையும் வந்து விடாது"

"எனக்கு உடனடியாக கவனிக்க வேண்டிய வேலைகள் அதிகம் இருக்கின்றன. அதை முடித்து விட்டு வெகு நிச்சயம், வெகு நிச்சயம் நான் ஸ்ரீ விஜயத்தை தண்டிப்பேன். இது என் தாய் வானமாதேவியின் மீது ஆணை. இது தஞ்சையை காவல் காக்கும் நிசும்பசூதனியின் மீது ஆணை. என் தந்தை இராஜராஜ பெருவேந்தர் மீது ஆணை" குரல் உயர்த்திச் சொன்னார்.

கூட்டத்தில் உள்ளவர்கள் 'இராஜேந்திர சோழர் வாழ்க' என்று கோஷமிட்டார்கள். 'திருமன்னிவளர' என்ற மெய்க்கீர்த்தியை படித்தார்கள்.

"இந்த சபை இப்போது கலையலாம். அடுத்த சபை எப்போது கூடும். எங்கு கூடும் என்று இப்பொழுது சொல்ல இயலாது"

"உடனடியாக தஞ்சை ஆதுரச் சாலைக்குப் போங்கள். குந்தவையாருக்கு நான் செய்தி அனுப்புகிறேன். இந்தக் கையை நிச்சயம் பிரிக்க முடியும். ரண சிகிச்சை செய்து இதை எடுத்து விடுவார்கள். கவலைப்பட வேண்டாம். உங்கள் கை பழையபடி சரியான வழிக்கு வரும். அதற்கு நான் உத்தரவாதம்" அந்த வணிகரை அணைத்துக் கொண்டுச் சொன்னார். அந்த வணிகர்கள் கண்கள் நீர் சொரிந்தன.

"வீரமாதேவி, எழுந்திரு உன்னுடைய தலைமையில் நூறு படை வீரர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு நீ வேங்கி தேசம் நோக்கிப் போ. அங்கு போய் எவரும் அறியாவண்ணம் குந்தவையையும், இராஜநரேந்திரனையும் மீட்டுக் கொண்டு வா. குந்தவை எதிர்த்தால் குத்திக் கொன்று விடு. இராஜநரேந்திரனை மட்டும் மீட்டுக் கொண்டு வா. மற்றபடி பெரும் போர் என்று வந்தால் சரணடைந்து விடு. பிறகு நான் வருகிறேன்"

"தேவையில்லை மன்னா. வெகுநிச்சயமாக நான் வெற்றி அடைவேன். குந்தவையை கொல்ல வேண்டிய அவசியம் கூட இருக்காது. பின் தலையில் அடித்து, இழுத்து வருவேன். அப்படி ஒருவேளை நான் சிக்கிக் கொண்டால் சரணடைய மாட்டேன் மன்னா. தற்கொலை செய்து கொள்வேன்.



"எப்பொழுது கிளம்ப வேண்டும்?" வீரமாதேவியார் எழுந்து நின்று பேசினார்.

"ஐயன் எது சரியான நேரம்?"

"இன்று நல்ல நேரம். நாளையும் பரவாயில்லை. நாளை மறுநாள் அஷ்டமி வந்து விடுகிறது. பயணத்துக்கு நல்லதல்ல"

"தாக்குதல் அஷ்டமியில் இருக்கலாமா?"

"அற்புதமாக இருக்கலாம். அப்பொழுது இன்றே கிளம்பி விடலாம்"

"இன்று என்றால் எந்த நேரம்?"

"உடனடியாக இப்பொழுதே. இந்த நிலையிலிருந்தே. அவர்கள் போருக்கு கிளம்புவதாக கிளம்பி விடலாம்"

"சரி. அப்படியே ஆகட்டும். வீரமாதேவி நான் எங்கு இருக்கிறேன் என்று விசாரித்து விட்டு அங்கு வந்து என்னை சந்தித்து விட்டுப் போ" என்று விடை கொடுத்தார்.

வீரமாதேவி புயல் போல வெளியே போனாள்.

மாமன்னர் மிகப்பெரிய சிந்தனையோடு கிருஷ்ணன் ராமன் வீட்டை விட்டு வெளியே வந்தார்.

ஒரு மனிதன் கையில் தூக்கு வாளி வைத்திருந்தான். அது மூடப்பட்டிருந்தது"

"என்ன அது?"

"பகல் சோறு"

"எங்கே இருந்து வருகிறாய்?"

"தஞ்சையில் தான் இருக்கிறேன்"

"தஞ்சையில் இருந்து கொண்டு பகல் சோறை கையில் கொண்டு வருகிறாயா என்ன?"

"இன்று வீட்டில் சமைக்கவில்லை"

"பிறகு"

"தஞ்சையிலுள்ள சோற்றுக்கடை வீதியில் சாப்பிட்டோம். அம்மாவிற்கு வாங்கிப் போகிறேன்"

"சோற்றுக்கடை வீதியா, எங்கிருக்கிறது அது?"

"கோவிலுக்கு மிக அருகிலேயே இருக்கிறது. அந்தணர்கள் எல்லோரும் சோற்றுக்கடை வைத்திருக்கிறார்கள்"

"அப்படியா, இது என்ன சோறு?"

"புளியஞ்சோறு"

"எடுத்துவா, பார்க்கலாம்" எடுத்து முகர்ந்தார். ஒரு பிடி வாயில் இட்டுக் கொண்டார். மணத்தது. வாயில் ருசித்தது. அட! அற்புதமாக இருக்கிறதே"

"இதென்ன. அங்கு தனியாக ஒரு பணியாரம் செய்கிறார்கள் தேங்காய்ப்புட்டு, வெல்லப்புட்டு என்று. அற்புதமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. ஆப்பமும், தேங்காய் பாலும் தருகிறார்கள்"

"வேறென்ன இருக்கிறது?"

"கெட்டிய தயிர்சாதம், கதம்பசாதம் அதுவும் தயார் செய்கிறார்கள் அதுவும் நன்றாக இருக்கிறது. ஆனால் ஒரு தயிர்சாதம் மூன்று மாடை கொஞ்சம் விலை அதிகம் தான்"

"இந்த மாதிரி எத்தனை கடைகள் இருக்கின்றன?"

"பதினொறு, பதினேழு கடைகள் இருக்கின்றன. இன்னும் கடைகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்"

"அருண்மொழி உனக்குத் தெரியுமா?"

"ஒரு முறை சாப்பிட்டிருக்கிறேன்"

"என்னை இதற்கெல்லாம் கூட்டிக் கொண்டு போகாதே. பரவை என்னோடு தேர் ஏறிக் கொள். நாம் நேராக சோற்றுக்கடை வீதி போகிறோம்" என்று ஏறிக்கொண்டார். மக்களுக்கு கை அசைத்தார். அவர் குதிரை சோற்றுக்கடை வீதி நோக்கிப் போனது. அவர் சாப்பிட போகவில்லை. தனியே போய் சிந்திக்கப் போகிறார் என்பது அங்குள்ள அனைவருக்கும் புரிந்தது.

ஆனால் உண்மையில் மன்னருக்கு பசித்தது. கோபம் அதிகமாகி கத்தியதால், உணர்ச்சி பொங்கியதால், பல் கடித்ததால், ரத்த ஓட்டம் அதிகமாகியதால் அதன் விளைவாக அடிவயிற்றில் அமிலம் சுரந்து கபகபவென்று எரிந்தது. ஏதேனும் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவருடைய தேர் வெகு வேகமாக சோற்றுக்கடை வீதி நோக்கி வந்தது.

ஒரு மாமன்னர் தனது மனைவியுடன் அந்த வீதிக்குள் நுழைவார் என்று அந்த வீதியில் உள்ள அந்தணர்கள் நினைக்கவே இல்லை.

www.palsuvainovel.com





# 10

வேங்கி நகரத்து எல்லையில் உயர் குதிரைகள் பதினைந்து. கயிறுகளால் பிணைக்கப்பட்டு எங்கோ விற்பனைக்கு கொண்டு போவது போல நடத்தி அழைத்துப் போகப்பட்டன. ஒரு மாட்டு வண்டியில் வைக்கோல் போருக்கு கீழே சேணங்கள் இருந்தன. அதற்கு பின்னே பைராகிகள் போல வேடமிட்டு சம்மந்தம் இல்லாமல் மாட்டு வண்டியை பின் தொடர்ந்தார்கள். அவர்களுக்குப் பின்னே கணவனும், மனைவியுமாய் இரண்டு பேர் குழந்தையை தூக்கிக் கொண்டு மாட்டு வண்டியை பின் தொடர்ந்தார்கள்.

நாலாபுறமும் உற்று பார்த்தபடியே மனைவியாக நடித்துக் கொண்டிருந்த வீரமாதேவி நடந்து போய்க் கொண்டிருந்தாள். வேங்கி தேசத்திலேயே குந்தவைக்கு காவலாக இருந்த போர் வீரன் தனது குழந்தையை அழைத்துக் கொண்டு அவளை வேங்கி தேசத்தின் எல்லையில் சந்தித்தான்.

வேங்கி தேசத்துக்குள் போய் வேலை சம்பாதிப்பவர் போல அவர்கள் மூட்டை முடிச்சுகளோடு நடந்து கொண்டிருந்தார்கள். அந்த மூட்டைக்குள் கேடயமும், கத்தியும், குறுவாளும், ஈட்டி முனைகளும் இருந்தன. அதற்கான கம்பு அந்த வீரன் கையில் இருந்தது. அவனுடைய தோள் மூட்டையை சுமந்திருந்தது.

கோட்டை வாசலில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். விவரம் சொன்னதும் உள்ளே அனுப்பப்பட்டார்கள்.

"மனைவி லட்சணமாய் இருக்கிறாளடா. இளவரசர் விஷ்ணு வர்த்தனிடம் போய் வேலைக் கேள். நிச்சயம் கிடைத்து விடும்" என்று வாயிற் காவலன் உரக்கச் சொன்னான்.

"இவன் மேலைச் சாளுக்கியம். இப்பொழுதெல்லாம் வாயிற் காவல் மேலைச் சாளுக்கியத்திடம் தான் இருக்கிறது" என்று

அடிக்குரலில் கொஞ்சம் வருத்தத்தோடு சோழ வீரன் சொன்னான்.

அதை வீராமாதேவி காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. அவள் பார்வையெல்லாம் எந்த அரண்மனையில் யார் இருக்கிறார்கள் என்பதிலேயே இருந்தது. ஒவ்வொரு அரண்மனைக்கும் இடையே உள்ள தொலைவு அவள் குறித்துக் கொண்டே வந்தாள். பாதையை சரியாக கவனித்துக் கொண்டு வந்தாள்.

இராஜ நரேந்திரனுக்கு முதலில் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவன் கதவு திறந்து கொண்டு வெளியே வந்தான். இவர்கள் போவதை பார்த்து திகைத்திருந்தான். பிறகு மாட்டு வண்டி வருவதை புரிந்து கொண்டான். தொலைவே வீராமாதேவி வருவதை பார்த்து விட்டு ஓடோடி வந்து அவள் காலில் விழுந்தான்.

தவறு. ஆனால் அந்த செய்கையில் அன்பும், நம்பிக்கையும் இருந்தன.

"என்ன இது. எதற்கு என் காலில் விழுகிறீர்கள்" என்று பதறிய கிராமத்துப் பெண்ணாய் தொடர்ந்து நடித்தாள்.

"உள்ளே வாருங்கள்" அவன் வீராமாதேவியின் கையை பிடித்து இழுத்து உள்ளே அழைத்துப் போனான்.

குந்தவை கூடத்திற்கு நடுவே உள்ள நாற்காலியில் அமர்ந்திருந்தாள். 'என்ன' என்பது போல் கால் மீது கால் போட்டுக் கொண்டு வீராமாதேவியாரைப் பார்த்தார்.

"இன்னும் பதினைந்து நொடிகளில் நீங்கள் வெளியே வர வேண்டும்" என்று வீராமாதேவி உத்தரவு இட

"ஏன்?" என்று கேள்வி கேட்டாள்.

"எந்த கேள்விக்கும் பதில் கிடைக்காது. நான் என்ன சொல்கிறேனோ அதை செய்ய வேண்டும்"

"அதை செய்வதற்கு நாங்கள் ஒன்றும் உங்கள் அடிமை இல்லையே"

"இப்போதைக்கு என்னுடைய அடிமை. அடிமையாக இல்லாவிட்டால் அடிவாங்குகிற அடிமை"

"அடிப்பாயா"

"நிச்சயம் அடிப்பேன். கூசாமல் அடிப்பேன். சொல்லி சொல்லி அடிப்பேன்"

"நான் யார் தெரியுமா. இராஜேந்திரனுடைய தங்கை, நீ யார்?"



"நான் யார் தெரியுமா, இராஜேந்திரனுடைய மனைவி, வீராமாதேவி, சந்தித்து நாளாகி விட்டது அல்லவா. அதனால் உனக்கு மறந்து போயிருக்கும்"

"உனக்கு இங்கு என்ன வேலை?"

"உனக்கு ஒரு வேலையும் இங்கு இல்லாத போது. ஒரு வேலையும் இல்லாத உன்னை ஊருக்கு அழைத்து வருவது தான் என் வேலை"

"நான் இங்கு பட்டத்து ராணி"

"அப்படித் தெரியவில்லையே. ஏதோ ஒரு குப்பைமேட்டில் அல்லவா உட்கார்ந்திருக்கிறாய். பட்டத்து ராணியுடைய வீடா இது"

"இருளில் வந்து ஏன் கலகம் செய்கிறாய். அடேய் யாரெங்கே"

அறைந்தாள். வாயைத் திருப்பி தலைமுடியை பிடித்து இழுத்தாள். இடுப்பிலிருந்து துணியை உருவி வாயை இறுக்கக் கட்டினாள். அந்த அடி குரல் எழுவதற்கு முன் பின்மண்டையில் அடித்தாள். அந்த அடி தாங்காமல் குந்தவை மயங்கி விழுந்தாள். அவள் குந்தவையை இழுத்து வேறொரு வீரனிடம் கொடுக்க இரண்டு வீரர்கள் அவளை எடுத்துப் போனார்கள்.

மடமடவென்று குதிரைகளுக்கு சேணங்கள் மாட்டப்பட்டன. அதற்கு பின்னால் வந்த ஒரு தேர் சட்டென்று நின்றது. அந்த தேரில் குந்தவையை ஏற்றினார்கள். சட்டத்தோடு வைத்து இறுக்கக் கட்டினார்கள்.

"என்னோடு குதிரையில் வா" என்று சொல்லி இன்னொரு குதிரையை இராஜ நரேந்திரனுக்கு கை காட்டினாள்.

இராஜநரேந்திரன் குதிரை ஏறினான். அதில் தெளிவு இல்லை. குதிரை ஏறி பழக்கம் இல்லை என்று தெரிந்தது.

"மாளிகையை தீக்கிரையாக்கி விடுங்கள்" என்று சொல்ல, காவலுக்கு இருந்த சோழ வீரர்கள் மடமடவென்று மாளிகைக்கு தீ வைத்தார்கள். குதிரை ஏறினார்கள். முன்னே போன படை வீரர்களை பின் தொடர்ந்தார்கள். முன்னே போன படைவீரர்களுக்கு நடுவே வீராமாதேவியும் நரேந்திரனும் இருந்தார்கள். அதற்குப் பின் தேர் ஓடியது. தேருக்குப் பின்னே குந்தவைக்கு காவல் இருந்த சோழ வீரர்கள் இருந்தார்கள். வெகு வேகமாக யார் கவனத்தை கவரும் முன்னே அந்த இடத்தை விட்டு அகன்றார்கள்.

எல்லை வாசலுக்கு வந்தபோது தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

"குந்தவை தேவியாருக்கு உடல் நலம் சரியில்லை. உடனடியாக அவர்கள் எலும்பு முறிவுக்கான மருத்துவமனைக்கு அழைத்துச்

கொண்டு போக வேண்டும்” இராஜ நரேந்திரன் சொன்னான்.

“நீங்கள் மட்டும் இருக்கிறீர்கள். இந்தப் பெண்மணி யார்?”

“சேடியாக வந்திருக்கிறார். அவர்தான் வைத்தியம் செய்யப் போகிறார்”

“அப்படியா, நகர்ந்து கொள்ளுங்கள். நகர்ந்து கொள்ளுங்கள்” என்று சொல்ல, அவர்கள் தேருக்கு பின்னே ஓடிவந்து வீரமாதேவியை சோதித்தார்கள். ஆனால் தேர் விரைவாகப் போயிற்று.

திடீரென்று சிலபேர் விழித்துக் கொண்டார்கள்.

“எனக்கென்னவோ இது தவறாகப் படுகிறதே. பின் தொடர்ந்து மடக்குவோம் என்று சொல்லி,

“அடேய் நில், அடேய் நில்” என்று உரக்கக் கத்தினார்கள்.

அவர்கள் வருவது தெரிந்து வீரமாதேவி நரேந்திரனை முன்னே போகும்படி உத்தரவிட்டாள். பிறகு குதிரை திருப்பினாள். இடுப்பிலிருந்து சுருள் வாளை எடுத்துக் கொண்டாள். அவளுக்கு பாதுகாவலாக நான்கு வீரர்கள் நின்று கொண்டார்கள்.

நான்கு வீரர்கள் வழிமறித்து நிற்பதைக் கண்டதும் மேலைச் சாளுக்கிய வீரர்களின் குதிரைகள் சறுக்கி நின்றன. என்ன என்பது போல் பார்த்தன.

“உண்மையில் நீங்கள் யார்?” என்று கேட்க, ஒரு ஈட்டி வீரமாதேவியின் கைக்கு மாறியது. மிக வேகமாக கேட்டவன் நெஞ்சில் செலுத்தப்பட்டது. அவன் குப்புற விழுந்தான். வீரமாதேவி முன்னேறி சுருள்வாளை வேகமாக சுழற்றினாள். அங்கு இருக்கின்ற நான்கு பேர் முகத்திலும், கையிலும், கால்களிலும் வாளின் வீச்சு விழுந்தது. அவர்கள் அலறி விழுந்தார்கள். இரண்டு குதிரைகளுக்கு காயம் ஏற்பட்டு அவை கனைத்து மேலே உள்ளவர்களை கீழே உதறி நாலாபுறமும் ஓடிற்று, எதிரே மடக்குவதற்கு ஆள் இல்லை என்பதால் வீரமாதேவி திரும்பினாள்.

மிக விரைவாக குதிரை செலுத்தினாள். வழியில் நூறு வீரர்களும் ஒன்று சேர்ந்து கொண்டார்கள்.

சற்று தள்ளி இன்னொரு நூறு வீரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். திருவொற்றியூரில் நானூறு வீரர்கள் சேர்ந்து கொண்டார்கள். கிட்டத்தட்ட ஆயிரம் வீரர்கள் ஒன்று சேர்ந்த படை திருவொற்றியூரைத் தாண்டி திருமயிலை வழியாக மாமல்லபுரத்திலுள்ள ஒரு சோழ வீரனிடமிருந்து சரியான செய்தி



சொல்லி அவனை இன்னும் முன்னே அனுப்பியது.

குந்தவைக்கு வைத்தியம் செய்யப்பட்டது. வீரமாதேவி மௌனமாக காயத்தின் வலியை பொறுத்துக் கொண்டாள்.

“பெண்ணா இவள், ஆண் பிள்ளை போல் இருக்கிறாள். மார்பகம் உள்ள ஆண்களை நம்பக்கூடாது. மார்பகமே இல்லாத பெண்களை நம்பக் கூடாது என்று சாமுத்ரிகா லட்சணம் சொல்கிறது. ஆண் போல இருக்கிறாள். அலியைப் போல் இருக்கிறாள்” என்றெல்லாம் முரட்டுத்தனமாக குந்தவை பேச, வீரமாதேவி கவசத்தை இறுக்க அணிந்து கொண்டு வெளியே வந்து அமர்ந்து கொண்டாள்.

மாமல்லபுரத்து மாளிகையில் எல்லோருக்கும் நல்ல உணவு தரப்பட்டது.

பெண்ணாக இருந்தாலும் கேலி, பெண்ணாக இல்லாது போனாலும் கேலி. அடடா, இந்த பெண்கள் வாழ்க்கை மட்டும் இந்த தேசத்தில் ஏன் இப்படி குறையாடப்படுகிறது என்று வியந்தாள். ஆண்களுக்கு இணையாக எது செய்தாலும் அது ஏன் அதிசயமாக பார்க்கப்படுகிறது. எனக்கு புரியவில்லையே என்று வியந்தாள். இந்த நேரம் அருண்மொழிப் பட்டன் இருந்தால் ஏதேனும் பேச்சுத் துணையாக இருக்கும். இந்த வீரர்களோடு என்ன பேச என்று தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டாள்.

வந்தியத்தேவராவது இருந்திருக்கலாம். அவரும் சரியாக விவரம் சொல்வார். உடனடியாக அவர்களை சந்திக்க வேண்டும் போல் இருக்கிறது என்று ஆசைப்பட்டாள்.

தொலைவிலிருந்து ஒரு குதிரை வீரன் வருவது தெரிந்தது. 'என்ன' என்று விசாரிக்க, மேலைச் சாளுக்கியப்படை பெரிதளவில் திருவொற்றியூர் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்றும், இன்னும் ஒரு நாளில் திருவொற்றியூரை தொட்டு விடும் என்றும், தொண்டை மண்டலத்தை ஒரே இரவில் கபளீகரம் செய்யப்பட்டு விடும் என்றும் சொல்லப்பட்டது.

எல்லோரும் துள்ளி எழுந்தார்கள். தொடர்ந்து தஞ்சைக்கு போக வேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். குந்தவையின் கை, கால்களை கட்டி யானையில் உள்ள அம்பாரியில் போட்டார்கள். பிறகு யானையை வேகமாக செலுத்திக் கொண்டு அவர்கள் தெற்கு நோக்கி விரைந்தார்கள்.

எண்ணாயிரம் எசாலம் வழியாக ஜெயங்கொண்டம். ஜெயங்கொண்டம் வழியாக கொள்ளிடக் கரை, கொள்ளிடக் கரை வழியாக

குடந்தை, குடந்தை வழியாக பாபநாசம், பாபநாசம் தாண்டி கபிஸ்தலம் கபிஸ்தலம் தாண்டி தஞ்சை என்று வந்திறங்கினார்கள். அவர்கள் பயணப்படுவதற்கு ஒன்றரை நாள் பிடித்தது.

மீண்டும் ஒரு வீரன் வந்தான்.

திருவொற்றியூர் கோட்டை, கோவில் இரண்டும் மேலைச் சாளுக்கியர் வசம் பிடிபட்டு விட்டது என்று சொல்லப்பட்டது.

அவர்களுக்குள் பிளவு ஏற்பட்டு விட்டதாம். கலிங்க வீரர்கள் முன்னே போவதா, ஒட்ட வீரர்கள் முன்னே போவதா, கீழைச் சாளுக்கியம் முன்னே போவதா என்று சண்டை ஏற்பட்டு விட்டதாம். கீழைச் சாளுக்கியம் தான் முன்னே போக வேண்டும் என்று சொல்ல, 'எங்களுக்கு போர் ஆசையே இல்லையே, எங்களை ஏன் முன்னே அனுப்புகிறீர்கள்' என்று கேட்க, முன்னே போய் தான் ஆக வேண்டும் என்று கீழைச் சாளுக்கிய வீரர்களை பிரம்பால் அடித்திருக்கிறார்கள்.

எனவே, அந்த இடம் விட்டு அவர்களால் உடனே நகர முடியவில்லை என்ற செய்தி வந்தது.

தஞ்சை எல்லையின் வாசலில் இராஜேந்திர சோழர் குதிரையில் அமர்ந்தபடி வீரமாதேவியை வரவேற்றார். அருகே வந்ததும் அணைத்துக் கொண்டார்.

"எங்கே அந்த நாய்?" என்று கேட்டார்.

"பாளையின் மீது படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது" என்று வீரமாதேவி சொல்ல.

"அதுகிடக்கட்டும். திருவொற்றியூர் வரை வந்து விட்டதாகக் கேள்வி. அதனால் அரையன் இராஜராஜன் நேற்று படை வீரர்களோடு வேறு பக்கம் போயிருக்கிறார். மூன்று லட்சம் படை. படை வீரர்கள் திருவொற்றியூரை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதைப் பற்றி கவலைப்படாதே. வா. வந்து குளித்து விட்டு படுத்து உறங்கு. வேறு எங்கேனும் காயம் உண்டா" என்று கேட்க,

"கவசம் இறுக்கிய காயங்கள் தவிர வேறு எதுவும் இல்லை" என்று காட்டினாள். அந்த காயத்தை மாமன்னர் தடவிக் கொடுத்தார்.

பரவை நாச்சியார் கால் பிடித்துவிட, வீரமா தேவியார் அன்று இரவு நன்கு தூங்கினார்.

நாகையில் அருள்மொழியால் கைது செய்யப்பட்ட ஸ்ரீ விஜயத்தின் ஒரு முக்கியமான தளபதி, தஞ்சை சபையில் கொண்டு வந்து அமர்த்தப்பட்டான். அவனுக்கு துணையாக இரண்டு புத்த



பிட்சுக்கள் வந்திருந்தார்கள். அந்த புத்த பிட்சுக்கள் தமிழர்கள் அல்ல. அவர்களும் ஸ்ரீ விஜயம் சேர்ந்தவர்களே. அவர்களை மரியாதை நிமித்தம் இங்கு என்று சொல்லப்பட்டது. ஆயினும் அவர்கள் பிடிவாதமாக அந்த தூதுவனுக்கு துணையாக வந்தார்கள். உற்று கவனிக்கையில் அவர்கள் கையில் இருந்த தழும்புகள் அவர்கள் யுத்தப் பயிற்சி பெற்றவர்கள் என்று தெளிவாகத் தெரிந்தன.

இந்த புத்த பிட்சுக்களில் யாரேனும் ஒருவர் இடுப்பில் வாள் மறைத்திருக்கலாம் என்று பரமன் மழபாடி அனுமானித்தார். சட்டென்று வீரர்களை அனுப்பி சோதனை செய்யச் சொன்னார். நாலு வீரர்கள் பிடித்துக் கொள்ள அவ்விதமாகவே உடைகள் களையப்பட்டன. இரண்டு பேர் இடுப்பிலிருந்தும் 'டணார்' என்று வாட்கள் விழுந்தன.

"எனவே நீங்கள் புத்த பிட்சுக்கள் அல்ல. சரியா. பின் கை கட்டுங்கள்" என்று சொல்லி, பின் கை கட்டி, அவர்களது உடுப்பை பாதியாக கிழித்து வெறும் இடுப்பு துண்டாக வைத்து அவர்களை தரையில் அமர வைத்தார்கள்.

ஒரு புத்த பிட்சு தரையில் அமர வைப்பது சோழ தேசத்தில் அதுவே முதல் தடவை.

இராஜேந்திரர் அரண்மனை பரபரப்பாக இருந்தது. அந்த காலை வேளையில் எல்லா படை தளபதிகளும் வந்துவிட, குந்தவை அடித்து எழுப்பப்பட்டாள். முகம் கழுவப்பட்டாள். உடனடியாக அரண்மனைக்கு வரவேண்டும் என்று அவருக்கு உடைகள் தரப்பட்டன.

"நான் இந்த கிழிந்த உடைகளோடு வருகிறேன்" என்று அந்த உடைகளை வீசி எறிந்தாள்.

இராஜ நரேந்திரன் முன்னதாக ஓடிவந்து மாமாவின் காலில் விழ, அவனை இறுக்கி அணைத்துக் கொண்டார். கட்டி முத்தமிட்டார்.

"இத்தனை குழப்பத்திற்கு நடுவிலும் நீ தெளிவாக இருக்கிறாய் என்று உன் உடம்பு சூடு காண்பிக்கிறது"

"வீரமாதேவியார் வருவார் என்று நான் நினைக்கவே இல்லை. எங்கே அவர்?"

"அயர்ந்து தூங்குகிறார்கள். தூங்கட்டும் என்று விட்டு விட்டு வந்து விட்டேன். விமலாதித்தனுடைய மனோநிலைமை என்ன?"

"மிக மோசமானதாக இருக்கிறது. சிற்றன்னையுடைய பிடியில் சிக்கியிருக்கிறார். சிற்றன்னை மிகுந்த தந்திரசாலி. என் அம்மாவோ வைத்தியக்காரி. கெஞ்சிக் கொஞ்சி தன்னுடைய வழிக்கு

தகப்பனாரை மாற்றுகிறார். அவ்வப்போது நம் அன்னையை சீண்டி விடுகிறார். சிறிது சீண்டலுக்கும் எதிர்க்கின்ற குந்தவை தேவியார் அந்த பெண்மணியின் சீண்டலுக்கு அதிகமாக குதிக்கிறார்.

உதாரணமாக குந்தவை தேவியார் வந்தால் அந்தப் பெண்மணி எழுந்து நின்று வரவேற்பாள். காலில் விழுந்து வணங்குவாள் பிறகு விமலாதித்தருக்கு அருகே போய் அமர்ந்து கொள்வாள் விமலாதித்தருக்கு அருகே போய் அமர்ந்து கொண்டதும் குந்தவை தேவியாருக்கு அருகே போய் உனக்கு அங்கே உட்கார தகுதியில்லை தள்ளிப்போ. வேறிடத்தில் உட்கார் என்று சொல்லி அவருடைய வலப்புறத்தில் வந்து உட்கார்ந்து கொள்வார்கள். இடப்புறம் காலியாகத் தான் இருக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். அந்த பெண்மணியும் சரி என்று கேட்டுக் கொண்டு விலகி நிற்பார்கள். விமலாதித்தருக்கு அவர்கள் விலகி நிற்பதும் இவர்கள் அலட்சியம் செய்வதும் மிகக் கோபத்தை ஏற்படுத்தும்.

ஏன் அவர்களை விலகி நிற்கச் சொல்லுகிறாய். அவளுக்கும் உரிமை உண்டல்லவா என்று ஆரம்பிப்பார். அவளுக்கு உரிமை இல்லை என்று இவர்கள் பேச, உண்டு என்று அவர்கள் பேச, அன்றைக்கு சபை முழுவதும் இந்த சண்டையாகவே முடியும். ஜனங்கள் நன்றாக சிரித்து ரசிப்பார்கள். ஆபாசமாக இருக்கும்.

குந்தவை தேவியார் திருவாதிரை அன்றைக்கு கோவிலுக்கு போகிறார் என்றால் அந்த பெண்மணியும் வந்து விடுவாள். 'எனக்குத் தான் முதல் பூஜை' என்று அம்மா பரபரக்க, சரி. அவர்களுக்கே செய்யுங்கள் என்று அந்தப் பெண்மணி உட்கார்ந்து சிரித்து, சிரித்து பேசுவார்கள். குந்தவை தேவியாரை யாருமே சீண்ட மாட்டார்கள். அவர்கள் தனியாக பூஜை முடித்து அவர்களுடைய வீரர்களுடன் திரும்ப, பெரிய மக்கள் கூட்டத்தோடு அவர்கள் கோவிலுக்குள் நுழைவார்கள். இதை பார்ப்பதற்கே அம்மாவுக்கு எரியும், கோபம் வரும்.

"அவளை எப்படியாவது கொலை செய்ய வேண்டுமடா" என்று என்னிடம் கிசுகிசுப்பார்கள். நான் மௌனமாக இருப்பேன்.

"விஷ்ணுவர்தனை சண்டைக்கு இழுத்து கொன்று விடேன்" என்று சொல்லுவார்கள்.

"யார் அது விஷ்ணுவர்தன்?"

"அந்தப் பெண்மணியின் புதல்வன். விமலாதித்தருடைய இரண்டாவது மகன். என்னுடைய சகோதரன்"



"விஷ்ணுவர்தனா. ஓஹோ, சைவம், வைணவம் என்று பிரிக்கிறார்களா"

"பல்வேறு விதமாக பிரிக்கிறார்கள். நான் தமிழ் பேசுகிறேன். அவர்கள் தமிழ் பேசுவதில்லை. தெலுங்கு பேசுகிறார்கள். கன்னடம் பேசுகிறார்கள். ஒட்டர்கள் மொழியில் பேசுகிறார்கள். மறந்து போய் கூட தமிழில் பேசுவதில்லை"

"உன் அம்மாவிற்கு ஏதோ கெட்ட பெயராமே"

"ஆமாம். 'ஆட கோத்தி' என்று அழைக்கிறார்கள்"

"ஆட கோத்தி என்றால்?"

"பெண் குரங்கு என்று அர்த்தம். குந்தவை என்ற பெயரே கீழை சாளுக்கியத்து மக்களுக்கு தெரியாது. ஆட கோத்தி என்பது தான் இவர்களுக்கு அவர்கள் வைத்த பெயர்"

"எவ்வளவு அவமானமடா"

"மாமா. நான் எவ்வளவு அவஸ்தைப் பட்டிருப்பேன் என்று உங்களுக்கு தெரியுமா. உண்ணமுடியாமல், உறங்க முடியாமல் நான் கழித்த தினங்கள் அதிகம்"

"எனக்குப் புரிகிறது. குந்தவையை வரச்சொல்லுங்கள்" அரசர் ஆணையிட்டார்.

குந்தவை அழுக்கடைந்த ஆடையுடன், கலைந்த தலையுடன் ஒரு சபைக்குள் அலங்கோலமாக நுழைந்தாள். உட்கார ஆசனம் தேடினாள்.

"நில்லுங்கள்" என்று கண்டிக்கப்பட்டாள். அவள் அலட்சியமாக நிற்க, இராஜேந்திர சோழர் அவளை மிகுந்த வெறுப்போடு உற்றுப் பார்த்தார்.

"என்ன பார்க்கிறாய். என்னை இரவோடு இரவாக ஒரு பெண்ணை விட்டு தூக்கி வரச் செய்து என்னை அசிங்கப்படுத்தி விட்டாயே. எனக்கு எவ்வளவு பெரிய அவமானம் இது" என்று சொல்ல, இராஜேந்திரர் பதில் சொல்லவில்லை.

"இதுதான் நீ ஆட்சி நடத்துகின்ற இலட்சணமா. இதுதான் நல்ல ஆட்சியா. யார் சொன்னார்கள். நீ நல்ல ஆட்சி நடத்துவதாக, என் தகப்பனாருக்கு உறை போட காணுவாயா என்று சீறி முன்னே வர.

"அங்கேயே நில். ஆட கோத்தி" என்று மாமன்னர் கட்டளை இட்டார்.

பெண் குரங்கு என்று மன்னர் தன் தங்கையை சபை ந[illegible] விளித்தது. சிரிப்பொலியை வரவழைத்தது. ஒரு மன்னர் த[illegible] தங்கையை அப்படி அழைப்பது சிரிப்பதற்கான விஷயம் அ[illegible] ஆயினும் சிரிப்பதை தவிர்க்க முடியவில்லை.

"வீட்டுக் காவலில் இருப்பதாக நடித்தாயல்லவா. இப்பொழுது நீ வீட்டுக் காவலில் தான் இருக்கப் போகிறாய். அரண்மனையின் அந்தப் பகுதியில் உனக்கு உண்ண உணவும், உடுத்த உடையும், குளிப்பதற்கு உண்டான வசதியும் செய்து தரப்படும். நீ அந்த இடத்தை விட்டு ஒருக்காலும் எங்கும் போக முடியாது.

வேங்கி தேசத்தை நோக்கி படை எடுப்பு நடக்கும் போது. அந்த படை எடுப்புக்கு இராஜ நரேந்திரன் தலைமை தாங்குவான், முன்னே போய் நிற்பான். வேங்கியிலுள்ள உன் புருஷனோடு போரிடுவான். தன்னுடைய பட்டாபிஷேகத்தை தானே நின்று நடத்திக் கொள்வான். யார் தயவும் இராஜ நரேந்திரனுக்கு தேவையில்லை. அவனுக்கு பின்புலமாக அவன் மாமன் இராஜேந்திரன் இருக்கிறான். இந்த ஒரு தைரியம் போதும்"

சபை 'ஆஹா, ஆஹா' என்று அங்கீகரித்தது.

"குந்தவை இந்த இடத்தை விட்டு போய் விடு. இனிமேல் நீயும், நானும் பேச வேண்டிய அவசியம் இல்லை"

"போ" என்றான்.

உள்ளே கையில் ரத்தம் ததும்பிய துணிக் கட்டுடன் அருண்மொழிப் பட்டன் உள்ளே நுழைந்தான்.

"தவறு நேர்ந்து விட்டது மன்னா"

"என்ன?"

"நான் ஒரு புத்த பிட்சுவை அடித்து, நெஞ்சில் கத்தி வைத்து இறக்கி கொன்றேன். அடுத்தவன் பக்கத்திலுள்ள வீரனின் ஈட்டியை பிடுங்கி தன் வயிற்றில் சொருகிக் கொண்டு இறந்து போனான். ஆக நாம் நினைத்தபடி ஸ்ரீ விஜயத்துக்கு செய்தி அனுப்ப முடியாமல் போகிறது"

"அதனாலென்ன, நாகை விகாரத்தில் உள்ள புத்த பிட்சுகள் இரண்டு பேரைப் பிடி, முதுகில் அடி, அவர்களை படகில் ஏற்றி நேராக ஸ்ரீ விஜயம் நோக்கி போகச் சொல். சிறு நாவாய் கொடு. இங்கே என்ன நடக்கிறது என்று விவரம் சொல். நாகையில் காவல் இருப்பது யார்?"

"உங்கள் மகன் இராஜாதித்தன்"

"இராஜாதித்தன் அங்கிருக்கும் வரை நாம் ஏன் கவலைப்பட வேண்டும் அருண்மொழி. இராஜாதித்தனுக்கு இங்கு நடக்கின்ற விஷ



[illegible]கள் மொத்தமும் சொல்லி அங்கு பலமான காவலை ஏற்படுத்தச் [illegible]. எவரையும் சந்தேகப்பட சொல். புத்த பிட்சுக்களை நம்பக் [illegible]து என்று எச்சரித்து வை. ஸ்ரீ விஜயத்தில் வணிகர்களுக்கு ஏற் [illegible] அட்டகாசத்தை அவனுக்கு விவரமாகச் சொல்"

"நாகையில் கட்டுப்பாடுகள் அதிகமாகட்டும்"

"வேங்கி நோக்கிப் போவது எப்போது?"

"அது நாளை விவாதிப்போம். நல்ல நாள் என்னவென்று [illegible]யன் அவர்கள் சொல்லட்டும். ஐயன் சொன்ன தேதியில் எத்தனை [illegible]டைகள் திரட்ட முடியும் என்பதை பார்ப்போம். திருவொற்றியூர் [illegible]ரை மட்டுமே நான் அரையன் ராஜராஜனை அனுப்பியிருக்கிறேன். [illegible]ரையன் ராஜராஜன் அங்கேயே இருப்பார். எப்போது அவசியமோ [illegible]ப்போது வேங்கிக்குள் நுழையலாம்"

"மன்னா இன்னொரு பிரச்சனை வந்திருக்கிறது" அரண்மனை [illegible]ள்ளிருந்து பரவையார் ஓடிவந்து மன்னர் காதுக்கருகே வந்து.

"ஒரு பிரச்சினை"

"என்னது?"

"வீரமாதேவியார் கருவுற்றிருப்பார் போல் தெரிகிறது. கரு கலைந்து விட்டது"

## சுபம்

[illegible]

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHWARYAA PUBLICATION பல்சுவை நாவல், 4, தேவகி நகர் 2வது குறுக்குத் தெரு, பொன்னியம்மன் மேடு, சென்னை-110. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும். செல்: 94453 45067

PALSUVAI Naval Owner & Published by M.P. Chandra Sekaran published on behalf Sri Balaji Publication at 77, Madhavaram High Road, Perambur, Chennai - 600 011. Printed by M.P.Chandrasekaran at Mount Printers, Old No.12, New No.6, Ponnappa Lane, Triplicane, Chennai - 600 005.

Editor: Pon ChandraSekar

www.palsuvainovel.com